# இயேசுவை இன்னும் நெருக்கமாய்ப் பின்பற்றிட ...

## (To Follow Jesus More Nearly)



தூய இஞ்ஞாசியாரின் ஆன்மீகப் பயிற்சியின் இயக்கநெறி
அடிப்படையில் ஓர் எட்டு - நாள் தியானம்

ஜேம்ஸ் ரொட்ரிகோஸ் சே.ச.

தமிழில் : இம்மாகுலேட் பிலிப்

# இயேசுவை இன்னும் நெருக்கமாய்ப் பின்பற்றிட . . .

(தூய இஞ்ஞாசியாரின் ஆன்மீகப் பயிற்சியின்
இயக்கநெறியின் அடிப்படையில்
ஓர் எட்டு - நாள் தியானம்)

ஆசிரியர்:

அருட்பணி ஜேம்ஸ் ரொட்ரிகோஸ் சே.ச

தமிழில் வடிவமைத்தவர் :

திருமதி. இம்மாகுலேட் பிலிப்,
கணிதத்துறை,
திருச்சிலுவைக் கல்லூரி,
நாகர்கோவில்.

# இயேசுவை இன்னும் நெருக்கமாய்ப் பின்பற்றிட . . .


| | | |
|---|---|---|
| அச்சிட உரிமை | : | ஆசிரியர் |
| ஆங்கிலத்தில் மூன்றாம்பதிப்பு | : | 2009, வைகறைப் பதிப்பகம், திண்டுக்கல். |
| அச்சிட அனுமதி | : | **அருட்பணி பிரான்சிஸ் சே.ச**<br>மறைமாநிலத்தலைவர்<br>மதுரை மறை மாநிலம்,<br>திண்டுக்கல். |
| அச்சிடலாம் | : | **ஆயர் லாரன்ஸ் பயஸ்**<br>துணை ஆயர்<br>சென்னை-மயிலாப்பூர் மறைமாவட்டம்<br>சென்னை. |
| தமிழில் முதல் பதிப்பு | : | 2009 |
| பக்கம் | : | 160 |
| விலை | : | ரூ. 60 |
| அச்சுக்காக வடிவமைத்தவர் | : | **ஷிப்கா கம்பியூட்டர்ஸ்**<br>ஹோலிகிறாஸ் காலேஜ் ரோடு,<br>நாகர்கோவில்.<br>Ph: 647957, Cell: 9843461615. |
| அச்சிட்டோர் | : | **நாஞ்சில் பதிப்பம்**<br>நாகர்கோவில்.<br>தொலைபேசி எண் : 04652-233853 |

# ஆசியுரை



திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் திருச்சபையின் தேவை, "நிறைய குருக்கள்" என்பதைவிட "நல்ல குருக்கள்" என்று குறிப்பிட்டுள்ளார். அதாவது கடவுளுக்கும் அவரது மகன் இயேசு கிறிஸ்துவுக்கும் பணி செய்யும் (உகந்த வாழ்க்கை வாழும்) குருக்கள் என்பது வலியுறுத்தப்படுகிறது. இந்த வகையில், திருமுழுக்குப் பெற்ற ஒவ்வொரு கிறிஸ்தவரும் கடவுளுக்குப் பணி செய்யும் குரு ஆவார். இத்தகைய நிலைப்பாட்டை திருமுழுக்குக் குருத்துவம் (பொதுக்குருத்துவம்) என்று கூறுவோம். முதல் திருத்தந்தை தூய சீமோன் பேதுரு, "நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட வழி மரபினர், அரச குருக்களின் கூட்டத்தினர், தூய மக்களினத்தினர், அவரது உரிமைச்சொத்தான மக்கள். எனவே உங்களை இருளினின்று தமது வியத்தகு ஒளிக்கு அழைத்துள்ளவர்களின் மேன்மைமிக்க செயல்களை அறிவிப்பது உங்கள் பணி" (1 பேதுரு 2:9) என்பதில் ஒவ்வொருவரையும் அரச குருக்களின் கூட்டத்தினர் என்கிறார். எனவே 'குருக்களின் ஆண்டே வருக' என்று அழைக்கும்போது இறையாட்சிப் பணிக்குத் தங்களையே அர்ப்பணிக்கும் குருத்துவத்தைத் தனிக் கவனத்தில் கொள்வோம். மேலும் பொது (திருமுழுக்குக்) குருத்துவத்தைச் சேர்ந்தவர்களையும் நினைவிற் கொள்வோம். இவற்றை மனதிற்கொண்டு இவ்வாண்டில் தயாரிப்பு செய்ய அழைப்பு விடுக்கிறது இந்நூல் எனலாம். **இயேசுவை இன்னும் நெருக்கமாய்ப் பின்பற்றிட** எனும் அழைப்பு, ஆன்மீகம் என்பது இறைவனை அனுபவித்து ரசித்து ருசிப்பது என்பது மட்டுமல்ல, அதைத் தொடர்ந்து இயேசுவைப் போல அநீதிக்குக் குரல் கொடுக்கவும்; ஏழைகளின் சார்பில் நிற்கவும், நீதிக்காக, உண்மைக்காக உயிரைக் கொடுக்கவும்; துணிந்து நிற்க ஆற்றல் தருவது என்பதால் அத்தகைய முழுமையான அர்ப்பணத்திற்கான அழைப்பு இது!.

தூய இஞ்ஞாசியாரின் ஆன்மீகப் பயிற்சிகளை அடிப்படையாகக் கொண்ட தியானங்களை எட்டு நாட்களில் செய்து

குருக்களை ஆன்மிக அறிவைப் பெறச் செய்யும் "To follow Jesus More Nearly" என்ற ஆங்கில நூலை வெளியிட்டவர் ஜேம்ஸ் ரொட்ரிக்கோஸ் S.J. இந்நூலைத் தமிழ் மக்கள் அனைவரும் பயன்படுத்தி, குருத்துவப் பணியைப் புதுப்பிப்பதற்காகத் தமிழில் இந்நூல் வெளியிடப்படுகிறது. இது பணிக்குருத்துவத்தினருக்கும் பொதுக்குருத்துவத்தினருக்கும் பயன்படும் என்பதில் ஐயமில்லை.

குருக்களின் ஆண்டிலே இத்தகைய ஆழ்ந்த ஆன்மீகத்தின் தேவையை உணர்ந்து நூல் வெளியிடும் திருமதி இம்மாகுலேட் பிலிப் அவர்களின் பணியை வாழ்த்துகிறேன். இறையாசீர் என்றும் உடனிருந்து இறுதிவரை வழிநடத்த இறைவன் அருள்புரிவாராக!

கிறிஸ்துவில் அன்புள்ள

ஆயர் பீட்டர் ரெமிஜியுஸ்

கோட்டாறு மறை ஆயர்

"குருக்களைச் செழுமையால் நிரப்புவேன்;

என் மக்கள் எனது வள்ளன்மையால்

நிறைவு பெறுவர்", என்கிறார் ஆண்டவர்.

(எரேமியா 31 : 14)

# அணிந்துரை - I



ஆன்மீகம் என்பது இறையுணர்வில், உயர் மதிப்பீடுகளுடன் வாழ வழி நடத்த வேண்டும். தூய இஞ்ஞாசியார் மன்ரேசா குகையில் பெற்ற அனுபவம் ஆன்மீகப் பயிற்சிகளாக நூல் வடிவம் பெற்றது. அவரது ஆலோசனைகள் இறையனுபவம் பெற வழிநடத்தியது. வரலாற்றிலும் ஆன்மீக வழிகாட்டியாக நிலைத்து விட்டது.

ஆழ்ந்த இறையனுபவங்களைப் பெற வழி நடத்தி வரும் அருட்பணி ஜேம்ஸ் ரொட்ரிகோஸ், சிறந்த பயிற்சிகளை இஞ்ஞாசியாரின் ஆன்மீகப் பயிற்சிகளின் அடிப்படையில் கொடுத்து வருகிறார். அந்த தியான உரைகளின் தொகுப்பு நூலை தமிழ் மக்களும் வாசிக்க வேண்டும் என்ற நல்லுணர்வோடு எடுக்கும் இம்முயற்சியை நான் பாராட்டுகிறேன்.

எண்ணமதில் வரும் மாற்றம் வாழ்வின் செயல்களில் தாக்கங்களை உருவாக்கும். புனிதர்கள் வாழ்வின் நிகழ்வுகள் பல மனதின் ஆழத்தில் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் மேற்கோள் காட்டப்படுகின்றன. அவை நம் வாழ்வின் அனுபவங்களாக மாறும் அளவு இதிலே தனித்தன்மையுடன் கூடிய மேற்கோள்கள், இதன் சுவைக்கு இன்னும் அதிக சுவை சேர்க்கின்றன.

சிந்தனைத்தியானங்களும் காட்சித்தியானங்களும் இந்நூலின் சிறப்பு அம்சங்களாகின்றன. மின்னல் வேகத்தில் வினாடிகளையும் நழுவ விட்டு விடக்கூடாது என்று ஓடிக்கொண்டிருக்கும் மனிதனுக்கு இத்தகைய வேகத்தடை ஒன்று அவசியம் தேவை என்பதை இந்நூல் நமக்கு உணர்த்தி நிற்கின்றது. சமாரியாவில் கிணற்றின் அருகில் இயேசு சந்தித்த பெண்ணின் வாழ்வு மாற்றம் பெற்றதுபோல ஒவ்வொருவரின் வாழ்வும் மாற்றம் பெறும் என்ற நம்பிக்கை ஏற்படுகிறது.

இந்நூலாசிரியர் திருமதி. இம்மாகுலேட் பிலிப் தனது கணிதப் பேராசிரியைப் பணியோடு அன்பியம், கோட்டாறு மறைமாவட்ட

அருட்பணி பேரவை, யூத் ரெட்கிராஸ், ரெட் ரிபன் கிளப், ஜீஸஸ் யூத், இந்திய சிறைப்பணி கோட்டாறு அலகு, திருவருட்பேரவை, தேவசகாயம் பிள்ளை புனிதராகும் பணி, ரோட்டரி கிளப்பில் கருத்தாளர் பணி, சேக சபையின் உரையாடல் மற்றும் ஆன்மீகப் பணி போன்ற வெவ்வேறு துறைகளில் துணைத்தலைவியாக, செயலராக, பொருளராக, வழிகாட்டியாக, கருத்தாளராக, ஆலோசனைக்குழு உறுப்பினராக, ஆசிரியர் குழு உறுப்பினராக வெவ்வெறு நிலைகளில் பணியாற்றி வருவது பாராட்டுக்குரியது. இன்னும் நீரோடை, தென்ஒலி, ஆளுமை சிற்பி, விவிலிய விருந்து ஆகிய மாத இதழ்களிலும், இளையோர் சிந்தனையைக் கூர்மைப்படுத்த எடுத்துவரும் எழுத்துப்பணிமுயற்சியும் பாராட்டுக்குரியவையே. இவர் செய்துவரும் இத்தகைய பணிகள் இறுதிவரை தொடர, இறையருளும் இறையாசீரும் நிலைத்திட வாழ்த்துகிறேன்.

அருட்பணி S. வின்சென்ட்
திருத்தல அதிபர்,
தூய அந்தோணியார் திருத்தலம்,
வெட்டு வன்னி,
கன்னியாகுமரி மாவட்டம்

"உம் குருக்கள் நீதியை
ஆடையென அணிவார்களாக!
உம் அன்பர்கள் அக்களிப்பார்களாக!"
[திருப்பாடல் 132 : 9]"

# அணிந்துரை - II



அருள் தந்தை ஜேம்ஸ் அடிகளார் புனிதர் இலயோலா இஞ்ஞாசியாரின் ஆன்மீகப் பயிற்சிகளின் அமைப்பை, செயல்முறையை அடிப்படையாகக் கொண்டு தியானங்கள் கொடுத்துக் கொண்டு வருகிறார். குருக்களுக்கும் துறவிகளுக்கும் பொதுநிலையினருக்கும் அவர் தியானம் கொடுத்து வருகிறார். தியானம் கொடுப்பதற்காக இறைவன் அவரைத் தனிப்பட்ட முறையில் அழைத்திருக்கிறார். இறைவனின் இந்த அழைப்பை அவர் தாராள உள்ளத்தோடு ஏற்று அன்போடும் ஆர்வத்தோடும் முழு அர்ப்பணத்துடனும் இப்பணியை ஆற்றிக் கொண்டு வருகிறார்.

"இயேசுவை இன்னும் நெருக்கமாகப் பின்பற்றிட" என்ற இந்நூலின் வழியாக ஜேம்ஸ் அடிகளார் தியானம் கொடுப்பதில் தாம் பெற்ற சிறந்த அனுபவங்களை நம்மோடு பகிர்ந்து கொள்கிறார். புனிதர் இலயோலா இஞ்ஞாசியாரின் ஆன்மீகப் பயிற்சிகளை அடிப்படையாகக் கொண்டு எட்டு நாள் தியானம் செய்ய விரும்புகிறவர்களுக்கும் இத்தகைய தியானங்களை மற்றவர்களுக்குக் கொடுக்க விரும்புகிறவர்களுக்கும் இந்நூல் பெருந்துணை செய்யும்.

தியானத்தின் முதல் நாளிலிருந்து எட்டாவது நாள் வரை இந்நூலில் கொடுக்கப்பட்ட தலைப்புக்கள் ஒன்றோடொன்று இணைந்து செல்கின்றன. அவற்றில் ஆசிரியரின் ஆழ்ந்த அனுபவத்தைக் காண்கிறோம். அவற்றின்படி தியானம் செய்வது நமக்கு ஆர்வத்தை அளிக்கிறது. தியானங்களில் இறைவாக்கு நிறைவாக நமக்கு அளிக்கப்படுகிறது. இந்த இறைவாக்கு விருந்து ஆன்மாவுக்கு ஊட்டம் அளித்துத் தியானம் செய்வோர் இயேசுவை மிக நெருக்கமாகப் பின்பற்றத் துணை செய்கிறது.

தியானத்தின் தலைப்புக்கள் தொடர்ச்சியாக ஒன்றோடொன்று இணைந்து செல்லுமாறு அமைத்தலிலும் அவற்றை விளக்குதலிலும் நூலாசிரியரின் தனித்து எண்ணும் திறனையும் (originality) படைப்பாற்றலையும் காண்கிறோம். தலைப்புக்களின் பொருளை விளக்கப் புனிதர்கள். சிந்தனையாளர்கள் நூல்களிலிருந்து மேற்கோள்காட்டியுள்ளார். இதுவும் போற்றுதற்குரியதே. கிறிஸ்மஸ் பற்றிய தியானத்தில் (லூக்கா 2:1 – 20) மரியன்னைக்கும் ஆசிரியருக்கும் (ஜேம்ஸ்) நிகழும் உரையாடல் நமது உள்ளங்களை உருகச் செய்கிறது.

தியானத்தின் இறுதிநாளில் ஆசிரியர் இரண்டு தலைப்புக்களை நம்முன் வைக்கிறார். 1. தூய ஆவியார் 2. இறைவனின் அன்பை அடையத் துணை செய்யும் காட்சித்தியானம். ஆன்மீகப் பயிற்சியின் அடிப்படையில் தியானம் கொடுப்போர். இறைவனின் அன்பை அடையத் துணை செய்யும் காட்சித்தியானத்தைப் பெரும்பாலும் எடுத்துரைத்தல் இயல்பு. ஆனால் பரிசுத்த ஆவியாரைப் பற்றிய தியானம் ஆசிரியரின் தனித்து எண்ணும் திறனை வெளிப்படுத்துகிறது. இத்தியானம் ஆசிரியருக்கே உரியது. தியானம் செய்வோருக்குப் பெருந்துணை செய்கிறது.

"இயேசுவை இன்னும் நெருக்கமாகப் பின்பற்றிட" என்னும் இந்நூலின் இறுதியில் பூசையைப் பற்றியும் அன்றாடக் கிறிஸ்தவ வாழ்வை நன்முறையில் வாழத் துணை செய்யும் தலைப்புக்களும் விளக்கியுரைக்கப்படுகின்றன. இப்பகுதி நூலுக்கு அணி செய்கிறது.

தியானம் கொடுப்போரும் தியானம் செய்வோரும் அருள் தந்தை ஜேம்ஸ் அடிகளாரின் "இயேசுவை இன்னும் நெருக்கமாகப் பின்பற்றிட" என்னும் இந்த நூலினால் பெரும்பயன் எய்துவர். நன்றி நிறைந்த உள்ளத்தோடு நூலாசிரியரைப் போற்றுவர். நமது நாட்டின் முக்கியமான மொழிகளில் இந்நூல் மொழியாக்கம் பெற்று ஆன்மாக்களுக்கு உதவியும் இறைவனுக்கு மகிமையும் அளிக்க வேண்டும் என்று நான் பெரிதும் விரும்புகிறேன். இதுவே இறைவனிடம் நான் எழுப்பும் வேண்டுதல்.

மரிய செயராண் சே.ச
தோழமை இல்லம்
ஆன்மீக உரையாடல் மையம்
கன்னியாகுமரி.

# அணிந்துரை - III



தூய இஞ்ஞாசியாரின் ஆன்மீகப் பயிற்சிகள் என் வாழ்விலே நான் அனுபவித்து ரசித்து ருசித்த ஒன்று. இந்த ஆன்மீக சிந்தனைகள் நான் தியானம் கொடுக்கும் போதெல்லாம் என் ஆன்மீக வாழ்வை ஆழப்படுத்த பெரிதும் துணை செய்தன. ஆன்மீகப் பயிற்சி நூலின் சுருக்கமாக, எட்டு நாளிலே அத்தகைய அனுபவத்தை பெறும் விதத்தில் அருட்பணி ஜேம்ஸ் ரொட்ரிகோஸ் சே.ச. எழுதிய நூல் தான் "To follow Jesus More Nearly" அதனை "இயசேுவை இன்னும் நெருக்கமாய்ப் பின்பற்றிட" என்று தமிழில் மொழி பெயர்த்து தருவது தமிழ் மக்களுக்குப் பயன் தரும் என்று நம்புகின்றேன்.

குருக்கள் ஆண்டைச் சிறப்பிக்கும் இந்த ஆண்டிலே இந்நூல் வெளியிடுவது இதன் தனிச் சிறப்பு. இல்லறத்தாரும் இறையனுபவம் பெற விரும்பினால் இந்த உரைகளை நாளுக்கு ஒன்றாக தியானிக்க முடியுமானால் அது இறையனுபவத்திற்கு இட்டுச் செல்லும். இந்நூலில் குறிப்பிடும் எண்கள் 'ஆன்மிகப் பயிற்சி' எனும் நூலில் தரப்பட்டுள்ளவை என்றாலும் தேவையான விளக்கங்களோடு தரப்பட்டுள்ளதால் அதற்கான கையேடாக உதவும். எனவே ஆன்மீகப் பயிற்சி நூலையும், திருவிவிலியத்தையும் துணையாகக் வைத்துக் கொண்டு இந்நுலை மிகமிக மெதுவாக தியானிக்கவும். தியானித்து, அனுபவித்து பெறும் இறையன்பால் உலகை நீதியால் நிரப்பி, இறையாட்சி மலர்ந்திட உதவிடுங்கள்.

தமிழில் மொழிபெயர்த்துள்ள திருமதி இம்மாகுலேட் பிலிப் எடுத்துள்ள இந்த முயற்சியை மிகவும் பாராட்டுகிறேன். இதன் பயனை மக்கள் அனுபவிப்பதைக் கண்டு மகிழ இறைவன் அவர்களுக்கு ஏராளமான அருளைத்தரும்படி வாழ்த்துகிறேன். இறையருளை வேண்டுகிறேன்.

இயேசுவின் அன்பன்,
அருட்பணி P.S . அருள் சே.ச
அதிபர், தாளாளர்,
கார்மல் மேல்நிலைப்பள்ளி,
கார்மல் நகர்.

# முன்னுரை

தூய லொயோலா இஞ்ஞாசியாரின் ஆன்மீகப் பயிற்சியின் இயக்கநெறி அடிப்படையில் ஓர் எட்டு-நாள் தியானத்திற்கான சிந்தனைத் தியானங்களின் ஒரு தொடராகும். இது மேற்சொல்லப்பட்ட இயக்கநெறியை மனதிற்கொண்டு, ஒரு ஆறுநாள், ஐந்துநாள், அல்லது மூன்றுநாள் தியானமாக தேவைக்கேற்ப மாற்றிக்கொள்ளலாம். இயேசுவின் வாழ்வின் மறையுண்மைகளை நல்ல பயனளிக்கும் வழியில் சோதித்தறிய இந்த இயக்கநெறி நம்மை வழிநடத்தும் என அனுபவம் நமக்குக் காட்டியுள்ளது.

இயேசுவின் ஆன்மீகமானது எளிய மக்களுக்கான ஓர் எளிய ஆன்மீகம் என நான் நம்புகிறேன். அவர் பாலஸ்தீனத்தைச் சேர்ந்த எளிய மக்களையே அவரது போதனைகளைக் கேட்கும் கூட்டமாகக் கொண்டிருந்தார். ஒவ்வொருவரும் புரிந்து கொள்ளக்கூடிய வார்த்தைகளையே இயேசு பேசினார். ஆகவே இயேசுவின் உயர்ந்த கருத்துடைய சவால் நிறைந்த ஆனால் எளிய செய்தியை அடிப்படையாகக் கொண்டு, என் சொந்த, புரிவதற்கு எளிதான ஆழ்ந்த சிந்தனைகளை உங்களோடு பகிர்ந்துகொள்ள முயன்றிருக்கின்றேன்.

இயேசுவிடம், "விண்ணரசில் மிகப்பெரியவர் யார்?" என்று கேட்டபோது அவர் ஒரு சிறு பிள்ளையை எடுத்து அவரது சீடர்கள் முன் நிறுத்தி பின் வருமாறு கூறினார்,

"இந்தச் சிறு பிள்ளையைப்போலத் தம்மைத் தாழ்த்திக் கொள்பவரே விண்ணரசில் மிகப்பெரியவர்" (மத் 18:1-5)

ஆகவே தன்னையே தாழ்த்தி ஒரு பிள்ளையைப்போல நம்புகிறவனே மிகப்பெரியவன்.

நான் சொல்கிறவற்றிற்கு சுவையூட்டவும் என்னுடைய ஆழ்ந்த சிந்தனைக்கு எடுத்துக்கொண்ட மறையுண்மைகளை உறுதிசெய்யவும் தெளிவுபடுத்தவும், நான் பல்வேறு ஆன்மீக எழுத்தாளர்களிடமிருந்தும் ஏனைய ஆதாரங்களிலிருந்தும் மேற்கோள் காட்டியிருக்கின்றேன்.

உங்களுடைய சிந்தனைத்தியானங்களின் தேவைக்காக, இந்த மேற்கோள்களையே பயன்படுத்த விரும்பினாலும் நல்லது தான்.

நான் திருப்பலியின்போது கொடுத்த உரைகளையும் இதோடு இணைத்துள்ளேன். இயேசுவின் ஆன்மீகத்தில் சிலவற்றை தியான காலத்தில் ஆழப்படுத்த அவைகள் உதவும் என நான் உணர்கிறேன். (பிற்சேர்க்கையைப் பார்க்கவும்)

இந்தப் புத்தகத்தின் கையெழுத்துப்பிரதியை முழுவதும் வாசிப்பதற்கு சிரமம் எடுத்து, இறையியல் அடிப்படையிலும் வாசகர்களுக்கு நூலின் கருத்துச் சுருக்கத்தை சிறப்பாக பயன்பெறவும் தகுந்த ஆலோசனைகளைக் கொடுத்து உதவிய அருட்பணி ஜி. கிஸ்பர்ட் சாய்ச் சே.ச (Fr. G. Gispert Sauch J.J) அவர்களுக்கு எனது சிறப்பு நன்றி உரித்தாகும்.

முன்னுரை எழுத மகிழ்வுடன் ஏற்றுக்கொண்ட அருட்பணி மரிய ஜெயராசன் சே.ச அவர்களுக்கும் நன்றி செலுத்த கடமைப்பட்டிருக்கிறேன்.

ஜேம்ஸ் ரொட்ரிகோஸ் சே. ச
தியானம் ஆசிரமம்
13, மாதா சர்ச் ரோடு
சென்னை – 28.

"ஒரு குருவின் உதடுகள் மெய்யறிவைக் காக்க வேண்டும். அவனது நாவினின்று திருச்சட்டத்தைக் கேட்க மக்கள் அவனை நாட வேண்டும். ஏனெனில் படைகளின் ஆண்டவருடைய தூதன் அவன்"
[மலாக்கி 2 : 7]

## தமிழில் வடிவமைத்தவர் உரை

இயேசுவின் மீது நான் கொண்ட அளவுகடந்த அன்பு மாத்திரமே இத்தகைய விலையேறப்பெற்ற பொக்கிஷத்தைக் கையிலெடுத்து தமிழில் வடிவமைக்க முயற்சி செய்ய துணிவு கொடுத்தது. என் அருமைத்தம்பி அருட்பணி ம. ஆல்பர்ட் வில்லியம் சே.ச சேர்ந்துள்ள குடும்பம் என்பதால் சேசு சபை குடும்பத்தின் மீது அதிகப் பற்று உண்டு. அருட்பணி மரிய ஜெயராசன் சே.ச. இந்த நூலை என் கையில் கொடுத்து தமிழில் வடிவமைக்கச் சொல்லி வருடங்கள் பல உருண்டோடி விட்டன. எங்காவது பயணம் செய்தாலோ, வெளியூரில் ஏதாவது பணிக்காக தங்கினாலோ ஓரிரு பக்கங்களை தமிழில் எழுதி வைப்பேன். பின்னர் சோர்ந்த நிலையில் *இதற்கு மேல் முடியாது* என்று விட்டு விட்டபோது மீண்டும் அருட்பணி. P.S. அருள் சே.ச வழியாக அழைப்பு வந்தது. எதற்கு அவரும் என்னிடம் கேட்டார் என்பது தெரியவில்லை. அழைப்பை ஏற்று நானும் திருமதி. ரீற்றா சவரிமுத்து (நினைவில் வாழும் அருட்பணி ஜேம்ஸ் சே.ச. அவர்களின் தங்கை) மொழிபெயர்ப்பைப் பகிர்ந்து பணியை முடித்தோம். தியான உரை கொடுக்க உதவியதோடு அதன் பணி நிறைவு பெற்றுவிட்டது. புத்தகவடிவில் இடம் பிடிக்கவில்லை என்பதாலும் அருட்பணி மரிய ஜெயராசன் சே.ச அவர்கள் கொடுத்த பணியை நிறைவு செய்துவிட வேண்டும் என்பதனாலும் பணியை மீண்டும் தொடங்கி மொழிபெயர்ப்பை நானே செய்து முழுவதுமாக நிறைவு செய்து விட்டேன்.

இந்த ஆன்மீக பொக்கிஷம் அருட்பணியாளர் ஆண்டிலே பொதுக்குருத்துவத்தினருக்கும் அருட்பணியாளர்களுக்கு ஆன்ம ஊட்டச்சத்தாக அமைய வேண்டும் என்று ஆசை. ஆயினும் இந்த மொழிபெயர்ப்பு ஒரு மழலை மொழிபோல் இருக்கிறதோ என்ற தயக்கம். நூல் வடிவில் வெளியிடத் தகுதியில்லை என்றாலும் எடுத்த முயற்சியும் செலவழித்த நேரமும் இதனை மதிப்புள்ளதாக்கி அநேக இதயங்களில் தூய லொயோலோ இஞ்ஞாசியார் விரும்பும் ஆன்மீக மறுமலர்ச்சியை உண்டாக்கும் என்று நம்புகிறேன்.

நன்றி சொல்ல கடமைப் பட்டவர்களில் மிக முக்கியமானவர்கள் திருமதி. ரீற்றா சவரிமுத்து அவர்கள், என் அன்பு கணவர் திரு. செ. பிலிப்,

என் அன்பு மகள் ஷைனி குமின், என் அருமை மகன் பாஸ்றோ காலின்ஸ் திருமதி. புஷ்ப சகாயம் என்னும் திரேஸம்மாள் (திருமதி. ரீற்றா சவரிமுத்து அவர்களின் அக்கா) திருமதி. பிரேமலதா லால் (ஆங்கிலத்துறைத் தலைவி, திருச்சிலுவைக் கல்லூரி) என் அன்பு சகோதரி சுசிலா சேவியர், என் அருமை அண்ணி மேரி சிறிய புஷ்பம் என் அன்பு சகாயம் ஆகியோரை மட்டும் குறிப்பிட்டுச் சொல்கிறேன் என்றாலும் இன்னும் பலவகைகளில் உதவிய எல்லா நல்ல உள்ளங்களுக்கும் நன்றி. ஆசியுரை, அணிந்துரை, முன்னுரை எழுதிய அனைவருக்கும் என் நன்றியைக் காணிக்கையாக்குகிறேன்.

திருமதி இம்மாகுலேட் பிலிப்
கணித விரிவுரையாளர்
திருச்சிலுவை கல்லூரி
குருசடி
நாகர்கோவில் 4.

வீட்டு முகவரி :
W/o. திரு. செ. பிலிப்
94 மேலத்தெரு
நாகர்கோவில் 4.
தொலைபேசி எண் 04652 - 261588
அலைபேசி எண் 9443608003.

**"இங்குள்ள குருக்களுக்கு மீட்பெனும்
உடையை உடுத்துவேன்;
இங்குள்ள என் அன்பர்கள் மகிழ்ந்து
ஆரவாரிப்பார்கள்" [திருப்பாடல் 132 : 16]**

தமிழ் வடிவமைக்கப்பட உதவிய வாக்குறுதிகள் :

"ஆண்டவர் தாம் தொடங்கியதை
எனக்கெனச் செய்து முடிப்பார்.
என்றென்றும் உள்ளது உமது அருளன்பு"

– நினைவில் நின்ற பழைய மொழி பெயர்ப்பு வாக்குறுதியோடு கீழ்க்காணும் வாக்குறுதிகளைப் பற்றிப்பிடித்து தமிழில் வடிவமைத்தலை நிறைவு செய்தேன்.

*வாக்குறுதிகள் :*

(1) "ஆண்டவரே நிறைவாழ்வை நீர் எங்களுக்கு உரியதாக்குவீர்!. ஏனெனில் எங்கள் செயல்கள் அனைத்தையும் எங்களுக்காக செய்கின்றவர் நீரே" (எசாயா 26:12)

(2) "நான் உனக்கு அறிவு புகட்டுவேன்; நீ நடக்க வேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன்; உன்னைக் கண்ணோக்கி உனக்கு அறிவுரை கூறுவேன்" (திபா 32:8)

(3) "என் வாழ்வின் ஒவ்வொரு கட்டமும் உமது கையில் உள்ளது. என் எதிரிகளின் கையினின்றும், என்னைத் துன்புறுத்துவோரின் கையினின்றும் என்னை விடுவித்தருளும்" (திபா 31:15)

(4) "இந்த இறைவனின் வழி நிறைவானது; ஆண்டவரின் வாக்கு நம்பத்தக்கது; அவரிடம் அடைக்கலம் புகும் அனைவர்க்கும் அவரே கேடாயமாய் இருக்கின்றார்" (திபா 18:30)

(5) "நீர் வாக்களித்த அனைத்தையும், எனக்கெனச் செய்து முடிப்பீர், ஆண்டவரே என்றும் உள்ளது உமது பேரன்பு, உம் கைவினைப் பொருளைக் கைவிடாதேயும்" (திபா 138:8)

(6) "உன்னதரான கடவுளை நோக்கி, எனக்காக யாவையும் செய்து முடிக்கும் இறைவனை நோக்கியே நான் மன்றாடுகிறேன்". (திபா 57:2)

இவ்வாக்குறுதிகள் தந்த இறை ஆற்றலால் நிறைவு செய்ய முடிந்தது என்பது என் நம்பிக்கை.

நன்றி! வாக்கு மாறாத தேவனுக்கு நன்றி!.

# பொருளடக்கம்


பக்கம்

நாள் 1 : முதல் நிலை

I. அறிமுக சிந்தனைத்தியானம் 1

முதல் மூலக்கோட்பாடும் அடிப்படைநெறியும் 6

II. தந்தையாம் இறைவன் (அப்பா) 8

நாள் 2 : முதல் நிலை

I. பாவம் 13

சில பொதுவான பாவமான மனப்பாங்குகள் 20

II. மனமாற்றம் (திருப்பம்) 21

இறையாட்சி பயிற்சி 26

நாள் 3: இரண்டாம் நிலை

I. இயேசு கிறிஸ்துவின் பிறப்பு 30

இயேசு கிறிஸ்து பிறப்பு - காட்சித்தியானம் 35

II. பன்னிருவயதில் இயேசு 39

நாள் 4: இரண்டாம் நிலை

I. நற்பேறுகளும், ஐயோ கேடுகளும் ( இரு நிலைகள்) 45

II சமாரியப்பெண்ணும், இயேசுவும் 52

நாள் 5 : இரண்டாம் நிலை

I. அஞ்ச வேண்டாம் 58

II. சிறு குழந்தைகளைப் போல மாறுவது 64

நாள் 6: மூன்றாம் நிலை

I. கடைசி இராவுணவு 71

II. சிலுவை 76

அன்னைமரியாளுக்கு இயேசுவின் காட்சி - (காட்சித்தியானம்)

நாள் 7 : நான்காம் நிலை

I. உயிர்ப்பு 82

II. உயிர்ப்பின் மகிழ்ச்சி 90

முதிர்வயதும் மகிழ்ச்சியும் 94

நாள் 8: கடைசி நாள்

I. தூய ஆவியார் 97

II. இறையன்பை அடையக் காட்சித்தியானம் 102

பின்குறிப்பு:

தேர்ந்து தெளியும் அன்பு (டிஸ்கிரேற்றா கேரிதாஸ்) 108

பக்கம்

| | |
|---|---|
| பிற்சேர்க்கை :திருப்பலியின் உரைகள் | 110 |
| 1. இறைவேண்டல் | 110 |
| 2. மன்னிப்பு | 114 |
| 3. அன்பு | 118 |
| 4. தூய்மையான அன்பு (கற்பு) | 122 |
| 5. அர்ப்பணமும் வார்த்தைப்பாடுகளும் | 126 |
| 6. நம்வாழ்வில் துன்பங்கள் | 131 |
| 7. குழுவாழ்வு | 135 |
| 8. நற்செய்தி பகிர்வு | 140 |


"குருக்களே, சாக்கு உடை உடுத்திக்கொண்டு தேம்பி அழுங்கள்; பலிபீடத்தில் பணி புரிவோரே! அலறிப் புலம்புங்கள். ஆண்டவரை நோக்கிக் கதறுங்கள். மிகக் கொடிய நாள் அந்த நாள்! ஆண்டவரின் நாள் அண்மையில் உள்ளது" (யோவேல் 1 : 13 -15)

# அர்ப்பணம்

தங்கள் வாழ்வை முழுவதுமாக அர்ப்பணித்து இயேசுவுக்காய் பணி செய்து வாழும் எல்லா அருட்பணியாளர்களுக்கு இந்நூலை அர்ப்பணிக்கின்றேன்.

என் அருமைத் தம்பி ம. ஆல்பர்ட் வில்லியம் சே.ச குடும்பத்தினரான சேசு சபையினருக்கும் சிறப்பு அர்ப்பணம்

- ம. இம்மாகுலேட்

*நிபந்தனையற்ற அன்பை* அடிப்படையாகக் கொண்டது. அது நல்லது, ஊக்கவிக்கப்பட வேண்டியது.

இறுதியாக, அன்பின் வழியாக, இறையனுபவத்தின் வழியாக நம்மிலே ஏற்படும் நமது உருமாற்றத்தையே (transformation) நாம் ஒரு தியானத்தின் நோக்கமாகக் கொள்கிறோம்.

உருமாற்றம் என்பது சுதந்திரமாக இருப்பது-நமக்கே ஒளிவுமறைவின்றிருப்பது, நமக்கு நாமே ஒளிவு மறைவின்றி இருப்பதைத் தடை செய்யும் அனைத்திலிருந்தும் நம்மை விடுவிப்பது, பிறகு இங்கேயே இப்போதே நமக்கான இறைவனின் திருவுளத்தைக் கண்டறிவது என பொருள் கொள்ளலாம். அது இன்னொருவராக மாறுவது அல்ல, ஆனால் முழுவதும் நாமாக மாறுவது. (எ.கா. ஜன்னல் கதவில் பதிக்கப்பட்ட கண்ணாடி தூசியின்றி இருந்தால்தான் அதன் வழியாக சூரிய ஒளி கடந்து செல்ல முடியும்).

'அளவுக்கு மீறிய பற்றுதல்' எனும் தூசியிலிருந்து விடுபட்ட மனப்பான்மையை நாம் அடைந்த பிறகுதான் நாம் "*பற்றற்று*" இருப்பதாகச் சொல்லுகிறோம். *பற்றற்று* இருப்பது என்பது, "சரியானதைத் தெரிந்துகொள்ள, உண்மையான தொலைநோக்குப் பார்வை பெறுவதற்காக, உலகப் பொருட்களிலிருந்து சற்றே விலகி நிற்பது" எனலாம். (கார்ல் ராணர்) (எடுத்துக்காட்டு: தன் தோழிக்காகப் பரிசு வாங்க செல்லும் ஒரு பெண்ணைக் கவனித்துப்பார். அவள் தனக்குப் பிடித்தவற்றிலிருந்து சற்றே விலகி நின்று, அவளது தோழிக்குப் பிடித்ததையே தேர்ந்து எடுக்கிறாள்) பற்றற்று இருப்பது என்பதுவே எந்த ஆன்மீகப் பயணத்திற்கும் தொடக்கநிலையாகும்.

பற்றற்ற இந்த மனப்பாங்கை எப்படி வளர்த்துக் கொள்வது? பற்றுகளிலிருந்து, குறிப்பாக முன்பு கொண்டிருந்த கண்ணோக்கிலிருந்து அதாவது, நமது நம்பிக்கைகளை பாதிப்புக்குள்ளாக்கும் முன்சார்பு எண்ணங்களிலிருந்து நம்மையே விடுவித்துக்கொள்ள வேண்டும். அத்தகைய நம்பிக்கைகளை நாம் வரிசைப்படுத்துவோம்; சமயத்தொடர்பானவை,கலாச்சாரம் சார்ந்தவை, சாதி, குடும்பப்பின்னணி போன்றவை. இவைகளிலிருந்து நம்மையே விடுவித்துக்கொள்ள நமக்கு முடியுமா? அப்படி முடியுமானால், நாம் பற்றற்றவராக முடியும்.

ஆகவே உருமாற்றம் என்பது சிலவற்றை *அடைவதன்* வழியாக வருவதில்லை, மாறாக சிலவற்றை *விட்டுவதன்* மூலமே வருகிறது. அருட்பணி டோனி டிமெல்லோ அவர்களது 'ஒரு நிமிட ஞானம்' (One minute wisdom) என்ற நூலில் வரும் கதையில் இவ்வாறு வருகிறது :

ஒரு குரு தான் என்ன கற்றுக்கொடுத்தாரோ அது ஒன்றுமில்லை என்றும், தான் செய்ததும் ஒன்றுமில்லை என்றும் வலியுறுத்தி வந்தார். அதன்படி, ஒன்றும் கற்றுக்கொள்ளாதவர்களுக்கு, *கற்றறிந்தவற்றை* எல்லாம் *விட்டுவிடுகிறவர்களுக்கு* ஞானம் வருகிறது என்பதை அவரது சீடர்கள் படிப்படியாகக் கண்டுபிடித்தனர். அந்த உருமாற்றம் சிலவற்றைச் *செய்வதனால் அல்ல*, மாறாக சிலவற்றை *விட்டுவிடுவதன்* விளைவாக ஏற்படுகிறது.

(2) *மனப்பான்மைகள்.* ஆன்மீகப் பயிற்சி எண் 5 இல், "இந்த ஆன்மீகப் பயிற்சியைச் செய்ய விரும்புகிற ஒருவர், அவரை உருவாக்கியவரும் ஆண்டவருமானவரிடம் பெருந்தன்மையும் தாராளகுணமும் கொண்டவராய் இந்தப்பயிற்சியைச் செய்தால், அது அவருக்கு அதிக பயன் தரும்" என்று தூய இஞ்ஞாசியார் சொல்கிறார். பெருந்தன்மை (Magnanimity) என்பது தன்னையே கடந்து செல்வதைக் குறிக்கோளாகக் கொள்வதாகும். தாராளகுணம் (Generosity) என்பது அதன் மதிப்பை கணக்கிடாமல் கொடுப்பதாகும்.

நான் எந்த அளவிற்கு ஆண்டவரிடம் பெருந்தன்மையோடும் தாராளகுணத்தோடும் நடந்து கொள்கிறேனோ அவ்வளவிற்கு அதிகமாக அவர் என்னைச் சிறந்த மனிதனாக மாற்றுவார். தாகூரின் கதையை நினைவுபடுத்திப்பார். (கீதாஞ்சலி எண் 50): "என்னிடமுள்ள எல்லாவற்யையும் உனக்கு நான் கொடுத்துவிடும் இதயம் வேண்டும் என நான் மனங்கசிந்து அழுதேன்".

(3) (ஆன்மீகப்பயிற்சியில் முன்குறிப்பு எண் 2) தியானத்தில் நான் *அறிவைத் தேடுவதில்லை*, கற்றிந்தோர் கருத்துக்கள் வழங்கி கருத்துரைகளை நாம் கேட்டும் கருத்தரங்கு போன்றது அல்ல இது. தியானத்தில் இறைவனை அனுபவிப்பது முக்கியமானது. இங்கே நாம் அறிந்துகொள்ளும் கருத்துக்கள் *இறைவனை உள்ளூர அனுபவிக்க* - "உண்மையை உள்ளூர ருசித்து ரசிக்க" உதவும் கருவியாக அமைய வேண்டும். வேறு வார்த்தைகளில்

சொல்வதானால், உனது உணர்ச்சிகள், ஆசைகள் போன்றவற்றுடன் தொடர்பு கொண்டு உன்னில் *தூய ஆவியின் அசைவாடுதலில்* கவனம் செலுத்துவது எனலாம்.

ஆறுதல் தேவைப்படும் நேரமும் கைவிடப்படும் நேரமும் இறைவன் உன்னோடு பேசும் நேரம். (ஆறுதல் என்பது அமைதியை உணர்வது, அல்லது ஏனைய மகிழ்நோக்கு எண்ணங்களை உணர்வது; கைவிடப்படுதல் என்பது மனச் சோர்வு, அதைியின்மை, குழப்பம் போன்றவற்றை உணர்தல்).

"உள்ளூர ருசித்து ரசிப்பது" (அதன் சுவையை அனுபவிப்பது) என்பது எதைக் குறிக்கிறது?

எடுத்துக்காட்டு: என்னுடன் வேலூரில் ஆற்றுப்படுத்துநர் பயிற்சியில் உடன்பயின்ற தோழர், சங்கிலித் தொடர்போன்று தொடர்ந்து புகைப்பிடிப்பவர். அத்தகைய புகைப்படித்தல் அவரது உடல் நலத்திற்கு நல்லதல்ல என்று நாங்கள் சொல்லி வந்தோம். ஆனால் அவர் தொடர்ந்து புகைப்பிடித்துக் கொண்டேயிருந்தார். பிறகு ஒரு நாள் சி.எம்.சி மருத்துவமனையில் உள்ள புற்றுநோய்த் துறையில் பணிபுரியும் மருத்துவர்களில் ஒருவர் புற்றுநோய்க்கான காரணங்கள் பற்றி உரையாற்றினார். அது அவரைத் தொட்டது. மறுநாளே அவர் புகைப்பிடிப்பதை விட்டுவிட்டார். அறிவு ஒரு மனிதரை மாற்றுவது இல்லை. ருசிப்பதும் ரசிப்பதும் -அதாவது உணர்ச்சி மட்டத்தில் ஏதாவது உன்னைத் தொடும்போதுதான் மாற்றம் வரும்.

"உன் மரத்தில் இருக்கும் எல்லா மாம்பழங்களையும் எண்ணி வைத்திருந்தாலும் ஒன்றைக் கூட ருசித்துப் பார்க்காவிட்டால் என்ன பயன்?" என்று அருட்பணி டோனி - டிமெல்லோ சொல்லுவார். ஆகவே நற்செய்தியில் சில பகுதியை நீ வாசிக்கும்போதோ, அல்லது *மரங்களை, கடலை, பூக்களை உற்றுப்பார்க்கும்போதோ* அல்லது ஒரு நபரை நீ சந்திக்கும்போதோ-எதனாலோ அல்லது யாராலோ உன்னில் அசைவு ஏற்படுத்தினால் நிதானித்து, இறைவன் உன்னோடு பேச அனுமதி, கவனித்துக்கேள். அதுவே ஒருவேளை உனக்குரிய செய்தியாக இருக்கலாம். அதைக் குறித்துக்கொள். *வியந்து போற்றுவதே ஞானத்தின் ஆரம்பம்.* அதுவே மரியாவின் ஆன்மீகத்தின் இரகசியம். அதுவே சிறுமலரின் ஆன்மீக இரகசியமும் கூட!

தாகூர், குழந்தையின் முகத்தில் தெரிந்த புன்னகையில் இறைவனைச் சந்தித்தார் (கீதாஞ்சலி எண் 61), "கோல்டன் டேபடில்ஸ்" (Golden Daffodils) என்னும் பூக்களை உற்றுப்பார்த்தபோது வேர்ட்ஸ் வொர்த்துக்கும் (Words worth) இதுதான் நடந்தது. ஆகவே நமது எல்லா சிந்தனைத்தியானங்களிலும் "ருசிப்பதும் ரசிப்பதும்" முக்கியம் வாய்ந்தது.

(4) இது உங்கள் தியானம், என்னுடையதல்ல என்பதை நினைவு கூருங்கள். நான் உங்களுக்குத் துணை செய்வதற்காக இங்கிருக்கிறேன். ஆண்டவரிடம் செல்ல வழிகாட்டுபவரே ஓர் ஆன்மீக வழிகாட்டி. நீங்கள் ஆண்டவரைக் கண்டு கொண்ட உடனே அவர் உங்களுக்குப்பொறுப்பு எடுக்கவும் அவர் விரும்புகிற இடத்திற்கு வழிநடத்தவும் அனுமதியுங்கள். துணை செய்வது, உற்சாகப்படுத்துவது, ஆவியின் அசைவாடுதலைத் தேர்ந்து தெளிய உதவி செய்வது போன்றவையே என் வேலை.

(5) நான் சொல்லித்தரும் கருத்துகள் மிக எளிமையானவை, எனது தனிப்பட்ட அனுவபத்திலும் ஆழ்ந்த சிந்தனைகளிலும் பெற்றுக் கொண்டவை. என் நம்பிக்கை வாழ்வில் நான் பெற்ற அனுபவங்கள் அவை. இதிலே விட்டுக்கொடுக்கும்தன்மை தேவைப்படுகிறது (ஆன்மீகப் பயிற்சி எண் 15) உங்களது சிந்தனைத்தியானத்திற்கு என் கருத்துக்களைத்தான் எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. நான் உங்களுக்கு ஆலோசனையாகத் தரும் விவிலியப் பகுதிகளையும் உங்கள் சிந்தனைத்தியானத்திற்காக எடுத்துக்கொள்ளலாம்.

(6) *விவிலியப் பகுதிகள் பற்றிய குறிப்பு:* எப்படி இவைகளை மனத்தில் இருத்தி தியானிப்பது என்பது பற்றியது. எம்மாவுஸ் சீடர்களைப்பற்றி தூய லூக்கா கூறும்போது, இயேசு அவர்களோடு பேசி மறைநூலை விளக்கும்போது அவர்கள் *உள்ளம் பற்றி எரிந்தது* என்கிறார். இயேசு மறைநூலுக்கு விளக்கம் கொடுப்பதில் கைதேர்ந்தவராயிருந்தார், ஏனெனில் மறைநூல் அறிஞர்கள் தங்களது படிப்பினால் தெரிந்து கொண்டதைவிட இயேசுவால் அதிகம் அறிந்துகொள்ள முடிந்தது. அதன் காரணம் என்னவெனில் அவர் முழு உள்ளத்தோடும் அன்போடும் அவற்றிற்கு பொருள் கண்டார். நீங்களும் மறைநூலுக்கு விளக்கம் தேடும்போது *அன்பான* மனப்பாங்கு இருந்தால், வெளிப்படையாகத் தெரியும் பொருள்தவிர *அன்பின் மறைவான மறையுண்மைகளையும்* கண்டுகொள்ளமுடியும்.

ஆகவே என் இதயம் ஒன்றி எனது மறைநூல் பகுதிகளை வாசிக்கவும், இங்கே, இப்பொழுதே ஆண்டவர் எனக்கு வெளிப்படுத்த விரும்பும் உண்மையான செய்தியைப் பெற்றுக்கொள்ளவும் அருளைத் தரும்படி நான் கேட்க வேண்டும்.

(7) சிந்தனைத்தியான முடிவிலே சிந்தனைத்தியானத்தைத் திறனாய்வு செய்ய சிறிது நேரம் செலவிடுங்கள். திறனாய்வு செய்ததை எழுதி வைத்துக்கொள்ளுங்கள்: ஏதாவது உங்களைத் தொட்டால், இறைவன் உங்களோடு பேசியதை உணர்ந்தால், அவற்றையும் பொதுவாக சிந்தனைத்தியானம் எப்படியிருந்தது என்பதையும் குறித்துக் கொள்ளுங்கள். இது அடுத்த சிந்தனைத்தியானத்தை இன்னும் சிறப்பாகச் செய்ய உதவும்.

(8) இறுதியாக, முக்கியமான ஒன்றாக, தியானத்தின்போது, உள்ளேயும் வெளியேயும் *அமைதி* காக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்த விரும்புகிறேன். *உள்ளார்ந்த அமைதி* தியானத்தின் வெற்றிக்கு மிக அவசியம். வெளியிலுள்ள அமைதி, உள்ளார்ந்த அமைதிக்கு சிறந்த வகையில் உதவி செய்யும்.

எபேசியர் 1 : 17-19 எனும் வாசகத்தை வாசித்து நிறைவு செய்யவும்.

## முதல் மூலக்கோட்பாடும் அடிப்படை நெறியும்

(ஆன்மீகப்பயிற்சி எண் 23)

இது இறைவனில் நம் ஆன்மீகத்தின் அடிப்படைக்கே நம்மை இட்டுச் செல்கிறது. இது நமக்கு எடுத்துரைப்பவை:

(1) இறைவனே நம் இறுதிநோக்கம், அதாவது, அவரைப் புகழ்ந்து, ஆராதித்து, பணி செய்வதன் மூலம் நமது ஆன்மாவை நாம் மீட்டுக்கொள்ள வேண்டும்.

(2) இறைவனின் படைப்புகளிலெல்லாம் மனிதன் உன்னத நிலையை அனுபவிக்கிறான். தூய அகுஸ்தீனார் சொல்லுவது போல "படைப்புகளிலே உன்னத நிலையைச் சேர்ந்த மனிதன் உம்மைப் புகழ விரும்புகிறான். எங்களை உமக்காகவே படைத்துள்ளீர், உம்மைப் புகழ்வதிலே மகிழ்ச்சி காண அவனைத் தூண்டுகிறீர், எங்கள் உள்ளம் உம்மிலே இளைப்பாறுதல் பெறும் வரை இளைப்பாறுதலின்றி தவிக்கின்றது".

(3) இறைவனைச் சென்றடைய ஏனைய படைப்புகள் எவ்வளவிற்கு வழி வகுக்கிறதோ அந்த அளவிற்குத்தான் அவை அர்த்தம் உள்ளவையாக இருக்கின்றன. வாழ்வின் இறுதி நோக்கத்தை அடைய எவ்வளவு தூரம் இந்த படைப்பு பொருள்களைப் பயன்படுத்த முடியுமோ அவ்வளவிற்குப் பயன்படுத்த வேண்டும். வாழ்வின் இறுதி நோக்கத்தை அடைய தடைசெய்வதாக இருந்தால் அவற்றை நாமே உதறித் தள்ளிவிட வேண்டும். இதை எப்படி செய்வது? முதலாவது, அளவுக்கு மீறிய பற்றுதல்களிலிருந்து நம்மை நாமே விடுவித்துக்கொள்ள வேண்டும். இரண்டாவதாக, "பற்றற்ற" மனப்பாங்கு வழியாக நமது இறுதிநோக்கத்தை அடைய அதிக ஏற்புடையவற்றைத், (அதாவது இறைவனது திருவுளத்திற்கு ஏற்றவற்றைத்) தெரிந்துகொள்ள வேண்டும்.

தூய இஞ்ஞாசியார் மூலக்கோட்பாட்டையும் அடிப்படை நெறியையும் தியானத்தின் முதல் பொருளாக முன்வைக்கிறார். தியானம் செய்பவர் ஆன்மீகப் பயணத்தின் தொடக்கமாகக் கொள்ளவேண்டிய முதல் பொருள் இதுதான். ஆகவே ஒரு தியானம் என்பது இறைவனிடம் செல்லும் திருப்பயணம் போன்றது. இப்போது இயேசு நமக்கு வெளிப்படுத்தும் இறைவனைச் சந்திக்க எந்தத் திசையில் திருப்பயணத்தை மேற்கொள்ள வேண்டும்?

முதல் சிந்தனைத்தியானம் 'தந்தையாம் இறைவனை'ப் பற்றி நமக்குக் கூறுகிறது.

# நாள் - 1

## II தந்தையாம் இறைவன் (அப்பா)

இயேசு அனுபவித்த, நமக்கு அறிமுகப்படுத்திய இறைவன்.

**முன்னுரை :** இறைவன் எனக்கு யார்? முதன் முதலாகக் கேட்க வேண்டிய ஒரு முக்கியமான கேள்வி இது; ஏனென்றால் வரலாறு முழுவதுமாக இறைவனின் பெயரால் என்னென்னவோ தீச்செயல்கள் நடந்தேறியுள்ளன. நாம் விரும்பும் சாயலில் இறைவனை நாமே படைத்துக் கொண்டு, நாம் எதை நம்புகிறோமோ அதையே செய்ய, அவர் கட்டளையிடச் செய்கிறோம்.

ஆகவே 'இறைவன் உனக்கு யார்?' என்று எனக்குக் கூறினால் நீ யாரென்று நான் உனக்குக் கூறுவேன். இறைவன் நமக்கு யார் என்பதைப் பொறுத்தே வாழ்க்கை, மக்கள், மதம், ஒழுக்கம் போன்றவற்றைப் பற்றி நம்முடைய மனப்பாங்கு அமையும்.

(1) நாம் எப்படிப்பட்ட இறைவனில் நம்பிக்கை வைக்கிறோம்?

(அ) இறைவனைப் பற்றி மக்கள் கொண்டிருக்கும் *எதிர்மறை* உருவங்கள் (Negative images) (இயேசு இறைவனைப் பார்க்கும் விதத்திலிருந்து வேறுபட்டவை இவை)

- ஒரு கோடீஸ்வரரை, ஒரு முதலாளியைப்போல எல்லாவற்றையும் உடைமையாகக் கொண்டிருக்கின்ற ஓர் இறைவனாகக் காண்பது. ஆனால் இயேசு இத்தகையவற்றை எல்லாம் அவரை விட்டு விலக்கித்தள்ளினார். (லூக் 5 : 31 -32)
- நம்மைவிட இறைவன் மேலானவர் என்ற சமத்துவமற்ற மனநிலையினால் கீழ்ப்படிகின்றனர். ஆனால் இயேசு நாம் இறைவனோடு மிக நெருக்கமான உறவுகொள்ள வேண்டும் என விரும்புகிறார்.
- மதிப்பிற்குரிய மக்களுக்கு ஆதரவு காட்டுகிற இறைவன் (இயேசு மதிப்பிற்குரியவர்களுக்காக வரவில்லை)
- நம்மிடமிருந்து தனிமைப்படுத்தப்பட்ட, பிரித்தெடுக்கப்பட்ட ஓர் இறைவன்-தொலைவிலுள்ள, அக்கறையற்ற, அன்பில்லாத ஓர் இறைவன்
- மேலே வானத்திலே இருக்கிற இறைவன்-(மேலே குறிப்பிட்டது போல)

- நம்முடைய தவறுகளுக்காகத் தண்டிக்கின்ற ஓர் இறைவன்- இத்தகைய எண்ணத்தால் பயந்த மனநிலை உருவாகிறது.
- கண்டிப்பான ஓர் இறைவன் - பயந்த மனநிலை உருவாகுகிறது.
- பரிசேயர் வழிபட்ட ஓர் இறைவன் (சட்டம் தந்த இறைவன்). இதனால் பயந்த மனநிலை ஏற்படுகிறது. எனவே படைப்பாற்றல் இல்லை.

(ஆ) இறைவனின் *நேர்மறை* (Positive)பண்புகள்: இயேசு வெளிப்படுத்திய இறைவன்.

- இறைவன் நம் தந்தையாக இருக்கிறார் (அப்பா) -அன்பை, சமத்துவத்தைச் சுட்டிக் காட்டுகிறார். " நானும் தந்தையும் ஒன்றாய் இருக்கிறோம்" என்றார்.
- இறைவன் அன்பாய் இருக்கிறார் (தூய போவான்)
- பாவிகளை அன்பு செய்யும் இறைவன் (லூக் 5 :31-32) மிக அருகிலிருக்கிற இறைவன்.
- நமது நண்பரும் வழிகாட்டியுமான இறைவன்.
- நமது சுதந்திரத்தை, மதிக்கிற, நம்மை ஒருபோதும் கட்டாயப்படுத்தாக ஓர் இறைவன் (எ.கா தாலிபான், மசூதிக்குப் போகச் சொல்லி ஆப்கானிஸ்தானிய மக்களைக் கட்டாயப்படுத்துகிறான்)
- நாம் உயர்ந்து வளரவும் படைப்பாற்றலோடு இருக்கவும் விரும்புகின்ற ஓர் இறைவன் (1கொரி 13:11)

  ஆகவே இறைவன் எனக்கு யார்? ஒருவேளை மகிழ்நோக்குப் பண்புகளும் எதிர்மறைப்பண்புகளும் சேர்ந்த கலவை போன்றவரா? அப்படியிருந்தால் எதிர்மறையான எண்ணங்களை நம்மிடமிருந்து நாம் அகற்றி விட வேண்டும்.

(2) *தந்தை ஒரு வழிகாட்டி:* அன்பின் திசையில் இறைவனைக் காட்டும் ஒரு திசைகாட்டி. மேலும் இறைவனைப்பற்றி என்னுடைய *அனுபவம்* வற்றிப்போகச் செய்வதில்லை. நான் அவரை *அறிய* முடியாது. அன்பு வழியாக அவரை அனுபவிக்கத்தான் முடியும்.

"அறியப்படாத மேகம்" (The cloud of unknowing)என்ற நூலில்.

> "அன்பினால் இறைவனைப் பற்றிப்பிடித்துக்கொள்ள முடியுமே தவிர, சிந்திப்பதால் மட்டும் ஒருபோதும் முடியாது"
> - என்று சொல்லப்பட்டுள்ளது.

"இறைவனை அறிவதனால் கண்டு கொள்ள இயலாது. இறைவனை அறியவில்லை என்பதை உணரும்போதுதான் கண்டு கொள்ள இயலும். அதாவது, அறிவதைக் கடந்து செல்வதனால்தான் அவரைக் கண்டுகொள்ள இயலும்" என்று தூய தாமஸ் அக்குயினாஸ் சொல்கிறார்.

"சும்மா இறையியல்" (Summa Theologica) முன்னுரையில் அவர் சொல்கிறார்: "இறைவன் என்னவாக இருக்கிறார் என்பதை அறிய முடியாது. ஆனால் இறைவன் *என்னவாக இல்லை* என்பதைத்தான் அறிய முடிகிறது. இறைவன் *எப்படி இருக்கிறார்* என்பதை அல்ல. ஆனால் *எப்படி இல்லை* என்பதைத்தான் கவனித்துப்பார்த்து அறிய முடியும்". படைப்புகளைப் பார்க்கும்போது அவர் இதுவாக இல்லை. அதுவாக இல்லை என்ற முடிவுக்கே வர முடியும். 'ஆற்றலின் நாள் பற்றிய வாக்குவாதத்தின் கேள்வி' (In Questio Disputata de potentia Dei) என்பதில் அவர் சொல்கிறார், "இறைவனை நாம் அறியவில்லை என்பதை அறிவதுதான் இறைவனைப்பற்றிய மனித அறிவிலே இறுதியானது".

ஆகவே இறைவன் எல்லா பெயர்களையும் உருவங்களையும், வார்த்தைகளையும், கருத்துகளையும் கடந்து இருக்கிறார். *அமைதியில்* (Silence) அதாவது, *சிந்தனைத்தியானம் வழியாக எண்ணத்தைக் கடந்து செல்வதன்* மூலம் அவரை அனுபவிக்க வேண்டும். அமைதியாக அமர்ந்திருந்து ஆழ்ந்து சிந்திப்பதன் வழியாகவும்; காது கொடுத்துக் கேட்பது, பார்ப்பது, இதயத்தால் உணர்வது போன்றவை வழியாகவும் அவரை அனுபவிக்கலாம். அதன் வழியாக நீதிக்கும் அன்பிற்கும் நம்மையே அர்ப்பணிக்கச் செல்கிறோம். இவ்வாறுதான் இயேசு இறைவனை அனுபவித்தார்.

மறைநூல்கள் பற்றி என்ன சொல்லலாம், அவைகள் இறைவனைப்பற்றி நமக்குச் சொல்லவில்லையா? ஆம், சொல்லுகிறது. ஆனால் அது தட்டித்தடவியாவது இறைவனை அனுபவிக்கச் செய்கிறது. பழைய ஏற்பாட்டில் இறைவன் நமது தந்தை என்ற கருத்து படிப்படியாக வளர்ச்சி பெறுவதை நாம் பார்த்தாலும், அவர் இரக்கமுள்ளவர், அன்புள்ளவர், மன்னிப்பவர், அக்கறையுள்ளவர், நல்ல ஆயர் என்றெல்லாம் விவரிக்கப்படுகிறார். இருந்தாலும் மக்களது

பொதுவான உணர்வு நிலையில் இறைவன் ஒரு நீதிபதி, சட்டம் கொடுப்பவர், பெயரைக்கூட உச்சரிக்கக் கூடாத இறைவன் என்னும் கருத்தே மேலோங்கி நிற்கிறது. ஆகவே அவர்கள் அவருக்கு அஞ்சினார்கள். "ஆண்டவரிடம் கொள்ளும் அச்சமே ஞானத்தின் தொடக்கம்" என்று பழைய ஏற்பாட்டில் ஒரு பொதுவான பழமொழி உண்டு. அதை இன்னும் நாம் மீண்டும் சொல்லுகிறோம். மேலும் அதை மேற்கோள் காட்டுகிறோம். மேலும் அதற்கேற்ப நமது மறைவாழ்வை அமைத்துக்கொள்கிறோம்.

புதிய ஏற்பாட்டில் இயேசு இறைவனை, 'தந்தையே' (அப்பா) என அழைக்கத் துணிகிறார். ஆன்மீகப்பயிற்சி நூலில் "எங்கள் பிதாவே" என்பதன் பழைய முன்னுரையில் நாம் "அதேமுஸ் டிசரே" ("audemus dicere") - அதவது 'சொல்லத்துணிதல்' என்று சொல்கிறோம். இயேசுவைப் பின்பற்றியே நாம் இறைவனை, 'தந்தை' என அழைக்கத் துணிகிறோம். 'அப்பா' என்ற வார்த்தையை மிகநெருக்கமான முறையில், ஒரு குழந்தை அதன் தந்தையை அழைப்பதைப்போல அவர் பயன்படுத்துகிறார். ஆகவே நாம் அவரது பெயரைச் சொல்லி அவரை அழைக்கமுடிகிறது.

"இயேசு பெற்ற ஒரு புதிய இறையனுபவம், யாவே இறைவனுக்கு 'அப்பா' என்று பெயர்மாற்றம் செய்ய அவருக்கு அதிகாரம் அளித்தது. அதுவே இறைவனையும் சமுதாயத்தையும் பற்றிய புதிய புரிதலிலே அடிப்படை மாற்றத்திற்கு இட்டுச் செல்கிறது" என்று அருட்பணி ஜார்ஜ் சோர்ஸ் சொல்கிறார். இறைவனை இருக்கிற அளவிற்குத் *தூயவராக* மட்டும் அல்ல, மாறாக, *அருள்நிறைந்தவராகவும் மனதுருக்கமுடையவராகவும்* அவரை அனுபவிக்கிறோம். அதனால் நுகர்வு கலாச்சாரத்திலிருந்து விடுதலை பெற்றவராய் (அதாவது, பேராசை இல்லாதவராய்) பெரும்மாற்றங்களைக் கொண்டு வரும் சேவை மனப்பாங்குடன் (அதாவது, பெருமை இல்லாதவராய்) செயல்படும் பரந்து விரிந்த குடும்பத்தின் உறுப்பினர்களைக் கொண்ட மக்களாகிறோம்.

திருமறைப்பகுதி : (லுக்கா 15:11-32) : அன்புத்தந்தை (ஊதாரிமகன்) உவமை வழியாக இறைவன் தந்தையாக இருப்பது என்பது எதைக் குறிக்கிறது என்று இயேசு எளிதில் உணரக்கூடிய விதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார். அது தனிநபரின் சுதந்திரத்தை மதிக்கிற,

*நிபந்தனையற்ற, தாராள குணமுள்ள, மன்னிக்கிற அன்பு* கொண்ட ஓர் உறவாக இருக்கிறது. நாம் சட்டத்தின் அடிமைகள் அல்ல. ஆனால் இறைவனது உரிமை மக்கள், இயேசுவின் சகோதர சகோதரிகள் என்பதையும் அது குறிக்கிறது. பழைய ஏற்பாட்டில் ஆண்டவரைப் பற்றிய அச்சம் என்னும் சிந்தனை இருந்தது. ஆனால் இயேசு வழியாக 'ஆண்டவரைப் பற்றிய அச்சமே ஞானத்தின் தொடக்கம்' என்ற சிந்தனையிலிருந்து விடுதலை பெறுகிறோம். ஆகவே இப்பொழுது *ஆண்டவரிடம் கொள்ளும் அன்பே ஞானத்தின் தொடக்கம்* என்பது நமது மனப்பாங்காக இருக்க வேண்டும். "அன்பு எங்கிருக்கிறதோ அங்கே அச்சம் இல்லை", (1 யோவா 4:18) என்று தூய யோவான் சொல்கிறார். ஆகவே நாம் இத்தகைய அன்பு-உறவையும், இறையன்பு அனுபவத்தையும் வளர்த்துக்கொள்ள முயற்சி செய்ய வேண்டும். அப்போது நாம் இறைவனைப் பற்றியும் மதம் பற்றியும் சரியான மனப்பாங்கு கொண்டிருப்போம்.

குறிப்பு 1 : மனிதனைக் குறித்த இறைவனது மனப்பாங்கு நிபந்தனைக்கு உட்பட்டதல்ல. (நீ நல்லவனாக இருந்தால் நான் உன்னை அன்பு செய்வேன் என்றல்ல) ஆனால் முழுவதுமாக *நிபந்தனையற்ற அன்பு* (நான் உன்னை அன்பு செய்கிறேன். இதை அனுபவி, அதனால் நீ நல்லவனாவாய்) -அன்பு உன்னை மாற்றும்.

குறிப்பு 2 : இறைவன் தந்தையாக இருந்து நமக்கு அன்பின் வழியைக் காட்டுகிறார். அதுபோலவே இறைவனை நீங்கள் *தாயாகவும்* நினைக்கலாம். சிலர் இந்த உருவகம் வழியாக இறைவனுடன் சிறந்த அன்பு உறவுக்கு வந்து சேர முடியும் உதாரணமாக: உலகத் தந்தையின் அன்பை ஒரு போதும் அனுபவிக்காதவர்கள்-சிறுவயதிலே அவரை இழந்தவர்கள் அல்லது அவரை ஒரு கொடூரமாக மனிதராகக் கொண்டிருந்தவர்கள், இறைவனைத் தாயாக நினைத்து இறையன்பை அனுபவிக்கலாம்.

# நாள்-2

## I - பாவம்

நாம் இறைவனின் அன்பை - இறைத்தந்தையின் அன்பை அனுபவித்திருக்கின்றோம். ஆனால் இறைவனின் அன்பிற்கு நாம் இரண்டு முறையில் பதில் தர முடியும். இறைவனுக்கு 'ஆம்' என்று சொல்வதனால் இறைவனைப்போல அன்பார்ந்த நபராக முடியும் அல்லது இறைவனுக்கு 'இல்லை' என்று சொல்வதனால் பாவம் நிறைந்தவராக முடியும். அது ஏனென்றால் அன்பின் சாராம்சம் சுதந்திரமே. புல்ட்டன் ஷீன், "நாம் கட்டாயப்படுத்தப்படும்போது எப்படி நாம் உண்மையாக அன்பு செய்ய முடியும்? 'இல்லை' என்று சொல்ல கிடைக்கும் வாய்ப்புதானே, நாம் சொல்லும் 'ஆம்' என்பதற்கு மிக அழகு சேர்க்கிறது, இல்லையா?" என்று சொல்கிறார்.

இறைத்தந்தையின் அன்பு 'வேண்டாம்' என்று மறுப்பு சொல்லிக் கொண்டிருப்பதே பாவம். "ஊதாரி மகன்" அவனது தந்தையின் அன்பு 'வேண்டாம்' என்றான். ஆகவே, அன்பு செய்யவேண்டுமென்றால் துணிந்து இறங்கித்தான் ஆக வேண்டும் என்று எல்லா பெற்றோருக்கும் தெரியும். ஆயினும் ஒவ்வொரு பெற்றோரும் குழந்தையை அன்பு செய்கின்றனர், ஏனெனில் குழந்தையின் சரியான வளர்ச்சிக்கு இவ்வாறு துணிவுடன் அன்பு செய்வது அவசியமாகிறது.

நாமும் கூட இறைவனது அன்பு 'வேண்டாம்' என்று சொல்லி பாவம் செய்யலாம். ஆனால் பாவ உணர்வை இழக்காமல் இருப்பதும், பாவம் உண்மையிலே ஒரு பேரச்சமூட்டுகின்ற ஒன்று என்று உணர்வதும் மிக முக்கியம் வாய்ந்தது. இவ்வளவு அதிகமான அன்பைக் காட்டிய ஒருவருக்கு எதிராகப் பாவம் செய்வது ஏற்புடையது அல்ல; இது நம்மையே *நாணமுறச்* செய்ய வேண்டும். நாம் இதை *உணர்ந்தால்,* இதைக் குறித்து விழிப்புணர்வு பெற்றால், பிறகு நாம் பாவம் செய்ய ஒரு போதும் விரும்பமாட்டோம்.

(1). முதலாவதாக, உலகத்திலுள்ள பாவம் பற்றி சிந்தித்துப் பார்ப்போம். அடுத்ததாக நமது சொந்த பாவம் நிறைந்த தன்மையை உற்றுப்பார்ப்போம். ஆகவே சுற்றியுள்ள உலகை உற்றுப்பார்ப்போம். நாம் என்ன பார்க்கிறோம்? அளவுக்கதிகமான வெறுப்பு, பேராசை,

பெருமை, போலிப்பகட்டு, அடிப்படை வாதம், வகுப்புவாதம், தவறான பிரச்சாரம், அரசியல் வானிலும் அன்றாட புறணிப் பேச்சிலும் பிறரின் மதிப்பை குலைப்பது ஆகியவை காணப்படுகின்றன. மேலும் போர்களையும் அவற்றின் விளைவுகளையும், சுரண்டல்களையும்; ஏழைகள், பெண்கள், ஓரங்கட்டப்பட்டவர்கள், மலைவாழ்மக்களுக்கு இழைக்கப்படும் அநீதி குறித்தும்; இலஞ்சமும் ஊழலும், ஏமாற்று, கொடுமை, கற்பழிப்பு போன்றவை பற்றியும் வாசிக்கிறோம். •அவை பேரெண்ணிக்கையில் உள்ளன. இவ்வளவு இருந்தாலும் அவைகளைப் பாவங்கள் என்று ஒப்புக்கொள்ள உலகம் விரும்பவில்லை.

முதன் முதலாக உலகத்திலுள்ள எல்லா தீமைகளுக்கும் காரணமான பாவத்தை *அடையாளம்* காணவும், அதைப்பற்றிய விழிப்புணர்வு அடையச் செய்யவும், அதன் பிறகு அதனின்று நம்மை *விடுவித்து*, நம்மை உருவாக்கவும் இயேசு வந்தார்.

நமது பாவம் நிறைந்ததன்மையைக் கண்டுகொள்வதிலிருந்து தடைசெய்கின்ற சில *தடைகளையும் தவறான கருத்துருவாக்கங்களைப்* பற்றியும் நாம் கவனித்துப்பார்ப்போம்.

(அ)நாமும் பாவம் செய்கிறோம், அநேக நேரங்களில் நாம் பாவம் செய்திருக்கிறோம் என்பதை உணர்வதில்லை. அல்லது நாம் பாவம் செய்தோம் என்பதை ஏற்றுக்கொள்ள விரும்புவதில்லை. சில மக்கள் அவர்களால் ஒருபோதும் தவறு செய்யமுடியாதது போல நடிக்கிறார்கள்; *சுயநேர்மை* - என்பது ஆன்மீக வாழ்வின் வளர்ச்சிக்கு மிக மோசமான எதிரி. இயேசு அதை வெளிவேடத்தோடு சேர்த்தே கண்டனம் செய்தார். (லூக் 11:37-52). ஆகவே நமது பாவம் நிறைந்ததன்மையைப் பார்ப்பதற்கு முதல்தடை *சுயநேர்மை* வாசிக்க. (யோவா 9 : 39 -41)

(ஆ)இரண்டாவதாக, பாவம் பற்றிய உண்மையைத் திரித்துக் கூறும் கருத்துக்கள் நம்மிடம் உள்ளன. இயேசு சாவுக்குரிய பாவம் என்று நினைக்காதவற்றை நாம் சாவுக்குரிய பாவம் என்று குற்றம் சாட்டுகிறோம், அதே வேளையில் இயேசு சாவுக்குரியவை என்று நினைப்பவற்றை நாம் பாவம் இல்லை என்று எளிதாக எடுத்துக் கொள்கிறோம். ஆகவே இரண்டாவது கருத்தாக,

மலைப்பொழிவிலிருந்து. நம்மிடம் உள்ள தீமைகள் என்ன என்று எப்படி *அடையாளம் காணவேண்டும்* என்றும் எப்படி நாம் *அன்பில் வாழ* வேண்டும் ,என்றும் இயேசு நமக்கு வழி காட்ட நாம் அனுமதிப்போம்.

(இ)பொதுவாக நாம் செய்யும் தவறு என்னவென்றால் பாவங்கள் பற்றி கருதும்போது உணர்ச்சிகளை தவறாக பாவங்கள் என்கிறோம். கோபம், பொறாமை, கட்டுக்கடங்காத பாலுணர்வு, சோகம், மனச்சோர்வு,-பயம், கவலை, ஊக்கக்குறைவு போன்றவை பாவங்கள் அல்ல. பாவம் என்பது நமது தீர்மானத்தில் இருக்கிறது. ஆனால் நமது உணர்ச்சிகளில் இல்லை. எடுத்துக்காட்டாக, *பொறாமை எனும் உணர்ச்சி* தன்னிலே ஒரு பாவம் *இல்லை.* நான் பொறாமைப்படுகிறேனா? என்பது கேள்வி அல்ல. நாம் எல்லாருமே சிலவேளைகளில் பொறாமைப்படுகிறோம். என்னுடைய பொறாமையினால் நான் யாரோ ஒருவருக்கு எதிராக பேசியிருக்கிறேனா அல்லது செயல்பட்டிருக்கிறேனா? என்பதுதான் பிரச்சனை. பொறாமை பாவத்திற்கு இட்டுச் செல்லும். ஆனால் பொறாமை தன்னிலே பாவம் இல்லை என்பதை நாம் நினைவில் கொள்வோம். ஏனைய உணர்ச்சிகளுக்கும் இதுவே பொருந்தும்.

(ஈ) அடிக்கடி, நாம் ஏதாவது கேடு விளைவிக்கக்கூடியதைச் *செய்வதைத்தான்* பாவம் என்று நினைப்பது இன்னுமொரு தவறான புரிதலாகும் - அது *செய்த* பாவம். நன்மையானவற்றைச் *செய்யத்தவறிய* பாவமும் அதே போன்று ஆபத்தான அல்லது சிலநேரங்களில் செய்த பாவத்தைவிட அதிக ஆபத்தானதாக இருக்க முடியும். "உலகம் வாழ்வதற்கு அதிக ஆபத்து நிறைந்த இடமாக இருப்பதற்கு, தீமை செய்பவர்கள் காரணம் அல்ல, மாறாக தீமை நிகழ்வதைப் *பார்த்துக்கொண்டு அது நடக்க அனுமதிப்பவர்களே* காரணம்" என்று எயின்ஸ்டீன் சொன்னார்.

மக்களது இறுதி தீர்ப்பு பற்றி இயேசு கூறும் நிகழ்ச்சியிலே விபச்சாரம், கொலை போன்றவற்றிற்காக அல்ல, மாறாக, உதவிதேவைப்பட்ட யாரோ ஒருவருக்கு உதவி செய்ய *கரம் நீட்டாததற்காக* தீர்ப்பிடப்படுவோம். நம்மைச் சுற்றியுள்ள சமுதாயத்தின் மக்களை நாம் நடத்தும் விதம் அல்லது நடத்தாத விதத்தைப் பொறுத்தே

நாம் எந்த அளவிற்கு பாவிகள் அல்லது பாவிகள் இல்லை என்று தீர்மானம் செய்யப்படுகிறது.

(2) நமது தனிப்பட்ட பாவங்களைக் கருதுவதற்கு மலைப்பொழிவு ஓர் சிறந்த வழிகாட்டியாக அமைய முடியும். சதுசேயருடனும் பரிசேயருடனும் நேருக்கு நேர் மோதியவைகளும், சில உவமைகளும் கூட உதவி செய்யமுடியும்.

(கீழ்க்காணும் பகுதிகளில் விவிலியப் பகுதியை முதலில் வாசித்த பிறகு விளக்கத்தை வாசிக்கவும்)

லூக்கா 6:24-26 தூய லூக்கா மலைப்பொழிவில் ஐயோகேடுகள் என்றுக் கூறும் பேராசை, சுயநலம், புகழையும் பெருமையையும் தேடுதல், கர்வமும் போலிப்பகட்டுமுடைய மனப்பாங்கு ஆகியவை இயேசுவின் மனப்பாங்கிலிருந்து வெகு தொலைவில் உள்ளது.

<u>மத் 5 : 13 - மத் 7 : 12</u>

*மத் 5:13-16* : உப்பு உவர்ப்புத்தன்மையை இழந்தால், ஒளி பிரகாசிக்காதிருந்தால், ஆவியின்றி ஆர்வமுமின்றி ஓர் உயிரற்ற ஆன்மீகத்துடன் இழுத்துச் செல்லப்படும் ஒரு வாழ்வைக் குறிக்கும்.

*மத் 5 : 17-20*: (மத் 7:12 இல் யூதர்களின் சட்டத்திலுள்ள 613 நல்லொழுக்க விதிகளையும் ஒரே பொன்விதியாக இயேசு சுருக்கி விட்டார்: பிறர் உங்களுக்குச் செய்ய வேண்டும் என விரும்புகின்றவற்றை எல்லாம் நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்)

கடைப்பிடிக்க வேண்டிய விதிகளில் இயேசு காட்டிய நல்லொழுக்க விதி ஒன்றே ஒன்று தான் - அது அன்பின் சட்டம்.

*மத் 5:17* : அன்பு வழியாக ஓர் உயர்ந்த நெறியை உணர்ந்து கொள்வதே வாழ்வின் நிறைவு எனலாம்.

*மத் 5 : 20* : சட்டத்திற்கான மனப்பாங்கு. பரிசேயர் சதுசேயர்களின் மனப்பாங்கைவிட நமது மனப்பாங்கு உயர்ந்தாக இருக்க வேண்டும். எழுத்துவடிவில் எழுதப்பட்டவை அல்ல. அதன் உட்கருத்தே முக்கியம். மனிதனுக்காகவே சட்டம் உருவாக்கப்பட்டது. ஆனால் மனிதன் சட்டத்திற்காக அல்ல.

*மத் 5:21-28:* சதுசேயர்களின் மனநிலையைக் கடந்து செல்வது

*மத் 6:1-8:* பரிசேயர்களின் மனநிலையைக் கடந்து செல்வது.

*மத் 5:21-26:* இயேசு ஐந்தாவது கட்டளையை விவரிக்கும்போது, சதுசேயர் கடைப்படிப்பதைப்போல அதைக் கடைப்படிக்கக் கூடாது என்றும் அன்பின் வழி எனும் புதிய வழியில் எப்படி கடைப்பிடிக்க வேண்டும் என்றும் விளக்கிக் காட்டியுள்ளார்.

*மத் 5: 27:* விபச்சாரம் : இதன் செயல் மட்டுமல்ல, மாறாக அதன் நோக்கமும் கவனிக்கப்படவேண்டும்.

*மத் 5:31:* மணமுறிவு - திருமண அன்பு பிணைப்பிற்கு எதிரானது.

*மத் 5:33:* 'ஆம்' என்றால் 'ஆம்' என்று சொல்ல வேண்டும். இல்லை' என்றால் 'இல்லை' என்றும் சொல்ல வேண்டும். நீங்கள் ஆணையிடுவதால் பொய்யை உண்மையாக மாற்ற முடியாது.

*மத் 5: 38* பழிக்குப் பழி வாங்குதல்: (யாரோ ஒருவன் உன்னை அறைந்தால்) பழிக்குப் பழி வாங்க வேண்டாம் என்று மட்டும் இயேசு சொல்லவில்லை, அதியாக இருக்கவும் வேண்டாம். மாறாக அன்பின் ஆற்றலையும் காட்டுங்கள் என்கிறார். மறு கன்னத்தையும் காட்டுவது அன்பின் ஆற்றல். அன்பின் ஆற்றலைப்பயன்படுத்தும் பொழுது (அல்லது காந்தி அழைத்தது போல அது 'ஆன்மாவின் ஆற்றல்') அந்த நபரை நீங்கள் மாற்றுவீர்கள்.

வன்முறை என்பது வெறுப்பின்-ஆற்றல். நாம் வெறுப்பின் ஆற்றலைப் பயன்படுத்தக் கூடாது. சும்மாயிருப்பது என்பது சுறுசுறுப்பின்றி இருப்பது. இயேசு நாம் சுறுசுறுப்பின்றி இருப்பதை விரும்பவில்லை.

*மத் 5 : 43-48* நமது எதிரிகளை வெறுப்பதற்கு அல்ல, அன்பு செய்யும்படி இயேசு நம்மைக் கேட்கிறார். இறைவன் நமக்கு மாதிரியாக இருக்கிறார்.

மத் 5: 48 : உங்கள் விண்ணகத்தை (அன்பில்) நிறைவுள்ளவராய் இருப்பது போல நீங்களும் (அன்பில்) நிறைவுள்ளவராய் இருங்கள்.

*மத் 6:1-18* வெளிவேடம்: உங்கள் சமயக் கடமைகளைச் செய்யும் போது பிறர் பார்க்கும்படி செய்ய வேண்டாம்-அதாவது இறைவேண்டல், உண்ணா நோன்பு போன்றவைகளை *வெளிவேடக்காரர்கள்* செய்வது போல செய்ய வேண்டாம்.

“பொய்ப்பேசுவது என்பது ஒரு *சிறிய தவறு.*
பொய்யை வாழ்வது என்பது *பேரழிவு*”

என்று யாரோ ஒருவர் சொல்லி வைத்திருக்கிறார்-வெளிவேடம் என்பது பொய்யான (போலியான) வாழ்வு.

*மத் 6:19:* செல்வங்கள்: செல்வங்கள் பிறருக்குப் பகிர்ந்து கொடுக்கவும், நன்மை செய்யவும் *கருவியாகப்* பயன்படவேண்டும். அது உன் எஜமானனாக அனுமதிக்க வேண்டாம். பணத்திற்கு சேவை செய்ய வேண்டாம், அது உங்களுக்குச் சேவை செய்யட்டும்.

*மத் 6:25-34:* உலகப் பொருள்களை வைத்திருப்பது பற்றி அளவுக்கதிகமாகக் கவலைப்படுவது தவறு

*மத் 7:1-5* பிறரைத் தீர்ப்பிட வேண்டாம்.

“நமக்கு அடுத்திருப்பவர்களைக் கெட்டவர்களாக நினைக்க நாம் விரும்புகிறோம், மேலும் மிகச்சிறிய ஆதாரத்துடன் மிக மோசமானவற்றை நம்பத்தயாராக இருக்கிறோம்“

என்று பெர்ட்ராண்ட் ரஸல் சொல்கிறார்.

“நான் நல்லது செய்தபோது அதை ஒருபோதும் கேள்விப்படவில்லை.
நான் கெட்டது செய்தபோது அதை எப்போதும் கேள்விப்படுறேன்”.
என்று ஒரு பழைய ஆங்கில பழமொழி சொல்கிறது.

*மகிழ்நோக்கு* கருத்துக்கள் வளர்த்துக்கொள்ளப்பட வேண்டும்.

*லூக் 6:20-23* மலைப்பொழிவிலுள்ள ‘பேறுபெற்றோர்கள்’ வாழ்வில் சரியான வழிகாட்டுதலைக் குறித்துநிற்கின்றன: முதலில் சிலுவை, பிறகு உயிர்ப்பு. தன்னையே தாழ்த்துகிறவன் எவனோ அவன் உயர்த்தப்படுவான். இயேசு தன்னையே தாழ்த்தியதால் உயர்த்தப்பட்டார்.

மத் 5: 23-24: உன் சகோதரனுக்கு எதிரான கோபத்திலிருந்து விடுபட்ட உள்ளத்தோடு இறைவனுக்கு உன் காணிக்கையைச் செலுத்து.

*மத் 5: 39* : பழிக்குப்பழி வாங்காதே

*மத் 5:44-45*: உங்கள் பகைவர்களுக்கு அன்பு செய்யுங்கள். மேலும் உங்களைத் துன்புறுத்துவோருக்கு இறைவேண்டல் செய்யுங்கள்.

*மத் 6:14-15* : மன்னிக்கும் மனநிலை:

"வாழ்வானது அணைந்து நீருபூத்த நெருப்பான சூழலிலே
என்னுடைய இழப்பு குறித்த வருத்தங்கள் இவைகள்:
நான் 'நல்லவனாய்' இருக்கும்பொழுது
ஒருவரும் நினைக்கவில்லை;
நான் 'கெட்டவனாய்' இருக்கும்பொழுது
ஒருவரும் மறக்கவில்லை".
என்று யாரோ ஒருவர் சொல்லி வைத்திருக்கிறார்.

*மத் 6:31* : கவலைப்பட ஆரம்பித்து விடாதே!

*மத் 7:1-2* : பிறரைத் தீர்ப்பிடாதே!

*மத் 7:12* : பிறர் உங்களை எப்படி நடத்தவேண்டும் என்று விரும்புகிறீர்களோ அப்படியே நீங்கள் மற்றவர்களை நடத்துங்கள்.

சுருங்கக் கூறின், இயேசு அதிகமாக கண்டனம் செய்த பாவங்கள் இவைகள்:

சுய-நேர்மை, வெளிவேடம், பொய்ப்பகட்டு, வெறுப்பு, பழிவாங்குதல், பிறரைத் தீர்ப்பிடுதல், பணத்தின்மீது பற்று, மதத்தில் அடிப்படை வாதம் (சட்டத்தை அன்பிற்கு மேலாக வைப்பது), பேராசை, கர்வம், பொருளாசை, புகழைத்தேடுதல்.

# சில பொதுவான பாவமான மனப்பாங்குகள்

(கார்ல் ராணர்)

(1) எனது உண்மையற்ற, ஆரோக்கியமற்ற, "மிகையான புகழ்ச்சி" உடைய சுய-உருவம் : நான்தான் முக்கியமானவன் என்னிடம் எல்லாம் இருக்கிறது.

அல்லது அளவுக்கதிகமாக நம்பிக்கையின்றி இருத்தல், என் வாழ்வில் இறைவனது ஆற்றலையும் செயல்பாட்டையும் உணராதிருத்தல்.

(2) என் இதயத்தைக் கடினப்படுத்துவதும், இறைவனை ஏற்க மறுப்பதும் பிறருக்கு இரங்கும் மனமின்றி இருக்கும் எனது மனப்பாங்குகள்.

(3) மாற்றம் பற்றிய பயம், என்னுடைய பாதுகாப்பை இழந்துவிடும் பயம்

(4) முரண்பாடானவற்றில் தேர்ந்தெடுக்கும் நிலை வரும்போது சரியானதை விட்டுக்கொடுத்து, சமரசம் செய்யும் மனப்பான்மை.

(5) செயல்படாததன்மைக்கு சட்டங்களையும் சம்பிரதாயங்களையும் காரணம் காட்டி தங்களை மறைத்துக்கொள்வது.

(6) குணப்படுத்தப்படாத, முழுமைப்படுத்தப்படாத உணர்வுகள் உள்ள பகுதிகள்.

(7) பயங்கள் : அதிகாரிகள் பற்றியது, எனது மதிப்பை அல்லது புகழை இழப்பது பற்றியது.

(8) குற்றப்பழி : எனது பலவீனங்களோடும் தோல்விகளோடும் என்னை ஏற்றுக்கொள்ள இயலாமையாலும், இறைவனது மன்னிப்பை ஏற்றுக்கொள்ள இயலாமையாலும் ஏற்படுவது.

(9) கோபம் : எனக்கு உண்மையை மறைத்து விடக்கூடியது.

(10) வெறுப்பு : பேச மறுக்கிற நிலைக்கும், பழிசுமத்தப்பட்ட, பலியாக்கப்பட்ட உணர்வுக்கும் இட்டுச் செல்வது.

(11) குடும்பம், கலாச்சாரம், சமுதாயம் ஆகியவற்றிலிருந்து உருவாகும் நம்பிக்கைகள், மதிப்பீடுகள், ஊகங்களை எந்த சவாலுமின்றி ஏற்றுக்கொள்ளுதல்.

# நாள் - 2

## II - மனமாற்றம் [திருப்பம்]

### லூக் 19:1 - 10

*முன்னுரை:* பாவத்தினை நாம் சீர்தூக்கிப் பார்ப்பது நம்பிக்கையை இழந்த நிலைக்கு அல்லது குற்றஉணர்வுக்கு இட்டுச் செல்லக்கூடாது. குற்ற உணர்வு என்பது தன்னையே வெறுப்பது, பாவத்தையல்ல. இயேசு பாவத்தை வெறுப்பதையே விரும்புகிறார், பாவியை அல்ல. பாவத்தைப்பற்றி ஆழ்ந்து சிந்திப்பது குற்றஉணர்விற்கு இட்டுச் செல்லக் கூடாது. அது மனந்திரும்பும் பாவியை ஏற்றுக்கொள்ள காத்திருக்கும் இறைவனை நெருங்கிச் செல்ல வழி நடத்த வேண்டும். ஆகவே நாம் ஏதாவது தவறு செய்தால் நம்மையே நாம் கடினமாக நடத்த வேண்டாம். இயேசு சக்கேயுவையும், சமாரியப் பெண்ணையும் எவ்வாறு கையாண்டார் என்று பாருங்கள்.

மாறாக, பாவம் பற்றி ஆழ்ந்து சிந்திப்பது *மனமாற்றத்துக்கு* இட்டுச் செல்ல வேண்டும். அதையே இயேசு விரும்புகிறார். ஒரு பாவி மனந்திரும்பினால் விண்ணகத்தில் அதிக மகிழ்ச்சி உண்டாகும் என்று இயேசு சொல்கிறார். "மனம்மாறுங்கள்". ஏனெனில் விண்ணரசு நெருங்கி வந்துவிட்டது. (மத். 4 : 17) என்பது இயேசுவின் நற்செய்திப் பணியின் தொடக்கச் செய்தி

(1) மனம் மாறுவது என்பது என்ன? மனம் மாறும்போது என்ன நடக்கிறது? மனம்மாறுவது என்பது பாவத்திலிருந்து விலகி இறைவனை நோக்கிச் செல்வதாகும். நாம் பாவத்தைப் பற்றிய உணர்வுநிலை அடைந்தபின் இறைவனை நோக்கி நாம் திரும்பி நடப்பது. பாவத்தின் அடிமைத்தளைகளிலிருந்து நம்மை விடுவிப்பதுதான் மனம் மாறுவதன் முதற்படி. பாவிதான் முதலில் மனமாற்றத்தைத் தொடங்கவேண்டியது அவசியம். இறைவனின் அருளோ ஏற்கனவே உறுதிசெய்யப்பட்டிருப்பதால் பாவத்தை நாம் தொடங்கி செய்ததுபோல மனம்மாறுவதையும் நாமே தொடங்கி செயல்படுத்த வேண்டும். உண்மையான மனமாற்றத்துக்கு சக்கேயு சிறந்த எடுத்துக்காட்டு. லூக். 19:1-10 வரையுள்ள பகுதியை நாம்

எடுத்துக்கொள்வோம். சக்கேயு பற்றிய நிகழ்வில், தன்னுடைய சிறுமையை ஏற்றுக்கொண்டதன் அடையாளமாக ஒரு காட்டு அத்திமரத்தில் ஏறிக்கொண்டதன் மூலம் தன்னையே தாழ்த்தியதால் இயேசுவுக்கு ஏற்புடையவராக மாறிவிட்டார். அவர் இயேசுவைப் பார்க்க விரும்பினார். அவர் குட்டையாக இருந்ததாலும் அதனால் இயேசுவைப் பார்க்க முடியாததாலும் அவர் அந்த மரத்தின்மேல் ஏறிக்கொண்டார். அவர் ஒரு குழந்தையைப்போல் செயல்படுவதைப் பொருட்படுத்தவில்லை. நம்மையே தாழ்த்துவதும், நமது சிறுமையை, பாவநிலையை ஏற்றுக்கொள்வதும் பாவத்தை விட்டுத்திரும்புவதற்குத் தேவைப்படுகிறது. இதற்காக நாம் பாவ உணர்வுநிலைக்கு வரவேண்டும். நமது பாவங்களையும் அல்லது செய்யும் தவறுகளையும் உணரும் நிலைக்கு வந்தால்தான் நாம் திருந்த முடியும். நாமாகவே நாம் அறிவு தெளிவு பெற வேண்டும். (காணாமற் போன மகனைப்போல) அல்லது நமக்கு யாராவது அதை எடுத்துச் சொல்ல வேண்டும். அப்போதுதான் நாம் உணர்வு நிலைக்கு வந்து மனம் திரும்ப முடியும். அதுவே சக்கேயுக்கு நிகழ்ந்தது. அவன் இயேசுவைச் சந்திக்கும் வரை அவனது பாவங்களை அவன் உணரவில்லை. ஆனால், அவன் பாவத்தைப் பற்றிய உணர்வு நிலைக்கு வந்தது மட்டுமல்ல, அதிக பயனளிக்கும் விதத்தில் மனம் மாறினான்.

(2) பேராசையும் ஏமாற்றுவதும் நாணயம் மாற்றும்போது சக்கேயுவிடம் காணப்பட்ட இரண்டு முக்கியமான பாவங்கள். தனது தவற்றை உணர்ந்த உடனே இறைவனை நோக்கித் திரும்பி நடந்தான். அவனது பேராசையாலும் ஏமாற்றுதலாலும் பாதிக்கப்பட்டவர்களுக்குத் திருப்பிக் கொடுத்து விடுவதாகச் சொன்ன வாக்குறுதிகள், அவன் முழுமையாக பாவத்தை விட்டு திரும்பியதை நமக்கு வெளிப்படுத்துகிறது. அதுவரையிலும் தனது போராசையை நிறைவு செய்வதற்காக மக்களிடமிருந்து வளைத்து இழுத்தும், தட்டிப்பறித்தும் பணத்தைக் குவித்த வண்ணமாய் இருந்தான். ஆனால் இப்பொழுது தனது சொத்தில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கிறேன் என்று சொல்கிறான். பேராசையை விடுவதற்காக, அவன் சேர்ப்பதற்குப் பதிலாக குறைக்கிறான்.

அதுபோலவே இரண்டாவது பாவமாகிய ஏமாற்றுதலுக்கும் பரிகாரம் செய்கிறான். கட்டவேண்டிய வரிப்பணத்தைவிட அதிகமான, மக்களைக் கசக்கிப்பிழிந்து ஏமாற்றிய வண்ணமாய் அதுவரைக்கும் இருந்திருக்கிறான். மனம் மாறிய பிறகு, எவர் மீதாவது பொய்க் குற்றம் சுமத்தி எதையாவது கவர்ந்திருந்தால் அதை அவன் நான்கு மடங்கு திருப்பிக் கொடுத்துவிடுகிறேன் என்கிறான்.

ஆகவே சக்கேயு உண்மையாகவே மனம் மாறி விட்டான். பாவத்தின் போக்கையே முற்றிலும் மாற்றும் வழியைச் செயல்படுத்தினான். நாம் மனம்மாறும் போதும் நமக்கும் இப்படித்தான் நடக்க வேண்டும். நாமும் நமது தவறுகளுக்காக பாவப்பரிகாரம் செய்ய வழி செய்ய வேண்டும்.

(3) ஆகவே மனம்மாறுவதன் முதல்படி குழந்தையைப்போல தாழ்மையுடனும் எளிமையுடனும் இருப்பது, நமது சிறுமையை ஏற்று நம் பாவநிலையை உணர்வது, தன்னை நீதிமான் எனக் கருதுவதையும் பொய்ப்பகட்டு மனப்பாங்கையும் விட்டுவிடுவதும் ஆகும்.

இரண்டாவது படி, பாவத்தை விட்டுவிலகி, இறைவனை நோக்கிச் செல்வது ஆகும். அதைத்தான் காணாமற் போன மகனும் செய்தான். நமது தந்தை நம்மை அதிகம் அன்பு செய்வதால், நாமும் மிகவும் நற்பயனளிக்கும் விதத்தில் மனம்மாறும்போது, நமக்கும் இத்தகைய உவகையூட்டக்கூடிய வரவேற்பு கிடைக்கும். நாம் மனம் மாறினாலும் மாறாவிட்டாலும் எப்போதும் நமது தந்தையின் அன்பு நமக்கு உண்டு. ஆனால், நாம் மனந்திரும்பி அவரைத் தேடி வரும்போது மட்டும்தான் அவரது அன்பை மகிழ்ச்சியோடு உணரவும் அனுபவிக்கவும் முடியும்.

இத்தகைய மனமாற்றம் நிகழ்ந்த உடனே நாம் புது வாழ்வை வாழத் தொடங்குகிறோம். புத்துணர்வோடு பிறரைப் புரிந்துகொள்கிறோம் அவ்வாறு புரிந்து கொண்டால் ‘உண்மை அன்பு என்றால் என்ன?’ என்று தெரிந்து கொள்கிறோம். இதைத்தான் ‘மீண்டும் பிறப்பது’ என்று இயேசு குறிப்பிடுகிறார். (யோவா 3:3) இயேசு, ‘மறுபடியும் பிறந்தாலன்றி எவரும் இறையாட்சியைக் காண இயலாது என உறுதியாக உனக்குச்

சொல்கிறேன்' என்றார். ஆகவே நாம் இறைவனது பிள்ளைகளாக மறுபடியும் பிறக்க வேண்டும். அதாவது குழந்தையின் மனநிலையை ஒத்த புதிய மனநிலையைக் கொண்டிருக்க வேண்டும். தன்னையே முழுமையாக அர்ப்பணிக்கிற அடிப்படையான மாற்றம் தேவைப்படுவதால் இந்த மாற்றம் எளிதல்ல, மதம் சார்ந்த அர்ப்பணத்திற்காக என்ன தியாகம் செய்வதற்கும், சட்டத்தை நிறைவேற்றுவதற்காகவும், இறைவேண்டல் செய்யவும், தொடர்ந்து நோன்பிருக்கவும், எந்த வசதிக்குறைவையும் தாங்கிக்கொள்ளவும் இயேசுவின் காலத்தில் வாழ்ந்த பரிசேயரும் சதுசேயரும் தயராக இருந்தனர். ஆனால் தங்களை இறைவனுக்கே அர்ப்பணித்து, அவரது குழந்தைகளாக மாறவும், விண்ணரசை அவரது அன்பின் கொடையாகப் பெற்றுக்கொள்ளவும் அவர்கள் தயாராக இல்லை. இன்னொன்றைப் பார்க்கும்போது. சட்டங்களையும் சம்பிரதாயங்களையும் நிறைவேற்றுவதனால் இறைவனுக்கு ஏற்புடையவராக முடியாது. ஆனால் ஏற்புடைமை கடவுளிடமிருந்தே வருகிறது என்பதை உணர்ந்தபோது எல்லாத் தடைகளையும் தாண்டிச் செல்லுமளவு தூய பவுலின் மனமாற்றம் அமைந்திருந்தது (பிலிப்பியர் 3 : 4 - 9). ஆகவே **மனம்மாறுவது** என்பது திறந்த மனதோடு கடவுளது அன்பின் கொடையை இலவசமாகப் பெற்றுக்கொள்ளுதல் ஆகும்.

இறைவனது அன்பைச் சார்ந்திருப்பது என்பது நமது பொறுப்புணர்வைக் குறைப்பது ஆகாது. இதயத்தைப் புதுப்பித்தல் என்பது இறைவன் தரும் கொடையும், ஒரு புதுவாழ்விற்கு நாம் கொடுக்கும் 'ஆம்' என்ற பதிலும் சேர்ந்தது ஆகும்.

"எவ்வளவு பிரகாசமாக சூரியன் ஒளி வீசினாலும் நமது கண்கள் குருடாய் இருந்தால், நமக்கு வெளிச்சம் கிடைக்காது. உயிருள்ள தண்ணீர் ஊற்றாய்ப் பெருக்கெடுத்தாலும் நமது கிண்ணத்தை நிரப்பி குடிக்காவிட்டால் நமது தாகத்தைத் தணிக்க இயலாது", என்கிறார் ஒருவர்.

நம்மிலே மகிழ்ச்சி, அன்பு, விண்ணரசின் பேரின்பம் இவற்றை நாம் அனுபவிக்க விரும்பினால் உறுதியாக நாம் மனம் மாற வேண்டும். இதை எப்படி நடைமுறைப்படுத்த முடியும்? எடுத்துக்காட்டாக, நான் பழிவாங்கும் இயல்பு உடையவனாக இருந்தால் மனம் மாறியபின் நான்

பழிவாங்க மாட்டேன்; மாறாக இயேசு சொன்னது போல எனது அடுத்த கன்னத்தையும் காட்டுவேன். அவன் என்னைக் காயப்படுத்தினாலும் நான் தொடர்ந்து அன்பு செய்து கொண்டேயிருப்பேன். எடுத்துக்காட்டாக, ஒருத்தி புகழ் பெற்றவராக இருப்பதால் நான் பொறாமைப்பட்டு அவளைப் பற்றி கெடுத்துப் பேசுபவராக இருந்தால், மனம்மாறியபின் புகழ் பெற்றிருப்பவளைக் குறித்துப் பெருமையாகப் பேசி, எனது மகிழ்ச்சியைத் தெரியப்படுத்த வேண்டும்.

நமது ஒவ்வொரு பலவீனத்தையும் எடுத்து நம்மை ஆத்மசோதனை செய்து பார்த்தபின் அந்த பலவீனத்தை அன்பின் செயலாக மாற்றுவது ஒரு மிகச்சிறந்த பயிற்சியாகும். இதை நான் செய்து முடிக்கும்போது மகிழ்ச்சி, அன்பு, கிறிஸ்துவின் ஆற்றல், அவரது இறையாட்சி எனது இதயத்தை நிரப்ப ஆரம்பிக்கும். மேலும் தூய பவுலைப்போல ஒரு புதிய நபராக மாறலாம். நான் முன்பு *வலுவற்றிருந்தாலும், வல்லமையை* உணர ஆரம்பிக்கிறேன். நான் முன்பு *முறுக்கேறிய நிலையில்* இருந்தாலும் *தளர்நிலையை* உணர ஆரம்பிக்கிறேன். நான் முன்பு *இறுகிய நிலையில்* இருந்தாலும் *சுதந்திரத்தை* உணர ஆரம்பிக்கிறேன். நான் முன்பு *அன்புணர்ச்சியின்றி,* பற்றற்று இருந்தாலும் இப்போது அன்புடையவனாக மாறத் தொடங்குகிறேன். சக்கேயுவைப் போல, மரிய மதலேனாவைப் போல, பவுலைப் போல மாறியபிறகு எனது முழுவாழ்வுமே மாற்றம் அடைகிறது. நான் புது மனிதனாக மாற ஆரம்பிக்கிறேன். ஏனென்றால் நான் இப்பொழுது மனம்மாறியிருக்கிறேன். அதனால் இறையாட்சியின் ஆற்றலை என்னுள்ளே பெற்றிருக்கின்றேன்.

நிறைவு செய்யும் வண்ணமாக, திரும்பவும் ஆரம்பத்திற்குச் செல்வோம்: மனம்மாறும்போது என்னிலே என்ன நடக்கிறது? ஜன்னல் கண்ணாடியிலிருந்து தூசி அகற்றப்பட்டு விட்டது. மீண்டும் ஒளி புகக்கூடிய ஒன்றாக மாறிவிட்டது. தூய சிலுவை யோவான் இனிமைமிகு பாடலிலிருந்து ஒரு நிகழ்ச்சியை எடுத்து மனம்மாறும் ஒரு பாவிக்கு ஒப்பிட்டுச் சொல்கிறார். இனிமைமிகு பாடல் 1:5 இல் மணமகள் அரசனுடைய உள் அறைக்கு அழைத்துச் செல்லப்பட்ட பின் எருசலேம் மகளிரை நேருக்கு நேராக எதிர்க்கிறாள். அந்த எருசலேம் மகளிர் பொறாமை கொண்டவர்களாய், அந்த மணமகள் "கருப்பாக" இருந்தாலும் அரசனுக்கு நிகராக இருப்பதாக பாவனை செய்வதாக

அவளைக் கடிந்துகொள்கிறார்கள். அதன் பிறகு அவள் அவர்களிடம் "கருப்பாயிருப்பினும் நான் எழில்மிக்கவளே" என்று சொல்கிறாள். இந்த வரிகளுக்கு தூய சிலுவை யோவான் இவ்வாறு விளக்கம் கொடுக்கிறார்.

அவர் இறைவனிடம் சொல்லுகிறார்:
"என்னை இழிவாகக் கருத வேண்டாம்;
நீர் என்னை முன்னர், கருப்பாகக் கண்டால்
இப்போது உண்மையாகவே என்னை உற்றுப்பார்க்கலாம்.
நீர் என்னை உற்றுப்பார்த்ததால்
அருளும் அழகும் என்னிடம் குடிகொண்டுள்ளன".
(Spiritual canticle, stanza-24) (ஆன்மீகப்பாட்டு கவிதை எண் - 24)

ஆகவே இந்த மறைபொருள் விளக்கத்திலே, '*மணமகள்*' மனம்மாறிய கிறிஸ்தவளைக் (உன்னையும், என்னையும்) குறிக்கின்றது. கடந்தகால பாவம் என்னும் "கருமையும்", நிகழ்காலத்தின் தோல்விகளும் இருந்தாலும் இயேசுவின் ஆவியின் செயல்பாட்டால் அவள் *எழில் மிக்கவள்* ஆகியிருக்கிறாள் என்பது தெரிகிறது.

ஆகவே அவரது ஆவியின் வழியாக உங்கள் உள்ளங்களில் பொழியப்பட்ட கிறிஸ்துவின் அன்பு இறைவனின் முடிவில்லாத அன்பினால் அன்பு செய்யப்பட்டவராக உன்னைப் பார்ப்பது மட்டுமல்ல, அவரால் அழகுள்ளவராகவும் விரும்பப்படுகிறவராகவும் உன்னைப் பார்க்கும்படியாக உன்னை உயர்த்து ன்றது. மனம்மாறுவதற்கான அற்புதமான அருளுக்காக இறைவனுக்கு நாம் நன்றி செலுத்துவோம்.

2 கொரி. 5: 17-18 பகுதியை வாசித்து நிறைவு செய்வோம்.
இதுவே மனம்மாறும்போது நம்மிலே நிகழ்கின்றது.

## இறையாட்சி பயிற்சி

பயிற்சியின் முதல் வாரத்தில், நாம் மனம் மாறி இறைவனிடம் மன்னிப்பு கேட்டபிறகு, இந்தக் கேள்வி கேட்க தூண்டுதல் பெறுகிறோம் ( எண் 53). பாவம் என்மீது கொண்டு வரும் பேரழிவிலிருந்து என்னை மீட்டிருக்கிற, மிக தாராள குணமும் மன்னிப்பும் கொண்ட கிறிஸ்துவுக்காக நான் என்ன செய்ய வேண்டும்? தூயபவுலின் மனமாற்றத்திற்குப்பிறகு இதைப் போன்றதொரு சூழ்நிலை ஏற்பட்டது.

"ஆண்டவரே நான் என்ன செய்ய வேண்டும்?" (திப 22:10) என்று அவர் கேட்கிறார்.

இறைவனின் பதில் இது: "என் மகனே / என் மகளே இயேசுவிடம் மிகவும் பற்று கொண்டிரு. அவர் உனக்கு வழி காட்டுவார்".

ஆகவே நாம் "இயேசுவுக்கு செவிசாய்ப்பதற்கான" அருளைக் கேட்கிறோம். (மத் 17:5)

ஆன்மீகப் பயிற்சி எண் 91 இல் இது அதிக விரிவாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது:

"ஆண்டவர் அழைப்புக்கு செவிடராயிராமல்
மாறாக, சரியான தருணத்தில் தீவிரத்தோடு உழைத்து
அவரது திருவுளத்தை நிறைவேற்றுவோம்".

*மூன்று ஞானிகள் அழைப்பிற்குப் பதில் கொடுத்தது போல நாமும் அத்தகைய பதில் கொடுப்பதற்குரிய* மாற்றம் பெறச் செய்வதே இந்தப் பயிற்சியின் ஆற்றல் வாய்ந்த செயல்பாடாகும். அதாவது இயேசுவோடு இன்னொரு மைல் தூரம்போக விரும்புகிறவர், தனது அன்பினை மிகச் சிறந்தமுறையில் நிரூபிக்க விரும்புகிறவர்,

- என்றுமுள்ள அரசரும் ஆண்டவருமானவரின் பணியில்
"தம்மை வேறுபடுத்திக்காட்ட விரும்புவோர்,
இத்தகைய மாற்றத்துக்கு தயாராக வேண்டும்". (எண் 97)

தூய இஞ்ஞாசியார் இந்த உவமையினை மிகுந்த தாராளகுணமும் பெருந்தன்மையுடைய மனமும் கொண்ட ஒரு மிகச் சிறந்த மண்ணக அரசரது உவமையோடு தொடங்குகிறார். ஆன்மீகப்பயிற்சி எண் 93 இல் கொடுக்கப்பட்டுள்ளபடி, அவரது அழைப்பு அழைக்கப்பட்டவரை எல்லாவிதத்திலும் தனக்குச் சமமாக நடத்துகிற அழைப்பு அது. அவர் தன் கடும் உழைப்பில் பங்குபெற அவனை அழைக்கிறார், அதனால் அவரது வெற்றியில் அவன் பங்குபெற முடியும். அதற்கான அடிப்படை வார்த்தை "என்னுடன் இரு" என்பதே! அவனை *ஈடாகவைக்கக் கூடிய ஓர்* அடிமையாக நடத்தவில்லை, மாறாக அவருக்கு இணையாக்கினார். பெருந்தன்மையுடைய மனமும் தாராளகுணமும் உள்ள இத்தகைய அரசனுக்கு, எவ்வளவு "அறிவுக்குகந்த, நியாயமானதான" விதத்தில் பதில் கொடுக்க வேண்டும்? இந்த அழைப்பு, ஒரு தாராளமான

*பதில்மொழி* கொடுக்க நம்மை அழைக்கிறது. இன்னும் அதிகமான அன்போடு கூடிய, *தேவையான* பதில்மொழியாக அது இருக்க வேண்டும்.

பயிற்சியின் இரண்டாவது கருத்தாக, அதேபோன்று, இறைவனுக்காக உலகை வெல்லுவதற்கு முயற்சி செய்ய, அழைக்கிற நம் கிறிஸ்து அரசனின் அழைப்பை ஏற்க நம்மைக் கேட்கிறார். இங்கே கூட அடிப்படை வார்த்தை "என்னுடன் இரு" என்பதுதான்; "துன்பத்தில் என்னைப் பின்பற்றுவதன் மூலம், *என்னுடன் சேர்ந்து* உழைத்தால் மகிமையில் அவன் என்னைப் பின்தொடரலாம்". "தீர்மானத்துடனும், செயல்நோக்கத்துடனும்" இருக்கிற ஒருவரிடம் எதிர்பார்க்கப்படும் பதில்மொழி என்ன? இந்த அழைப்பு ஒரு சாதாரண அரசரிடமிருந்து அல்ல, மாறாக, இயேசுவிடம் இருந்து வருவதால், மிகுந்த தாராளமனதுடன் பதிலளிக்க அது நம்மை அழைக்கிறது.

மூன்றாவது கருத்தாக, இறைவன் நம்மிடம் இன்னும் அதிகமாக எதிர்பார்க்கிறார். அதாவது மூன்று அரசர்கள் பதில் கொடுத்ததுபோல பதில் கொடுக்கவேண்டும், அது என்னவென்றால்,

"தங்களது அன்பிற்கு இன்னும் அதிகமாக நிரூபணம் கொடுக்க விரும்புகிறவர்கள், கிறிஸ்து அரசரின் பணியில் தங்களை *வேறுபடுத்த* விரும்புகிறவர்கள்", இந்த வேலைக்காக தங்களை முழுவதுமாக கையளிப்பது மட்டும் போதாது. மாறாக, முதன்முதலாக அவர்களது புலனுணர்வு சார்ந்தவைக்கும் அவர்களது சிற்றின்பம், உலகம் சார்ந்த அன்பிற்கும் *எதிராக செயல்படவேண்டும்*. ஏனென்றால் அத்தகைய சுய-அன்பு இயேசுவோடு இன்னொரு மைல் செல்ல தடை செய்யும். ஆனால் மூன்று அரசர்கள் எவ்வளவு தூரம் இயேசுவைத் தேடி வந்தனர். இரண்டாவதாக, "எல்லா நிந்தை அவமானங்களையும் அகபுற ஏழ்மையையும் தாங்கிக்கொள்வதில் இயேசுவைப் பின்பற்றுவதனால் (ஆன்மீகப்பயிற்சி எண் 98) உயர்ந்த மதிப்புடைய அதிக முக்கியம் வாய்ந்த காணிக்கைகளைக் கொண்டு வருவார்கள்". ஆகவே மூன்று அரசர்களுடைய இந்த உயர்ந்த வழிக்கு அழைக்கப்பட்டவர்களிடம், *முழுமனத்துடன் தன்னை கொடையாக அளிக்கவும், சிலுவையைச் சுமந்து கொண்டு தாராளமனத்துடன் இயேசுவைப் பின்செல்லவும்* எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த சிந்தனைத்தியானம் இயேசுவையும் அவரது பணியையுமே நடுநாயமாகக் கொண்டுள்ளது. நாம் தொடர்ந்து வரும் சிந்தனைத்தியானத்தை எவ்வாறு செய்யவேண்டும், அதாவது மனிதனாக பணி செய்ய வேண்டிய பார்வையில் இயேசுவை இன்னும் அதிக நெருக்கமாக தாராளமனதுடன் பின்பற்றுவதற்கு எந்த வழிமுறையைப் பின்பற்ற வேண்டும்; எத்தகைய மனப்பாங்கு கொண்டிருக்க வேண்டும் என்று அது நமக்கு எடுத்துரைக்கிறது. இதை நாம் எப்படி செய்யவேண்டும்? இறையாட்சி பயிற்சி முடிவில் உள்ள இறைவேண்டலில் அதற்கான குறிப்பு தரப்பட்டுள்ளது: "எல்லா நிந்தை அவமானங்களையும், அகபுற ஏழ்மையையும் தாங்கிக் கொள்வதில் உம்மைப் பின்பற்றிட. . . நான் மனமார்ந்த உறுதியுடன் தீர்மானம் செய்கிறேன்".

ஆகவே நான் இதனை இரண்டாவது மூலக்கோட்பாடாகவும் அடிப்படை நெறியாகவும் பார்க்கிறேன் (ஆன்மீகப்பயிற்சி எண் 23)

முதல் மூலக்கோட்பாட்டிலும் அடிப்படைநெறியிலும், நாம் படைக்கப்பட்டதன் குறிக்கோளை அடைவதற்காக மிகவும் உறுதுணையாக எது இருக்கின்றதோ அதையே தெரிந்துகொள்ள, பற்றற்ற மனப்பாங்கு கொண்டிருக்க நாம் கேட்டுக்கொள்ளப்படுகிறோம்.

இப்போது இரண்டாவது நிலையிலே நாம், எல்லா நிந்தை அவமானங்களையும், அகபுற ஏழ்மையையும் தாங்கிக்கொள்வதில் இயேசுவைப் பின்பற்றுவதைத் தீர்மானம் செய்த நிலையில் இருக்கிறோம்.

புகழ்மிக்க பக்தி நெறிகாட்டும் இயேசுவை *அல்ல, மாறாக* நற்செய்தி காட்டும், *உண்மையான இயேசுவைப்* பின்பற்றுவதற்கான அழைப்பு அது. ஆகவே இப்பொழுது முதல் நமது மனதில், இத்தகைய சரியான வழிகாட்டுதலோடு, ஒவ்வொரு சிந்தனைத்தியானத்தையும் நாம் அணுக வேண்டும்.

# நாள் - 3

## 1. இயேசு கிறிஸ்துவின் பிறப்பு (The Nativity)

*முன்னுரை:* ஆன்மீகப் பயிற்சியின் அடுத்த நிலையிலே, இயேசுவை *அதிகமாக அன்பு செய்யவும்* அவரை *மிக நெருக்கமாகப் பின்பற்றவும்,* அவரைப் பற்றிய ஆழ்ந்த அறிவைப் பெற்றிட அருளை நாம் கேட்கிறோம்.

"அவரை மிகத் *தெளிவாக அறிவதற்காக,*
அவரை மிக *அருமையாக அன்பு செய்வதற்காக,*
அவரை மிக *நெருக்கமாக பின்பற்றுவதற்காக*".

என்று காட்ஸ்பெல் (Godspell) என்பதில் இது குறித்து கவிதைப்பாணியிலே சொல்லப்பட்டுள்ளது:

இப்பொழுது நமக்கும் இறைவனுக்கும் இடையே ஒளிவு மறைவின்மைக்குத் தடையாக இருப்பவைகளில் இருந்து எல்லாம் நாம் தூய்மையாக்கப்பட்டுள்ளோம் என்பதால் இயேசுவின் வாழ்விலுள்ள மறையுண்மைகளை மிகத்தெளிவாக நாம் புரிந்து கொள்ள முடியும்.

நாம் எடுத்துக்கொள்ளும் முதல் மறையுண்மை *இயேசுவின் பிறப்பு பற்றியது.*

கிறிஸ்து பிறப்பு நிகழ்வை இரண்டு கோணங்களிலிருந்து நான் பார்க்க விரும்புகிறேன்:

(1) இயேசு உலகிற்கு வந்தபோது உலகம் அவரை ஏற்றுக்கொள்ளாத தன்மை குறித்து,
லூக் 2:7
யோவா 1.11
மத் 2:13 ஆகிய பகுதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது

(2) அன்பினில் உருவான மகிழ்ச்சி தரும் நிகழ்ச்சியாகவும் இது இருக்கிறது. குறிப்பாக, தாய்க்குப் புதிய குழந்தை பிறந்ததனால் அவளுக்கு உண்டாகும் மகிழச்சி அது.

லூக் 2 : 10 இல், "எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்", என வானதூதர் அந்த இடையர்களுக்குக் கூறினார்.

முதல் பகுதியை சிந்தனைத்தியானமாகவும், இரண்டாவதை நமது கற்பனைத்திறனையும் நமது எல்லாப் புலன்களையும் பயன்படுத்தக் கூடிய காட்சித்தியானமாகவும் நான் கையாளப்போகிறேன். அதோடு கூட மரியாளோடு உள்ள உரையாடலாகவும் அதை நான் எழுதப் போகிறேன்.

*மறைநூல் பகுதி :* லூக் 2: 1 - 20.

கிறிஸ்து பிறப்பு நிகழ்ச்சியை, லூக்கா நமக்கு எடுத்துரைப்பது பற்றி கிறிஸ்டினா ரோசெட்டி அவளது சிறிய கவிதையில் மிகச்சிறப்பாக இவ்வாறு கூறியுள்ளார்:

“ஒரு மாட்டுத் தொழுவமதில் பிறந்து,
ஒரு தீவனத்தொட்டியில் கிடத்தப்பட்டு,
அவரது கைகளால் உருவாக்கிய அந்த உலகினிலே
ஓர் அந்நியராகப் பிறந்தார்”.

1 ஆகவே, இந்த எளிய நிகழ்ச்சியை வாசித்த உடனேயே நமக்கு உணர்த்துவது என்னவென்றால், தன்னை சிறிதும் *வரவேற்காத உலகினிலே இயேசு பிறந்தார்* என்பதுதான். இது இறைவனின் வரலாறு பற்றிய நிகழ்ச்சி. இப்பொழுது வரலாற்றிலே இறைவனது பிறப்பு பற்றிய நிகழ்ச்சியை நோக்கித் திரும்புவோம். ஆம், இத்தகைய பரிதாபத்திற்குரிய சூழ்நிலையில் ஏராளமான சிறுகுழந்தைகள் இந்த உலகத்திலே பிறக்கின்றார்கள். சேரிகளில் பிறக்கின்ற குழந்தைகளை நினைத்துப்பாருங்கள். அகதி முகாம்களில் பிறக்கின்ற குழந்தைகளை நினைத்துப் பாருங்கள். புறம்பாக்கப்பட்ட கிராமங்களில் புறந்தள்ளப்பட்ட குழந்தைகளாய்ப் பிறக்கிறவர்களை நினைத்துப் பாருங்கள். பிறப்பிலே விரும்பப்படாத, பிறந்த பிறகு கொல்லப்படுகின்ற பெண் குழந்தைகளை நினைத்துப் பாருங்கள். பிறந்த பின்னர் கைவிடப்பட்ட நிலையில் அனாதை இல்லங்களில் வாழவேண்டிய குழந்தைகளை நினைத்துப் பாருங்கள்.

“சமுதாயத்தின் புற எல்லையில் ஒரு குழந்தை பிறக்கும் போதெல்லாம் நம்மிடையே மீட்பர் பிறக்கிறார்”

என்று யாரோ ஒருவர் சொல்லியிருக்கிறார். இயேசு அத்தகைய குழந்தைகளில் ஒருவர் ஆனார்.

"ஓர் இடையூறு விளைவிக்கும் புறந்தள்ளப்பட்டவராக,
உடமையிழந்த ஒரு குடும்பத்தின் உறுப்பினராக,
ஓர் அடிமைப்படுத்தப்பட்ட நாட்டின் குடிமகனாக,
மந்தமான யதார்த்த நிலையிலே, (நமது உலகில்)
வார்த்தையாம் இறைவன் நுழைந்திடத் துணிந்தார்"
என்று கார்ல் ராணர் (Care Ranner)சொல்லுகிறார்.

அவர் ஒரு மனிதராக பிறந்த பொழுது, ஏழைக் குழந்தைகளிலெல்லாம் ஏழையானவர்களோடு தன்னை இணைத்துக் கொண்டவராக பிறப்பதையே தேர்ந்துகொண்டார். அவரது பிறப்பிலே நமக்கு ஒரு முக்கியமான செய்தி இருக்கிறது: அவர் *உலகத்திலே* பிறந்தார். ஆனால் அவர் *உலகத்தைச் சார்ந்தவர் அல்ல.*

தங்களது சுயநலத்தினாலும் பேராசையாலும் உலகின் மைய அரங்கத்தில் இடம் பிடித்துக் கொண்டவர்களது அநீதியால் ஓரந்தள்ளப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மக்களுக்கு அவர் உரிய்வரானார். அந்த முறையில், மக்களது சுயநலமே இயேசுவை அவரது பிறப்பிலே ஓரந்தள்ளப்பட்ட நிலைக்குக்கொண்டு சேர்த்தது.

2. உலகம் அவரை ஏற்றுக்கொள்ளாத நிலையிலும் *உலகின்மீது கொண்ட அன்பால் அதன் மீட்பராக அவர் வந்தார்.*

நற்செய்தி இவ்வாறு நமக்குச் சொல்லுகிறது:

"தம் ஒரே மகன்மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின் மேல் அன்பு கூர்ந்தார்" (யோவான் 3:16).

குழந்தை இயேசு சாதாரண குழந்தை அல்ல. "அவர் உலகத்தின் மீட்பர், ஆண்டவராகிய மெசியா" (லூக். 2:11) ஆனாலும் உலகம் அவரை ஏற்றுக்கொள்ள மறுத்தது.

"அவர் தமக்குரியவர்களிடம் வந்தார். அவருக்கு உரியவர்கள் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை" (யோவான் 1:11).

ஆனால் அவர் ஒருபோதும் மனித சமுதாயத்திற்கு எதிராக எண்ணவில்லை.

"உங்களுக்கு தீமை செய்பவர்களுக்கு நன்மை செய்யுங்கள்" (லூக் 6: 27) என்று அவர் நமக்குக் கூறவில்லையா? ஆகவே கிறிஸ்துமஸ் நிகழ்ச்சி ஓர் உண்மையான அன்பின் நிகழ்ச்சியாகும். அன்பை ஏற்றுக் கொள்ள மறுப்பவர்களை வெறுத்தால் அது அன்பாக இருக்காது. அன்பின் உண்மையான இயல்பு நன்மைக்கும் தீமைக்கும் சமமாக நேசக்கரம் நீட்டுவதுதான். மேலும்,

"இப்படிச் செய்வதால் நீங்கள் உங்கள் விண்ணகத் தந்தையின் மக்கள் ஆவீர்கள். ஏனெனில் அவர் நல்லோர் மேலும் தீயோர் மேலும் தம் கதிரவனை உதித்தெழச் செய்கிறார். நேர்மையுள்ளோர் மேலும் நேர்மையற்றோர் மேலும் மழை பெய்யச் செய்கிறார்" (மத் 5 : 45)

ஆகவே மனித இனம் குழந்தை இயேசு வந்த பொழுது அவரை வரவேற்று ஏற்றுக்கொள்ளாததை அவர் தவறாகக் கருதவில்லை.

3. ஆனால் அதைவிட அதிகமாக, அவரது அன்பு அதையும் தாண்டிச் செல்கிறது, அவர் அவருக்குரிய எல்லாவற்றையும் களைந்துவிடுகிறார். தூய பவுல் சொல்வது போல, கடவுளுக்கு இணையாக இருப்பதை விட்டுவிடுவது மாத்திரம் அல்லாமல், மனிதர்களில் ஒருவராவதிலும், மனித இனத்திலே ஒதுக்கப்பட்டவர்களில் ஒருவராகி, அவர் ஓர் அடிமையானார். மனித இனத்திலே இந்தப் பகுதியினர்தான் அவரோடு அன்பாக இருந்தனர், மேலும் ஆர்வமுடன் அவருக்கு வரவேற்பு கொடுத்தனர். ஆகவே இடையர் விரைந்து சென்று மரியாவையும் யோசேப்பையும் தீவனத்தொட்டியில் கிடத்தியிருந்த குழந்தையையும் கண்டார்கள். "இடையர்கள் தாங்கள் கேட்டவை, கண்டவை அனைத்தையும் குறித்துக் கடவுளைப் போற்றிப் புகழ்ந்து பாடிக் கொண்டே திரும்பிச் சென்றார்கள்" என்று லூக்கா 2:16,20 வசனங்களில் நாம் வாசிக்கிறோம்.

அவரது பணி வாழ்வின் தொடக்கத்திலே அவரே நமக்கு இவ்வாறு சொல்கிறார்:

"ஆண்டவருடைய ஆவி என்மேல் உளது; ஏனெனில் ஏழைகளுக்கு நற்செய்தியை அறிவிக்கவும், சிறைப்பட்டோர் விடுதலை அடைவர், பார்வையற்றோர் பார்வை பெறுவர் என முழக்கமிடவும் ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்பவும் ஆண்டவர் அருள்

தரும் ஆண்டினை முழக்கமிட்டு அறிவிக்கவும் அவர் என்னை அனுப்பியுள்ளார்". (லூக்கா 4:1819).

ஆகவே, இயேசு மனித இனத்தை அன்புசெய்தார்; குறிப்பாக மனித இனத்தில் அன்பு செய்யப்படாமல் ஓரந்தள்ளப்பட்ட பகுதியினரை அவர் அன்பு செய்தார். அவர் அந்த ஓரந்தள்ளப்பட்ட குழுவினரில் ஒருவராக அவரைக் கருதவில்லையா? அந்த குழந்தை இயேசு ஏழைகளின், அகதிகளின் வாழ்வை அனுபவித்தார். அவர் இந்த உலகத்திற்கு வந்தபொழுது அவர் பல இடையூறுகளைச் சந்திக்க நேர்ந்தது. அவருடைய எதிரிகள் அவரைப் பிடித்து ஒரு குற்றவாளி எனத் தவறாகப் பழிசுமத்தி சிலுவையில் அறையும் வரை அவரது வாழ்வு முழுவதுமே, அவர் ஆபத்தான வாழ்வையே வாழ வேண்டியிருந்தது.

4. ஆனாலும் இயேசுவுக்கு எதிராக வேலை செய்தவர்களுக்கும் அவரைச் சாவுக்குக் கையளித்த அவரது எதிரிகளுக்கும் கூட *அவரது அன்பு* பரந்து விரியச் செய்தார். அவர் சிலுவையிலே வேதனைகளின் நடுவே,

"தந்தையே இவர்களை மன்னியும். ஏனெனில் தாங்கள் செய்வது என்னவென்று இவர்களுக்குத் தெரியவில்லை" (லூக் 23:34) என்று இயேசு சொன்னார்.

ஆகவே மனித இனம் எதிராகச் செய்த, அவரை ஏற்றுக்கொள்ளாத, எல்லா நிலைகளின் நடுவிலும் அவரது அன்பு பிரகாசித்தது.

ஆகவே மனித இனத்தின் சுயநலமான, ஏற்றுக்கொள்ளாத தன்மைக்கு மாறானதாக; சுயநலமற்ற, இறைவனின் நிபந்தனையற்ற அன்பின் நிகழ்ச்சியாக கிறிஸ்துமஸ் நிகழ்ச்சி விளங்குகிறது. மனித இனத்தின் சார்பாக ஓரந்தள்ளப்பட்ட மக்களில் ஒரு சிறு குழுவினர் மட்டுமே இந்த சூழ்நிலையில் இருந்து மனித சமுதாயத்தைக் காப்பாற்றினர். ஆகவே,

"மரியே நன்றி, யோசேப்பே நன்றி, இடையர்களே நன்றி" என்று நாம் சொல்லுவோம்.

நாம் இந்த சிந்தனைத்தியானத்தை,

"வாரீர் வாரீர், குடிலுக்குச் செல்வோம் வாரீர்"

என்ற புகழ்ச்சிப் பாடலுடன் நிறைவு செய்யலாம்.

தூய லூக்கா நற்செய்தியிலுள்ளபடி இயேசுவின் பிறப்பு பற்றிய ஒரு *சிந்தனைத்தியானம்* இது. கிறிஸ்துமஸ் பற்றி மரியாளுடன் உரையாடல் பாணியில் நான் வேறொரு காட்சித்தியானம் வைத்திருக்கிறேன். இயேசுவின் வாழ்வு பற்றிய மறையுண்மைகளைப்பற்றி கருத்தில் கொள்ளும்போது காட்சித்தியான முறையைப் பயன்படுத்துவது அதிக பயன் உள்ளதாக அமையும்.

கிறிஸ்துமஸ் பெரும் மகிழ்ச்சியூட்டும் நிகழ்ச்சியாகும், அது ஒரு தாயின் அன்பு, ஒரு குழந்தையின் அன்பு, ஒரு தந்தையின் அன்பு ஆகிய அன்பில் பிறந்த மகிழ்ச்சியாகும். நான் குடிலுக்குச் சென்று இவ்வளவு அதிகமான மகிழ்ச்சியை நமக்குக் கொண்டு வரும் இந்த அன்பு பற்றி என்னிடம் கூறும்படி மரியாளிடம் நான் கேட்கட்டும். (நூல் ஆசிரியர் ஜேம்ஸ் மரியாளுடன் உரையாடுவது)

## இயேசு கிறிஸ்து பிறப்பு—காட்சித்தியானம்

மரியா : இயேசுவை நான் பெற்றெடுத்தது, எத்தனை பெரும்மகிழ்ச்சி அது. வியாகுல அன்னையாக மக்கள் என்னைப் பார்க்கின்றார்கள். இல்லை, நான் ஒரு மகிழ்ச்சியின் தாய். இந்த மகிழ்ச்சி அன்பினில் பிறந்தது. நான் ஒரு பெண் என்பதால் பெண்மைப்பண்பு கொண்ட அன்பைப் பற்றி கூற விரும்புகிறேன். ஒரு பெண்ணாகப் படைத்ததற்காக நான் இறைவனுக்கு நன்றி கூறுகிறேன். ஏனென்றால்-ஒரு பெண்தான் இத்தகைய அன்பில் முழுமையாக மகிழ்ச்சி அடைய முடியும். அது உண்மையிலே ஓர் அழகான, அன்பு நிறைந்த, என்னால் ஒருபோதும் மறக்க முடியாத அனுபவம் ஆகும். அதிலே மிகுந்த இனிமை இருக்கிறது.

குழந்தை இயேசுவின் புன்னகையைப் பார்ப்பது-என் குழந்தையின் முகத்தில் *புன்னகையைப்* பார்ப்பது என்பது ஓர் வியத்தகு அனுபவமாகும். அது எல்லா மனக்கவலையையும் அகற்றுகிறது. அது என் வாழ்வை வாழத் தகுதியுடைய

தாக்குகிறது. என்னிடமுள்ள மிகவும் சிறந்தவற்றைக் கொடுக்க வழி வகுக்கிறது. அது என்னை ஒரு புதிய நபராக உருமாற்றம் செய்கிறது. அது என் முகத்தில் அழகொளியை வீசுகிறது. அது என்னை மிகவும் அழகுள்ளவளாக மாற்றுகிறது. நான் குழந்தை இயேசுவைத் தொடும்போது ஒரு மென்மையான, இனிமையான, மகிழ்ச்சியான, அன்பான- ஓர் உணர்ச்சி, ஒரு தனிப்பட்ட உணர்ச்சி என்னுள்ளே ஊற்றெடுக்கிறது.

என் குழந்தை *அழும்*போது, அவன் என்ன செய்தி சொல்லுகிறான் என்று சரியாகத் தெரியும். அதிலே அன்பு நிரம்பியிருக்கிறது. அதிலே பாராட்டு நிரம்பியிருக்கிறது. அவனது அருகில் நான் இருப்பதை விரும்புகிற ஏக்கம் நிரம்பியிருக்கிறது.

நான் அவனுக்கு *உணவூட்டும்*போது அவனது முகத்திலே மனநிறைவையும், மகிழ்ச்சியையும் கண்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன், மேலும் வாழ்வின், உணவூட்டுதலின், வளர்ச்சியின் அதிசயத்தை நான் பார்க்கிறேன்.

அவன் *உறங்கும்* போது அவனது முகத்திலே மிகுந்த அழகு விளங்குகிறது. என் குழந்தை என்னிடம் எவ்வளவு நம்பிக்கை கொள்கிறது, என்னை நம்புகிறது, என்னை அன்பு செய்கிறது என்பது என்னிலே மிகுந்த உணர்ச்சியை ஏற்படுத்துகிறது. அவன் எதுவுமே செய்ய இயலாதிருக்கிறான், ஆயினும் என்மீது அதிக ஆற்றல் கொண்டவனாயிருக்கிறான். அவன் இல்லாமல் நான் இருக்க முடியாது. என்னிலே அவனை நோக்கிய ஒரு பலமாக ஈர்ப்பு சக்தி காணப்படுகிறது.

ஜேம்ஸ்: என் தாயே, உங்களுக்கு செவி கொடுக்கும்போது மிகுந்த மகிழ்ச்சியை நான் உணர்கிறேன். இன்னும் எனக்குச் சொல்லுங்கள்.

மரியா: இயேசு பிறந்தபொழுது, உலகப்பொருள் சார்ந்தவைகளில் நான் அவனுக்கு கொடுப்பதற்கு என்னிடம் எதுவுமே இல்லை. நான் துயரமடைந்தேன். ஆனால் என் துயரம் விரைவிலே மறைந்து விட்டது. நான் மனமுவந்து என்னையே அவனுக்குக் கையளித்தேன். அது உலகப்பொருட்களை விட மேலானது

என நான் உணர்ந்தேன். அவன் குளிரை உணர்ந்தான். ஆனால் என் அன்பால் நான் அவனுக்கு வெதுவெதுப்பு உண்டாக்கினேன். என்னுடைய அக்கறையும் பாதுகாப்பும் அவனுக்குத் தேவைப்பட்டது. அன்பெனும் சுற்றி வரிந்து கட்டும் துணியில் பொதிந்து அவனை நான் என் கரங்களின் அணைப்பில் வைத்தேன். யோசேப்பு எங்கள் இருவரையும் வசதியாக வைக்க தன்னால் இயன்றவரை உதவினார். எங்கள் வறுமையிலும் நாங்கள் மனநிறைவையும் சந்தோஷத்தையும் அனுபவித்தோம்.

ஜேம்ஸ்: இந்த வறுமையே உங்கள் நிகழ்ச்சியை மிகவும் இதயத்தைத் தொடுகிற ஒன்றாக மாற்றுகின்றது. வறுமையினால் அன்பு ஒருபோதும் குறைந்து போவதில்லை. மாறாக, அது அத்தகைய சூழ்நிலைகளில் இன்னும் அதிகமாக வளருகிறது. பிறப்பிலிருந்தே உங்கள் மடியில் இயேசு அன்பைக் கற்றுக்கொண்டார். மேலும், எத்துணை வியக்கத்தக்க விதத்திலே, அவர் அன்பில் வளர்ந்தார்! அதனால் பின்னர் அவர் அன்பையே அவரது முக்கிய செய்தியாகக் கொண்டார்; மேலும் மிக அழகாக, மிகவும் நம்பச் செய்கிற விதத்திலே, அவர் அன்பை வாழவும் போதிக்கவும் செய்தார். நான் அவரது அன்பின் செய்தியிலே நம்பிக்கை கொள்கிறேன்.

மரியா: ஆம், என்னாலும் யோசேப்பாலும் அன்பு செய்யப்பட்டு இயேசு அன்பு செய்யக்கற்றுக்கொண்டான், மேலும் அவனால் அன்பு செய்யப்பட்டு, நாங்கள் அன்பு செய்யக்கற்றுக்கொண்டோம், அது எத்துணை அழகான அனுபவம் என்று தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும் என்றால் ஒரு குழந்தையின் அன்பை நீங்கள் அனுபவிக்க வேண்டும்.

ஜேம்ஸ் : ஆம், ஒரு தாய்க்குத்தான் அந்தத் தனிச்சலுகை உண்டு. ஒரு தாய்தான் அந்தத் தனிச்சலுகையைப் பெற தகுதி பெற்றிருக்கிறார். ஏனென்றால் குழந்தையை, இந்த உலகத்திற்குள் கொண்டுவருவதிலும், அக்கறை காட்டுவதிலும்

குழந்தையின் நலனுக்காகத் துன்பப்படுவதிலும் அவள் பெரும் பங்கு வகிக்கிறாள்.

மரியா: ஆனால் நான் இந்த அனுபவத்தை உன்னுடன் பகிர விரும்புகிறேன். நீயும் எனக்கு இயேசுவைப்போலத்தான் இருக்கிறாய். நான் இயேசுவுக்காக வைத்திருக்கிறது போல, அதே அன்பை நான் உனக்காகவும் வைத்திருக்கிறேன்.

ஜேம்ஸ்: நீங்கள் உண்மையிலே ஒரு மகிழ்ச்சியின் தாய். நீங்கள் எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறீர்கள். இது இயேசுவின் பிறந்த நாளாக இருந்தபோதிலும் என்மீது அதிகக் கவனம் செலுத்துகிறீர்கள்.

மரியா: கிறிஸ்மஸ் அதாவது இயேசுவின் பிறந்த நாள் உங்களுடைய திருநாள் என்னுடையது அல்ல; இயேசுவினுடையதும் அல்ல. அவரும் நானும் உங்களுக்காக இருக்கிறோம், எங்களுக்காக அல்ல. ஆகவே நாங்கள் உங்கள் மகிழ்ச்சியையே விரும்புகிறோம், எங்களுடையதை அல்ல.

ஜேம்ஸ் : உண்மையான அன்பு என்பது என்ன என்று நான் இப்பொழுது புரிந்துகொள்கிறேன். எனக்காக உள்ள உமது அன்பிலே அதை நான் அனுபவித்துக் கொண்டிருக்கிறேன்.

மரியா: இதுவே கிறிஸ்மஸ் நிகழ்ச்சி பற்றி நான் சொல்வது. நீயே இந்த நிகழ்ச்சியின் நடுநாயகமாக இருக்கிறாய். நான் கவனம் செலுத்தும் நபர் நீயாகத்தான் இருக்கிறாய்.

ஜேம்ஸ்: மரியே, மிக அழகாக கிறிஸ்மஸ் நிகழ்ச்சி பற்றி எனக்கு சொல்லித் தந்திருக்கிறீர். நீங்கள் என்னுடைய தாயாக இருங்கள். நான் உங்கள் குழந்தையாய் இருக்கிறேன்.

# நாள் – 3

## II. 12 வயதில் இயேசு : லூக் 2:41 - 52

இயேசுவின் துவக்க வாழ்விலுள்ள இந்த பகுதியினை அவரது அழைத்தலோடும் பயிற்சியோடும் நான் இணைத்துக் காட்டியிருக்கிறேன். ஆகவே, நம்முடைய அழைத்தலையும் பயிற்சியையும் பற்றிச் சிந்திக்கின்ற தருணமாகவும் இது அமைய முடியும்:

இப்பொழுது இந்த மறையுண்மைகளை நன்றாகப் புரிந்து கொள்வதற்காக தொடக்கத்திலே கவனம் செலுத்தவேண்டிய சிலவற்றை மனதில் இருத்துவது நல்லது.

(1) பாவம் தவிர, எல்லாவற்றிலும் இயேசு நம்மைப் போலவே இருந்தார் (பார்க்க எபிரேயர் 4:15). ஆகவே மற்ற எல்லாவகையிலும் அவர் முழுவதுமாக மனிதராகவே இருந்தார்.

(2) அவர் முறையாக எந்தப் பயிற்சியும் பெறவில்லை. அவரது எல்லாப் பயிற்சிகளும் நாசரேத்திலே மரியாவிடமும் யோசேப்பிடமும் பெற்றவைதான். அவர் எந்த முறையான பயிற்சியும் பெறவில்லை என யோவான் 7:15 இல் குறிப்பிடப் பட்டுள்ளது.

(3) லூக் 2: 45 இல் "சிறுவன்" இயேசு என்று அவர் குறிப்பிடப்படுகிறார். ஆகவே அவர் இன்னும் வளரவில்லை.

*முன்னுரை* : பன்னிரண்டு வயதில் உள்ள *சிறுவன்* இயேசுவை சிறிது நேரம் நாம் பார்க்க முடிகிறது. குழந்தைப் பருவத்திலிருந்து பன்னிரண்டு வயது வரை உள்ள இயேசுவின் வளர்ச்சியை மூன்று நிலைகளில் புனித லூக்கா விளக்கிக் கூறுகிறார். அவர் லூக்கா 2:6,12,21 பகுதிகளில் *பாலன்* என முதலில் குறிப்பிடப்படுகிறார். பிறகு வசனங்கள் 22, 27 முதல் வசனம் 40 வரை *குழந்தை* என்கிறார். இப்பொழுது வசனம் 43 இல் *சிறுவன்* இயேசு எனக் குறிப்பிடுகிறார். ஆகவே நாம் இன்னும் சிறுவனாக உள்ள, மனிதராக வளர்ச்சி பெறாத இயேசுவைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்பதை நாம் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும் என அவர் விரும்புகிறார். ஆகவே நாம் இந்தப் பகுதியினை இத்தகைய கண்ணோட்டத்தில் புரிந்துகொள்ள வேண்டும் அதாவது அவர் வளர்ந்து கொண்டிருக்கிறார். ஆகவே வளர்ந்து விட்ட மனிதரைப் போல அவர்

செயல்பட வேண்டும் என நாம் எதிர்பார்க்கவே முடியாது. நான்காவது நிலைதான் இயேசு வயது வந்துவிட்ட மனிதரானது.

லூக்கா 2:41-52 வரையிலுள்ள பகுதியை எடுத்துக்கொள்ளுங்கள் மரியா இவற்றையெல்லாம் உள்ளத்தில் பதித்து வைத்திருந்தார் என்று நற்செய்தி நமக்குக் கூறுகிறது. இதுவே மறையுண்மைகளைக் கையாளுவதற்குச் சரியான வழி. அதை நாம் படிப்படியாகத்தான் புரிந்துகொள்ள ஆரம்பிக்கிறோம். இந்த மறைய்ுண்மையைப் பற்றிய எனது தனிப்பட்ட சிந்தனை முறை இது. இது ஆய்ந்துப் பார்ப்பதற்கான ஒரு வழிமுறை.

(1) *மறையுண்மை* : பன்னிரண்டு வயதிலுள்ள சிறுவன் இயேசுவை நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். அவரது பெற்றோர்களிடம் கூறாமலேயே அவர் ஆலயத்திலே தங்கிவிட்டார். ஏன் அவருடைய பெற்றோர்களை அவர் இப்படி நடத்தினார்? இது மரியாவினுடைய கேள்வி. இது நமது கேள்வியும் கூட. அவர்களிடம் தெரியப்படுத்தாமல் வீட்டை விட்டு வெளியே தங்கினதால் அவர்களுக்கு மிகுந்த கவலை கொடுத்திருக்கிறாரே, இதுவே மரியாவின் கண்ணோட்டமாக இருக்கிறது.

இப்பொழுது இயேசுவின் கண்ணோட்டத்திலிருந்து நாம் பார்ப்போம். "நீங்களே ஏன் என்னைத் தேடினீர்கள்?" என்று அவர் கேட்கிறார். சிறுவன் இயேசுவின் பார்வையில் அவர்கள் அவரைத் தேடி இருக்கவேண்டிய அவசியம் இல்லை. அவர் எங்கிருப்பார் என அவர்கள் தெரிந்து வைத்திருக்க வேண்டும். "என்னுடைய தந்தையின் வீட்டில் நான் இருக்க வேண்டும் என்பது உங்களுக்குத் தெரியாதா?" பாவம், மரியாவுக்கும் யோசேப்புக்கும் அவர் சொன்னதன் பொருள் என்ன என்று கூட புரிந்துகொள்ள இயலவில்லை. ஆம், சிறுவன் இயேசு வளர்ந்து கொண்டிருந்த மறையுண்மையைப் புரிந்துகொள்ளக் கடினமாக இருந்தது. ஆனால் அவர் மனிதராக வளர்ந்துவிட்ட பொழுது அவர்களால் ஓரளவு புரிந்துக்கொள்ள இயலும். அவரது வாழ்விலே இறைவன் மட்டுமே முக்கியத்துவம் வாய்ந்தவராக இருந்தார். அந்நேரம் முதற்கொண்டு இறைவனது திருவுளமே முக்கிய இடம் பெற்றது. என்னைப் பொறுத்தவரையில் அது அவரது அழைத்தலைக் குறித்து நிற்கிறது, அவரது மீட்புப் பணியை நிறைவு செய்ய இறைவனால் அவருக்குக் கொடுக்கப்பட்ட ஆரம்ப அழைப்பு அது.

இப்பொழுது இந்த மறையுண்மை பற்றிய சில ஆழ்ந்த சிந்தனைகளை செய்தியாகக் கொடுக்கிறேன்.

(அ) என் *அழைப்பு* கூட மறைபொருளாக இருக்கிறது. என் அப்பா கூட மரியாவைப் போல, "இதை நீ எனக்கு ஏன் செய்தாய்?" என வியந்து கொண்டிருந்தார். என்னைப் பொறுத்தவரையில் அது இறைவனின் அழைப்பு என்று மட்டுமே நான் சொல்ல முடியும். இறைவனது மறைக்கப்பட்ட வழிகள் வழியாக, வாழ்க்கையில் எனக்காக நியமித்திருந்த திட்டத்தை நோக்கி, எனக்கான *அவரது* இலக்கு நோக்கி என்னை வழிநடத்துவதை (சிறுவனான) நான் அப்போது புரிந்து கொண்டேனா? இல்லை. அது இருட்டில் குதிப்பது போன்று இருந்தது. மேலும் ஒவ்வொருநாளும் இந்த மறையுண்மையை பற்றிய புதிய கண்டுபிடிப்பு இடம் பெற்றது. மரியா செய்ததுபோல, நான் திறந்த மனத்துடன் இருக்க வேண்டும். மேலும், கவனமுடன் செவி கொடுத்து இறைவனுடன் ஒத்துழைக்க வேண்டும்.

(ஆ) இந்த நிகழ்ச்சி இன்னுமொரு மறையுண்மை பற்றியும் நமக்கு எடுத்துக் கூறுகின்றது: ஒரு குழந்தை பற்றிய மறையுண்மையானது அதன் தாயின் இதயத்தின் உள்ளே மறைந்து கிடக்கிறது. அந்தக் குழந்தை தாயினது மகிழ்ச்சியாக இருக்கின்றது. அநேக நேரங்களில் குழந்தை கூட துன்பத்தின் காரணமாக அமைகின்றது. குழந்தையும் தாயும் ஆகிய இருவரும் தங்களது மகிழ்ச்சிகளையும் துயரங்களையும் தாங்கிக்கொண்டு *வளர்கின்றனர்*; குழந்தை வளர்ப்பது என்பது வேதனை நிறைந்தது. அதே சமயத்தில் அந்தத் தாய்க்கு அது மகிழ்ச்சியாகவும் இருக்கிறது. அவளது குழந்தை எப்படி வளர்ந்து கொண்டிருக்கிறது என்பதைப் பார்த்து அவள் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறாள். ஆகவே பன்னிரண்டு வயது நிரம்பிய சிறுவன் இயேசு பற்றிய மறையுண்மையில் குழந்தைகளின் வளர்ச்சியில் பருவம் அடைவதற்கும், சுதந்திரத்திற்கும் விடுதலைக்கும், பொறுப்புணர்ச்சிக்கும், அன்பிற்கும் இட்டுச் செல்லும் வளருகின்ற குழந்தைகளின் மறையுண்மையும் அடங்கி இருக்கிறது.

(இ) இந்த நிகழ்ச்சி மரியாவும் யோசேப்பும் இயேசுவை வளர்ந்த விதத்தைப் பற்றியும் நமக்குச் சொல்லுகிறது. அவர்கள் அவரை

மிக அன்புடன் வளர்த்தார்கள். கடவுளுக்கும் மனிதருக்கும் முன்னால் ஞானத்திலும் அன்பிலும் வளரும்படியாக அவர்கள் அவருக்கு ஏராளமான சுதந்திரம் அளித்திருந்தனர். அது அபாயகரமானது. இருந்தாலும் அவர்கள் அதையே தெரிந்துகொண்டனர். அவர்கள் அவரை அளவுக்கதிகமாக பாதுகாத்து வளர்க்கவில்லை. அதனால்தான் அவரால் முழுமையான ஆளுமை வளர்ச்சி பெற்ற மனிதராக வளரமுடிந்தது அவர்கள் அவரை அதிகம் அன்பு செய்தனர். அதனால் போதுமான சுதந்திரத்தை அவருக்குக் கொடுத்து இருந்தனர். (இதை உங்கள் துறவற வாழ்வோடு ஒப்பிட்டுப் பாருங்கள்; அது நம்பிக்கைக்குரிய வாழ்வா அல்லது அதிகம் பாதுகாக்கப்பட்டதா?) ஒரு மனிதரை நம்பாதபோது அவரை ஒரு கூண்டில் அடைக்கிறீர்கள். ஆனால் மரியாவாலும் யோசேப்பாலும் தங்கள் மகன்மீது அத்தகைய தடைவிதிப்பதை நினைத்துப்பார்க்கக் கூட முடியவில்லை. மேலும் இயேசு அவர்கள் அன்புக்கும் நம்பிக்கைக்கும் ஏற்ப பொறுப்பான முறையில் நடந்து கொண்டார்.

ஆகவே இறுதியாக, இயேசு ஆலயத்தில் தங்கிவிட்ட மறையுண்மையையும் அவரை தற்காலிகமாக தொலைத்துவிட்டதால் மரியாவும் யோசேப்பும் கவலைப்பட்டதும் அதற்கு இயேசு பதில் கொடுத்ததும் அன்பின் அடிப்படையில் நடந்ததுதான் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஓர் அன்பு மகனால்தான், இயேசு அவரது தாய்க்கு பதிலளித்தது போல பதில் கொடுக்கத்துணிய முடியும். மேலும் ஓர் அன்புத்தாயால்தான் குற்றம் சாட்டி ஒருவார்த்தையோ அல்லது தண்டனையோ கொடுக்காமல் அருள் கூர்ந்து அவரது பதிலை அப்படியே ஏற்றுக்கொள்ள முடியும். இத்தகைய, மேலும் ஏனைய *அன்பார்ந்த வழிகள்* வாயிலாக இயேசுவை ஒரு மிக *அன்பார்ந்த* நபராக மரியாவால் உருவாக்க முடிந்தது. அவள் அவரை பிறருக்காக வாழும் மனிதராக்கினார். அவள் அவரை ஒரு வீரமுள்ள பயமற்ற மனிதராக்கினார். கடவுளை, மதத்தை, அன்பை, ஏழைகளை, ஓரந்தள்ளப்பட்டவர்களை, பாவிகளை, சமுதாயத்தில் வெறுக்கப்பட்டவர்களைப் பார்ப்பதில் ஒரு புதுவழியைப் புகுத்தியவராக, உலகத்தின் பார்வையில் அவரை ஒரு புரட்சியாளராக உருவாகும்படி செய்தார். அவரது தலையீட்டால், பல மனிதருடைய வாழ்வில்,

குறிப்பாக, சமுதாயத்தில் மற்ற மனிதர்களோடு சமமாக வாழக்கூடியதிலிருந்து அவர்களைத் தடுக்கின்ற, அடிமைப்படுத்துகின்ற சமுதாய அமைப்புகளால் நம்பிக்கை இழந்தவர்களுக்கு, புதுவாழ்வு, புதிய நம்பிக்கை ஏற்படச் செய்தார். அவருக்கு எங்கிருந்து இந்த ஞானம் வருகின்றது? என அவர்கள் கேட்டார்கள். நாசரேத்தில் முப்பது ஆண்டுகளில் அவரது வீட்டிலிருந்து பெற்ற பயிற்சிகளில் கிடைத்தது. ஆகவே மரியாவும் யோசேப்பும் இயேசுவை உருவாக்குவதில் ஒரு வியக்கத்தக்க மனிதராக வடிவமைப்பதில் ஒரு வியப்புக்குரியப் பணியைச் செய்திருந்தனர். ஒருவேளை இப்பொழுது நாம் நாசரேத்தில் இயேசுவின் சிறுவயதின் பருவத்தில் நடந்த இந்த நிகழ்ச்சியைப் பற்றிய மறையுண்மையில் சிலவற்றைப் புரிந்து கொண்டிருக்கலாம்.

"அவருடைய தாய் இந்நிகழ்ச்சிகளையெல்லாம் தமது உள்ளத்தில் பதித்து வைத்திருந்தாள்" என்று நற்செய்தி நமக்குக் கூறுகிறது. மேலும் கடவுள் அவளுக்கு இந்த ஆழ்ந்த மறையுண்மைகளை வெளிப்படுத்தினார். அவளைப் பொறுத்தவரையில் அவளே ஒரு மறைபொருளாக இருந்தார். இறைவன் ஆண்களையும் பெண்களையும் எவ்வாறு கையாளுகிறார் என்று மரியாள் புரிந்திருந்தாள். அது அவருடைய புகழ்ச்சிப்பாடலில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அதில் அவர் எப்படி தாழ்ந்தோரைக் கடைக்கண்ணோக்கினார், அவர் ஒடுக்கப்பட்டவர்களை எப்படி அன்பு செய்கிறார், எப்படி அவர்களை உயர்த்துகிறார் என்பதையும் சொல்லுகிறது. மரியா நம்பிக்கை, விசுவாசம், அன்பு கொண்ட ஒரு பெண்மணி. ஆகவே அவளுடைய பாதுகாப்பான பொறுப்பிலே கடவுளுக்கும் மனிதருக்கும் முன்னால் ஞானத்திலும் அன்பிலும் அவரால் வளர முடிந்தது. எந்தக்காலத்திலும் வாழக்கூடிய மனிதர்களில் எல்லாம் அதிகம் ஞானமும் அன்பும் உடைய சிறுவனாக, இயேசுவைப் பற்றிய அனுபவம் கொண்டிருந்தாள் மரியா. அவர் என்னவெல்லாம் சொன்னாலும் அல்லது செய்தாலும் அவைகளில் எல்லாம் ஞானமும் அன்பும் மறைந்திருந்தது. அவளுடைய வாழ்நாளெல்லாம் அவள் தொடர்ந்து இவைகளை எல்லாம் புரிந்துகொள்ள முயன்று கொண்டிருந்தாள். இந்த மறைபொருளின் உண்மையைப் புரிந்து கொள்ள விரும்பும் நமக்கும் இத்தகைய மனநிலையே இருக்க வேண்டும். அன்னை மரியாவின்

அருகில் அமர்ந்து, அவளுடைய துணையோடும் வழிகாட்டுதலோடும் இவைகளையெல்லாம் உள்ளத்தில் இருத்தி தியானிப்போம்.

(உ) *நமது அழைப்பு* பற்றிய மறையுண்மையைப் புரிந்துகொள்ள விரும்பும் நிலையிலே, நமது மனநிலை இத்தகையதாக இருக்க வேண்டும். முதலில் நம்மை அழைத்து, எப்படி இதுவரை வழி நடத்துகிறார், இனிமேல் நம்மை எப்படி வழி நடத்தப்போகிறார் என்பவை பற்றி சிந்திக்க வேண்டும். நமது முழு நம்பிக்கையை நாம் அவர் பேரில் வைப்போம். அப்போது இயேசுவின் அழைத்தலிலே அவரை வழிநடத்தியது போல நம்மையும் அவர் வழி நடத்துவார்.

ஆகவே நம்மை துறவறவாழ்விற்கு அழைத்ததற்காக இறைவனுக்கு நாம் நன்றி செலுத்துவோம். நாம் எப்போதும் அவரைப் பின்தொடரவும் அவரைப்போல் இருக்கவும் விரும்புவோம். அவரே நம்முடைய அகத்தூண்டுதலாக சிறந்த கொள்கைகளுக்காக இயேசு நின்றது போல நாமும் துணிவுடன் எழுந்து நிற்போமாக!

*செபிப்போமாக :*

அன்பு இயேசுவே! இந்தத் தேடலை என்னிலே நீர் தொடங்கினீர். குறுகலான பாதையைத் தெரிந்துகொள்ள வேண்டும் என நீர் என்னிடம் கூறினீர். நம்பத்தக்கதொரு வாழ்வை வாழும்படி எனக்கு நீர் சவால் விடுத்தீர், அதற்கு அப்பாலும் என்ன இருக்கிறது என்பதை நான் தேடும் படி நீர் செய்தீர், இன்று நான் என்னவாக இருக்கிறேனோ அதுவாக நான் ஆகும்படி செய்தவர் நீரே. இன்னும் நான் தொலைதூரம் செல்ல வேண்டும் என எனக்குத் தெரியும், உமது வார்த்தைகளின், உமது வாழ்வின், சவால் என்னைத் தொடர்ந்து வளரச் செய்ய, எனக்குத் தேவையானதெல்லாம் உமது அன்பும், உமது அருளுமே! அதுவே எனக்குப் போதும். ஆமென்.

# நாள் - 4

## 1. நற்பேறுகளும் ஐயோ கேடுகளும் (இரு நிலைகள்)

1 இயேசுவின் பொதுவாழ்வு முழுவதும் *ஏழைகள், ஓரந்தள்ளப்பட்ட மக்கள் சார்பாக நிற்பதையே* தனிச்சிறந்த பண்பாகக் கொண்டிருந்தது. தனது சொந்த ஊரான நாசரேத்தில் அவர் ஆற்றிய முதல் உரையானது (லூக் 4:18-21) அவர் ஏழைகளுக்கு நற்செய்தியை எடுத்துரைக்கவே வந்தார் என்பதை மிகத் தெளிவாக எடுத்துரைக்கிறது. அவரது மலைப்பொழிவு போதனையிலுள்ள 'நற்பேறுகள்' அவரது பணியின் நெறிமுறையைத் தெளிவுபடுத்துகிறது.

தூய லூக்கா பேறுபெற்றோரைக் குறித்து எழுதிய பகுதியை எடுத்துக்கொள்ளுமுன் இரு ஆரம்ப குறிப்புகளை எடுத்துரைக்க வேண்டும்.

(i) *நற்பேறுகளும் ஐயோகேடுகளும்* எனும் பகுதிகள் மலைப்பொழிவிற்கு *முன்னுரையாக* அமைகின்றன. ஏழ்மையும் ஏழையாக இருக்கவிரும்புவதும் அவமானத்தைத் தாங்கிக்கொள்ள வழிநடத்தும். அதுவே தொடர்ந்து தாழ்ச்சிக்கு வழி நடத்தும். மேலும் தாழ்ச்சியிலிருந்து எல்லா ஏனைய நற்பணபுகளும் தொடரும் (ஆன்மீகப் பயிற்சி எண் 146). ஆகவே பேறுபெற்றோரின் மனநிலைகள் மலைப்பொழிவின் நேர்மறை நெறிமுறைகளை (Positives) வாழ்வதற்கு நமக்கு வழிவகுக்கின்றன. அதற்கு மாறாக, செல்வங்களும் செல்வங்களின் மீதுள்ள விருப்பமும் நாம் புகழை நாடித் தேடுவதற்கு வழிநடத்தும், அது தற்பெருமைக்கு வழி நடத்தும். தற்பெருமையிலிருந்து எல்லா தீயகுணங்களும் தொடரும். (ஆன்மீகப் பயிற்சி எண் 142) ஆகவே ஐயோ கேடுகளை நமது மனநிலையாகக் கொண்டால் மலைப்பொழிவின் எதிர்மறைகளின் படி வாழ நம்மை வழி நடத்தும்.

(ii) *நற்பேறுகளும் ஐயோகேடுகளும்* நமது வாழ்வில் நாம் தேர்ந்து கொள்ளக் கூடிய இரண்டு மாறுபட்ட நெறிமுறைகளைக் (Orientations) குறித்து நிற்கின்றன. இன்றைய உலகம் விளம்பரங்கள், பிரச்சாரங்கள் வழியாக, தன்னலம், பேராசை, பெருமை, செல்வாக்கு

ஆகியவற்றால் ஆளப்படுகிறது. அது ஒடுக்குகின்ற, நுகர்வோர் சார்பாக உள்ள சமுதாயமாக உள்ளது. நம் வாழ்க்கையில் தீர்மானங்கள் எடுக்கும்போது, இந்த உண்மையைக் குறித்து விழிப்புணர்வு பெற்றவராய், நாம் இத்தகைய எல்லா பிரச்சாரங்களாலும் பாதிக்கப்படாதபடி கவனமாக பார்த்துக்கொள்ள வேண்டும். உலகம் ஊக்குவிக்கும் இந்த மாறுபட்ட நெறிமுறை கேடுற்றோரின் வழிமுறையாகும். அது வாழ்க்கையில் உலகப் பொருளையே சார்ந்து வாழும் கண்ணோக்கைக் குறித்து நிற்கிறது.

அதற்கு மாறாக, பேறுபெற்றோரின் நெறிமுறையையே இயேசு பின்பற்றினார். அது அன்பின் வழி, ஏழ்மையின் வழி, அது சிலுவையின் மடமை ஆகும். இதனால் அவமானத்தின் வழியே தாழ்ச்சிக்கு வழி நடத்துகிறது.

"தன்னையே தாழ்த்துகிற எவனும் உயர்த்தப் பெறுவான்". நற்செய்தியில் இயேசு பேசுகின்ற "குறுகலான வழி" இதுதான். பேறுபெற்றோருடைய நெறிமுறையையே தங்களது வாழ்க்கை நெறிமுறையாகத் தேர்ந்து கொண்டோருக்கு இறைவனது ஆசீர் உரியது என்று இயேசு கூறுகிறார். இதுவே சரியான ஆன்மீக மனப்பாங்காகும்.

(iii) *குறிப்பு*

அ. 'செல்வந்தர்' என்று யாரைக் குறிப்பிடுகிறோம்?

(i) ஏழைகளைத் தன்னலத்திற்காகப் பயன்படுத்தி செல்வத்தைச் சேர்ப்போர் (லூக்கா 19 : 2)

(ii) விவரித்துச் சொல்வதானால் - செல்வந்தரின் அதாவது உலகைச் சார்ந்த மக்களின் மனநிலையைக் கொண்டிருக்கும் எந்த நபரையும் குறிப்பிடலாம்.

(iii) செல்வங்களின்மீது அதிகப்பற்றுடையோர் (லூக்கா 18:23)

ஆ) 'ஏழையர்' என்று யாரைக் குறிப்பிடுகிறோம்?

(i) செல்வந்தர்களால் உருவாக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட அமைப்பு முறைகளால் சமுதாயத்தின் விழிம்பிற்கே தள்ளப்பட்டவர்கள்

(ii) விவரித்துச் சொல்வதனால்: தனது அடிப்படை மனித உரிமைகள் மறுக்கப்பட்ட எந்த ஒரு நபரையும் குறிப்பிடலாம்.

(iii) செல்வருள்ளும் அன்புணர்வால் ஏழைகளுடன் தங்களை அடையாளம் காண்போர் ஏழைகளே! (மத் 5:3)

இது தற்காலிக இன்பத்திற்கான வழி.
இது சாத்தானின் (உலகத்தின்) வழி.

'நற்பேறுகள்' எனும் போதனை செல்வருக்கு, உலகத்தாருக்கு, சதுசேயர் பரிசேயருக்கு கெட்ட செய்தியாகும்.

3. *சில ஆழ்ந்தசிந்தனைகள்:*

அ. இறைவனது ஆசீர் ஏழைகளுக்கு உரியது என்ற இயேசு சொன்னார். உலகம் ஒருபோதும் ஏழைகளுக்கு நீதியானதைச் செய்வதில்லை. சிலரை கொடுத்துவைத்தவர் என்று இந்த உலகம் நினைக்கிறது. அவர்கள் செய்பவையெல்லாம் புகழப்பட்டாலும் அவர்கள் சுயநலநோக்கத்துடனே செய்கின்றனர். மேலும் அவர்களையே சார்ந்திருக்கும் ஏழைகளை எவ்வளவு கொடூரமாக அவர்கள் நடத்துகிறார்கள்.

இந்தியாவில் மிகவும் வெறுக்கத்தக்க ஓர் அமைப்பு முறை இருக்கிறது. மதத்தின் அங்கீகாரம் பெற்ற சாதிய அமைப்பு முறை அது. அது தலித்துகளை நிரந்தர ஏழ்மைக்கும், நிரந்தர தாழ்வு நிலைக்கும், நிரந்தர தீண்டாமைக்கும் தள்ளுகிறது. அவர்கள் தங்களது உரிமையைக் கோரும்போது நிலத்தைச் சொந்தமாகக் கொண்டிருக்கும் மேல் சாதியினரால் இரக்கமின்றி நசுக்கப்படுகின்றனர். மேல் சாதியினர் எப்போதும் மேலேயே இருக்கச் செய்வதற்காக, ஏழைகளைக் கீழேயே வைத்திருக்கக் கூடிய ஓர் அதிக ஆற்றல் மிக்க அமைப்பு முறை உருவாக்கப்பட்டுள்ளது.

கிராமத்தில் நான் பெற்ற அனுபவங்களிலிருந்து சில எடுத்துக் காட்டுகள்:

(i) வேலூர் மாவட்டத்தில் - தலித்துகள் தங்களை முழுமையாக முன்னேற்றுவதற்கு வாய்ப்பே இல்லை.

ஒரு தலித் குடும்பம் ஒரு சைக்கிள் கடை தொடங்க நான் உதவ விரும்பினேன். அது வெற்றி பெறாது என்று அவர்கள் சொன்னார்கள். ஏனென்றால் மேல் சாதி மக்கள் அவர்களிடமிருந்து அவர்களது சைக்கிள்களை வாடகைக்கு எடுக்கமாட்டார்கள். மேலும் மேல் சாதி மக்களுக்கு மட்டுமே சைக்கிள்களை வாடகைக்கு எடுக்கக் கூடிய வசதி

உண்டு. அந்த கிராம அமைப்பு முறை தலித்துகளின் பொருளாதார நிலையை உயர்த்துவதைத் தடைசெய்கின்றன.

(ii) பனைமரங்கள் இருக்கும் பகுதியில் கொத்தடிமைகள் தேநீர் கடையில் தனிப்பட்ட கப்புகளில் தேநீர் குடிக்கின்றனர்.

(iii) திண்டுக்கல் அருகே ஒரு கிராமத்தில் கிறிஸ்துமஸ் திருப்பலியில் தலித்துகளுக்கு எதிராக இந்த வேறுபாட்டை நான் கண்டேன். அவர்கள் முன் இருக்கைகளில் இடம் பிடிக்க அனுமதிக்கப் படவில்லை அவைகள் மேல் சாதி மக்களுக்காக ஒதுக்கி வைக்கப் பட்டிருந்தன.

(iv) வறுமைக்கோட்டின்கீழ் உள்ள மக்கள் அதிகமாகின்றனரே தவிர குறைவதில்லையே, ஏன்?

சமுதாயத்தால் அநீதியாக நடத்தப்படும் அத்தகையோரை இயேசு அதிகம் அன்பு செய்கிறார். அந்த மக்களிடம் நான் இயேசுவின் மனப்பாங்கைக் கொண்டிருக்கிறேனா?

(ஆ) அவர்களிடம் மனிதத்தன்மையின்றி நடப்பதால் அநேக நேரங்களில் ஏழையர் பட்டினி கிடக்கின்றனர் (பார்க்க: லூக்கா 16:19-31)

(இ) செல்வரும் அதிகாரமுள்ளவரும் ஏழைகளுக்கு தீங்கிழைப்பதாலும் சேதப்படுத்துவதாலும் அநேக நேரங்களில் அவர்கள் துன்புற்று, அழுது, புலம்புகின்றனர். ஏழைகளுக்காக எழுந்து நிற்கவும், அவர்களுக்கு நண்பராகவும் நம்மால் முடிந்த வழியில் அவர்களுக்கு உதவி புரியவும் நமக்குத் தைரியம் கொடுக்குமாறு நாம் ஆண்டவரைக் கேட்போம். (தாகூர் : கீதாஞ்சலி எண் 36)

(ஈ) மக்கள் உங்களை வெறுக்கும்போது உங்களைப் புறக்கணிக்கும்போது நீங்கள் பேறுபெற்றோர். அவ்வாறு நடக்கும்பொழுது அகமகிழுங்கள். இயேசு நம்மை அதிகம் அன்பு செய்தார், அதனால் அவர் பாடுகளின் பாதையின் வழியாக கடந்து சென்றார். ஆனால் அவர் ஒரு முட்டாள் என்றும், ஒரு குற்றவாளி என்றும், அழைக்கப்பட்டு சாவுக்கு உட்படுத்தப்பட்டார். அவரது பாதை, அன்பின் பாதை விலையைக் கணக்கிடாமல் கொடுக்கும் தாராளகுணத்தின் பாதை இது. ஆண்டவரே, எனக்கு தாராளகுணத்தைக் கற்றுத்தாரும் என்று நாமும் கேட்போம்.

(4). நமக்கான சவால்:

பேறுபெற்றோரின் வழி 'இருத்தல்' என்னும் செயல்முறை (Mode of being). கேடுற்றோரின் வழி 'வைத்திருத்தல்' என்னும் செயல்முறை (Mode of having). எந்த செயல்முறை என்னிடம் மேலோங்கி நிற்கிறது? அது மட்டுமே நான் எப்படி நினைக்கிறேன், நான் எப்படி உணர்கிறேன்., நான் எப்படி செயல்படுகிறேன் என்பதனை நிர்ணயிக்கும்.

நற்செய்தியில் உள்ள செல்வரான இளைஞர் 'வைத்திருத்தல்' எனும் செயல்முறையைத் தெரிந்தெடுத்தார். அவருக்கு வைத்திருப்பது என்பதுதான் வாழ்க்கை ஆகும் (வைத்திருத்தல் என்பது: பொருள்களை உடையவராக இருப்பது அல்லது மக்களை அதிகாரத்திற்குட்படுத்துவது போன்றவை) இத்தகைய மக்கள் எவ்வளவு அதிகமாக 'வைத்திருக்கிறார்களோ' அவ்வளவு அதிகமாக 'வாழ்வதாக', நம்புகின்றனர். இயேசு 'பேறுபெற்றோர்' எனும் போதனை வழியாக பொருள்கள்பற்றி முழுமையான மாறுபட்ட பார்வையுடையவர்களாக மக்கள் இருக்கவும் இறையாட்சியை பூமியிலே கொண்ட ஒரு புதிய சமுதாயத்தை உருவாக்கவும் அழைப்பு விடுக்கிறார். 'வாழ்வது' என்பது 'அன்புடன் வாழ்வது' எனும் மாறுபட்ட கலாச்சாரத்திற்கு அவர் அவர்களை அழைக்கிறார். "இறைவனின் அன்பிற்காக ஒருவன் தான் உடைமையாக வைத்திருக்கும் பொருள்களை மட்டுமல்ல; ஒருவனது அந்தஸ்து, சாதனை, மிகக்கவனத்துடன் தனக்கென்று உருவாக்கிக் கொண்ட கருத்துக்களை எந்த அளவு இழக்கின்றானோ அந்த அளவு ஒருவன் அதிக உண்மையுள்ள அதிக உயிரூட்டமுள்ள வாழ்வு வாழ்கிறான்", என்று இயேசு சொல்கிறார்.

ஆகவே ஒன்று சேர்த்து வந்து இத்தகைய மனநிலை பெற்றவர்களாய், ஒரு மாற்று கலாச்சாரத்தை உருவாக்க முன்வர அழைக்கப்பட்டிருக்கிறோம். இயேசுவுக்குச் செய்தது போல மக்களை சமுதாயத்தின் விழும்பிற்கே தள்ளுகிற, ஏழ்மைக்கு உட்படுத்தி, அவர்களை அவமானப்படுத்துகிற இந்த உலகத்தின் கலாச்சாரத்திலிருந்து, வேறுபட்ட கலாச்சாரத்தை உருவாக்க வேண்டும். அப்போது தான் இயேசு வென்றுகாட்டியதுபோல நாமும் அவரோடு வென்று காட்ட முடியும். 'நற்பேறு' என்னும் போதனை வழியாக நிறைவான வாழ்விற்கு நம்மை வழி நடத்தும் குறுகலான பாதையில் செல்ல இயேசு நமக்குச் சவால் விடுக்கிறார்.

அருட்பணி ஜார்ஜ் சோர்ஸ் சொல்வதாவது (துறவறவாழ்வு பற்றியது): "துறவிகள் நாம் சாரமற்றவராய், அதிக பழமைவாதிகளாய் சமுதாயத்தின் நடுத்தரவர்க்கத்தினரின் இரண்டாம் தரமான மனநிலையோடு, மிகவும் சொகுசாக பாதுகாப்புடன் வாழ்கிறோம். நம்மிடையே இயேசுவின் பாடுகள் எங்கே? அவரது உணர்ச்சி வேகம் எங்கே? ஆழ்ந்த மனதுருக்கம் எங்கே? அநீதிக்கு எதிராகக் கொழுந்துவிட்டெறியும் கோபம் எங்கே? அது அவரது அறிவற்ற செயலா? நமது துறவறத்தின் சாட்சியம், ஆற்றலை இழந்து விட்டதா? இயேசுவைப் பின்பற்றுகிறவர்கள் உலகிற்கு ஆர்வத்துடன் தெரியப்படுத்த வேண்டிய சாட்சியத் திறனை இழந்துவிடும் அபாயத்திலிருக்கிறோமா?" ஆனால், 'உப்பு சாரமற்றுபோனால் வேறு எதனால் சாரம் பெறும்?' அது வெளியில் கொட்டப்படுவதற்கும் மனிதரின் காலில் மிதிபடுவதற்குமின்றி வேறு எதற்கும் உதவாது என்று இயேசு சொல்லியிருக்கிறாரே!. துறவற வாழ்விலே நம்மீது சுமத்தப்பட்ட வார்த்தைப்பாடுகளில் சொன்னது போல நற்செய்திப் பணிக்காக, உண்மையான உற்சாகத்துடன் நம்மையே அர்ப்பணித்து, நாம் சுறுசுறுப்புடன் சாட்சிகளாக வாழ ஆரம்பிப்போம்.

ஆகவே கிறிஸ்துவை உண்மையாக சந்திப்பது என்பது ஒருவருடைய வாழ்வு தலைகீழாக, மேலும் கீழுமாக, உள்ளேயும் வெளியேயுமாக மாற்றம் உண்டாக்குவதாகும். இயேசுவைச் சந்திப்பது என்பது ஒரு புதிய வாழ்க்கை நெறிமுறைக்கு, பெருமாற்றத்திற்குத் தயாராவது ஆகும்: சாதனை படைக்கின்ற, அதிக பொருள்களை உடைமையாக்கிக் கொள்ளும் ஒரு வாழ்வு அல்ல - ஆனால் உலக கலாச்சாரத்திற்கு எதிரான மாற்றுக் கலாச்சாரமான, அதிக கனி நிறைந்த, அதிக உறவு கொண்டு வாழ்கின்ற அர்த்தமுள்ள வாழ்வு வாழ வேண்டும்.

இயேசுவின் சவால் நிறைந்த வார்த்தைகளைத் திரும்பத் திரும்ப நான் வாசிக்க வேண்டும். அவரது அழைப்பிற்கு இங்கேயே இப்பொழுதே நான் செவிசாய்க்க வேண்டும்.

இதோ ஓர் ஆயரின் புலம்பல்: (தவளையின் செபம் (Prayer of the Frog) எனும் றோனி டிமெல்லோவின் நூலிலிருந்து எடுக்கப்பட்டது).

"இயேசு எங்கெல்லாம் சென்றாரோ அங்கே ஒரு புரட்சி ஏற்பட்டது. நான் எங்கெல்லாம் போகிறேனோ அங்கே மக்கள் எனக்கு தேநீர் பரிமாறுகிறார்கள்".

# நாள் - 4

## சமாரியப் பெண்ணும் இயேசுவும் : யோவா 4:142

*முன்னுரை:*

1. வில்லியம் பார்க்லே *தூய யோவான் நற்செய்தி பற்றி* குறிப்பிடும் போது: "எழுபது ஆண்டுகளாக தூய் ஆவியின் வழிகாட்டலின் கீழ் சிந்தித்ததாலும் நினைவில் வைத்திருந்தாலும் நமக்கு நான்காவது நற்செய்தி கிடைத்துள்ளது" என்கிறார். கவிதை என்பது "அமைதியில் நினைவுக்குக் கொண்டுவரப்பட்ட உணர்ச்சி" என வெர்ட்ஸ்வொர்த் வரையறுக்கிறார். நான்காவது நற்செய்தியும் இத்தகையதே: "இயேசுவை நீண்டகாலமாக அறிந்த ஒருவருடன் அவர் எத்தகைய உறவு கொண்டிருந்தார் என்பதை எடுத்துரைக்கிறது. இயேசு என்ன சொன்னார் என்பதில் அல்ல, இயேசு என்ன சொல்ல விரும்பினார் என்பதிலேயே யோவான் அதிக ஆர்வம் காட்டினார்; சிலவேளைகளில் நாம் நற்செய்தியை வாசிக்கும்போது. எப்போது இயேசு பேசிய வார்த்தைகளையே கேட்கிறோம்; எப்போது தூய ஆவியின் வழிகாட்டுதலின் கீழ் பல்லாண்டுகளாக சிந்தித்ததன் பயனாக யோவானின் இதயத்திலும் மனதிலும் வெளிப்படுத்தப்பட்ட கருத்துகளுக்குச் செவி கொடுக்கிறோம் என்பது நமக்கு உறுதியாகத் தெரியவில்லை. இயேசுவுடைய சயல்களின், வார்த்தைகளின் *சிறப்பை* நமக்கு அது எடுத்துரைக்கின்றது.

2. இந்த நிகழ்ச்சியின் *சிறப்பு:*

இயேசு தனது வெளிப்படையான பணி வாழ்விலே குறிப்பாக சமுதாயத்தின் விளிம்பிற்குத் தள்ளப்பட்ட மக்களோடு அதிக ஈடுபாடு காட்டினார். சமுதாயத்தில் பெண்கள் இரண்டாம் தர குடிமக்களாகக் கருதப்பட்டதால் இந்தக் குழுவில் சிறப்பான இடம் பெற்றனர்.

ஆனால் ஆரம்பத்தில் அப்படி இருக்கவில்லை.

தொடக்க நூல் 1 : 27-28 சொல்லுகிறது:

"ஆகவே கடவுள் தம் உருவில் மானிடரைப் படைத்தார்; கடவுளின் உருவிலேயே அவர்களைப் படைத்தார்; ஆணும்

பெண்ணுமாக அவர்களைப் படைத்தார்". "பலுகிப் பெருகி மண்ணுலகை நிரப்புங்கள்; அதை உங்கள் ஆற்றலுக்கு உட்படுத்துங்கள்". ஆகவே கடவுள் ஆணையும் பெண்ணையும் இணையான துணையாகப் படைத்தார். ஆனால் உண்மையான இறைவனிடமிருந்து வெளிப்பாட்டைப் பெற்றதாகச் சொல்லும் யூத சமுதாயம், பெண்களை இரண்டாம் தர நிலையில் வைத்துள்ளது. ஆண் மக்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறது; தலைப்பேறாக பிறந்த மகன் சொத்துக்கு உரிமையாளன் ஆகிறான். ஆகவே ஒரு குடும்பத்திற்கு ஓர் ஆண்குழந்தை அவசியம் தேவைப்படுகிறது. பெண்களும், கொண்டு செல்லத்தக்கப் பொருள்களும், வீட்டுத் தலைவனின் உடைமையாகக் கருதப்பட்டனர். இந்தத் தவறான மனப்பாங்கு அவர்களது குழந்தைப்பருவ நாட்களிலிருந்தே மனதில் ஆழப் பதிய வைக்கப்படுகின்றன. ஓர் யூத ஆண்மகன் ஒரு நாளைக்கு மூன்று தரம் சொல்லும் இறைவேண்டல் இவ்வாறு செல்கிறது: "என்னை ஒரு பிற இனத்தவராகப் படைக்காததற்காக இறைவன் புகழப்படுவாராக! என்னை ஒரு பெண்ணாகப் படைக்காததற்காகக் இறைவன் புகழப்படுவாராக! என்னை ஓர் அடிமையாகப் படைக்காததற்காக இறைவன் புகழப்படுவாராக!"

இவ்வாறுதான் ஓர் யூத ஆடவன் பெண்ணினின்று தன்னை வேறுபடுத்தினான்.

இந்தியாவிலும் கூட இதையொத்த பாரம்பரியம் வளர்ச்சி அடைந்துள்ளது.

பொதுவாக உலகிலும் இதையொத்த சூழ்நிலை நிலவியது, இன்றும் ஓரளவு இருந்துவருகிறது. இயேசு இத்தகைய அநீத அமைப்பு முறைகளைத் தகர்த்தெறியவே வந்தார். யூத சமுதாயம் பெண்கள்மேல் சுமத்தியுள்ள எல்லாத் தடைகளையும் புறக்கணித்தவராய் இயேசு அவர்களோடு சுதந்திரமாகப் பழகினார்.

3. இந்த நிகழ்ச்சியில் நாம் காண்பவை:

(i) *சமாரியர்களைப்* பொறுத்தமட்டில் நடைமுறையில் உள்ள அநீத மனப்பான்மையை, யூதர்கள் அவர்களை தாழ்ந்த சாதி மக்களாக நடத்தியதை எப்படி மாற்றுகின்றார் என்பதை யோவா 4:9 இல் பார்க்க. அவளது பாத்திரத்தில் இயேசு தண்ணீர் வாங்கி குடிப்பதன் மூலம் அவளை அவருக்குச் சமமாக நடத்துகிறார்.

(ii) *பெண்களைக்* குறித்த நடைமுறையில் காணப்பட்ட அநீத மனப்பான்மையை இயேசு எவ்வாறு மாற்றுகிறார். அவர் பெண்களை ஆண்களுக்குச் சமமாகவும் அவருக்குச் சமமாகவும் நடத்துகிறார். அது கொடைகளைப் பகிர்ந்தளிப்பதில் காணப்படும் சமத்துவமான அன்பாகும். அவள் அவருக்கு தண்ணீர் கொடுக்கிறாள். அவரோ அவளுக்கு உயிருள்ள தண்ணீரைக் கொடுக்கிறார்.

(iii) *ஒரு போதகராக* : (As a rabbi) ஒரு ராபி பொது இடத்தில் அவரது சொந்த மனைவி அல்லது மகள்கள், மற்றும் எந்தப் பெண்ணிடமும் பேசக்கூடாது என்பது யூதரிடையே நிலவிய ஒரு சமுதாய, சமய வழக்கம். இயேசு இந்த பழக்கத்தை உடைத்தெறிகிறார். அதனால் தான் அவர் ஒரு பெண்ணோடு பேசிக்கொண்டிருப்பதைக் கண்டு திருத்தூதர்கள் வியப்புற்றனர், (வசனம் 27) என்று சொல்லப்பட்டுள்ளது.

(iv) இந்த சமாரியப்பெண் கடந்த காலத்தில் *ஒழுக்கமற்ற* வாழ்வு வாழ்ந்தவள். ஆகவே மற்றவர்களால் ஒரு பாவி என்று அவள் இழிவாகக் கருதப்பட்டாள். ஆனால் இயேசு ஒரு பெண்ணாக, ஒரு மனித இனம் சார்ந்த நபராக, அன்பு செய்யப்படத் தகுதியுடையவராக அவளை நடத்துகிறார். (வசனம் 6 ஐப் பார்க்கவும்)

**சிந்தனைத்தியானம் (The Meditation):**

1. மறைநூல் பகுதி : *யோவா 4:1-42*

இப்பகுதியை வாசிக்கும்போது கீழ்க்காண்பவற்றைக் கவனித்துக் குறித்துக்கொள்ள வேண்டும்:

(1) இயேசுவுக்கும் சமாரியப் பெண்ணுக்கும் இடையே ஒரு நல்லிணக்கமும் படிப்படியான ஓர் அன்புறவும் உருவாகுகின்றன.

(2) ஒருவரோடு ஒருவர் கொண்ட கலந்துரையாடல் வழியாக இயேசுவிடமுள்ள மிகச்சிறந்தவையும் சமாரியப்பெண்ணிடமுள்ள மிகச்சிறந்தவையும் வெளிவந்தன. அவளது கேள்விகள் வழியாக இயேசுவிடமுள்ள மிகச்சிறந்தவைகளை வெளிக்கொணர்கிறாள். அவரது பதில்கள் வழியாக அவளிடமிருந்த மிகச்சிறந்தவைகளை அவர் வெளிக்கொண்டு வருகிறார்.

(3) அந்தப் பெண்ணினுடைய வியப்பும் ஆச்சரியமும் அவளது எளிய திறந்த மனமும் இயேசுவுடன் உரையாட வைத்தது. அதுவே இயேசு யாரென்பதை ஒவ்வொன்றாக அவளுக்கு வெளிப்படுத்தியது:

a) ஒரு யூதராக (வசனம் 9)
b) ஒரு ராபியாக (வசனம் 11)
c) ஒரு குலத்தலைவராக (வசனம் 12)
d) ஓர் இறைவாக்கினராக (வசனம் 19)
e) ஒரே மெசியாவாக (வசனம் 25, 26)

(4) அந்தப் பெண்ணிடம் காணப்பட்ட பெரும் மகிழ்ச்சி (வசனம் 29)
(5) இயேசுவிடம் காணப்பட்ட பெரும் மகிழ்ச்சி (வசனம் 36)

இது இயேசுவின் வாழ்வில் நடந்த ஒரு மிக அழகான, இன்பமான நிகழ்ச்சியாகும். இயேசு மக்களோடு பழகிய விதத்திலே எவ்வாறு இரக்கமுடையவராக விளங்கினார் என்று இது நமக்குச் சொல்கிறது. ஒரு பெண் என்ற முறையில் அந்த சமாரியப்பெண் கண்டிப்பாக இயேசுவின் பால் ஈர்க்கப்பட்டாள். இயேசுவால் அவளோடு எளிய முறையிலே உரையாட முடிந்தது.

'குடிக்க எனக்குத் தண்ணீர் கொடும்' என்று இயேசு உரையாடலைத் தொடங்குகிறார் இயேசு அவளிடம் கொஞ்சம் தண்ணீர் கேட்டது அந்தபப்பெண்ணை வியப்பில் ஆழ்த்தினாலும் அவள் இன்பம் அடைந்தாள். ஒரு பெண் என்பதால் அவள் பொருட்படுத்தாமல் விடப்படுவதையே எதிர்பார்த்தாள். அவள் ஒரு சமாரியப் பெண்ணாக இருந்ததால் பகைமையை எதிர்பார்த்தாள். "நீர் யூதர், நானோ சமாரியப்பெண், நீர் என்னிடம் குடிக்கத் தண்ணீர் கேட்பது எப்படி?" என்று கேட்டாள்.

இயேசு அவரது பதிலால் அவளை செயலிழக்கச் செய்கிறார்.

"நீ மட்டும் அறிந்திருந்தால், வாழ்வு தரும் தண்ணீரை என்னிடம் கேட்டிருப்பீர்".

வார்த்தைகள் மட்டும் எல்லாவற்றையும் வெளிப்படுத்தவில்லை என்பதை நாம் மனதில் இருத்த வேண்டும். இந்த முழு உரையாடலிலும், உடல் அசைவுகள் முக்கிய இடம் வகிக்கின்றன.

"தண்ணீர் மொள்ள உம்மிடம் ஒன்றுமில்லையே, மேலும் கிணறும் ஆழமானது. அப்படியிருக்க வாழ்வு தரும் தண்ணீர் உமக்கு எங்கிருந்து கிடைக்கும்?" என்று பெண்களுக்குரிய விளையாட்டுத்தனத்துடன் அவள் பதிலளிக்கிறாள். "இந்தத் தண்ணீரைக் குடிக்கும் எவருக்கும்

மீண்டும் தாகம் எடுக்கும். நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கும் எவருக்கும் என்றுமே தாகம் எடுக்காது" என்று இயேசு அவளிடம் கூறுகிறார். (இயேசு அவளது கேள்வியைப் பொருட்படுத்தவில்லை ஒருவேளை ஒரு புன்சிரிப்பு சிரித்திருக்கலாம், ஏனென்றால் அவளே ஒரு பதிலை எதிர்பார்க்கவில்லை) "ஐயா, அந்தத் தண்ணீரை எனக்குக் கொடும்; அப்போது எனக்குத் தாகமும் எடுக்காது, தண்ணீர் மொள்ள நான் இங்கு வரத் தேவையும் இருக்காது" என்று அந்தப் பெண் சொன்னாள்.

ஆனால் இப்பொழுது அந்தப் பெண் இயேசுவுடன் இயல்பான நட்புணர்வுடன் பழக ஆரம்பித்தாள். இயேசு இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு அவளை வேதனைப்படுத்தாமல் அவளது பாவ வாழ்க்கையைச் சுட்டிக்காட்டினார். அவள் உள்ளத்தில் காயப்படுத்தின எந்த உணர்வும் இல்லாமலே, பாவ நிலையை உணர்ந்தவளாய் மனந்திரும்பினாள். படைக்கும் ஆற்றலுடைய அன்பு இது.

அவள் இயேசுவுடன் பேசுவதில் மகிழ்ச்சி அடைந்து, அவள் வேறு காரியங்களைக் குறித்தும் உரையாடலைத் தொடருகிறாள். மிக உற்சாகமாகப் பொழுது கடந்து செல்கிறது. அந்தப்பெண் இயேசுவினால் முழுவதுமாகக் கவரப்படுகிறாள். மெசியா வரும்போது அனைத்தையும் எங்களுக்கு அறிவிப்பார் என்று அவள் அவரிடம் சொல்லும்போது, அவர் மெசியாவாக இருப்பாரோ? என்ற உள்ளுணர்வு அவளுள் எழுந்தது.

இயேசு 'அவரே மெசியா' என்று வெளிப்படுத்தினார். (வசனம் 25, 26)

அந்த நிமிடத்தில் சீடர்கள் வருகின்றனர். இயேசு அந்தப் பெண்ணுடன் உரையாடிக் கொண்டிருப்பதைக் கண்டு வியப்புற்றனர்.

அந்த இடைவேளையில் அந்தப் பெண் ஊருக்குள் சென்று, "நான் செய்த எல்லாவற்றையும் என்னிடம் சொன்ன மனிதரை வந்து பாருங்கள். அவர் மெசியாவாக இருப்பாரோ?" என்று எல்லாரிடமும் பறைசாற்றினாள்.

இது எத்துணை அழகாய் இருக்கிறது!

இந்நிகழ்ச்சி நாம் மகிழ்ச்சியடைந்து, கிளர்ச்சி அடையச் செய்யக் கூடிய ஒன்றாகும். அந்தப்பெண் மகிழ்ச்சியின் சிகரத்தையே அடைந்துவிட்டாள். இயேசு அவளை நடத்தியது போல அத்தகைய அன்போடு நடத்தப்படமுடியும் என அவள் எதிர்பார்க்கவே இல்லை. அது பெருமகிழ்ச்சியூட்டிய நல்ல செய்தி என்பதால் மற்றவர்களிடம் தெரிவிக்கப்பட வேண்டிய ஒன்று. அதன் விளைவாக பல சமாரியர்கள் நகரத்திலிருந்து வந்து இயேசுவைப் பார்த்தனர், அவரில் நம்பிக்கை கொண்டனர். அவர்கள் அப்பெண்ணிடம், "இப்போது உன் பேச்சைக் கேட்டு நாங்கள் நம்பவில்லை. நாங்களே அவர் பேச்சைக் கேட்டோம். அவர் உண்மையிலே உலகின் மீட்பர் என அறிந்து கொண்டோம்" என்றார்கள்.

அந்த மக்களுக்கு அந்த நாளில் மீட்பு வந்தது, அது அந்த சமாரியப் பெண் வழியாக வந்தது.

நீங்களும் ஒரு *விந்தையான சிந்தனைத்தியானம்* செய்யலாம். உங்கள் முன் இயேசு இருப்பதாக கற்பனை செய்துகொள்ளுங்கள். உங்களிடம் உள்ள எல்லா நல்ல பண்புகளையும் சொல்லுகிறார்; தொடர்ந்து உங்களிடம் திருத்தப்படவேண்டிய உங்களது குறைகளையும் உங்களை உணரச் செய்கிறார். உங்களுக்கு வேதனையில்லாமலே உங்களைக் காயப்படுத்தாமலே நீங்கள் அதை உணரும்படி அவர் செய்கிறார். பிறகு நீங்கள் உரையாடலை மாற்றி, அந்த நிமிடத்தில் உங்களை ஆட்கொண்டிருக்கும் கருத்திற்கு ஒளியூட்டி வெளிப்படுத்தித் தரும்படி அவரிடம் கேளுங்கள். நீங்கள் விரும்பினால் அந்த உரையாடலை எழுதிக் கொள்ளுங்கள்.

# நாள் - 5

## I. அஞ்சவும் வேண்டாம் நாளையைக் குறித்து கவலைப்படவும் வேண்டாம்

1. *இயேசுவின் அஞ்சாதத்தன்மை:*

(i) இயேசு *நம்பிக்கை உடையவர்*. ஆகவே அவர் காற்றையும் கடலையும் பற்றி பயப்படவில்லை, மற்றவர் என்ன சொல்வார்கள் என்பது பற்றியோ. அல்லது அவரது எதிரிகள் என்ன செய்வார்கள் என்பது பற்றியோ அவருக்குப் பயமில்லை.

(ii) இயேசு ஓர் *அன்பான* மனிதர். இறைவன், மக்கள், மதம், சட்டம் போன்றவை பற்றிய அவரது மனநிலை, அன்பான மனநிலையாக இருந்தது. ஆகவே, மதத்தைப் பின்பற்றுகிற விதத்தில் அவரிடம் எந்த பயமும் இல்லை. ஆகவே அவர் அதிக படைப்பாற்றல் உடையவராக முடிந்தது. ஆழத்துக்குள், இன்னும் அதிக ஆழத்துக்குள் சென்று, அதையும் தாண்டிச் செல்ல முடிந்தது.

(iii) ஆகவே நற்செய்திகளை வாசிக்கும்போது இயேசுவிடம் தெளிவாகத் தெரியும்படி தனித்து நிற்பது அவரது அஞ்சாதத்தன்மையே. மூன்று ஆண்டுகள் தனது பொதுவாழ்விலே நடப்பதற்காக அவர் தெரிந்தெடுத்த பாதை அதிகம் பயணம் செய்யப்படாத - தைரியமுள்ள மனிதர் மட்டுமே நடந்து செல்லும் ஒரு பாதையாகும். அவரது எதிரிகளிடமிருந்து அதிக எதிர்ப்பை சந்திக்க நேரிட்ட போதிலும் இயேசு துணிவுடனும் உறுதியுடனும் அந்தப் பாதையிலே நடந்தார். அவரது வாழ்வு முழுவதிலும் இந்த அஞ்சாதத்தன்மையே அவரது சிறப்பு குணஇயல்பாக இருந்தது.

(iv) எனினும் அவருடைய பாடுகளிலும் இறப்பிலும் அதைத் தனிப்பட்ட முறையில் காணமுடிந்தது. பதில் சொல்ல கட்டளையிடப்பட்ட போதும் அல்லது உண்மையைச் சொல்ல மிக அவசியம் ஏற்பட்ட நேரம் தவிர, தலைமைக்குரு முன்னிலையிலும் ஏரோது முன்னிலையிலும் பிலாத்து முன்னிலையிலும் அவர் ஒரு வார்த்தை கூட பேசவில்லை. மேலும் அவர் இறப்பதற்குக் கூட அதிகப் பற்றுறுதியோடு கூடிய தைரியத்துடன் சென்றார். அப்போதும் அவரது உள்ளத்திலே எத்தகைய கசப்புணர்வும் இல்லை. அவர் இறக்கும்

வரை எவ்வளவு அமைதியாக அவருடைய துன்பங்களைத் தாங்கிக் கொண்டார் என்பதைக் கண்ட ஒரு உரோமைப்படையின் அதிகாரி, "அவர் உண்மையாகவே நேர்மையாளர்" (லூக் 23:47) என்று சொல்லி இறைவனைப் புகழ்ந்தார்.

(v) அவர் *அஞ்சாதத்தன்மையைச் செய்தியாகப்* போதித்தார். நற்செய்தியில் அநேக நேரங்களில் "அஞ்சாதே" என்னும் செய்தியை அவர் பறைசாற்றுகிறார்.

*மத் 8:23-27:* புயல் வீசிய வேளையிலெல்லாம் அமைதியுடன் பயமின்றி இருந்த அவர், அந்த புயலைக்கண்டு மிகவும் அஞ்சி நடுங்கிய திருத்தூதர்களைப் பார்த்து அவர் "நம்பிக்கை குன்றியவர்களே! ஏன் அஞ்சுகிறீர்கள்?" (வசனம் 27) என்று கேட்டார்.

*மத் 14:22-33:* இன்னொரு வேளையிலே, கடலிலே எதிர்காற்று அடித்தபொழுது சீடர்கள் பயந்த வேளையிலே அவர் கடல்மீது நடந்து வந்தார். "நான் தான் அஞ்சாதீர்கள்" என அவர் அவர்களிடம் கூறினார். (வச: 27). அவர் பேதுருவிடம், "நம்பிக்கை குன்றியவனே! ஏன் ஐயம் கொண்டாய்?" என்றார் (வச : 31)

*மத் 10:26-31* மற்றுமொரு சூழ்நிலையில், "ஆன்மாவைக் கொல்ல இயலாமல் உடலை மட்டும் கொல்பவர்களுக்கு அஞ்ச வேண்டாம்" என்கிறார் (வச. 28).

மேலும் இறுதியாக, *மத் 6:25-34* இல் "நாளைக்காக கவலைப்படாதீர்கள். ஒவ்வொரு நாளும் கொண்டு வரும் தொல்லைகளோடு இன்னும் சேர்க்க வேண்டிய அவசியம் இல்லை" (வச 34) என்றார்.

"இந்த காரியங்களில் எல்லாம்" கண்டிப்பாக, முன்னதாகவே தகுந்த நடவடிக்கை எடுக்கவும் திட்டமிடவும் வேண்டும். "இறைவன் பறவைகளுக்கு உணவு கொடுக்கிறார், எனினும் அவர் அவைகளுடைய கூண்டுக்குள்ளே உணவைப் போடுவதில்லை" என்று ஒரு கிரேக்க பழமொழி சொல்கிறது. ஆகவே நமது தேவைகளுக்காக நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆனால் நாம் *எதிர்காலம் குறித்து*

மனக்கவலை கொள்வதை இயேசு தடைசெய்கிறார். நாம் முன்னதாக எதிர்காலத்திற்காகத் தயார் செய்யும் வேளையிலே இறைவனது அன்பான பராமரிப்பினை நம்பியிருக்க வேண்டும். அப்படி நம்பும்போது எதிர்காலம் பற்றிய கவலையிலிருந்து அது நம்மை விடுவிக்கும்.

ஆகவே எல்லா நேரத்திலும் எல்லா சூழ்நிலைகளிலும் எல்லாவித பயங்களிலிருந்து நாம் விடுவிக்கப்பட்டு இருப்பதையே அவர் விரும்புகிறார். பயப்படும் வேளைகளிலே அவருடைய இந்த வார்த்தைகளை அல்லது ஏனைய இறைவார்த்தைகளை நம்முடைய இதயத்திலும் வாயிலும் நாம் வைத்திருப்போம். அவரைப்போல நாமும் வாழ்வின் மேடு பள்ளங்களை எந்தவித அச்சமுமின்றி கடந்து செல்ல இயலும்.

(vi) இறுதியாக, பேதுருவிடமிருந்து ஒரு செய்தி: "உங்கள் கவலைகளையெல்லாம் அவரிடம் விட்டு விடுங்கள். அவர் உங்கள் மேல் அக்கறை கொண்டுள்ளார்". (1பேது 5:7) என்கிறார். பேதுரு தனது கசப்பான அனுபவத்திலிருந்து இதனைக் கற்றுக்கொண்டார். யோவான் 18:12-27 இல், இயேசுவை வதைப்போரைப் பற்றிய அவரது பயம் எவ்வாறு அவர் இயேசுவை மறுதலிக்கச் செய்தது என்பதை நாம் பார்க்கிறோம். பேதுருவை இயேசுவின் பக்கத்தில் அருகருகே நிறுத்துவதன் மூலம் இயேசுவின் துணிச்சலுக்கும் பேதுருவின் பயத்திற்கும் உள்ளே வேறுபாட்டை நாம் கவனிக்கச் செய்து யோவான் இந்தக் கருத்தை நமக்குத் தெளிவுப்படுத்துகிறார்.

2. நம்முடைய *பயங்கள்* சிலவற்றை நாம் பார்ப்போம்.

நாம் *எப்பொழுது* பயப்படுகிறோம்? மேலும் நாம் *ஏன்* பயப்படுகிறோம்?

(i) பொருள்களை நாம் ஏக்கத்துடன் பற்றிப்பிடித்திருக்கும் பொழுது அவற்றை இழந்துவிடுவோமோ என்று நாம் பயப்படுகிறோம். பொருள்களைப் பற்றிப்பிடிப்பதிலிருந்து நான் எப்படி விடுதலைபெற முடியும்?

(ii) தோல்வியைப் பற்றி நாம் பயப்படுகிறோம். ஏன்? நாம் எப்போதும் முதலிடத்தில் இருக்க விரும்புகிறோம். நான் வெற்றி பெறாதபொழுது என்ன நடக்கிறது? அதற்காக நான் என்னையே இழந்தவராகிறேனா?

(iii) நாம் தவறி இருக்கிறோம் என்று சுட்டிக்காட்டப்படுவது பற்றி நாம் பயப்படுகிறோம். இந்த பயம் என்னை பிடிவாதமுள்ளவனாகவும் முன்னேற இயலாதவனாகவும் செய்கிறது. நான் சில வேளைகளில் தவறி இருக்கலாம், இருந்தாலும் பாதுகாப்பின்மையை உணராமலிருக்கலாம் என்பதை நான் ஏற்றுக்கொள்ள முடியுமா?

(iv மாற்றத்திற்கு நான் பயப்படுகிறேன். இரண்டாம் வத்திக்கான் சங்கம், முன்னேற்றத்துக்காக எடுக்கப்பட்ட துணிகரமான செயலாகும். ஆனால் இந்த மாற்றத்திற்கும் இன்னும் வந்திருக்கிற மாற்றங்களுக்கும் நாம் பயப்படுகிறோம். ஏன்? நிறைவு பெற்ற திருச்சபையிலே, ஆபத்தில்லாமல் பாதுகாப்புடன் இருப்பதை நாம் உணர்கிறோம். பரந்த கடலின் உட்பகுதிக்கு செல்ல தைரியமில்லாமல் துறைமுகத்திலே எப்போதும் தங்கியிருந்தால், ஆபத்தில்லாமல் பாதுகாப்பாய் இருப்பதை நாம் உணரலாம் ஆனால், அபாயத்தைச் சந்திக்கத் துணியாமல் இலட்சியத்தை அடைய முடியாது. மத் 14:29 இல் நாம் படகில் இருப்பதனால் வரும் பாதுகாப்பை விட்டு வெளியேற இயேசு நம்மை அழைத்துக் கொண்டிருக்கிறார். இல்லையென்றால், நாம் வளரவே மாட்டோம்.

நாம் விரும்பினாலும் அல்லது விரும்பாவிட்டாலும், தேவைப்பட்டாலும் அல்லது தேவைப்படாவிட்டாலும் மாற்றங்கள் நிகழ்கின்றன. எனவே, மாற்றம் பற்றிய பயத்திலிருந்து நம்மையே நாம் விடுவிக்க முடியுமா?

(V) மற்ற மக்கள் என்ன சொல்லுவார்கள் என்பது பற்றி நாம் பயப்படுகிறோம். நாம் பிறர் நம்மைக் கட்டுப்படுத்த ஏன் அனுமதிக்க வேண்டும்?

(vi) இயேசுவின் இறப்பிற்குப் பின் திருத்தூதர்கள் அவர்களது பாதுகாப்பு பற்றி பயந்தனர். ஆகவே மாடி அறைக்குள் சென்று பூட்டிக்கொண்டார்கள். அவர்களுக்கு நம்பிக்கைக் குறைவாயிருந்தது. அதனால் பாதுபாப்பின்மையை உணர்ந்தார்கள் எனவே, இயேசு

அவர்களுக்கு முன்னால்தோன்றி 'அஞ்சாதீர்கள்' என்றார். நம்பிக்கை இருந்தால் பயத்திற்கு இடமிருக்காது. எனவே நம்பிக்கையை வளர்த்துக் கொள்வோம்

(3) பயத்தின் அடிப்படையில் அமைகின்ற மதம் ஒரு செத்த மதம். எ.கா நான் உத்திரியத்தை அணியாமலிருந்தாலோ, அல்லது கட்டளை செபம் அல்லது செபமாலை சொல்லத்தவறினாலோ எனக்கு ஏதாவது நடக்கும். மதத்திலுள்ள, இத்தகைய தவறான மனப்பாங்குகள் பயத்தை உருவாக்கும். அன்பு செய்யப்படுகிற ஒரு நபருக்கு பயமில்லை. (ஒரு குழந்தை அதன் தாயினால் அன்பு செய்யப்படுகிறது. ஆகவே, அவளைப்பற்றி அதற்குப் பயமில்லை) அன்பில் நிலைக்கும்போது எவருக்கும் பயமிருப்பது இல்லை. ஏனென்றால் நாம் அன்பு செய்யப்படுகிறோம், மேலும் நாம் அன்பில் இருக்கிறோம். எனவே அங்கே பயத்திற்கு இடமே இல்லை. பயத்தை அல்ல, அன்புச் செய்தியை நாம் அறிவிப்பதையே இயேசு விரும்புகிறார்.

நற்செய்திகளில் 'அஞ்சாதீர்கள்' என இயேசு நம்மிடம் சொல்லுவதை அடிக்கடி கேட்கிறோம். பரிசேயர் சதுசேயரின் மதம் பற்றிய பயத்திலிருந்து இயேசு நம்மை விடுவித்துள்ளார். இயேசு சிலுவையில் இறந்ததனால் நம்மை எல்லா வகை பயத்திலிருந்தும் விடுவித்து விசுவாசம், நம்பிக்கை அன்பு கொண்ட இறையாட்சிக்கு நம்மைக் கொண்டு சேர்த்துள்ளார் என்றால் நாம் *அடிமைத்தனமுள்ள* மதத்திற்கு, *தீர்மானிக்கப்பட்ட நடைமுறைகளுக்கு* எண்களோடு இணைத்துவிடுகின்ற நவநாட்களுக்கு, சடங்குகளின் கடுமையான செயல்களுக்கு, அடிப்படைவாதங்கள் போன்றவைகளுக்கு நாம் திரும்பிச் செல்லலாமா? நான் இன்னும் இத்தகைய அடிமைப்படுத்தும் மனநிலையில் மதத்தில் இருந்தால் எத்தனை சோகமான, நிலையில் நாம் இருக்கிறோம்!

இன்னும் அதிகமான அன்பும், மகிழ்ச்சியும், படைப்பாற்றலும் கொண்ட; அதிகமான அபாயத்தையும் சந்திக்க கூடிய; அதிகமான

வளைந்துகொடுக்கும்தன்மையும் புரிதலும் கொண்ட ஒன்றாக, நமது மதம் விளங்கட்டும். கண்டிப்பான, உயிரற்றதுமாய், வளைந்துகொடுக்காத, கவலை உண்டாக்குகின்ற பயிற்சியாக அது மாறாதிருக்கட்டும். அப்படியிருந்தால் அது சாரமிழந்த உப்பாக இருக்கும்.

புதிய சூரிய உதயத்தைப் பார்த்து, வைகறைப்பொழுதிற்குப் புதிய வரவேற்பளித்து, புத்துணர்ச்சியும் உற்சாகமும் பெற்று, ஒவ்வொரு நாளையும் வாழ்ந்திடுவோம். விசுவாசமும் நம்பிக்கையும், ஆண்டவரில் அன்பும் கொண்டவராய், வாழ்விலே நமது வீரதீரச் செயல்களிலே நம்மை வைத்திருக்கவும், தொடர்ந்து நிலைக்கவும் செய்யும் புதிய நாளையும் ஏற்றுக்கொள்ளத் தயாராவோம்.

துறவற மடத்தில் வாழ்ந்தாலும், தனது வாழ்விலும் சமயத்திலும் எளிமையைப் பின்பற்றி, இறைவனைச் சென்றடைந்த, புனித குழந்தை இயேசுவின் தெரசாவின் ஒரு மேற்கோளோடு நான் நிறைவு செய்ய விரும்புகிறேன்.

“பயம் நம்மை ஆட்கொள்ளும்போது சுதந்திர உணர்வோ மகிழ்ச்சியோ நம்மிடம் இருப்பதில்லை. அன்பு செய்யப்படுகிறோம் என்ற உணர்வு மட்டுமே மனித இதயத்திலிருந்து சுதந்திரமாக பதிலளிக்கத் துணை செய்யும்”.

அன்பு செய்யப்படும் உணர்வைத் தரவும் அஞ்சாத்தன்மையை நமக்குக் கற்றுக்கொடுக்கவும் வேண்டும் என்று ஆண்டவரிடம் நாம் கேட்போம்:

பாதுகாப்புடன் படகிலேயே இருந்துவிடும் நிலையை விட்டு வெளியே வரவேண்டும். அப்படி இல்லை என்றால், அவரைப்போல அன்பான, பயமில்லாத மனிதர்களாக ஒருபோதும் நாம் வளர மாட்டோம்.

# நாள் - 5

## 11 சிறு குழந்தைகளைப் போல மாறுவது

*குழந்தையின் தன்மை* மத் 18:1-5:

மரியாவின் கண்ணோட்டத்திலிருந்து குழந்தை இயேசுவை நாம் பார்த்திருக்கிறோம். இயேசுவின் கண்ணோட்டத்திலிருந்து குழந்தையின் பண்புகள் பற்றி இப்பொழுது நாம் பார்ப்போம். குழந்தையைப் போன்று மாறுவது என்பது கிறிஸ்துவைப் போன்று மாறுவது என நான் சொல்லுவேன். நான்கு நற்செய்திகளிலும் இயேசுவின் இந்தச் செய்தி வலியுறுத்தப்படுகிறது. அதாவது, "குழந்தைகளாக நீங்கள் மாறாவிடில் விண்ணரசில் நுழைய மாட்டீர்கள் (மத் 18:1-5, மாற் 9:30-37, லூக் 9:46-48, யோவா 3:3)

ஆகவே வாழ்வின் சரியான மனப்பாங்குகள் பற்றி ஏராளமானவற்றை ஒரு குழந்தை நமக்குக் கற்றுத்தர முடியும் என்று இயேசு கூறுகிறார்.

ஒரு சிறு குழந்தையில் இயேசு பாராட்டுகிற பண்புகள் என்ன?

(1) நற்செய்திகளிலிருந்து நாம் பின்பற்றுவதற்காக அவர் பரிந்துரைக்கின்ற முதல் பண்பு *தாழ்ச்சி*யாகும். இயேசுவின் சீடர்கள் அவர்களிலே யார் பெரியவர் என்று விவாதம் செய்து கொண்டிருந்தனர் (லூக் 9:46). மேலும் "ஒருவர் முதல்வராக இருக்க விரும்பினால், அவர் அனைவரிலும் கடைசியானவராகவும் அனைவருக்கும் தொண்டராகவும் இருக்கட்டும்" (மாற் 9: 35) என்று இயேசு அவர்களுக்குக் கூறினார். பிறகு அவர் ஒரு குழந்தையை எடுத்து அவர்கள் முன் நிறுத்தி சொன்னதாவது: "இந்தக் குழந்தையைப்போல உங்களைத் *தாழ்த்திக்*கொள்ள வேண்டும்." "இந்த சிறு குழந்தையைப் போல் தன்னைத் தாழ்த்திக் கொள்பவரும் குழந்தையைப் போல் மாறுகிறவரும் இறைவனுடைய பார்வையில் மிகப்பெரியவர்" என்றும் அவர் சொன்னார். (மத் 18:4) வேறு வார்த்தைகளில் சொல்வதானால் நமது மனப்பாங்குகளையும் மதிப்பீட்டு அமைப்பு முறைகளையும் மாற்றிக்கொள்ளும்படி அவர் கேட்கிறார். தாழ்ச்சியே இயேசுவின் தலைமைத்தத்துவத்தின் பாணி. "என்னிடம் கற்றுக்கொள்ளுங்கள், நான் சாந்தமும்; மனத்தாழ்ச்சியும்

உள்ளவன்" என்று அவர் சொல்கிறார். மதத்திலுள்ள போலிப்பகட்டுத்தன்மை, பெருமைப்பட்டுக் கொள்வது, உயர்வு மனப்பான்மை கொள்வது போன்றவை இயேசுவின் மனநிலையை விட்டு வெகுதொலைவில் உள்ளன. பிலிப்பியர் 2:8-11 இல் இயேசு தன்னை வெறுமைப்படுத்தியதே இறைவின் மகிமைக்கு வழிநடத்தியது என தூய பவுல் நமக்குக் கூறுகிறார். ஆகவே அவரது தாழ்ச்சியே இறைவனுக்கு மகிமையைக் கொண்டு வந்தது. எனவே தாழ்ச்சி என்பது தன்னை விட இறைவனுக்கு அதிக முக்கியத்துவம் அளிப்பதாகும். குழந்தை தனது பெற்றோர்களைச் சார்ந்து நிற்பதன் மூலம் தனது தாழ்ச்சியைக் காட்டுகிறது. குழந்தைக்கு உதவியும் பராமரிப்பும் தேவைப்படுகிறது. அதனுடைய பலவீனங்கள் அதற்குத் தெரிந்ததால் அதனுடைய தாய் அதைப் பராமரிக்க அனுமதிக்கிறது. பெருமையில் இருந்து பிறக்கிற *சுயவிருப்பத்தின்படி* நடக்கின்ற உணர்விலிருந்து நாம் விடுபட விரும்புகிறோம். ஏழைகள், குழந்தைகள், எளியோர் பிறரைச் சார்ந்திருக்கின்றனர், மேலும் அவர்கள் பிறரிடமிருந்து உதவி கேட்கப் பயப்படுவதில்லை.

2) *வெளிவேடத்திலிருந்து விடுதலை* பெறுவது தாழ்ச்சியின் இன்னுமொரு நோக்கமாகும். ஒரு குழந்தை சில வேளைகளில் பொய் சொன்னாலும் ஒரு போதும் அது பொய்யாக வாழ்வதில்லை.

ஆனால் "பொய் பேசுவது என்பது ஒரு சிறிய பிழை.
பொய்யை வாழ்வது ஒரு பேரழிவு"

என யாரோ ஒருவர் சொல்லுகிறார். ஒரு குழந்தையின் ஒரு மிகச் சிறந்த பண்பு *நேர்மையாக* நடப்பது. தாழ்ச்சி என்றாலே உண்மையோடு இருப்பது என அவர்கள் சொல்லுகிறார்கள். ஆகவே நாம் நமக்காகவும் இறைவனது முன்னிலையிலும் உண்மையுடையவராக வாழ வேண்டும். பொய்யாக வாழ்கின்ற பாவம் எனும் வெளிவேடமாகிய பாவத்தையே இயேசு அதிகம் அருவருக்கிறார். பொய்யாக வாழுவது என்பது உண்மையாக நாம் எப்படி இல்லையோ அப்படி இருப்பதாகத் தோற்றமளிப்பது அல்லது உண்மையாக நாம் இருப்பதைவிட சிறந்தவராகக் காட்டிக்கொள்ள முயற்சி செய்வது. இதுவே போலியாக வாழ்வது என்றும் சொல்லலாம். அது நம்மையும் பிறரையும் ஏமாற்றுவதாகும்.

(3) எல்லாவித நிபந்தனைகள், முன்சார்பு எண்ணங்கள், குறுகிய மனப்பான்மையுடைய மக்களால் புகுத்தப்படும் சீர்குலைவுகள் அல்லது சம்பிரதாயங்கள், பழக்கவழக்கங்கள், சாதியின்பெயரால் தடைசெய்யப்பட்டவைகள் போன்றவைகளிலிருந்தெல்லாம் விடுதலை பெற்று, உண்மையை உள்ளபடியே பார்க்கின்ற தன்மைதான், தாழ்ச்சியும் நம்பகத்தன்மையும் கொண்ட ஒரு குழந்தை பார்க்கின்ற விதம்.

நாம் மக்களை இவ்வாறு தரம் பிரித்துப்பார்க்க முற்படுகிறோம்.

(எ.கா) ஏழைகள் எல்லாம் சோம்பேறிகள்.

ஆண்கள் பெண்களை விட மேலானவர்கள்.

உயர்சாதி என்றும் தாழ்ந்தசாதி என்று குழுக்களாகப் பிரிக்கிறோம்,

இது போன்ற முன்புசார்பு எண்ணங்களிலிருந்தும், உண்மையை சீர்குலைப்பவைகளிலிருந்தும் எவ்வளவு தூரத்திற்கு நாம் விலகியிருக்கிறோமோ அவ்வளவிற்கு நாம் நம்பத்தகுந்தவர்களாக இருப்போம். அப்போது உண்மையை உள்ளபடியே பார்க்க இயலும்.

(4) தாழ்ச்சியோடும் நம்பகத்தன்மையோடும் இணைந்துள்ள இன்னொரு பண்பு அதன் *எளிமை*. குழந்தையானது எளிமையாகவும் நேரடியாகச் செயல்படுவதாகவும் இருக்கிறது. அதனிடம் இரட்டைவேடம் இல்லை. உன்னை ஏமாற்றுவதற்காக எதையும் சொல்வதில்லை, அதற்குத் தெரியும் உண்மையை [illegible]து மறைப்பதில்லை. அதற்கு என்ன தெரியுமோ அதை அபபடியே சொல்லும். ஆனால் எளிமையாக இருப்பது என்பது ஏமாறுகிறவனாக இருப்பது அல்ல. எளிதில் ஏமாறுகிறவன் சூதுவாது இல்லாது இருக்கிறான், எதைச் சொன்னாலும் நம்புகிறான். அவனது அறிவை பயன்படுத்திச் சரியானவற்றை தவறானவைகளிலிருந்து பிரிந்து பார்க்கத் தெரிவதில்லை. ஆனால் ஒரு குழந்தை அப்படி இருப்பது இல்லை, பெரியவர்கள் எதிர்கொள்ளக்கூடிய திசை திருப்புகின்ற தாக்கங்கள் குழந்தையைப் பாதிப்பதில்லை. இதனால் அது படிப்பதற்கும் அறிவில் வளர்வதற்கும் தயாராக உள்ளது. மேலும் உண்மையை ஆழமாகப் புரிந்துகொள்ளும் தன்மையையும் பல நேரங்களில் அது வெளிப்படுத்துகின்றது.

உணர்ச்சி அளவிலும் கூட குழந்தை எளிமையாக இருக்கிறது. அது மகிழ்ச்சியாக இருக்கும்போது அதைச் சிரிப்பில் காட்டுகிறது. கவலையாக இருக்கும்போது அல்லது காயப்படுத்தப்படும்போது அது அழுகிறது. எளிமையில் ஒரு வித அழகு காணப்படுகிறது. ஆன்மீக வாழ்வின் சிகரத்திற்கும் இறைவனோடு ஒன்றிப்பதற்கும் காரணமான எளிய மனநிலையை குழந்தை இயேசுவின் புனித தெரசா கொண்டிருந்தாள். அவரது வாழ்விலிருந்து ஓரிரு மேற்கோள்கள் காட்டப்படுகின்றன.

குழந்தை தெரசாவின் சுய சரிதையிலே இவ்வாறு சொல்கிறாள்: "நான் ஒரு புனிதையாக விரும்புகிறேன், ஆனால் உண்மையான புனிதர்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போது நான் அவர்களைப் போல இல்லை. ஆனால் *மலைக்கும் மடுவுக்கும்* உள்ள வேறுபாடு உள்ளது. இது என்னிலே உற்சாகத்தை இழக்கச் செய்யாமல் இருப்பதற்காக, 'என்னால் நிறைவு செய்ய முடியாத ஆசைகளை இறைவன் என்னிலே தூண்டுவதில்லை, ஆகவே என்னுடைய பலவீனங்களோடே நான் ஒரு புனிதையாக மாறமுடியும்' என்று எனக்குள் சொல்லிக்கொள்வேன். என்னால் உயரவே முடியாது. எல்லாக் குறைகளோடு நான் இருக்கிறபடியே என்னை நான் சகித்துக்கொள்ளவேண்டும், ஆனால் மிகக்குறுகிய, நேரான, முற்றிலுமாக ஒரு புதிய வழி, விண்ணத்திற்கு அழைத்துச் செல்லும் ஒரு *சிறுவழியை* நான் கண்டுபிடிப்பேன். இயேசுவிடம் என்னை நேரே கூட்டிச் செல்லும் ஓர் *இயங்கேணியை* (lift) எப்படியாகிலும் நான் கண்டுபிடிக்கவேண்டும், ஏனென்றால் நிறைவு பெற்ற (Perfection) நிலையில் வாழுவது செங்குத்தான படிகளில் ஏறுவது போன்று கடினமானது. அது சிறுபிள்ளையான என்னால் இயலாது".

மேலும் அந்த இயங்கேணி (lift) என்ன?

- அன்றாடம் செய்ய வேண்டிய சிறிய காரியங்களை இறைவனது அன்பிற்காக இனிதே நிறைவேற்றுவது.
- எதிலும் கவனம் சிதறவிடக் கூடாது. எதற்கும் குறைகூறக் கூடாது.
- அவள் நோயுற்றிருக்கிறார் என்பதை எவரிடமும் வெளிப்படுத்தக் கூடாது.

- அவள் மீது இரக்கமின்றி இருப்பவர்களுடனும் தனிப்பட்ட நட்பைக் காண்பிப்பது.
- குத்திக்காட்டிப்பேசும் போதும் வெற்றிப்புன்னகையால் பதிலளிப்பது.

"அன்பையே நான் கேட்கிறேன்.
எனக்குத் தேவையான பெலன் அன்பு மட்டுமே"
என்று இன்னொரு இடத்தில் அவள் சொல்கிறாள்.

புனிதத்தன்மை என்பது எத்தனை எளிமையானது! ஆகவே எளிமைதான் தூய்மையின் சிகரத்திற்கு நம்மை எடுத்துச் செல்ல முடியும். இதுவே இயேசு குழந்தைகளில் பாராட்டுகின்ற ஒன்றாக இருக்கிறது.

5. குழந்தையிடமிருந்து நாம் பின்பற்றவேண்டும் என அவர் கேட்கும் இன்னொரு பண்பு என்னவென்றால் ஒரு சிறு குழந்தை எதிர்காலத்தில் என்ன நடக்குமோ எனும் பயமின்றி, எந்தவிதப் பாதிப்புமின்றி இருக்கிறது. அது *இன்றைக்காகவே வாழ்கிறது.* ஆம் இன்றைய தினம் நமது கட்டுப்பாட்டிற்குள் இருக்கிறது. இன்றைய தினத்திலேதான் நான் கவனம் செலுத்த வேண்டும்.

"அன்றன்றைய தொல்லை அன்றென்றைக்குப் போதும்".

"அன்றன்றைய உணவை எங்களுக்கு இன்று தாரும்".

"எவராது என்னைப்பின்பற்றி ரவிரும்பினால் தன்னையே மறுத்து தன் சிலுவையை *நாள்தோறும்* சுமந்துகொண்டு என்னைப் பின்தொடரட்டும்".

"விண்ணரசு உங்களுள்ளே இருக்கிறது. அது நாளுக்கு நாள் வளருகிறது" என்று இயேசு கூறுகிறார்.

சிறு குழந்தை ஒரு நாளிலே ஒரு காரியத்தை மாத்திரம் எடுத்துக் கொள்கிறது. எனவேதான் அது விண்ணரசை உரிமை யாக்கிக்கொள்கிறது அருட்பணி பெர்னார்ட் பாஸெட் சே.ச "இரண்டு உலகங்களில் மிகச்சிறந்தவை" ("Best of Both worlds") என்ற ஒரு நூலை எழுதியுள்ளார். அதிலே ஒரு அதிகாரத்திற்கு (JFTD -Just for today- இன்றைக்கு மட்டும்) என்று தலைப்பிட்டுள்ளார். ஆகவே இங்கே மண்ணகத்திலும் விண்ணகத்திலும் மகிழ்ச்சியை அனுபவிக்க வேண்டும் என்றால் இன்றைக்கு மட்டும் வாழுங்கள் என்று அவர் சொல்கிறார்.

"கடந்த காலம் (Past) - கடந்து போய்விட்டது,
வருங்காலம் (Future) - இன்னும் வந்து சேரவில்லை
நிகழ்காலம் (Present) - நமக்கு பரிசாகத் தரப்படுகிறது.
அதனால்தான் இன்றைய தினத்தைப் பரிசு (Present)
என்கிறோம்"
என்று யாரோ ஒருவர் சொல்லியிருக்கிறார்.

நிகழ்காலத்தைக் கொடையாகத் தந்ததற்காகக் கடவுளுக்கு நன்றி செலுத்துவோம். ஆகவே ஒரு நேரத்தில் ஒரு நாளை மாத்திரம் வாழ்வதற்கு ஒரு குழந்தை நமக்குக் கற்றுத் தருகிறது.

6. இறுதியாக, சிறுகுழந்தை அன்பு செய்யப்படவும் அன்பைக் காட்டவும் விரும்புகிறது. இதுவே மனிதனது அடிப்படைத்தேவை. மனிதத்தில் வளர வேண்டுமென்றால், பிறரால் நான் அன்பு செய்யப்படவும் நான் பிறரை அன்பு செய்யவும் அனுமதிக்கவேண்டும். எ.கா: சிறுவன் அதே வகுப்பிலேயே இருக்க விரும்புகிறான். ஏன் தெரியுமா? ஏனென்றால் ஆசிரியை அவனை "தேனே" (honey) என்று அழைக்கிறார்.

குழந்தை இயேசுவின் புனித தெரசா அவளது குழந்தைப்பருவம் பற்றி இவ்வாறு சொல்கிறார்:

"நான் அதிர்ஷ்டசாலி. என் குழந்தைப் பருவத்தின் ஆரம்பம் வியக்கத்தக்க விதத்திலே மகிழ்ச்சியாக இருந்தது. இவ்வாறு எனக்கு பலமான அஸ்திவாரம் இருக்கும்படி இறைவன் பார்த்துக்கொண்டார். என்னுடைய பெற்றோர்களுக்கும் சகோதரிகளுக்கும் என்னை அணைத்துக்கொள்வதற்கும், என்னோடு பேசுவதற்கும், என் கருத்துக்களுக்குச் செவிகொடுப்பதற்கும் எப்போதும் நேரமிருந்தது. ஏனென்றால் நான் குடும்பத்திலே இளையவள், நான் சிறப்பாக அன்பு செய்யப்பட்டதை எப்போதும் உணர்ந்தேன். இந்த அன்பை நாம் முயன்று சம்பாதிக்கவோ அல்லது அன்பைப்பெற தகுதி இருக்க வேண்டும் என்றோ அவசியம் இல்லை. "சிறு தெரசா" எனும் நான் மார்ட்டின் குடும்பத்தின் ஓர் உறுப்பினராக இருந்ததால் தானாகவே எனக்கு அன்பு கிடைத்தது. நான் அன்பு செய்யப்படுவதற்காக நான் நல்லவளாக இருக்க

முயற்சி எடுக்கத் தேவையில்லை. நான் அன்பு செய்யப்பட்டது எனக்கு தெரிந்ததனால் நான் எப்போதும் நல்லவளாக இருக்கவும், மற்றவர்களுக்கு வேதனையை அல்ல, மகிழ்ச்சியைக் கொடுக்கவுமே நான் விரும்பினேன்".

'சிறுதெரசா'வைப்போல நானும் அன்பு செய்யத் தயாராக இருக்கிறேனா? அப்படியென்றால் நானும் கூட என்னைச் சுற்றிலும் வேதனையை அல்ல, மகிழ்ச்சியையே பரப்புவேன்.

நிறைவு செய்யும் வகையிலே, கருத்துச் சுருக்கமாக,

"நாம் மனம்மாறி சிறு குழந்தைகளைப் போல மாறாவிட்டால் நாம் விண்ணரசுக்குள் நுழைய மாட்டோம்" என்று இயேசு சொல்கிறார். இது ஓர் உன்னதமான எண்ணம். ஆன்மீகத்தில் வளர நினைப்பதால் நம்மை மீண்டும் தாழ்த்த வேண்டி வரலாம். சொகுசு, பகட்டு, இறைவனை நமது நிலையிருந்து தீர்ப்பிடுவது போன்றவற்றை விட்டுவிட நேரிடும்,. எனவே எளிமையாக இருக்க முயலுவோம். வானதூதரின் வழியாக வந்த இறைவனது ஆணைக்கு எதிர்த்துவாதிடாத யோசேப்பு போலும், மரியாவுக்கும் இறைவனது ஆவிக்குமிடையே அறிவிக்கப்பட்ட இயற்கையாக நிகழ முடியாத மணஒப்பந்தத்தை எவ்விதத் தடுமாற்றமில்லாமல் எளிமையோடு ஏற்றுக்கொண்ட மரியா போலும், நம்மையே நாம் இறைவன் முன்னிலையில் தாழ்த்திக்கொள்ளவேண்டும். மரியாளுக்குள் இயேசு கிறிஸ்து வியக்கத்தக்க விதத்தில் கர்ப்பமானதில் அவளது மேன்மை அடங்கியுள்ளது. மேன்மையை சோதித்தறிய இதைவிட வேறு எந்த பரிசோதனையும் இல்லை: இறைவன் முன்னிலையில் தன்னை தாழ்த்துகிறவர் யாராயிருந்தாலும் அவரே வெற்றிபெற்றவர் ஆவார்.

# நாள் - 6

## I கடைசி இராவுணவு

மாற் 14:17-31; லூக் 22:14-34

ஆன்மீகப்பயிற்சியின் மூன்றாவது வளர்ச்சிப்படிக்கான *முன்னுரை*

அ. *முதல் வகை ஆரம்ப குறிப்புகள்.* இயேசுவை இன்னும் நெருக்கமாகப் பின்பற்றிட நம் அர்ப்பணத்தை உறுதிசெய்வது மூன்றாவது நிலையாகும். அப்படி உறுதிப்படுவதற்கு நமக்கு இரண்டு காரியங்கள் தேவைப்படுகின்றன.

i) நாம் *அன்பு செய்யப்படுவதை அறிய வேண்டும்.* கல்வாரியே இறையன்பிற்கான மிக உயர்ந்த சான்று. "சாவை ஏற்கும் அளவுக்கு அதுவும் சிலுவைச் சாவை ஏற்கும் அளவுக்கு அவர் நம்மை அன்பு செய்துள்ளார்" என்கிறார் தூய பவுல்.

ii) நம்மை அன்பு செய்பவர் வலிமைவாய்ந்தவராய் இருக்கிறார் என்பதை அறிய வேண்டும். சாகும் வரை ஆண்டவர் அன்பு செய்கிறார் என்பதை மட்டுமல்ல, நம்மை அன்பு செய்பவர் சாவைவிட வலிமைமிக்கவர் என்பதையும் அறிய வேண்டும்.

*இரண்டாவது வகை குறிப்புகள்*

i) இயேசு துன்பங்களை எவ்வாறு கையாளுகிறார் என்பதை அறிய நான் கல்வாரிக்குப் போகிறேன்: அவர் பழிவாங்கவில்லை, மாறாக, மன்னிக்கிறார், வெறுப்பிற்கு வன்முறையில்லாது பதிலளிக்கிறார்.

ii) அவரது துன்பங்களுக்கு நீங்கள் மதிப்புக் கொடுத்தால் துன்பப்படுகிற மற்றவர்களின் துன்பங்களுக்கு உதவிக் கரம் நீட்டுங்கள். கிறிஸ்து இன்று துன்பப்படுகிறவர்களுக்காகத் தொடர்ந்து துன்புறுகிறார். துன்பப்படுகிறவர்களின் துன்பங்களை எளிதாக்குவதற்காக நாம் அதிகமாக ஏதாவது செய்ய முடியாவிட்டாலும், துன்பப்படுகிற மக்கள் நடுவே உடனிருப்பதே அவர்களுக்கு ஒரு பெரிய வேறுபாட்டை உண்டாக்கும்.

*மூன்றாவது வகை குறிப்புகள்*

இந்த நாளிலே நாம் நம்முடைய மனதில் இருந்த வேண்டும் என தூய இஞ்ஞாசியார் விரும்புவது:

i) இயேசு அவரது *மனித இயல்பிலே* எப்படி *துன்புறுகிறார்* என்று பார்க்க வேண்டும். அதன்பிறகு *ஆழ்ந்த துயரம் அடையவும், சோகமாய்* இருக்கவும் அழவும் நான் முயற்சி செய்ய வேண்டும்.

ii) தெய்வீகத்தன்மை தன்னையே எப்படி மறைத்துக்கொள்கிறது என்று பார்க்க வேண்டும்.

iii) இயேசு *என்பாவங்களுக்காக*, இவ்வாறெல்லாம் *துன்பப்படுகிறார்*. அதற்குப் பிரதிபலனாக நான் என்னசெய்து அவருக்காகத் துன்பப்பட வேண்டும் என்பதை எண்ண வேண்டும்.

கிறிஸ்துவோடு துன்பத்தில் பங்கு பெறுவது,
கிறிஸ்துவின் மனவேதனையில் மனவேதனை அடைவது,
கிறிஸ்து எனக்காக மிகவும் நிந்தை அவமானத்தைத்
தாங்கிக்கொண்டதற்காக கண்ணீர் சிந்துவது,
ஆழ்ந்த கவலை கொள்வது.
ஆகியவற்றிற்கான அருளை நாம் இன்று கேட்கின்றோம்.

*இறுதி இராவுணவு குறித்து சிந்தனைத்தியானம்:*
மாற் 14:17-31 , லூக் 22:14-34

1. *இயேசுவின் மனநிலைக்கும் திருத்தூதர் மனநிலைக்கும்* இருந்த வேறுபாடுகள்:

இறுதி இராவுணவு பற்றி நாம் வாசிக்கும்பொழுது, நாம் *முதலில், இயேசுவின் மனநிலைக்கும்* திருத்தூதர் மனநிலைக்கும் உள்ள வேறுபாடுகளைக் கவனிக்கிறோம்.

இயேசு அவருடைய *இறுதி* இராவுணவில் இருக்கிறார். வருத்தம், ஆழ்ந்த கவலை, அன்பு, அக்கறை ஆகியவை அவருடைய உணர்வுகளாக இருந்தன.

சீடர்கள் அந்த மனநிலைக்குள் நுழைய இயலாமல் இருக்கின்றனர். அவர்களின் மனப்பாங்குகள் வேறுபட்டதாக இருந்தன.

முதல் இடத்திற்காக சண்டையிடுகின்றனர், ஒருவன் அவரைக் காட்டிக்கொடுப்பதற்காகத் திட்டமிடுகிறான், இயேசுவால் எச்சரிக்கப்பட்ட பிறகும் பேதுரு அசட்டுத்துணிச்சலோடிருந்தார். ஆகவே *இயேசு தனியாக துன்பப்பட வேண்டியிருக்கிறது.* ஆயினும் அவர் அவர்களைப் புரிந்துகொள்கிறார்.

i) அவர் அவர்களை மிகச் சிறந்த விதத்தில் அன்பு செய்கிறார்.

ii) ஆன்மீகத்தில் அவர்களுக்கு உதவும் வகையில் தனது உடனிருப்பை உணர்த்த) அவர் நற்கருணையை ஏற்படுத்துகின்றார்.

iii) அவர் அவர்களுக்காக இறைவேண்டல் செய்கின்றார்.

இயேசு அவருக்காக அல்ல, அவரைக் காட்டிக்கொடுக்கிற யூதாசுக்காகவும், அவரை மறுதலிக்கிற பேதுருவுக்காகவும், அவரைக் கைவிட்டு விட்டு ஓடும் ஏனைய திருத்தூதர்களுக்காவும் மற்றவர்களுக்காவுகமே அதிகக் கவலைப்படுகிறார். இயேசுவோடு இந்த சோகமான சூழ்நிலையில் நாமும் நுழைவோம். இயேசு கூறுகிறார்: "இனிமேல் இறையாட்சி வரும் அந்நாளில்தான் நான் திராட்சைப்பழ இரசத்தைக் குடிப்பேன்; அதுவரை ஒருபோதும் குடிக்கமாட்டேன் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்" (மாற் 14:25)

2. இறுதி இராவுணவு இயேசுவின் *பிரியாவிடை* உணவு. அவர் பிரியாவிடை உணவிற்கு புது அர்த்தம் கொடுத்தார்: உனது *உணவை* காணிக்கையாக்கும்போது நீ *உன்னையே* காணிக்கையாக்குகிறாய். இரண்டு காணிக்கைகளுமே பகிர்தலுக்கும் அன்பிற்கும் அடையாளமாக இருக்கின்றது.

இயேசு அன்பினால் அவரையே கையளித்தார். ஆகவே நாம் பங்கெடுக்கிற ஒவ்வொரு திருவிருந்திலும், இயேசு கையளித்ததன் நினைவாக அன்பினால் நம்மையே நாம் கையளிக்க வேண்டும். "இதை என் நினைவாகச் செய்யுங்கள்" என்று இயேசு சொல்லியிருக்கிறார் அல்லவா?

அந்த உணவின் இறுதியில்தான் திருத்தூதர்கள் சோகத்தை உணர ஆரம்பித்தனர். "அவர்கள் புகழ்ப்பாடல் பாடிவிட்டு ஒலிவமலைக்குச் சென்றார்கள்" (மாற் 14:26) என்று நற்செய்தி தொடர்ந்து சொல்லுகிறது.

இயேசு அவர்களது சோகத்தை மாற்றிவிட்டார். இயேசு தூய ஆவியை அவர்களுக்கு அனுப்புவதாக அவர்களிடம் சொன்னார். பிறகு புதிய உறுதியுடனும் பெரும் ஆர்வத்துடனும் புதுப்பிக்கப்பட்டு அவர்கள் வாழ்வைத் தொடங்குவார்கள். சாவு *மனக்கவலையைக்* கொண்டு வருகிறது. ஆனால் அது *நம்பிக்கையையும்* கொண்டு வருகிறது. "கோதுமை மணி மண்ணில் விழுந்து மடியாவிட்டால் அது அப்படியே இருக்கும். அது மடிந்தால்தான் மிகுந்த விளைச்சலை அளிக்கும்". (யோவான் 12:24) இது அன்பு வாழ்வின் நற்கனியாகும். இயேசுவின் இறப்பினால் நமக்குக் கிடைத்த நற்பயன் தூயஆவியே!.

3. ஒரு கிறிஸ்தவமதகுருவிடம் சவாலிடுவதும் அவர்கள் செயல்பாட்டை கேள்விகள் கேட்பதும் ஆபத்தானது. துறவறத்தார் வெறுப்பை வளர்த்துக்கொள்ளும்போது அவர்கள் எல்லையைக் கடந்து சென்றுவிடுகின்றனர், ஏனென்றால் அவர்கள் ஏதோ நன்மையே செய்வதாக அவர்கள் நம்புகிறார்கள். அடிப்படைவாதிகள் இறைவனின் பெயரால் ஒரு சீர்திருத்தவாதியை அல்லது சமூகப் பணி செய்பவரை எதிராகத் தூண்டிவிட முடியும். எடுத்துக்காட்டாக, வங்காள தேசத்தைச் சார்ந்த தால்சிமா நஷ்ரேன் அவள் தனது நாட்டிற்குத் திரும்பமுடியாது, அவர்கள் அவளைக் கொன்றுவிடுவார்கள். ஏழைகளுக்கு நன்மை செய்வது அபாயகரமானதாக இருக்கிறது. உலகத்திலே அன்பான ஒரு புதிய சூழலை உருவாக்குவதும் ஆபத்தானதே. வெறுப்பு, சுரண்டல், மக்களைக் கொடுமைப்படுத்துதல் ஆகியவற்றில் மக்களுக்கு அதிக ஆர்வம் உள்ளன. ஆயினும் அது எப்படியிருந்தாலும் அன்புச் செயல் தொடர்ந்தாக வேண்டும். மிகுந்த விளைச்சலைக் கொடுக்க வேண்டுமென்றால் கோதுமை மணி மடிய வேண்டுமே!.

இயேசு வாழ்வுக்குச் செல்லும் 'குறுகலான பாதையை' அபாயகரமான வாழ்வைக் கொண்ட இந்தப் பாதையைத்தான் தெரிந்தெடுத்தார். இதுவே நமது வழியாகவும் இருக்க வேண்டும். இயேசு அவரது பிறப்பிலிருந்தே ஏழைகள் மற்றும் ஒடுக்கப்பட்டவர்கள் சார்பில் நின்றார். அவர் சாகப்போகிறார் என்பதால் அவர் அவர்களைக் கைவிட்டுவிடவில்லை. அவரது எதிரிகள் அவரது உடலை மட்டுமே அழிக்க முடியும். அவரது *ஆவியை* அவர்களால் அழிக்க முடியாது. அது அவருக்காகத் தங்களையே கையளித்த மக்களிலும் அவரது அடிச்சுவட்டைத் துணிச்சலுடன் பின்பற்றுவோர்களிலும் தொடர்ந்து வாழ்கிறது.

இயேசு தனக்காக ஒரு புதுமை கூட செய்யவில்லை. அவர் அன்பினால் தனது துன்பங்களைத் தாங்கிக்கொண்டார். எங்கே அன்பிருக்கிறதோ அங்கே துன்பங்களும் கூட இருக்கின்றது. அவர் *எனக்காகத்* துன்புறுகிறார். நான் அவருக்காக என்ன செய்ய வேண்டும்? எப்படி துன்புறவேண்டும்? எல்லாத் தவறுகளையும், எல்லா அவதூறுகளையும், எல்லா நிந்தை அவமானங்களையும், எல்லா ஏழ்மையையும் தாழ்ச்சியான உள்ளத்தோடு நான் தாங்கிக் கொள்ளவேண்டும். அப்போது அவரது துன்பங்களோடு நானும் அவருடன் இருக்க முடியும். மேலும் இன்று துன்புறும் மக்களுடன் சேர்ந்து துன்புறுவதால் நாம் அவரோடு இருக்க முடியும்.

# நாள் - 6

## II சிலுவை

யோவா 5:1-18: அவர்கள் ஏன் இயேசுவைச் சாவிற்கு உட்படுத்தினார்கள்? இயேசு அன்பு எனும் ஆன்மீகத்தை, சட்டத்திற்கு மேலாக மதித்து அதற்காக இறந்தார்.

யோவா 19:17-30: அவரது சாவு

*முன்னுரை.* இங்கிலாந்தில் மாணவர்கள் ஒருவருக்கொருவர் TGIF - ('Thank God it's Friday') இன்று வெள்ளிக்கிழமையாக இருப்பதற்காக கடவுளுக்கு நன்றி செலுத்துங்கள் என்று வெள்ளிக்கிழமை வரும் பொழுதெல்லாம் கூறிக்கொள்வார்கள் என்று சொல்லப்படுகிறது. அவர்கள் ஓய்வு எடுப்பதற்காக இரண்டு விடுமுறை நாட்கள் தொடர்ந்து வருவதற்காக அவர்கள் நன்றியுணர்வுடன் இருக்கிறார்கள். எல்லா பெரிய வெள்ளிக்கிழமையிலும் மனித சமுதாயம் முழுவதுமே கடவுளுக்கு நன்றி நிறைந்தவர்களாய் இருக்க வேண்டும். ஏனென்றால், கடவுள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக அந்த நாளில் இயேசு வழியாக நிறைவேற்றினதை அது அவர்களுக்கு நினைவுறுத்த வேண்டும். ஆனால் இயேசு உண்மையிலே சிலுவையில் அவமானம் நிறைந்த சாவைச் சந்தித்த நாளாக அது இருக்கும்பொழுது அதை ஏன் நல்ல நாள் என்று அழைக்கிறோம்? அது இறைவனுக்குத் தோல்வியைக் கொண்டு வந்த நாள் அல்லவா? தூயபவுல் நமக்கு அதற்கான விடையளிக்கிறார். உரோ 5:8 இல் "நாம் பாவிகளாய் இருந்தபோதே கிறிஸ்து நமக்காகத் தம் உயிரைக் கொடுத்தார். இவ்வாறு கடவுள் நம்மீது கொண்டுள்ள அன்பை எடுத்துக் காட்டியுள்ளார்" என்று தூய பவுல் நமக்குக் கூறுகிறார். நாம் முழுவதுமாக கிரகிப்பதற்கு இந்த அன்பு அதிக ஆழமானதாக இருக்கிறது. பெரிய வெள்ளிக்கிழமைக்காய் இறைவனுக்கு நன்றி (TGFGF - Thank God For Good Friday) என்று நாம் எல்லாரும் சொல்லமுடியும்.

1. *சிலுவை ஒரு கிறிஸ்தவனின் அடையாளம்* (கிறிஸ்தவன் = பிறருக்காக வாழும் நபர்) சிலுவை மிக இழிந்த அடையாளமாக இருந்தாலும் கிறிஸ்துவின் சிலுவையில் நாம் பெருமைப்படுகிறோம். இயேசு

இரண்டு கள்வர்கள் நடுவே சிலுவையில் இறந்தார். அதன்பொருள் என்னவென்றால் கள்வர்களுள் ஒருவராக அவர் கருதப்பட்டார். நன்மையே செய்வதற்கு வாழ்வைச் செலவிட்ட அவருக்கு கிடைத்த சாவைப்பாருங்கள். நன்மை செய்கின்ற பெரும்பான்மையோருக்கு இதுவே நடக்கிறது. அவர்களது வாழ்வு ஆபத்தானதாக இருக்கிறது. அவர்களது சாவும் பெரும்பாலும் அவமானமுள்ள ஒன்றாக இருக்கிறது. இதன் காரணமாகத்தான் சிலுவையின் வழி வாழ்கிற வாழ்வை விடுத்து வேறு வழிகளை நாம் நாடுகிறோம். கலா 6:11-14 பகுதியில் வெளி ஆடம்பரங்களும் வழிபாட்டு முறைகளையும் கொண்ட சுயநலமான மதத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கும்போது, இயேசு வாழ்ந்தது போல பிறருக்காக வாழ்கின்ற மதத்தைப் பின்பற்றாவிட்டால், நாமும் கிறிஸ்துவின் சிலுவையை சொந்தம் பாராட்ட முடியாது. "நானோ நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் சிலுவையை அன்றி, வேறு எதைப்பற்றியும் ஒருபோதும் பெருமை பாராட்டமாட்டேன். அதன் வழியாகவே, என்னைப் பொறுத்த வரையில், உலகம் சிலுவையில் அறையப்பட்டிருக்கிறது. உலகைப் பொறுத்தவரையில் நானும் சிலுவையில் அறையப்பட்டிருக்கிறேன்" என்று தூய பவுல் சொல்கிறார்.

இயேசுவைச் சாவுக்குட்படுத்திய அந்த மக்கள் மனித சமுதாயத்திற்கு மிகப்பெரிய சேவை செய்வதாகக் காட்டிக்கொண்டார்கள். ஆனால் உண்மையாக அவர்களது சுயநோக்கத்தை மூடி மறைக்க முயன்று கொண்டிருந்தார்கள். ஏழைகளோடு ஏழைகளுக்காக போராடுகிற ஒரு மனிதர் அவர்களுக்கு எதிராக இருக்கிறார். ஏனென்றால் அவர்கள் பணக்காரர் சார்பாக இருப்பதற்குமம். பணக்காரராக இருப்பதற்கும் ஏற்கனவே முடிவு செய்துவிட்டார்கள். அவர்களது வழியில் எவரும் வரக்கூடாது. அதனால் சட்டங்களைக் கடைப்பிடிப்பதில் மிகவும் உறுதியாக இருந்த அவர்கள், சிறிதளவு கூட மனச்சாட்சியின் உறுத்தலின்றி ஒரு குற்றமில்லாத மனிதரை சாவுக்குக் கையளித்தனர்! இந்த உலகின் ஞானம் இவ்வாறு தான் இருக்கிறது. அது தீமையோடு இணங்கிப்போகிறது. பிறருக்கு முன்னால் தன்னை உயர்த்திக்கொள்ள வழிகளையும் வழிமுறைகளையும் தேடுகிறது. நமது மதம் இத்தகைய ஒன்றைக் குறிக்கோளாகக் கொண்டிருந்தால் ஏதாவது ஒரு வழி

முறையைக் கண்டுபிடித்து, நமது அமைப்பு முறைகளைத் தடைசெய்கின்றவர்களை நம்மிடமிருந்து அகற்றி விடுவது நல்லது. நாம் எங்கே நிற்கிறோம்? சிலுவையில் கிறிஸ்துவுடனா அல்லது அவருடைய எதிரிகளுடனா? நமது மதம் சுயநலம் சார்ந்த மதமா அல்லது சிலுவைக்கு வழிநடத்துகின்ற பிறர் நலம் சார்ந்த மதமா?

2. *இயேசு இந்த உலகத்தின் ஞானத்தை திகைக்கச் செய்ய சிலுவையின் மடமையைத் தேர்ந்து கொண்டார்.* சாதாரணமாக மக்கள் சரியானது என நினைத்துக் கொண்டிருப்பவைகளுக்கு எதிராக நிற்கச் செய்வதால் இது முட்டாள்தனமாக இருக்கிறது. நாட்டின் குறுக்காக ஓடும் ஒரு போட்டியில் ஏராளமான ஓட்டக்காரர்கள் தவறான வழியைப் பின்பற்றினார்கள். ஆனால் அவர்கள் சரியான வழியைத் தேர்ந்தெடுத்தவர்களைப் பார்த்து சிரித்தார்கள். அது *பெரும்பான்மையினரின்* வழியாக இல்லாததால், அவர் சரியான வழியைத் தெரிந்தெடுத்தது நகைப்புக்குரிய ஒன்றாக இருந்தது.

இவ்வுலகின் மனிதர்கள் வெற்றி பெற பின்பற்றும் வழிகள் : புகழ்ச்சி, இலாப நோக்கம், ஊரோடு ஒத்து வாழ்வது, ஒரு வசதியான வாழ்வை அனுபவிப்பது, மதிப்பைத் தேடுவது, செல்வத்தை ஆவலுடன் விரும்புவது, அவர்களது சாதனைகளைப்பற்றி பெருமையடித்துக் கொள்வது போன்றவையாகும்.

இயேசு இவைகளுக்கெல்லாம் எதிரானதைத் தேர்ந்து கொண்டார். அவர் கடவுளது மகிமையைத் தேர்ந்து கொண்டார். தனது மகிமையை அல்ல. அவர் ஏழ்மையைத் தெரிந்து கொண்டார். அவர் ஏழைகளோடு ஒருவராகத் தன்னை அடையாளம் கண்டார். எனவே அவரை தாழ்ந்தவராகக் கருதினர். 'இவர் தச்சனது மகனல்லவா?' என்று அவர்கள் சொன்னார்கள். அவரை வெறுத்தார்கள், புறக்கணித்தார்கள்.. அவர் அவமானத்தின், சிலுவையின் வழியைத் தேர்ந்துகொண்டார். அவர்கள் அவரை அவமானப்படுத்தினர், ஒரு முட்டாளைப் போல அவரை நடத்தினர். அவரது சாவுக்குரிய சிலுவையை அவரே சுமக்கச் செய்தனர். இயேசு எல்லாத் தவறுகளையும், எல்லா நிந்தை அவமானங்களையும், எல்லா ஏழ்மையையும் சமநிலையோடு தாங்கிக்கொண்டார். இதுவே சிலுவையின் மடமையைத் தெரிந்து கொள்வது என்று பொருள்படும்.

3. *ஏன் இயேசு சிலுவையை ஏற்றுக்கொண்டார்?*

தந்தைக்குக் கீழ்ப்படிவதிலும், அவரது பணிக்கும் நமக்கும் நம்பிக்கை உடையவராய் இருப்பதிலும் அவரது அன்பின் ஆழத்தை வெளிக்காட்ட விரும்பி, அவர் சிலுவைத் தெரிந்துகொண்டார். அன்பின் இயல்பு அத்தகையதாய் இருக்கிறது. அது எல்லாவற்றையும் கொடுக்கத் தயாராக இருக்கிறது. "தன் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதைவிட மேலான அன்பு எவரிடத்திலும் இல்லை அல்லவா?". அவ்வாறு பிறருக்கு வாழ்வு கொடுப்பதற்காக தான் முழுவதுமாக *இறக்க வேண்டும்.* இயேசு, கடவுளது அன்பின் முழுமையான, நிறைவான வெளிப்பாடு. கடவுள் தன்னையே நமக்குக் கொடுக்கின்ற கொடையாக இயேசு இருக்கின்றார். இந்த அன்பு சிலுவையில் நிறைவாக வெளிப்படுத்தப்படுகிறது.

அன்பின் வாழ்க்கைமுறை உலகம் காட்டும் வாழ்க்கை முறைக்கு முற்றிலும் எதிரானது என்று சிலுவை நமக்கு கற்றுத்தருகிறது. அது ஒரு முரண்பாடு போலத் தோன்றுகிறது. ஆகவே அதை உலகம் புரிந்து கொள்ளாமல் அது ஒரு மடமை என்று அழைத்தது. ஆனால் அந்த அன்பின் மடமை வழியாகத்தான் உலகம் வாழ்வைத் திரும்ப பெற்றுக் கொண்டது. ஆகவே சிலுவையின் மடமையே அன்பின் மடமையாக இருக்கிறது.

4. "உன்னுடைய சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப்பின் செல்". இது நமக்காக, இயேசு விடுக்கும் அழைப்பு. எளிதில் உணரக்கூடிய முறையில் இது என்ன செய்தி சொல்கிறது? இயேசு வாழ்ந்து காட்டிய மதிப்பீடுகளுக்கும் மனநிலைகளுக்கும் ஏற்ப நாம் வாழ வேண்டும். மலைப்பொழிவு அழைக்கின்றபடி நம்மையே வெறுமைப்படுத்தி சான்று பகர வேண்டும், பகைவர்களை அன்பு செய்வது, மறுகன்னத்தையும் திருப்பிக்காட்டுவது, மற்றவர்கள்மீது தீர்ப்பிடாதிருப்பது, அடுத்தவர் கண்ணிலிருக்கிற துரும்பைப் பார்க்காது, நமது கண்ணிலிருக்கும் உத்திரத்தைக் கவனிப்பது போன்றவை. வேறு வார்த்தைகளில், சொல்வதானால், தினந்தோறும் செய்யும் வேலைகளிலும் துன்பங்களிலும் நமது சொற்கள், செயல்கள் மற்றும் அமைதியின் வழியாக கிறிஸ்து நம்மிலே பிரகாசிக்க வேண்டும், 'ஆம்' என்றால் 'ஆம்', 'இல்லை' என்றால் 'இல்லை' என்றே நமது பதில் அமையவேண்டும்.

நமது (துறவற) வாழ்விலும், அர்ப்பணத்திலும் செயல்படுத்த வேண்டிய சில நடைமுறைகளைப் பற்றி மீண்டும் சிந்திப்போம். விமரிசனங்களையும் அப்போதைக்கு அப்போது தலைகாட்டும் பொறாமைகளையும் நம்மால் சகித்துக்கொள்ள இயலுகிறதா? அல்லது புனித தெரசா வாழ முயன்ற சிலுவையின் சிறு வழியை நம்மால் வாழ்வாக்க முடிகிறதா? குறைகூறாதிருக்கவும், விமரிசிக்காதிருக்கவும் முடிகிறதா? நமக்கு எதிரான விமரிசனங்களுக்கும் வெற்றிப்புன்னகையால் பதிலளிக்க முடிகிறதா?

இவைகளிலெல்லாம், கிறிஸ்துவுடைய சிலுவையின் மடமையிலே நம்மையே நாம் இழக்கிறோம், கடவுளின் மகிமை மட்டுமே வெற்றியாக நம்மை வந்தடைகிறது. ஆகவே தூய பவுல் சொல்வது போல, உண்மையிலே ஞானிகளாக மாற வேண்டும் என்றால் கிறிஸ்துவுக்காக மடையர்களாவது அவசியமாக இருக்கிறது. 2 கொரி 12:10 இல் "என் வலுவின்மையிலும் இகழ்ச்சியிலும் இடரிலும் இன்னலிலும் நெருக்கடியிலும் கிறிஸ்துவை முன்னிட்டு நான் அகமகிழ்கிறேன். ஏனெனில் நான் வலுவற்றிருக்கும்போது வல்லமை பெற்றவனாய் இருக்கிறேன்" என்கிறார்.

இறுதியாக, 1 கொரி 1:18-28 இல், "சிலுவையில் கிறிஸ்துவின் சாவு பற்றிய செய்தி அழிந்து போகிறவர்களுக்கு மடமையாய் இருக்கிறது, ஆனால் மீட்பு பெறும் நமக்கோ கடவுளின் வல்லமையாய் இருக்கிறது. கடவுள் ஞானிகளை வெட்கப்படுத்த, மடமை என உலகம் கருதுபவற்றைத் தேர்ந்துகொண்டார், அவ்வாறே வலியோரை வெட்கப்படுத்த, வலுவற்றவை என உலகம் கருதுபவற்றைத் தேர்ந்து கொண்டார்" தூயபவுல் கிறிஸ்துவின் சிலுவைப்பற்றிய மடமையான செய்தியால் கவரப்பட்டார். ஆகவே அவரிடமிருந்து இறுதியாக ஒரு மேற்கோள், மிகவும் சிறப்பு வாய்ந்த ஒன்றை, பிலிப்பியர் 2:1-11, பகுதியிலிருந்து சேர்த்துக்கொள்கிறேன். மறைநூல் அறிஞர்கள் இந்தப்பகுதியை தூய பவுல், இயேசு பற்றி எழுதிய பகுதிகளிலெல்லாம் மிகவும் சிறப்பு வாய்ந்த, மிகவும் உள்ளத்தை உருக்குகின்ற ஒன்றாகக் கருதுகின்றனர் (ஏற்கனவே இருந்த கிறிஸ்தவப் பாடலை மேற்கோளாகப் பயன்படுத்தியிருக்கலாம்)

*"அவர் சாவை ஏற்கும் அளவுக்கு,*
*அதுவும் சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்குக்*
*கீழ்ப்படிந்து தம்மையே தாழ்த்திக்கொண்டார்"*

மேலும் இந்த மடமையே, கிறிஸ்துவின் சிலுவை வழியே தந்தையின் மகிமைக்கு வழிநடத்தும் என்று சொல்லி அவர் நிறைவு செய்கிறார்.

முடிவாக, சுருக்கமாக சொல்வதனால், சிலுவையை உற்றுப்பார்த்து நம்பிக்கையுடன் செவிமடுப்பவருக்கு சிலுவை மூன்று கருத்துக்களைச் சொல்கிறது.

முதலாவது அது தந்தைக்கும் நமக்கும் இயேசுவின் அன்பின் அடையாளமாக இருக்கிறது; அவரது வாழ்நான் முழுவதும் சொன்னவற்றை நாடகப்பாணியில் சொல்வதானால்: "தன் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதைவிட சிறந்த அன்பு யாரிடமும் இல்லை" (யோவா 15:13) ஆகவே இயேசு நம்மீது கொண்ட அன்பின் அடையாளமாக சிலுவை விளக்குகிறது.

இரண்டாவது, இயேசு நம்மை அன்பு செய்தது போல பிறரை அன்பு செய்வதற்கான ஓர் அழைப்பாக சிலுவை இருக்கிறது. அவர் தம் சீடர்களுக்கு சொல்லிக்கொண்டிருந்த போதனையின் இறுதியிலே, "நான் உங்களிடம் அன்பு கொண்டிருப்பதுபோல நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்புகொண்டிருக்க வேண்டும்". (யோவா 15:12) என்று கட்டளை கொடுத்தார். ஆகவே "சிலுவையின் வழி பிறர் அன்பிற்கான வழி".

மூன்றாவது, சிலுவை ஒரு வெளிப்பாடு, சரியாகச் சொல்வதனால், இயேசு அவரது சீடர்களுக்கு அடிக்கடி சொன்னது போல, அன்பு இருந்தால் துன்பங்களும் இருக்கும் "என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையை நாள்தோறும் தூக்கிக்கொண்டு என்னைப் பின்பற்றட்டும்" (லூக் 9:23) ஆகவே பிறரை அன்பு செய்யும் வழி துன்பத்தின் வழியாகும்.

சிலுவையில் இயேசு சொன்ன ஏழுவார்த்தைகளில் ஒரு வார்த்தையை மந்திர செபமாக (Mandra prayer) சொல்லி நாம் நிறைவு செய்வோம். எடுத்துக்காட்டாக, "தந்தையே, இவர்களை மன்னியும். ஏனெனில் தாங்கள் செய்வது என்னவென்று இவர்களுக்குத் தெரியவில்லை" (லூக் 23:34) என்று இயேசு சொன்னதில், 'தந்தையே' என்று, மூச்சை உள்ளே இழுக்கும்போதும், 'இவர்களை மன்னியும்' என்று மூச்சை வெளியே விடும்போதும் சொல்லுங்கள்.

# நாள் - 7

## I உயிர்ப்பு: யோவா 20:1 - 9

*முன்னுரை:*

இன்று அக்களிப்பின் நாள், ஏனென்றால் ஆண்டவர் இறந்தோரின்று உயிர்த்து விட்டார். அவருடைய பாடுகளில் நாம் ஆழ்ந்த கவலை அடைந்தோம், சாவின்மீது அவர் பெற்ற வெற்றியைக் குறித்து இப்பொழுது நாம் அகமகிழ்வோம். "உயிர்த்தெழுதலே பாடுகளின் நிகழ்ச்சியை ஒரு நல்ல செய்தியாக்குகிறது" என்று யாரோ ஒருவர் சொல்கிறார்.

அ. இந்த ஏழாவது நாளிலே *சில ஆரம்ப குறிப்புகள்*, இது ஆன்மீகப் பயிற்சி தியானத்தின் நான்காவது பாகத்தை ஒத்திருக்கிறது:

(i) உயிர்த்தெழுதல் ஒரு *நம்பிக்கை தரும் நிகழ்வு*. இது பாவத்தின் மேலும் வெறுப்பின் மேலும் அன்பு பெற்ற வெற்றியாகும். அன்பே இறுதியில் வெற்றி பெறுகிறது. ஆகையால், இது இயேசுவின் அன்புவாழ்வு சரியென நிரூபித்துக் காட்டுகிறது ஆகவே, நாம் ஒருவரை ஒருவர் அன்பு செய்வதன் வழியாக இயேசுவின் அன்புவாழ்வை நாமும் தொடர்ந்து வாழ வேண்டும்.

(ii) *இயேசுவின் வரலாற்றிலே* பிறப்பிலிருந்து இறப்பு வரை பாவம் தவிர மற்ற எல்லாவற்றிலும் நம்மைப்போல வாழ்ந்த ஒரு மனிதரை நாம் இயேசுவில் சந்திக்கிறோம். நமது மனித பலவீனத்தை அவர் பகிர்ந்து கொண்டார். ஆகவே *காயப்படத்தக்க மனிதனாக வந்த இயேசு* அவரது பிறப்பிலிருந்து இறப்பு வரை தனித்தே நின்றார்.

(iii) *உயிர்த்தெழுதலிலே நம்பிக்கையினால் கிறிஸ்துவை* நாம் சந்திக்கிறோம். அது கிறிஸ்துவின் முழுமையான மாறுபட்ட நிலையாகும்: இனிமேல் அவர் துன்பப்படவோ அல்லது இறக்கவோ முடியாது. அவரது மனித உடலை இனி ஒருபோதும் காயப்படுத்தமுடியாது. ஆகவே *மகிமையான கிறிஸ்து* அவரது உயிர்த்தெழுதலினால் உயர்ந்து நின்றார்.

ஆ. உயிர்த்தெழுதல் எளிதில் நம்ப முடியாத ஒரு நிகழ்ச்சி என்பதனால் திருச்சபையின் தந்தையரில் ஒருவர்,

"நம்பமுடியாததாக இருந்தாலும் கிறிஸ்து
எனக்காக இறந்தார் என நான் நம்புகிறேன்.
இயலாததாகத் தோன்றினாலும் அவர்
இறந்தோரினின்று உயிர்த்தெழுந்தார் என நான் நம்புகிறேன்",
என்று கூறியுள்ளார்.

பெரிய வெள்ளிக்கிழமை, இயேசுவின் *சீடர்களை* அதிர்ச்சியும் யமுள்ள நிலைக்குத் தள்ளியது. இறைவனிடமிருந்து வந்த இயேசு றையரசை இவ்வுலகிலேயே நிலைநாட்டுவார் என்ற அவர்களது கனவு வச்சுறுத்தும் தீயக்கனவாகிப் போனது.

ஆனால் மூன்று நாட்களுக்குள்ளாக ஏதோ அசாதாரணமான ன்று நடந்தேறியது. இயேசுவைப் பின்பற்றியவர்கள் வியப்புக்குரிய கத்திலே மாற்றம் பெற்றனர். புதிய கண்ணோக்குடனும் ஆற்றலோடும் தூயிர் பெற்றனர். '*இயேசு உயிர்த்து விட்டார்*' என்னும் மிகவும் நம்ப யலாத செய்தியைப் பறைசாற்றினர். அவர் உயிரோடிருப்பதை தங்கள் சொந்தக் கண்ணால் பார்த்திருந்தனர். ஆகவே இறந்தோரினின்று அவர் சயமாய் உயிர்த்துவிட்டார். எனவே இந்த சிந்தனைத்தியானத்திலே ழு இதயத்தோடு, மகிழ்ச்சியுடனும் அக்களிப்புடனும் இருக்கும்படி கட்டுக்கொள்ளப்படுகிறோம். "நம் ஆண்டவர் கிறிஸ்துவிடம் மிகுந்த கிழ்ச்சியும் மகிமையும் இருப்பதால், நாமும் ஆனந்தமும் அக்களிப்பும் ளவில்லாத அடைய இறையருளை கேட்க வேண்டும்" என்று தூய ஞானாசியார் விரும்புகிறார்.

இயேசுவின் பாடுகளின்போது அவரது தெய்வீகத்தன்மை மறைக்கப்பட்டிருந்தது. அதுபோலவே இப்பொழுது எல்லா மகிமையோடு அற்புதமானவிதமாய் அவரது உயிர்த்தெழுதலிலே அது தன்னை வெளிப்படுத்துகிறது என்பதை நாம் கவனிக்க வேண்டுமென்று தூய இஞ்ஞாசியார் விரும்புகிறார்: இயேசுவின் உடல் புதிய இருத்தலைப் (existence) பெறுகிறது. பூட்டிய கதவின் வழியாக நுழைந்து செல்ல முடிகிறது. அது மாறுபட்ட தோற்றத்தை அடைய முடிகிறது. ஒரு நொடியில் தோன்றவும் மறையவும் செய்கிறது . . .

மேலும் *மூன்றாவதாக*, "நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அருளிய தேற்றரவாளரைக் குறித்து நாம் கவனம் செலத்த வேண்டும். நண்பர்கள் ஒருவரை ஒருவர் வழக்கமாக ஆறுதல் படுத்தக்கூடிய முறையோடு அவர் நம்மை ஆறுதல்படுத்துவதை வழியை ஒப்பிட்டுப்பாருங்கள்" என்று தூய இஞ்ஞாசியார் சொல்கிறார்.

ஒரு சமயம் சோகமாக இருந்த இயேசுவின் நண்பர்கள் எல்லாரும் இப்பொழுது சந்தோஷமாக இருக்கிறார்கள். இயேசுவின் சாவு குறித்து மகிழ்ந்த அவரது எதிரிகள் இப்பொழுது குழப்பம் அடைந்து, தாங்கள் தப்பித்துக்கொள்ள வழிகளைத் தேடுகிறார்கள்.

1. *உயிர்ப்பு நாள் மகிழ்ச்சியும் எழுச்சியும் கொண்ட ஒரு நாள்:* யோவா 20:1-9 பகுதி மரிய மதலேனாள், பேதுரு மற்றும் யோவான் அடைந்த மகிழ்ச்சியையும் எழுச்சியையும் பிரதிபலித்துக்காட்டுகிறது. மரியா கல்லறையிலே உடலைக் காணாதபோது அவள் சீமோன் பேதுருவிடமும் யோவானிடமும் கூறுவதற்காக *ஓடினாள்.* பிறகு பேதுருவும் யோவானும் ஓடினார்கள் என்று அது குறிப்பிடுகிறது. ஆனால் பிந்திய சீடர் பேதுருவை *முந்தி ஓடி* கல்லறையை *முதலில்* அடைந்தார். சாவின்மேல் கிறிஸ்து பெற்ற வெற்றி, ஒரு எழுச்சியூட்டும், அக்களிக்கச் செய்யும் நிகழ்ச்சியாகும். நாமும் கூட இந்த அக்களிப்பையும் எழுச்சியையும் கைப்பற்ற முயலுவோம்.

ஆகவே துயரத்தின் காலம் முடிந்துவிட்டது. சாவின் மேல் வெற்றி பெற்றாகி விட்டது. ஆகவே தான் தூய பவுல் "ஓ சாவே, உன் வெற்றி எங்கே? ஓ சாவே, உன் கொடுக்கு எங்கே?" (1 கொரி 15:55) என்று கூக்குரலிடுகிறார். பெரிய வெள்ளியன்று இயேசுவுக்கு எல்லாமே முடிந்தது போன்று இருந்தது. தலைமைக்குருக்கள், சதுசேயர்கள், பரிசேயர்கள் இயேசுவை கொன்றுவிட்டதில் வெற்றி பெற்றதனால் மாபெரும் வெற்றி அடைந்து விட்டதாக அவர்கள் நினைத்தார்கள், அவர்கள் எவ்வளவு தவறாக நினைத்திருக்கிறார்கள்! ஆனால் *இயேசு வென்றுவிட்டார் அவரோடு அன்பும் வென்று விட்டது.* அவர் புது வாழ்விற்கு உயிர்த்தெழுந்திருக்கிறார், அவர் இனிமேல் ஒருபோதும் இறக்கமாட்டார். ஆகவே அவரது உயிர்ப்பு தரும் மிகுந்த *அக்களிப்பிலும் எழுச்சியிலும்* நாமும் பங்குபெற அழைக்கப்பட்டிருக்கிறோம்.

2. இயேசு தனது உயிர்ப்பு குறித்து ஏற்கனவே முன்னறிவித்திருந்தாலும் முதலில் அது நம்ப முடியாததாக இருந்தது. அவர் இறந்தோரினின்று உயிர்த்தெழுவார் என்று ஒருவரும் நினைக்கவேயில்லை. மரியமதலேனாள் கல்லறைக்குச் சென்று அவரது உடம்பை அங்கே காணமுடியவில்லை. அவரது உடலை கல்லறையிலிருந்து யாரோ எடுத்துச் சென்றுவிட்டார்கள் என்று அவள் நினைத்தாள். அவர் இறந்தோரினின்று உயிர்த்தெழுவார் என்று கற்பனை கூட பண்ணவில்லை. அவரது திருத்தூதர்கள் சீமோனும் யோவானும் கல்லறைக்குப் போனார்கள். அவர்களும் அது வெறுமையாய் இருந்ததைக் கண்டார்கள். அந்த சமயத்தில் அவர் உயிர்த்து விட்டார் என்று பேதுருவிற்கு தோன்றவில்லை (ஆனால் யோவான் நம்பினார்) *அவர்களுக்கு* இயேசு காட்சியளித்தபொழுதுதான், *நம்பிக்கை தூண்டி எழுப்பப்பட்டு* மரியாவும் திருத்தூதர்களும் அவர் உண்மையிலே உயிர்த்து விட்டார் என்று நம்பினர். இயேசு மரியாவிற்குத் தோன்றினார், அவள் நம்பினாள். ஆனால் தோமா அங்கு இல்லாததால் அவர் நம்பவில்லை. இயேசு அவருக்கும் காட்சி கொடுத்த பிறகுதான் அவரும் நம்பினார். அவர்கள் உயிர்த்தெழுதலை நம்புவதற்கு முன்னால் *அவரது காட்சியளித்தலும், தனிப்பட்டவிதத்தில் அறிவொளிலூட்டுதலும்* அவர்களுக்குத் தேவைப்பட்டது போலத் தெரிகிறது.

3. *உயிர்ப்பின் மகிழ்ச்சி:* இது ஒரு மிகவும் தனிச்சிறப்பு வாய்ந்தது. அது துன்பங்கள், துயரங்கள், மனவருத்தங்கள் வழியாக கடந்து சென்றதனால் கிடைத்த பயன் ஆகும். குளிர்காலத்திற்குப் பிறகு வசந்தம் வரும். அதனால்தான் உயிர்ப்பின் மகிழ்ச்சி கிறிஸ்து பிறப்பு மகிழ்ச்சியிலிருந்து முழுவதுமாக வேறுபட்டது. கிறிஸ்துமஸ் மகிழ்ச்சியிலே கடவுள் மனிதனாக இறங்கி வந்ததனால் *மனிதத்தன்மை* முக்கிய இடம் பெறுகிறது. உயிர்ப்பு மகிழ்ச்சியில் இருள்வழியாக கடந்து சென்றபின், மனிதன் நம்பிக்கையில் எழுந்து நிற்கச் செய்யும் *ஆவியின் தன்மை* முக்கிய இடம் பெறுகிறது. உயிர்த்த ஆண்டவரை *நம்பிக்கையின் வழியாக* நாம் அடையாளம் காண முடியும் போதுதான் அவரது வெற்றியின் மகிழ்ச்சியில் நாம் பங்கு பெற முடியும். அதனால்தான் கிறிஸ்துமஸ் எல்லாரும்

கொண்டாடக்கூடிய திருவிழாவாக இருக்கிறது. அவரது உயிர்த்தெழுதலை நம்புகிற *கிறிஸ்தவர்களுக்கு* மட்டுமே *உயிர்ப்பு* உரியதாகிறது.

ஆகவே கிறிஸ்து கொண்டு வரும் மகிழ்ச்சியில் பங்கு பெற நம்பிக்கை இன்றியமையாததாகும். ஆனாலும் நம்பிக்கை மட்டுமே இந்த வாழ்வின் அசாதாரண சூழ்நிலைகளில் நீண்டகாலம் நிலைத்திருக்கச் செய்ய முடியாது. நம்பிக்கையின் பரவசமூட்டும் அனுபவம் *அன்றாட மனிதவாழ்விற்கு* இறங்கி வரவேண்டும். அப்போது மட்டுமே அது நீடித்திருக்க முடியும். அதனால்தான் இயேசு காட்சியளித்தபோது மனிதத்தன்மையை வலியுறுத்துகிறார். ஒரு காட்சியின்போது கடற்கரையிலே அவர்களுக்கு அவர் ஒரு வேளை உணவு தயாரித்து வைத்திருந்தார். அதனால் மீன்பிடிக்கிற கடினமான வேலைக்குப்பிறகு, அவரோடு மேசையில் உணவைப்பகிரும் நட்பை அனுபவிக்க முடிந்தது. மேலும் எம்மாவுஸ் சீடர்கள் அவரோடு மேசையில் அமர்ந்து உணவைப் பகிரும் *நட்புறவின்*போதுதான் அவரை அடையாளம் கண்டுகொண்டனர். ஆகவே நம்பிக்கையினால் ஒருவரோடு ஒருவர் அன்பு உறவிற்கு கடந்து செல்ல வேண்டும் என அவர் விரும்புகிறார். மேசை-நட்புறவு என்பது ஓர் அன்பு- நட்புறவைக் குறித்து நிற்கிறது. திருத்தூதர்களுக்கு இன்னொருமுறை தோன்றும்போது அவர்களை அழைத்து, எங்கும் சென்று பாவமன்னிப்பில் உண்டாகும் நற்செய்தியை போதிக்க கட்டளையிடுகிறார். அன்புக்கு எதிரான பாவம் மன்னிப்பைத் தவிர வேறு எதனாலும் அகற்றப்பட முடியாது என்பதை உணர்த்திக் கொடுக்கிறார்.

உயிர்ப்பின் மகிழ்ச்சியானது அன்றாட வாழ்வின் அன்போடும் மன்னிப்போடும் பிரித்துவிட முடியாதபடி இணைக்கப்பட்டுள்ளது. என் இதயத்தில் அன்பு இல்லை என்றால் நான் உயிர்ப்பு மகிழ்ச்சியை அனுபவிக்கவே முடியாது. உயிர்ப்பு நம்பிக்கையின் திருவிழாவாக இருப்பது போல *அன்பின்* திருவிழாவாகவும் இருக்கிறது. ஏனென்றால் இயேசு பாவத்தின்மீதும் வெறுப்பின்மீதும் வெற்றி பெற்றிருக்கிறார். ஆகவே நமக்கு இயேசுவின் உயிர்ப்பு தரும் செய்தி என்னவென்றால் நாம் ஒருவரோடு ஒருவர் அன்பில் வாழ வேண்டும், பாவமோ சுயநலமோ வேறு எதுவுமே அதைத் தடைசெய்ய அனுமதிக்கக்கூடாது. மன்னிப்பின்

வழியாக இவைகள் எல்லாம் அகற்றப்பட்டு எவ்விதக் குறுக்கீடுமின்றி அன்பு ஆட்சி செலுத்த முடியும்.

தூய இஞ்ஞாசியார் இயேசு முதலில் காட்சியளித்தது அவரது அன்னை மரியாளுக்குத்தான் என்று வலியுறுத்துகிறார். ஆகவே நான் இந்த சிந்தனைத்தியானத்தை மரியாவோடு உள்ள உரையாடலோடு நிறைவு செய்கிறேன்.

*இயேசுவின் தாய் மரியாவிற்கு அவர் காட்சியறித்தது. (ஆன்மீகப்பயிற்சி எண்கள் 218-225) மரியாளோடு ஓர் உரையாடல்.*

*ஜேம்ஸ்:* மரியே! உயிர்த்தெழுந்தபிறகு இயேசு உமக்கு காட்சியளித்தது பற்றி எனக்குச் சொல்லும்.

*மரியா:* இந்த சிந்தனைத்தியானத்தை நீ எடுத்துக்கொண்டது குறித்து நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். நீ தியானிப்பதற்காக நான் உண்மையாக நடந்ததை படம் பிடித்துக்காட்டுவேன். ஆகவே எதைச் சொல்லத் தேவைப்படுகிறதோ அதையே நான் கூறுவேன். நான் இயேசுவைப்பார்த்தபோது அதிக மகிழ்ச்சி அடைந்தேன் என் கண்களையே என்னால் நம்ப முடியவில்லை. உடனே அவர் என் சந்தேகத்தை அகற்றி நம்பிக்கை கொள்ளச் செய்தார். அந்த நொடியிலே என் சோகம் மறைந்து போனது. அவர் அதிகநேரம் இருக்கவில்லை. அவரோடு என்னால் அதிகம் பேசமுடியவில்லை. ஆனால் ஒரு மிகவும் சிறப்பான மகிழ்ச்சி என்னுள் எழுந்தது. அது எனக்கு விண்ணகம் போன்று இருந்தது. அவர் என்னிடம் சொல்லியிருந்தது போல அவர் மீண்டும் வாழ்விற்கு திரும்பி வந்து விட்டார் என்பது எனக்குத் தெரியும். ஆகவே ஜேம்ஸ் என்னோடு அக்களித்திரு.

*ஜேம்ஸ்:* இது எனக்கு பேரக்களிப்பின் நேரமாகும். இயேசு உமக்குக் காட்சியளித்ததைப்பற்றி நீர் சொல்லக் கேட்பது எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது. நீங்கள் எல்லாரிலும் பேறுபெற்றவர், இது இயல்பானதுதானே, நீங்கள் அவருடைய தாயல்லவா?

*மரியா:* நிச்சயமாக, இது எதிர்பாராது நடந்தது தான். என் வாழ்வில் நடந்ததெல்லாமே எதிர்பாராது நடந்தவை தான். என் வாழ்வை நான் இறைவனுக்கு அர்ப்பணித்துவிட்டேன். அவர் விரும்பியபடி என்னை செய்வதற்கு நான் விட்டுவிட்டேன். அவர் என்னோடு மிகவும் அன்போடு இருந்தார். மிகவும் இரக்கத்தோடு இருந்தார். இங்கே வாழ்விற்குத் திரும்பி வந்த என் மகன் முன்பு இருந்ததைவிட நல்லதொரு புதுவாழ்விற்குத் திரும்ப வந்திருக்கிறான்.

*ஜேம்ஸ்:* என் தாயே நான் உங்களோடு மீண்டும் அக்களிக்கின்றேன். இவ்வளவு உயர்வும் மகிமையும் அடையும்படி அவர் வளருவதற்கு நீர் இறைவனோடு இணைந்து ஒத்துழைத்தீர். அவரை ஒரு சிறந்த ஆசிரியராக, ஒரு சிறந்த போதகராக, ஒரு சிறந்த குணமளிப்பவராக, ஒரு சிறந்த அன்பராக, ஒரு சிறந்த இறைவாக்கினராக, உண்மையான மெசியாவாக நீர் உருவாக்கியிருக்கிறீர். அவரைப் பின்பற்றுபவராக இருப்பதற்காக நான் பெருமையடைகிறேன், நீங்கள் என் தாயாக இருப்பதற்காக நான் பெருமையடைகிறேன்.

*மரியா:* நீ மிக மகிழ்ச்சியாக இருப்பதை நான் பார்க்கிறேன். அன்பு வாழ்வில் நீ மகிழ்ச்சியைக் கண்டுகொள்ள வேண்டும். இந்த மகிழ்ச்சியை பிறரோடு உள்ள செயல்பாடுகளில் வெளிப்படுத்து. உன்னுடைய பழைய இயல்பில் இல்லை; நீயும் கூட இயேசுவோடு உயிர்த்துவிட்டதை வெளிப்படுத்து. உயிர்ப்பின் மகிழ்ச்சியை அனுபவித்த பிறகு நீ பழைய நபராக இருக்க முடியாது. உன்னுடைய முழுவாழ்க்கையுமே வித்தியாசமாக இருக்க வேண்டும். ஆகவே ஒரு புது மனிதனாக நீ வாழ வேண்டும்.

*ஜேம்ஸ்:* நல்ல செயல் செய்யத்தூண்டுகிறதற்காக நன்றி தாயே, சிலுவையும் உயிர்ப்பும் இணைந்தே செல்கிறது. ஆகவே என் வாழ்வின் ஒவ்வொரு செயல்பாடுகளிலும் சிலுவையிலிருந்து

உயிர்ப்புக்கு கடந்து செல்கிறதாக என் ஆன்மீகம் அமையட்டும். என் சிலுவைகளினூடே மகிழ்ச்சி இருக்க வேண்டும். என்ன பிரச்சனைகளைச் சந்தித்தாலும் நான் மகிழ்ச்சியாகவும், அமைதியிலும் நான் இருக்கட்டும்.

*மரியா:* இதுவே இயேசுவோடு உயிர்த்துவிட்ட ஒரு புது மனிதனின் மனநிலை." அதிலே நிலைத்திரு. இயேசுவின் வாழ்வு போன்று ஒரு மிக பயனுள்ள, மகிழ்ச்சியான வாழ்வாக உன்னுடைய வாழ்வும் அமையும்.

*ஜேம்ஸ்:* நன்றி. தாயே! விண்ணக அரசியே! அக்களியுங்கள்/ அல்லேலூயா!

கீதாஞ்சலி எண் 61 ன் இறுதி பத்தியோடு இதை நிறைவு செய்ய விரும்புகிறேன். ('குழந்தை' என்பதை 'அவளது மகன்' என்று மாற்றிவைத்திருக்கிறேன்) "அவளது மகனுடைய கைகளிலிருந்து மலருகின்ற இனிய, மென்மையான, புத்துணர்ச்சி இவ்வளவு காலமாக எங்கே மறைந்திருந்தது என யாருக்காவது தெரியுமா? ஆம், தாய் ஓர் இளம்பெண்ணாக இருந்தபொழுது, அவரது மகனின் கரங்களில் மலர்ந்த இனிய, மெதுவான, புத்துணர்ச்சியுடன், அதன் மென்மையான, அமைதியான அன்பின் மறைபொருள் அவளது இதயத்தில் ஊடுருவிப் பதிந்துக்கிடந்தது".

"மென்மையான, அமைதியான அன்பின் மறைபொருளை" தியானிப்பதால் மட்டுமே இயேசுவின் உயிர்த்தெழுதலை அனுபவிக்க முடியும். மரியா இவைகளையெல்லாம் தனது இதயத்தில் இருத்தி தியானித்து வந்தார். இப்பொழுது அவரது மகன் இறந்தோரினின்று உயிர்த்தெழுந்து விட்டதால், இந்த "மென்மையான, அமைதியான அன்பின் மறைபொருளை" எல்லாம் தியானித்து வந்ததன் பயனை அவள் அடைந்திருக்கிறாள்.

# நாள் - 7

## II. உயிர்ப்பின் மகிழ்ச்சி

யோவா 20:11 -18

லூக் 24:13-35

"இயேசு உயிர்த்துவிட்டார், நாம் அக்களிப்போம். அல்லேலூயா!"

இது இயேசுவின் அன்பரின் பாடல் இது. இயேசுவை அன்பு செய்தவர் மட்டுமே அவரது உயிர்த்தெழுதலில் அக்களித்தனர். நாம் இயேசுவின் வெற்றியில் மகிழ்கிறோம், ஏனெனில் நாம் அவரை அன்பு செய்கிறோம்.. அவரது தோல்வியைக் கண்டபோது நாம் மிகவும் வருந்தினோம்.. ஆனால் அது தற்காலிகமானது. இப்பொழுது அவர் வெற்றி பெற்றுவிட்டதனால் அவரது வாழ்வும் இறப்பும் தந்த ஓர் முழுமையான அனுபவத்தால், நமது மனக்கவலை மாறி விட்டது. ஆகவே, நம் ஆண்டவர் கிறிஸ்துவின் மிகுந்த மகிழ்ச்சியினாலும் மகிமையினாலும் நாம் இன்பமுடன் அதிகமாக அக்களித்திருக்கவும் வேண்டிய *அருளை* நாம் கேட்போம்.

1. மகிழ்ச்சி ஒரு கிறிஸ்தவனின் இயற்கையான பண்பு, ஏனென்றால் கிறிஸ்தவர்கள் என்பதால் உயிர்த்தெழுதலை நாம் நம்புகிறோம். பேராயர் ரொமேரோ அவரது முதல் மறைப்பணி கடிதத்தில் இந்தக் கருத்தை வலியுறுத்துகிறார். "சாகமாக இருப்பது தவறு. கிறிஸ்தவர்கள் எதிலும் கெடுதலையே காணும் மனப்பாங்கு உடையவராய் இருக்க முடியாது. கிறிஸ்தவர்கள் மகிழ்ச்சியின் பூரிப்பினால், எப்போதும் அவர்கள் இதயங்களுக்கு ஊக்கமளிக்க வேண்டும். என் சகோதர சகோதரிகளே! முயன்று பாருங்கள். என்வாழ்வில் இருள் மிகுந்த தருணங்கள், அவதூறுகள், துயரங்கள் உச்சகட்டத்தில் இருந்திருக்கின்றன, மனிதர்கள் என்னைப் புரிந்து கொள்ளாது இருந்திருக்கின்றனர். அப்பொழுதெல்லாம் என் நண்பர் கிறிஸ்துவோடு என்னை நெருக்கமாக இணைத்துக் கொள்வதற்கும், இந்த உலகம் தரமுடியாத மகிழ்ச்சியால் ஆறுதல் படுத்தப்படவும், இறைவனோடு நெருக்கமாக ஒன்றித்திருக்கிற மகிழ்ச்சியை உணரவும் நான் பலமுறைகளில் முயற்சி செய்திருக்கிறேன். அதுவே இதயத்தை ஆட்கொள்ளக் கூடிய உள்ளார்ந்த மகிழ்ச்சி".

இயேசு இந்த உறுதியான நம்பிக்கையை, வெற்றியாகப் பெற்று தந்திருக்கிறார், ஆகவே நாம் அக்களிப்போம். "குளிர்காலம் வந்துவிட்ட பிறகு வசந்தம் வெகுதொலைவில் இருக்க முடியுமா?" என்று ஒரு கவிஞர் கேட்கிறார். இந்த *மகிழ்ச்சியும் நம்பிக்கையும்* என்னிடம் இயல்பாக இருந்தால், நான் தோல்வியால் ஒரு போதும் மனந்தளர்ந்து போகவே மாட்டேன். "தோல்வியே வெற்றியின் முதற்படி" என்று பழமொழி சொல்கிறது. இயேசுவின் வாழ்வு ஒரு தோல்வி போலத் தெரிந்தது. அவரது எதிரிகள் அவரை வெறுத்ததனால் அவரது வாழ்வை ஒரு தோல்வியாக மாற்ற வேண்டும் என்று கடினமாக உழைத்தார்கள். அவரைக் கொல்வதற்காக தீயநோக்கத்துடன் சதி செய்தனர். ஆனால் அவரைத் தோற்கடிக்க முடியவில்லை. இறுதியில் அவர் வெற்றிபெற்றார். அப்படியே உங்கள் வாழ்வையும் ஒரு தோல்வியாக மாற்ற சிலர் முயன்று கொண்டிருக்கலாம். நீங்கள் எது செய்தாலும் அவர்கள் மட்டம் தட்டுவார்கள். அப்படி என் வாழ்வில் பல நிகழ்ச்சிகள் இருந்தன. பொறாமையினாலும் தவறாகப் புரிந்து கொண்டதாலும் என்னை அவமானப்படுத்தவும் தோல்வியுறச் செய்யவும் 'சதிசெய்தனர்'. ஆனால் நான் அவமானப்படுத்தப்பட்டதாக உணராதவரை ஒருவரும் என்னை அவமானப்படுத்த இயலவில்லை. இயேசுவின் வாழ்வு, சாவு, உயிர்ப்பு வழியாக இதை அவர் எனக்கு கற்றுக்கொடுக்கிறார்.

2. *மகிழ்ச்சி என்பது என்ன?*

மகிழ்ச்சி என்பது எனக்கு அல்லது நான் அன்பு செய்கிற ஒருவருக்கு உண்டாகும், வெற்றியால் உருவாகும் இன்பமான, கிளர்ச்சியூட்டுகின்ற ஓர் உணர்ச்சி என்று நான் விவரிப்பேன். இது ஒரு வரையறை அல்ல, ஆனால் நான் மகிழ்ச்சியால் நிரம்பியிருக்கும்போது என்னில் என்ன நடக்கிறது எனும் அனுபவம் பற்றிய ஒரு விளக்கம். நான் மகிழ்ச்சியாக இருக்க வேண்டுமானால், அங்கே ஒரு வெற்றி இருக்க வேண்டுமா? ஆம், வெற்றியை மகிழ்ச்சி தொடருகிறது. எடுத்துக்காட்டாக, தேர்வில் வெற்றிபெறுதல். நான் வெற்றிபெற்றதனால் அதிக மகிழ்ச்சியடைகிறேன். என் *நண்பர்* வெற்றிபெறுகிறார், அதனால் நான் அதிக மகிழ்ச்சியடைகிறேன். பிறரது வெற்றியில் நான் மகிழ வேண்டும் என்றால் நான் அந்த நபரை *அன்பு* செய்ய வேண்டும். உயிர்ப்பின் மகிழ்ச்சியும் அப்படிப்பட்டதே! நான் இயேசுவை அன்பு

செய்யாவிட்டால், நான் இந்த மகிழ்ச்சியை அனுபவிக்க முடியாது. மரிய மதலேனாள் இயேசுவை அதிகம் அன்பு செய்தாள். ஆகவே உயிர்த்த ஆண்டவரை அவளுக்கு முன்னால் அவள் பார்த்தபொழுது அவள் அளவில்லா மகிழ்ச்சியை அனுபவித்தாள். எம்மாவுஸ் சீடர்கள் இயேசுவை அன்பு செய்தனர். அவர் இறந்த பிறகு அவர்கள் நம்பிக்கை இழந்திருந்தாலும் அவர்கள் எண்ணமெல்லாம் அவரோடு இருந்தன. ஆகவே அவர்களால் அவரை மறக்க முடியவில்லை. மெசியா இறந்தோரினின்று உயிர்தெழுவார் என்று மறைநூலை விளக்கி இயேசு கூறுவதை அவர்கள் கேட்டபொழுது அவர்கள் இதயங்கள் அவர்களுக்குள் பற்றி எரிந்தன. அவர் அப்பத்தைப் பிட்கும்போது அவர்கள் கண்கள் திறக்கப்பட அவரை அடையாளம் கண்டுகொண்டனர், அவர்கள் இதயம் மகிழ்ச்சியால் நிரம்பியது.

ஆகவே மகிழ்ச்சியானது அன்புடனும் வெற்றியுடனும் இணைந்திருக்கிறது. மகிழ்ச்சியும் அன்பும் இணைந்தே செல்லும், மகிழ்ச்சி, அன்பு ஆகியவற்றோடு வெற்றியும்கூட இணைந்து செல்லும். ஆனால் எப்போதும் வெற்றி என் கையில் இல்லாமல் இருக்கலாம், அதற்கு மாறாக, அன்பு செய்வது எப்போதும் என் கையிலதான் இருக்கிறது. ஆகவே எப்போதும் நான் அன்பு செய்யவும், பிறர் என்னை அன்பு செய்ய அனுமதிக்கவும் வேண்டும், அப்படியானால், எப்போதும் என் இதயத்தில் மகிழ்ச்சி இருக்கும்.

3. மகிழ்ச்சி பற்றி இன்னொரு கருத்து என்னவென்றால் அது பெரும்பாலும் மனக்கவலைக்குப்பின் வருகிறது. நற்பேறுபெற்றோர் பகுதி இதை நன்கு எடுத்துரைக்கிறது. உயிர்ப்பின் மகிழ்ச்சி இறுதிவரை நீடித்திருக்கின்ற மகிழ்ச்சி, அது தொடர வேண்டும். மனக்கவலை நீடித்திருக்க ஒருபோதும் நான் அனுமதிக்கக்கூடாது; அதன் இயல்பே தற்காலிகமானது. ஆனால் என் மகிழ்ச்சி இறுதிவரை நீடித்திருக்க வேண்டும். ஏனென்றால், நான் மனக்கவலையைப் போக விட்டுவிடும்போது, மகிழ்ச்சி என்னிடம் திரும்பிவரும். "நாம் உயிர்ப்பின் மக்கள், நமது கீதம் அல்லேலுயா" என்று தூய அகுஸ்தினார் சொல்கிறார். ஆகவே ஒரு கிறிஸ்தவன் என்பவன் எப்போதும் மகிழ்ச்சியோடிருக்கிறான். "ஆண்டவரோடு இணைந்து என்றும் மகிழுங்கள்; மீண்டும் கூறுகிறேன் மகிழுங்கள்" என்று தூய

பவுல் வலியுறுத்துகிறார். மனக்கவலை வந்தால் அது நம்மைப் படிப்படியாகக் கடந்து சென்றுவிட அனுமதிக்க வேண்டும். ஒரு கிறிஸ்தவன் கவலை நிறைந்தவனாக இருப்பதற்குக் காரணமே கிடையாது. ஏனென்றால் இயேசு அவரது உயிர்த்தெழுதலினால் மனக்கவலையை மாற்றிவிட்டார். இதைத்தவிர, இயேசு இந்த உலகில் வாழ்ந்த நாளெல்லாம் அவரது அன்பு வழியாக நிறைந்த மகிழ்ச்சியையே கொடுத்தார். இயேசுவின் வாழ்வு, இறப்பு, உயிர்ப்பு அனைத்து நிகழ்ச்சிகளும் அன்பு நிறைந்தவையாகும். "புத்தர் ஒரு தத்துவஞானி, இயேசு ஓர் அன்பர்", என்று ரஜினீஷ் சொல்கிறார். இயேசு அன்பானவர். அதனால்தான் துன்பங்களும் தாங்கொண்ணா துயரங்களும் இருந்தாலும் அவர் மகிழ்ச்சியுடன் வாழ்ந்தார். இயேசுவை நான் பின்பற்ற விரும்பினால் நானும் கூட அவரைப்போல ஓர் அன்பான நபராக மாற வேண்டும். அப்போது நானும் கூட ஒரு மகிழ்ச்சியான நபராவேன்.

4. நாம் இறைவனால் மகிழ்ச்சியுடன் இருப்பதற்காக படைக்கப் பட்டிருக்கிறோம். படைப்பு முழுவதும் மகிழ்ச்சியால் நிரம்பியுள்ளது. ஏனெனில், படைப்பு முழுவதும் படைத்தவரின் அன்பால் நிரம்பியுள்ளது. படைப்புகளில் ஓய்வில்லாத்தன்மையும், மகிழ்ச்சியற்றத்தன்மையும் இல்லவே இல்லை. மனிதன் மட்டுமே, மனித இதயம் மட்டுமே ஓய்வின்றி, மகிழ்ச்சியின்றி இருக்கிறது. அதன் காரணம் என்னவெனில் அன்பிலிருந்து அவன் விலகிவிட்டான். ஒரு சூஃபி ஞானி இவ்வாறு சொல்லியுள்ளார்:

"இந்த உலகத்தில் நான் மகிழ்ச்சியால் நிரம்பியதை உணர்கிறேன்.
ஏனென்றால் இறைவனே மகிழ்ச்சியின் ஊற்று.
நான் எல்லா படைப்புகளோடும் காதல் வயப்பட்டிருக்கிறேன்.
ஏனென்றால் அவரே அவற்றைப் படைத்தவர்.
நான் துன்ப கிண்ணத்திலிருந்தும் மகிழ்ச்சியுடன் பருகுவேன்.
ஏனென்றால் என் அன்புக்குரியவரே துன்ப கிண்ணத்தைத் தாங்கியவர்.
நான் மகிழ்ச்சியுடன் வேதனையைத் தாங்கிக்கொள்வேன்,
ஏனென்றால் அவர் வழியாக நான் குணமடைவேன்".

"இந்து மறைநூல்கள் கூட இதே கருத்தை வலியுறுத்துகின்றது:
எல்லையில்லாத இறைவனின் மகிழ்ச்சியால் வரும் இந்த அன்பு,
பிரம்மனின் ஆனந்தம். அது இங்கேயே, இப்பொழுதே இருக்கிறது.
பிரம்மனே மகிழ்ச்சி என்பதை அவன் கண்டு கொண்டான்,
மகிழ்ச்சியிலிருந்தே எல்லா உயிரினங்களும் உருவாகியிருக்கின்றன.
மகிழ்ச்சியினால் அவைகள் எல்லாம் வாழ்கின்றன,
மகிழ்ச்சியிடமே அவை எல்லாம் திரும்பிச் செல்கின்றன".

"கடவுள் அன்பாயிருக்கிறார், அன்பு மகிழ்ச்சியாய் இருக்கின்றது.
பிரபஞ்சம் எல்லாமே அன்பிலிருந்து தோன்றியிருக்கின்றன.
எல்லாப்பொருள்களுமே அன்பிடமே திரும்பிச் செல்லும்".

நிறைவுசெய்யும்படியாக, இரண்டு வகையான மக்கள் இருக்கின்றனர் என்று யாரோ சொல்லியிருக்கிறார்: (i) சில மக்கள் எங்கு சென்றாலும் அவர்கள் மகிழ்ச்சிக்குக் காரணமாகின்றனர். (ii) சில மக்கள் எங்கு சென்றாலும் அவர்கள் மகிழ்ச்சியின்மைக்குக் காரணமாகின்றனர். கண்டிப்பாக நாம் முதல் குழுவைச் சார்ந்தவர்கள் ஏனென்றால் இயேசு எல்லா நேரமும் நாம் சந்தோஷமாக இருக்கும்படியே உருவாக்கியிருக்கிறார்.

தூய பவுலின் மேற்கோளோடு முடிக்க விரும்புகிறேன் எப்போதெல்லாம் அமைதி என்ற வார்த்தையைப் பயன்படுத்துகிறாரோ அப்போதெல்லாம் அவர் மகிழ்ச்சியையும் சேர்த்தே கையாளுகிறார். அதன் மேற்கோள் 2 கொரி 13:11 இல் இருக்கிறது. "சகோதர சகோதரிகளே இறுதியாக நான் உங்களுக்குச் சொல்வது. மகிழ்ச்சியாயிருங்கள், உங்கள் நடத்தையைச் சீர்ப்படுத்துங்கள்; என் அறிவுரைக்குச் செவி சாயுங்கள்; மன ஒற்றுமை கொண்டிருங்கள்; அமைதியுடன் (மகிழ்ச்சியுடன்) வாழுங்கள்; அப்போது அன்பும் அமைதியும் (மகிழ்ச்சியுடன்) அளிக்கும் கடவுள் உங்களோடு இருப்பார்".

(உயிர்ப்பின் மகிழ்ச்சி பற்றிய சிந்தனைத்தியானத்திற்குப் பின் இணைப்பு)

***முதிர்வயதும் மகிழ்ச்சியும்***

முதிர்வயது இயலாமையைக் கொண்டு வருகிறது : உடல், சமூகம், உணர்ச்சி சார்ந்த இயலாமைகளைக் கொண்டு வருகிறது.

உடல் சார்ந்தவை : நோய், வலி, வேதனை போன்றவை

சமூகம் சார்ந்தவை : அந்தஸ்து இழப்பு, பயனில்லாத தன்மை போன்றவை.

உணர்ச்சி சார்ந்தவை : தனிமை உணர்வு, தாழ்வான சுயமதிப்பு போன்றவை.

நாம் இத்தகைய இயலாமையை *பிரச்சனைகள்* என எடுத்தால் அவைகள் மகிழ்ச்சியற்ற நிலைக்கு இட்டுச்செல்லும். (மனச்சோர்வு போன்ற உணர்வுகள், உற்சாகமின்மை, விடுபட்ட உணர்வு போன்றவை) ஆனால் இவைகளை *சவால்கள்* (அருள், பணி) என எடுத்தால் அவை மகிழ்ச்சிக்கு வழி நடத்தும். நம்மில் நிகழும் மாற்றங்களை முதுமையை அடைகின்றதன் ஒரு பகுதி என ஏற்றுக்கொள்ளுதல், நாம் இருக்கிறபடியே நம்மை எற்றுக்கொள்ளுதல், நம்மைச் சுற்றியுள்ள மாற்றங்களுக்கு ஒரு மகிழ்நோக்கு மனநிலை கொண்டிருத்தல் போன்றவைகளை சவால்கள் எனக் குறிப்பிடலாம்.

கால்பிரெயத் என்பவர், மகிழ்ச்சி என்பது "வாழ்க்கை நீரோட்டத்துடன் மிக ஆழமான உள்ளுணர்வுடன் சங்கமிக்கின்ற ஒன்று" என வரையறுக்கிறார். ஆகவே வாழ்க்கை நீரோட்டத்துடன் இணைந்து சென்றால், குறிப்பாக இயேசுவின் ஆன்மீக வாழ்வின் நீரோட்டத்துடன் சென்றால் நாம் எப்போதும் மகிழ்ச்சியுடன் இருப்போம். இந்த வாழ்க்கை நீரோட்டத்திலிருந்து விலகிச் சென்றால் படிப்படியாக நாம் தேங்கிய குளமாக மாறிவிடுவோம். உடனேயே அல்லது சிறிது தாமதித்தாகிலும் ஆன்மீக சீர்கேடுகள் நுழைந்துவிடும்.

ஆகவே முதிர்வயது என்பது கடந்ததைப் பின்னோக்கிப் பார்க்கும் நேரம் அல்ல, புதிய சாதனைகளையும் புதிய வளர்ச்சியையும் எதிர்நோக்கியிருக்கும் நேரம் அது. அதுதான் வாழ்க்கை நீரோட்டத்துடன் செல்வது என்பதைக் குறிக்கிறது.

யுலிசஸ் எனும் கவிதையிலே (டென்னிசன்) யுலிசஸ் வீரராக துடிப்புடன் வாழ்ந்து ஓய்வு பெற்றபின், தனது சூழ்நிலைக் குறித்து முதலில் மகிழ்ச்சியற்று இருந்தார்.

"இடையில் நிறுத்திவிடுவது.
ஒரு முடிவைச் சென்றடைவது.
தேய்த்து மெருகூட்டாமல் துருப்பிடித்து விடுவது.
பயன்பட்டுப் பிரகாசிக்காமல் இருப்பது.
போன்றவை எவ்வளவு சோர்வை உருவாக்குகின்றன" என்று அவர் சொல்கிறார்

பிறகு திடீரென்று அவர் தைரியத்தை வரவழைத்துக்கொண்டு அவரோடு ஓய்வு பெற்ற உடன் வீரர்களிடம் அவர் சொல்கிறார்.

"மிக அதிக அளவு பயன்படுத்திவிட்டாலும்,
இன்னும் அதிகம் மிச்சமிருக்கிறது . . .
காலத்தாலும் விதியாலும் பலவீனம் அடைந்து விட்டாலும்,
தொடர்ந்துதேடவும், கண்டுகொள்ளவும், விட்டுக்கொடாதிருக்கவும்
மனதில் இன்னும் உறுதியிருக்கின்றது".

அதாவது, உற்சாகக்குறைவிற்கும் நம்பிக்கையின்மைக்கும் விட்டுக்கொடுக்க வேண்டியதில்லை. முதிர்வயதிலும் கூட இத்தகைய குழந்தையின் மனநிலையே நம்மில் நிலைத்திருக்க வேண்டும். அப்போது நீ எப்போதும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்று இயேசு விரும்புவது போல நீயும் மகிழ்ச்சியாக இருப்பாய்.

இறுதி நாளுக்கான அடுத்த இரண்டு சிந்தனைத்தியானங்களும் தியானத்திலிருந்து சாதாரணமான அன்றாடவாழ்விற்கு மாறுவது பற்றியது. முதலாவது *தூய ஆவியார்*, இயேசுவின் அடிச்சுவடுகளில் துணிச்சலுடன் முன்னேறிச் செல்ல நமக்கு உதவிட, அவரது அருளும் நம்மோடு அவர் தங்கியிருக்கும், பிரசன்ன உணர்வும் நமக்குத் தேவை.

இரண்டாவது, *இறைவனின் அன்பை அடைய காட்சித்தியானம்* - அதன்மூலம் எல்லாப்பொருள்களிலும் இறைவனைக் கண்டு, வாழ்ந்து முன்னேறவும், அவரது பிரசன்னத்திலும் அன்பிலுமே நாம் நிலைக்கவும் வேண்டும்.

# நாள் - 8

## I. தூய ஆவியார்

**தியானத்தின் இறுதிநாள்:**

திருத்தூதர் பணி 2:1-4 (அல்லது அதிகாரம் முழுவதும்)

*முன்னுரை :* இயேசு நிறைவு செய்த மீட்புப்பணியின் மிகச்சிறந்த பயன், நமது வாழ்விலே தூய ஆவியரார் பொழியப்பட்டதாகும். ஒரு முக்கியமான தலைவர் இறக்கும்போதெல்லாம் கேட்பதுபோல நேரு இறந்தபொழுதும் ஒவ்வொருவரும் "நேருக்குப் பிறகு யார்?" எனக் கேட்டனர். இந்திய அரசியலில் மிகச்சிறந்தவராக இருந்ததால் அவருக்கு இணையானவர் எவருமே இல்லாததுபோல இருந்தது. ஆகவே அவரது இறப்புக்குப் பிறகு அவர் இடத்தை யாரால் நிரப்ப முடியும்? என்று கேட்டனர். இயேசு இறந்தபோதும் திருத்தூதர்களும் இதையொத்த கேள்வியைக் கண்டிப்பாய் கேட்டிருப்பார்கள். அவரைப் பின்பற்றுவதற்காக அவர்கள் தங்களிடமுள்ள எல்லாவற்றையும் கொடுத்திருந்தார்கள். இப்பொழுதோ அவர் இல்லாமல் போய் விட்டார். இயேசுவுக்குப் பிறகு என்ன நடக்கும்? என்று கேட்பார்கள் என்பதனால் தான், இயேசு இராவுணவிலே உங்களோடு என்றும் இருக்கும்படி உண்மையின் ஆவியானவரை மற்றொரு துணையாளரை உங்களுக்குத் தருமாறு நான் தந்தையிடம் கேட்பேன், தந்தை அவரை உங்களுக்கு அருள்வார்" (யோவா 14:16) என ஏற்கனவே வாக்களித்திருந்தார். முதல் பெந்தகோஸ்தே நாளிலே தந்தையும் மகனும் வாக்களித்த கொடையாளரான தூய ஆவியார் அருளப்பட்டார்.

1. திருவிவிலியப்பகுதி : திருத்தூதர்பணி 2:1-4: *இயேசு உயிர்த்த பிறகு வந்த முதல் பெந்தகோஸ்து நாளிலே சில, மிகவும் அசாதாரணமானவைகள் நடந்தேறின.* மரியாவுடன் திருத்தூதர்கள் மாடி அறையில் கூடியிருந்தனர், நம்பிக்கையுடைய எல்லாரும் உடன் இருந்தனர். "திடீரென்று கொடுங்காற்று வீசுவது போன்ற ஓர் இரைச்சல் வானத்திலிருந்து உண்டாகி அவர்கள் அமர்ந்திருந்த வீடு முழுவதும் ஒலித்தது. மேலும் நெருப்புப் போன்ற பிளவுற்ற நாவுகள்

ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்ததை அவர்கள் கண்டார்கள். அவர்கள் அனைவரும் தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டனர். தூய ஆவியின் தூண்டுதலால் அவர்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறான மொழிகளில் பேசத் தொடங்கினார்கள்". உலகையே அசைக்கும் அந்த நிகழ்ச்சி பற்றி லூக்கா கொடுத்த மிக எளிய விளக்கம் அது திருத்தூதர்களைத் திரும்ப செயல்படத் தூண்டும் விதத்தில் மிகவும் அசாதாரணமானதும் திடுக்கிடச் செய்பவைகளுமானவைகள் சில நடைபெற வேண்டியிருந்தன. *நொடிப்பொழுதில்* அவர்கள் புதிய மனிதர்களாக மாற்றம் அடைந்தனர். அவ்வாறுதான் ஆற்றலோடு தூய ஆவியார் செயல்படுகிறார்!. நமக்கும் திடீரென்று ஏதோ ஒன்று நடக்கிறது. மனமாற்றம், வாழ்விலே திருப்பம், ஆன்மீக உருமாற்றம் திடீரென்று நிகழ்கின்றன, ஏனென்றால் அது ஓர் அருளின் கொடை.

ஆனால் மிகப்பெரிய விதத்தில் ஏதோ ஒன்று நடப்பதற்கு அங்கு மற்றொரு காரணம் இருந்தது. கோதுமை மணி மண்ணில் விழுந்து மடிந்தால்தான் ஏராளமான மிகுந்த விளைச்சலை அளிக்கும் என இயேசு சொல்லவில்லையா? இயேசுவின் சாவு மிகச் சிறந்த அன்பின் செயலாக இருந்தது. அது மிகப்பெரிய விளைச்சலை உண்டாக்குகிற ஒன்றாக, தூய ஆவியாரின் அறுவடையாக இருந்தது. அது ஒரு தனிநபரை மாத்திரம் தொடப்போவதில்லை. மாறாக, வேறுபட்ட இனங்களையும், மொழிகளையும் உடைய ஏராளமான மக்களில் அசைவு உண்டாக்கப் போகிறது. 'உலகம் முழுவதும் ஆவியார் அசைவாடிக் கொண்டிருக்கிறார்' என்பதை அருங்கொடை கீதம் ஒன்று மிக நன்றாக இதனை வெளிப்படுத்துகிறது. ஆகவே தூய ஆவியின் ஆற்றலின் வெளிப்பாட்டில் உலகளாவியதன்மை உள்ளது.

அது திருத்தூதர்களிலே என்ன பாதிப்பை உண்டாக்கியது? முதலாவது பயம் துணிச்சலுக்கு வழி கொடுத்தது. அதிக நாட்களாக அவர்கள் பூட்டின கதவுகளுக்குப் பின்னால் அடைப்பட்டுக்கிடந்தார்கள். இப்பொழுதோ அவர்கள் தைரியத்துடன் வெளியே வந்தனர். அடுத்ததாக, இயேசுவின் இறப்பிற்குப் பிறகு அவர்கள் சிதறுண்டு போயிருந்தனர். இப்பொழுது அவர்கள் ஒன்றிப்பில் புதுபெலன்

அடைந்தனர். "அவர்கள் ஒரே மனத்தோடும் ஒரே உள்ளத்தோடும் கூடி இருந்தனர்" என்று திருத்தூதர்பணி 2:43-47 கூறுகிறது. இயேசு இல்லாமல் அவர்கள் முழுவதுமாக உதவியற்றவர்களாகவும் தலைவர் இல்லாதவர்களாகவும் உணர்ந்தனர். இப்பொழுது அவர்கள் தன்னம்பிக்கையுடனும் ஆர்வத்துடனும் தொடங்கி செயல்படத் துணிந்தனர். தூய ஆவியார் காற்றைப் போன்றவர் என்பதால் அவரைப் பார்க்க முடிய வில்லை, ஆனால் அவரது பாதிப்புகளை நாம் உணர முடியும்.

2. தூய ஆவியார் திருத்தூதர்கள்மீது இறங்கி வரும்போது ஓர் ஆழ்ந்த ஆன்மீக அனுபவம் இருந்தது:

(i) அது மேலிருந்து வந்த ஒன்று - விண்ணகத்திலிருந்து வந்தது. விண்ணகத்தைச் சேர்ந்த ஒன்றாக இருப்பதனால் அது கடவுளிடமிருந்து வருகின்றது.

(ii) நம்பிக்கைக் கொண்டோர் அனைவரிலும் ஒரு மறுபடிபிறக்கும் நிகழ்ச்சி இடம் பெற்றது. நிக்கதேமுசுடன் இயேசு உரையாடும் போது மறுபடி பிறப்பது பற்றி ஏற்கனவே குறிப்பிட்டிருந்தார். காற்று வீசுவதைப் போன்ற இந்த நிகழ்வு நடைபெற்றபோது, திருத்தூதர்களும் மற்றவர்களும் ஒரு புதுப்பிறப்பு எடுப்பதை உணர்ந்தனர். ஆவியில் அவர்கள் அனைவரும் புது வாழ்வை உரிமையாக்கிக் கொண்டனர்.

(iii) அவர்கள் தூய ஆவியாரின் தனிப்பட்ட கொடைகளால் நிரப்பப்பட்டிருந்தனர் (பார்க்க 1 கொரி 12:4-11) அதன் பிறகு, ஒவ்வொரு நபரும் உணர்ந்த, அனுபவித்த ஓர் அகத்தூண்டுதல் உலகெங்கும் சென்று துணிவுடன் நற்செய்தியை பறைசாற்ற வேண்டும் என்பதுவே!. மொழி தெரியவில்லை என்பது கூட நற்செய்தியைப் பறைசாற்றும் தூண்டுதலுக்கு 'ஆம்' என்று சொல்வதைத் தடுத்து நிறுத்த முடியவில்லை.

(iv) அறிவிப்பதற்கும், சான்று பகர்வதற்கும், தைரியத்தையும், ஆர்வத்தையும் அவர்கள் பெற்றிருந்தனர். "என்ன பேசுவது, எப்படி பேசுவது என நீங்கள் முன்னதாகவே கவலைப்பட வேண்டாம். அந்த நேரத்தில் உங்களுக்கு அருளப்படுவதையே பேசுங்கள், ஏனெனில் பேசுவோர் நீங்கள் அல்ல; மாறாக தூய ஆவியாரே"

(மாற் 13:11) என்று இயேசு மண்ணுலகில் அவர்களோடு இருந்தபோது முன்னரே சொல்லியிருந்தார்.

3. இப்பொழுது தியானத்தின் முடிவை நெருங்கிக் கொண்டிருக்கிறீர்கள். தூய ஆவியார் உங்களோடு தங்கியிருந்து உங்கள் வாழ்வு முழுவதும் வழி நடத்த வேண்டும். இயேசுவின் வழியாக தந்தையின் அன்பை அனுபவித்ததன் மூலம் ஏராளமானவற்றை . நீங்கள் கற்றுக்கொண்டிருக்கிறீர்கள். இப்பொழுது தூயஆவியார்தான் பிறருக்காக, அன்பினால் பயன்தரும் வாழ்வு வாழவழி செய்ய வேண்டும். நமது சொந்த கருத்துக்களாலும், திட்டங்களாலும், நிகழ்ச்சி நிரல்களாலும் நமது கவனத்தைத் திருப்பி விடாமலும் நாம் வழி தப்பிச் சென்றுவிடாத படியும் நமக்கு அவரது வழிகாட்டுதல் தேவைப்படுகிறது. சரியாகத் தேர்ந்து தெளிய தூய ஆவியாரின் உதவி நமக்குத் தேவைப்படுகிறது. இயேசுவினது மனப்பாங்குகளையும், மதிப்பீடுகளையும் அவரது வாழ்வையும் நாம் நமக்கே நினைவுப்படுத்தி கொண்டேயிருக்க வேண்டும். அப்போதுதான் இவைகளைக் கற்றுக்கொள்வதும், வாழ்வதும் ஒரு தொடர் செயல்முறையாக எப்போதும் அமையும்; அதே சமயத்தில் அவற்றை தொடர்ந்து செயல்படுத்தி வாழவும் கற்றுக்கொள்வும் வேண்டும். அதன்பிறகுதான் நமது வாழ்வை பிறருக்கு நம்பத்தகுந்ததாக்க முடியும்.

இயேசுவின் ஆவியார் என்னை எங்கு வழிநடத்துவார்? அது கிறிஸ்து கவனமாய் வழிநடந்த பாதையின் வழியாகத்தான் இருக்கும். நாம் ஒவ்வொருவரும் செய்ய வேண்டிய எல்லா வகையான பணிகளும் இந்த வழியாகத்தான் செல்ல வேண்டும். அந்த பொதுவான வழி நடத்துதல் தான் என்ன? கிறிஸ்துவை மற்றும் ஏழைகளைத் தெரிந்து கொள்வதுதான்.

"நான் ஒரு தவறு செய்தாலும் அது ஏழையின் பக்கம் நிற்பதனால் உண்டான தவறாக இருக்க வேண்டுமென்று கேட்கிறேன். பல நூற்றாண்டுகளாக, கிறிஸ்தவர்கள் பணக்காரர்களைச் சார்ந்து நின்றதனால் தவறு செய்திருக்கிறார்கள்" என்று நிக்காராகுவாவைச் சேர்ந்த அருட்பணி பெர்னாண்டோ கார்டினெல் (Fr. Fernando Cardenal)

சொல்கிறார். கிறிஸ்து ஏழைகளைத் தேர்ந்து கொண்டார். எனவே நாமும் அவர்களைச் சொந்தம் பாராட்டாமல் இருக்க முடியாது.

ஆகவே தூய ஆவியார் வந்து நமது இதயத்தை நிரப்பவும் அவரது அன்பால் பற்றி எரியும்படியும் கேட்போம். அப்போதுதான் நாம் இயேசுவின் பாதச்சுவட்டில் துணிவுடன் நடக்க முடியும். இறைவன் விரும்புவதையே நாம் எப்போதும் விரும்ப முடியும்.

நான் மார்ட்டின் லூத்தர் கிங் என்பவரின் மேற்கோளோடு நிறைவு செய்ய விரும்புகிறேன்.

'நான் இறைவனின் விருப்பத்தையே செய்ய விரும்புகிறேன்.
இறைவன் என்னை மலைக்குப் போக அனுமதித்தார்.
நான் மேலே சென்று பார்த்தேன்.
வாக்களிக்கப்பட்ட நாட்டைக் கண்டேன்.
ஆகவே நான் இன்றிரவு மகிழ்ச்சியாயிருக்கிறேன்.
நான் எதைக் குறித்தும் கவலைப்படவில்லை
நான் எந்த மனிதனைக் கண்டும் பயப்படவில்லை'

என்று அவர் இறப்பதற்கு முந்தின இரவில் சொன்னார்.

இயேசுவோடு சிலுவையில் இறக்கும்படியான நிலை ஏற்பட்டாலும், இயேசுவோடு இணைந்து முயற்சி செய்து, "தேடவும், கண்டு கொள்ளவும், விட்டுக்கொடாதிருக்கவும்", செய்யும்படி, தூய ஆவியாரிடமிருந்து பெற்றுக்கொள்ளும் பலத்தோடு நாமும் கூட இறைவேண்டல் செய்யத் துணிய முடியும்.

# நாள் - 8

## இறையன்பை அடையக் காட்சித்தியானம்

பகுதி : ஆன்மீகப்பயிற்சி எண்கள் 230-237

230&231 இறையன்பை அடையக் காட்சித்தியானம்

*குறிப்பு : 230.* இப்பயிற்சியைச் செய்வதற்கு முன் இரு காரியங்களில் கவனம் செலுத்துதல் நலம்.

(i) அன்பு சொற்களில் காட்டப்டுவதைவிட செயல்களில் அதிகமாகக் காட்டப்பட வேண்டும்.

(ii) உடைமையை ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்வதில் அன்பு வெளிப்படுகிறது. சான்றாக, காதலர் தன்னிடத்தில் உள்ளதை அல்லது தனக்கு சொந்தமானதை அல்லது கொடுக்கக் கூடியதில் சிலவற்றைக் காதலிக்குக் கொடுக்கிறார். அதே போன்று காதலியும் தன்னிடமுள்ளதைக் காதலரிடம் பகிர்ந்து கொள்கிறாள். ஒருவரிடம் கல்வியறிவு இருந்தால், இல்லாதவரோடு அதைப்பகிர்ந்து கொள்கிறார். இப்படியே ஒருவர் கொண்டுள்ள உயர்வு அல்லது செல்வம் பற்றிக் கூறலாம். இவ்வாறு ஒருவர் எப்போதும் மற்றவருக்குக் கொடுக்கிறார்.

இறைவேண்டல் : (வழக்கமாக சொல்லுவது) (எண்: 46)

என்னுடைய எல்லா எண்ணங்களும், முடிவுகளும், செயல்களும் மாட்சிமைக்குரிய இறைவனது இறை மகத்துவதின் ஊழியத்திற்காகவும், புகழுக்காகவுமே நான் செய்ய வேண்டும். இந்த வரத்தைத் தரும்படி இறைவனாகிய ஆண்டவரை இறைஞ்சுவோம்.

*முதல் நுழைவாய்*

232. இது மனத்தை ஒருமுகப்படுத்தும் காட்சி பற்றியது. இங்கு நம் ஆண்டவரான இறைவன் திருமுன்னும், எனக்காகப் பரிந்து மன்றாடும் வானதூதர் புனிதர் முன்பாகவும், நான் நிற்பதாக ஒரு காட்சியை உருவகித்துக் கொள்ளுதலாகும்.

*இரண்டாவது நுழைவாய்*

233. நான் விரும்புவதைக் கேட்பது, நான் பெற்றுள்ள அநேக நலன்களைப் பற்றிய ஆழ்ந்த அறிவு பெறவும், அதன் விளைவாக

அவற்றிற்கெல்லாம் நன்றியுணர்வால் நிறைந்து, உந்தப்பட்டு, எல்லாவற்றிலும் மாட்சிமிகு இறைவனை நான் அன்பு செய்யவும் அவருக்கு ஊழியம் புரியவும் அருள்வேண்டி மன்றாடுவதாகும்.

*முதல் பொருள்*

234. நாம் பெற்றுள்ள படைப்பு, மீட்பு ஆகிய நலன்களையும், சிறப்பான சலுகைகளையும் நினைத்துப் பார்த்தல், நம் ஆண்டவரான இறைவன் எனக்காக இவ்வளவு செய்துள்ளார்; தாம் கொண்டிருப்பதிலிருந்து எனக்காக எவ்வளவு அளித்துள்ளார்; இறுதியாகத் தம்மால் முடிந்த மட்டும் அதே ஆண்டவர் தம் இறை ஆணைப்படி எப்படித் தம்மையே அளிக்க விரும்புகிறார் என்றும், பேரன்புடன் ஆழ்ந்து சிந்தித்துப் பார்ப்பேன்.

பின் எல்லா அறிவுக்கும், நீதிக்கும் ஏற்றப்படி மாட்சிமிகு இறைவனுக்கு நான் என்ன காணிக்கை செலுத்துவேன் என்று சிந்திப்பேன். அதாவது, என்னிடமுள்ள யாவற்றையும் என்னையும் சேர்த்து அவருக்குக் காணிக்கையாய் அளிக்க வேண்டுமென்று உறுதி செய்வேன். இப்படிச் சிந்திக்கும் வேளையில் எழும் ஆழ்ந்த அன்பு உணர்வால் உந்தப்பட்டு என்னையே இறைவனுக்கு ஒப்புக்கொடுப்பேன்.

***ஆண்டவரே, எடுத்துக்கொள்ளும், ஏற்றுக்கொள்ளும்***

ஆண்டவரே,
எனது சுதந்திரம் முழுவதையும்
எனது நினைவு, அறிவு, மனது முழுவதையும்
என்னிடத்தில் ஏதேது உளதோ,
எனக்கு ஏதேது சொந்தமோ,
அவை யாவற்றையும் எடுத்துக்கொள்ளும், ஏற்றுக்கொள்ளும்.
இவற்றை எல்லாம் நீரே எனக்கு அளித்துள்ளீர்.
இவை யாவற்றையும்
நான் உமக்குத் திரும்பவும் அளித்து விடுகிறேன்.
யாவும் உம்முடையன; உமது திருவுளப்படி
அவை யாவற்றையும் பயன்படுத்துவீராக!
உமது அன்பையும், உமது அருளையும் தந்தருளும்.
இவையே எனக்குப் போதும்.

*இரண்டாம் பொருள்*

235. படைக்கப்பட்ட பொருட்களில் இறைவன் எப்படி பிரசன்னமாயிருக்கிறார் என்று சிந்தித்தலாகும். எப்படியெனில், பருப்பொருட்களை இருக்கச் செய்கிறார். செடிகளுக்கு உயிர் அளிக்கிறார். விலங்குகளுக்குப் புலன் அறிவை அளிக்கிறார். மனிதருக்குப் பகுத்தறிவு அளிக்கிறார். இவ்விதம், என்னில் அவர் பிரசன்னமாயிருக்கிறார். எனக்கு உயிரையும், வாழ்வையும், புலன் உணர்வையும், பகுத்தறிவையும் அளிக்கிறார். மாட்சிமிகு இறைவனின் சாயலாகவும், பாவனையாகவும் நான் படைக்கப்பட்டிருக்கிறேன் என்பதால் அவர் என்னை ஓர் ஆலயமாகவும் ஆக்குகிறார்.

பின்பு முதல் பகுதியில் கூறப்பட்ட முறையிலோ மேலானதாகத் தோன்றும் வேறெந்த வகையிலோ எனக்கே இவற்றையெல்லாம் உரித்தாக்கிச் சிந்திப்பேன்.

இவ்வாறே பின்வரும் ஒவ்வொரு பகுதியிலும் செய்க.

மனிதன் இறைவனின் ஆலயம்: 1 கொரி 3:16; 6:19; 2 கொரி 6:16

*மூன்றாம் பொருள்*

236. இறைவன் எப்படி படைக்கப்பட்ட ஒவ்வொரு உலகப்பொருளிலும் எனக்காகச் செயலாற்றுகிறார்; உழைக்கிறார்; அதாவது அவரே ஒரு கடின உழைப்பாளியாகச் செயல்படுகிறார் என்று சிந்திப்பேன்.. இப்படி விண்ணகம், பருப்பொருட்கள், செடிகள், பழங்கள், கால்நடைகள், இவை போன்ற பிறவற்றை அவர் இருக்கும்படி செய்கிறார். இவற்றைக் காப்பாற்றுகிறார். அவற்றிற்கு உயிரும் உணர்வும் அளிக்கிறார்.

பின் எனக்கே இவற்றையெல்லாம் உரித்தாக்கிச் சிந்திப்பேன்.

*நான்காம் பொருள்*

237. நன்மைகள், கொடைகள் யாவும் வானுலகிலிருந்து இறங்கி வருகின்றன என்று சிந்தித்தலாகும். அதாவது அளவுள்ள என் ஆற்றல் வானிலிருக்கும் அளவற்ற தலைசிறந்த ஆற்றலிலிருந்து வருகிறது. அவ்வாறே, நீதி, நன்மைத்தனம், இரக்கம் போன்றவை சூரியனிலிருந்து ஒளிக்கதிர்கள் இறங்குவது போன்றும் ஊற்றிலிருந்து நீர் பாய்வது போன்றும், வானுலகத்திலிருந்து வருகின்றன.

பின், முன்பு சொன்னது போல் எனக்கே இவற்றை எல்லாம் உரித்தாக்கிப் பார்த்துச் சிந்திப்பேன்.

உளங்கலந்துரையாடலோடும் கர்த்தர் கற்பித்த செபத்தோடும் முடிக்கவும்.

**இந்தப்பகுதி, எம்.எஸ் பாஸ்டின் சே.ச, மை. பவுல்ராஜ் சே.ச எழுதிய தூய இஞ்ஞாசியாரின் ஆன்மீகப் பயிற்சிகள் எனும் நூலிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது (கூட்டு வெளியீடு: வைகறைப்பதிப்பகம்- திண்டுக்கல், தூய இஞ்ஞாசியார் ஆன்மீக மையம்-திண்டுக்கல்) என்ற மொழி பெயர்ப்பு நூலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.**

தியானத்தின்போது தனிப்பட்ட விதத்தில் கடவுளின் அன்பை நாம் அனுபவித்திருக்கிறோம். தியானத்தின்போது அவரோடு தனியாக இருப்பதற்கு நமக்கு நேரம் கிடைத்தது போல தனித்து இருப்பதற்கு நேரம் கிடைக்காதபோது, தியானத்திற்குப் பிறகு எப்படி அவரது அன்பைத் தொடர்ந்து அனுபவிக்க முடியும்?.

தியானத்தின்போது கடவுளின் அன்பை எவ்வளவு அனுபவித்தோமோ அவ்வளவு நமது வழக்கமான வேலைக்குத் திரும்பிச் சென்ற பிறகும் துணை செய்யும் வகையில் தூய இஞ்ஞாசியார் இந்த காட்சித்தியானத்தை ஒரு வகையான கடந்து செல்லும் சிந்தனைத்தியானம் (transitional meditation) போல நமக்குத் தந்திருக்கிறார். வேறு வார்த்தைகளில் சொல்வதானால் இறைவேண்டலில் மட்டுமல்ல மாறாக, வேலைகளிலும் சாதாரணமான அன்றாட வேலை பற்றிய முந்தைய சிந்தனையில் ஈடுபடும் போதும் இறைவனை எல்லாவற்றிலும் கண்டு கொள்ள இது ஒரு வழியாகும்.

சிந்தனைத்தியானத்தை மூன்று பகுதிகளாக நாம் பிரிக்க முடியும்.

(i) தொடக்க நிலை குறிப்புகள்
(ii) சிந்தனைத்தியானத்தின் முதல் கருத்து (first point) காணிக்கை வரை
(iii) அடுத்ததாக இரண்டு, மூன்று நான்கு கருத்துகளும் சேர்த்து எடுத்துக்கொள்ளப்படுகிறது.

1. நாம் மனத்தில் நிறுத்த வேண்டியவை

(1) அன்பை செயல்களில் வெளிக்காட்ட வேண்டும்

(2) அன்பு ஒருவருக்கொருவர் பகிர்ந்துகொள்வதில் அடங்கியிருக்க வேண்டும்.

இரண்டு நபர்கள் காதலிக்கும்போது, காதலன் தன்னிடமுள்ள உடைமைகளையெல்லாம் தனது காதலியிடம் கொடுக்க விரும்புகிறார். ஆகவே காதலியும் திருப்பிக் கொடுக்க விரும்புகிறாள்.

2. அதன்படியாக, முதல்கருத்தில் இறைவன் எனக்கு கொடுத்தவையையும் செய்தவையையும் பற்றி காட்சித்தியானம் செய்கிறேன். எப்படி அவர் எனக்கு படைப்பு, மீட்பு, ஏனைய சிறப்பு சலுகைகள் ஆகியவற்றை இறைவன் எனக்குக் கொடையாகக் கொடுத்திருக்கிறார். ஆகவே "இறைவன் எனக்கு எவ்வளவு *செய்திருக்கிறார்.* தமது உடைமையிலிருந்து எவ்வளவு எனக்கு *அளித்துள்ளார்.* இறுதியாக அவரால் முடிந்த அளவு இதே ஆண்டவர் *தன்னையே* என்னிடம் கொடுத்துவிட *விரும்புகின்றார்*". (எண் 234)

என்னை இவ்வளவு தூரம் அன்பு செய்கிறவருக்கு நான் கைம்மாறாக என்னிடமிருந்து என்ன கொடுப்பேன். அவருக்கு என்ன செய்வேன். இறைவன் அவரிடமுள்ள எல்லாவற்றையும், அவரையும் சேர்த்தே கொடுத்தது போல, "என்னிடமுள்ள எல்லாவற்றையும் என்னையும்சேர்த்தே", நான் காணிக்கையாக்க வேண்டும். பிறகு விலையேறப்பெற்ற கொடைகளை நான் உடைமையாகக் கொண்டிருப்பவற்றை நான் காணிக்கையாக்குகிறேன். என் சுதந்திரம், என் அறிவு, என் விருப்பம் நான் வைத்திருப்பவற்றையும் உடைமைகளையும் எல்லாவற்றையும் அவர் எடுத்துக்கொள்ளவும் அவைகளை ஏற்றுக்கொள்ளவும் நான் வேண்டுகின்றேன்; ஏனென்றால் எப்படியிருந்தாலும் அவைகள் எல்லாம் எனக்கு அவரளித்த கொடைகள்தானே!. எனக்குத் தேவையானது எல்லாமே அவரது அன்பும் அருளுமே!.

3. முதலாவது கருத்தில், படைப்புகள், மீட்புக்கான கொடைகள் முறையே நமது *பிறப்பையும் மறு பிறப்பையும்* குறிக்கின்றன. இரண்டாவது கருத்திலே, என்உடல்சார்ந்த வாழ்வு, என்

ஆன்மீகவாழ்வு ஆகிய இரண்டும் சேர்ந்த *என் வாழ்வில்* உதவுவதற்காக அவர் படைப்புகளில் எப்படி வாசம் பண்ணுகிறார் என்பதை ஆழ்ந்து சிந்திக்கிறேன்; உன் உடல் *சார்ந்த வாழ்வில்* உதவுவதற்காக, அவர் பருப்பொருள்களை இருக்கச் செய்கிறார், செடிகளுக்கு உயிரளிக்கிறார், மிருகங்களுக்கு உணர்வளிக்கிறார், மனிதன் புரிந்துகொள்ளச் செய்கிறார். அதே போன்று இந்த வழிகளில் எல்லாம் அவர் என்னுள்ளே *குடியிருக்கிறார்*. மேலும் இவற்றைத் தவிர *என் ஆன்மீக வாழ்விலே* உதவுவதற்காக, அவர் என்னை அவரது *ஆலயமாக்குகின்றார்*.

மூன்றாவது கருத்திலே, என் உடலுக்கு *ஊட்டமளிப்பதற்காகவும், வளர்ச்சி பெறவும்,* உணவளிப்பதற்காக அவர் எவ்வளவு வேலை செய்கிறார். படைப்புகளில் எனக்காக எவ்வளவு உழைக்கிறார் என்பதை நாம் கவனித்துப் பார்க்கிறோம். இறுதியாக நான்காவது கருத்தில் என் ஆன்மீக ஊட்டமளிப்பதற்காகவும், வளர்ச்சிக்காகவும் மேலிருந்து அவரது ஆசீர்வாதங்களை அவர் அனுப்புகிறார்.

4 இறுதி வார்த்தை, நான் எவ்வாறு *பதில் கொடுப்பது* என்பது பற்றியது: என்னைப் பற்றிய இறைவனது அன்பின் ஒவ்வொரு நோக்கத்திற்கும் பதில்கொடுப்பதாக நம் பதில்மொழி அமைய வேண்டும். இறைவன் செயல்படுத்துகிறார், கொடுக்கிறார், இறைவன் பிரசன்னமாய் இருக்கிறார். இறைவன் வேலை செய்கிறார், உழைக்கிறார். இறைவன் அவரது ஆசீர்வாதங்களை அனுப்புகிறார். இவையெல்லாம் அவர் எனக்காகச் *செய்கிறார், கொடுக்கிறார்*. இவ்வளவு அன்பு செய்யும் இறைவனுக்குப் பதிலுக்கு நான் என்ன *செய்ய* முடியும்? என்ன *கொடுக்க* முடியும்? நான் என்னிடமுள்ள யாவற்றையும் அர்ப்பணிக்க வேண்டும். அவைகளை "எடுத்துக்கொள்ளும் ஏற்றுக்கொள்ளும்" என்று சொல்ல வேண்டும். மறைபொருளான அன்பின் சிகரம் இது. அன்போடு ஒன்றாகி இணைவது மட்டுமல்ல, ஆனால் என்னிடம் உள்ள எல்லாவற்றையும் அவருடனும், அவரிடம் உள்ள எல்லாவற்றையும் அனைவரிடமும் பகிர்வதிலும் அவ்வாறு செய்வதன் மூலம் அன்பை, திறமை வாய்ந்த முறையிலே வெளிக்காட்டுவதில் அடங்கியுள்ளது.

*பின்குறிப்பு:* ஆன்மீகப் பயிற்சியிலே ஆன்மீகம் பற்றி ஒரு வார்த்தை

# தேர்ந்து தெளியும் அன்பு
# (Discerning Love)

நமது ஆன்மீக வாழ்விலும் வளர்ச்சியிலும் மூன்று படிகள் வழியாக அழைத்துச் செல்லப்பட்டுள்ளோம்.

முதல்படியானது, *பற்றற்ற நிலையை* உருவாக்குவதன் மூலம் *பகுத்தறியும் திறனுக்கு* வழிநடத்துவது. இதுவே முதல் நிலையில் முதன்மையான வேலை, ஆனால் அது ஏனைய நிலைகளுக்கும் கடந்து செல்கிறது.

*இரண்டாது படியானது*, கிறிஸ்து தேர்ந்து கொள்வதை தேர்ந்து கொள்வது. இரண்டாவது நிலையில் நாம் கேட்கும் அருளை 'இயேசுவை இன்னும் நெருக்கமாகப் பின்பற்றுவதற்காக' தொடர்ந்து பயன்படுத்துவது. சிந்தனைத்தியானத்தில், தாழ்மையின் மூன்று தரங்களில், இயேசு தேர்ந்து கொள்வதையே நாமும் நிச்சயமாகத் தேர்ந்துகொள்ள வழிநடத்தப்படுகிறோம். அதாவது எல்லா நிந்தை அவமானங்களையும் அக புற ஏழ்மையையும் நமக்காகத் தாங்கிக் கொண்ட கிறிஸ்துவோடு நாமும் அவற்றைத் தாங்கிக் கொள்வது.

கிறிஸ்து தேர்ந்து கொள்வதையே நாமும் தேர்ந்து கொள்வதனால் பகுத்தறிய வேண்டாம் என்பதல்ல. இயேசுவின் அன்பினால் ஒறுத்தல்களின் உச்சநிலையை அடையவும் அல்லது மறைசாட்சியாகவும் இறக்கத் துணிகிறோம் என்பதனால் எந்த மக்களுக்காக சேவை செய்ய ஆண்டவரால் அனுப்பப்பட்டோமோ அவர்களுக்குப் பணி செய்வது தடைப்படக்கூடாது. திருப்பலியில் உதவி செய்து கொண்டிருந்தபோது இஞ்ஞாசியார் அழுதார். ஆனால் அவர் அழுவதை நிறுத்தாவிடில் கண்பார்வை கெட்டு விடும் என்று டாக்டர் வழியாக சொன்னபோது இறைவனின் அழைப்பு வேறு என்பதைக் கண்டு கொண்டு அழுவதைவிட்டு விட முடிந்தது. ஆட்கொள்கின்ற கிறிஸ்துவின் அன்பிலிருந்து நம்மைத் தடுக்கக்கூடிய ஆன்மீகக் காரியங்களில் கூட நாம் அதிகப்பற்று கொள்ளாமல், தேர்ந்து தெளிந்து

செயல்படுவது தேவைப்படுகிறது. மேலும் பற்றற்று இருப்பதும் தேவைப்படுகிறது. "நாம் ஒரு முத்துநெக்லஸ் அல்லது சிலுவை இவற்றில் எதன்மீது அதிகப்பற்று கொண்டிருக்கிறோம் என்பதில் வேறுபாடு இல்லை. இந்த இரண்டு பொருட்களில் எதுவென்றாலும் நாம் கொள்ளும் பற்று இறைவனோடு உண்மையாக இணைவதைத் தடை செய்கிறது" என்று தூய சிலுவை யோவான் கூறுகிறார். பற்றற்றதன்மையோடு பகுத்துணர்வதிலும் கூட இயேசு தேர்ந்து கொள்வதையே தேர்ந்து கொள்வதன் மூலம் ஒன்றிப்பையும், அன்பையும் தேடுவதன் மூலம் (II, III, IV வாரங்கள்) நற்பயன்கள் நம்மை வந்தடைகின்றன. இதுவே மூன்றாவது படி.

ஆகவே தியானத்தில் முதல் பகுதியில் பற்றற்றதன்மையை ஆன்மீகத்தின் *ஆண்மை பகுதி* எனலாம். அதிலே சரியானதைச் செய்வதையும், நீதிக்குரியதைத் தேடவும் வேண்டும்; மேலும் இரண்டாவது, மூன்றாவது, நான்காவது நிலைக்கு அழைப்பு விடப்படுகிறது. அதிலே ஆன்மீகத்தின் *பெண்மை* பகுதியாக, இயேசு தேர்ந்து கொள்வதையே நாம் தேர்ந்து கொள்ள பகுத்தறிய வேண்டும். அதிலே நாம் ஒன்றிப்பு, உறவு, அன்பைத் தேடுகிறோம். இவைகளின் இணைப்பிலே நற்பயன் வந்தடைகிறது.

படைப்பின் நிகழ்விலிருந்து நாம் அகத்தூண்டுதல் பெற முடியும் தொடக்கநூல் 1 : 26 - 28, 2 : 18 - 23. இறைவன் மனிதனைப் படைத்தார். அவனில் ஏதோ குறைபட்டதால் அவர் பெண்ணைப் படைத்தார். அதன்பிறகு அன்பு வந்தது, மேலும் முழுமை வந்தது. காதலனும் காதலியும் ஒன்றிணையும்போது கனி விளைகிறது. இறைவன், ஆணிடமும், பெண்ணிடமும் பலுகிப் பெருகுங்கள் என்றார். அதுவே எல்லா வாழ்விற்கும், எல்லா அன்பிற்கும் உரிய சட்டமாகும்.

## பிற்சேர்க்கை I திருப்பலியில் மறையுரைகள்

### 1. இறைவேண்டல்

I . எபேசி 1 : 15 - 19

II லூக் 10 : 38 - 41

1. நமது வாழ்வில் இறைவேண்டல் ஏன் ·முக்கிய இடம் பெறுகிறது?

நற்செய்திகளில் இயேசு அதிகாலையில் அன்றாட வேலையைத் தொடங்குமுன் இறைவேண்டலுக்கென்று அடிக்கடி செல்வதாக நாம் வாசிக்கிறோம். மாற் 1 : 35 இல் மறுநாள் அதிகாலையில், கருக்கலில் ... இறைவேண்டல் செய்யக்கூடிய தனிமையான ஓர் இடத்திற்குச் சென்றார். (மேலும் மாற் 6 : 46, லூக் 6 : 12) ஏன் அவர் அப்படி செய்தார்?. மேலும், ஏன் நாம் கூட அப்படி செய்ய வேண்டும்? என்று பார்ப்போம்.

(i) இறைவேண்டல் என்பது கடவுளிடம் அணுகிச் செல்வதாகும். அதனால் இறைவனது திருவுளத்தை அறிந்து அதனை நிறைவேற்ற முடியும். தூய பவுல் முதல் வாசகத்தில் சொல்வது போல, "இறைவனது ஞானத்தால் ஞானிகளாவது".

(ii) ஒரு முறை இறைவனின் அன்பான இரக்கத்தை நாம் அனுபவித்திருந்தால், மரியா இயேசுவின் பாதத்தில் அமர்ந்து இருந்ததுபோல, அவரிடம் நெருங்கி வந்து அவரது பிரசன்னத்தில் மகிழ்ந்திருப்பது மிகவும் நிறைவைத் தருகிறது என்பதை நாமும் அறிந்து கொள்வோம். (இரண்டாம் வாசகம்)

2. நாம் எப்படி இறைவேண்டல் செய்ய வேண்டும்?

இயேசுவிடம் சென்று நாம் எப்படி இறைவேண்டல் செய்ய வேண்டும் என்று கற்றுக்கொள்வோம். லூக் 11:1-2இல் திருத்தூதர்கள் இயேசுவிடம் இறைவேண்டல் செய்ய எங்களுக்குக் கற்றுத்தாரும் என்று கேட்டபோது, "இறைவேண்டல் செய்யும் போது 'தந்தையே' (அப்பா)என்று அழைக்கச் சொல்கிறார்". ஆகவே இயேசுவின் இறைவேண்டுதலைப் பற்றி இன்னும் ஆழமாகப் பார்த்தோமானால், இறைவனது பிரசன்னத்தை, ஓர் அன்பான தந்தையினது பிரசன்னத்தை அனுபவிப்பதுதான் இறைவேண்டல் என நாம் புரிந்து கொள்கிறோம். நாம் இறைவேண்டல் செய்யும் பொழுது, ஓர் அன்பான தந்தையாக

(அப்பாவாக) அனுபவித்து இறைவனிடம் அன்பான மனநிலையை நாம் கொண்டிருக்க வேண்டும் என்பது பொருள். மேலும் இந்த அனுபவமும், மனநிலையுமே மாற்றம் தருகின்ற ஒன்று. அது உன்னைத் தொட்டு உன்னை மாற்றுகிறது. நாம் **உண்மையாக இறைவேண்டல் செய்வது** என்பது நம்முடைய வாழ்வு எப்படி இருக்கிறது என்பதைப் பார்ப்பதாகும். முன்பு இருந்ததை விட நல்லதாக மாறிக்கொண்டிருக்கிறதா? இறைவன் எண்ணுகின்ற முறை, அவரது மனநிலை, அவரது மதிப்பீடுகள் போன்றவைகளைப் புரிந்துகொள்ள ஆரம்பித்திருக்கிறோமா? அப்படியானால் நமது வாழ்வு இறைவனால் இன்னும் அதிகமாக தாக்கமடைகிறது. மேலும் இறைவேண்டல் நம்மை வடிவமைக்க வேண்டும். இறைவேண்டல் நம்மை இறைவனைப்போல இன்னும் அதிகமாக, அன்பு, தாராள குணம், அக்கறை, சுயநலமற்ற தன்மை உடையவர்களாக்கி இருக்கிறதா? நாம் நமது வாழ்வில் எப்படி இறைவேண்டல் செய்கிறோமோ அந்த வழியில் நாம் வாழ்கிறோம். இறைவேண்டல் என்பது இறைவேண்டுதல் செய்வதற்கான திறமைகளை முயன்று அடைவதோ அல்லது தனது திறமையால் பெற்றுக்கொள்வதோ அல்ல. இறைவேண்டல் என்பது வாழ்க்கை முறையாகும்.

3. இறைவேண்டல் வாழ்வு தன்னிலே எப்படி இருக்கிறது?

மத்தேயு 6: 5-15 இல் இயேசு நமக்கு இவ்வாறு கூறுகிறார்.

(i) இறைவேண்டல் *நம்பத்தக்க வாழ்விற்கு* வழிநடத்த வேண்டும் அது பாசாங்கற்ற, போலிப்பகட்டு இல்லாத, இறைவேண்டல் செய்வது போல் நடிக்காததாக இருக்க வேண்டும் (வசனம் 5-6)

(ii) அது *எளிமையானதாகவும் இதயத்திலிருந்து* எழக்கூடியதாகவும் இருக்க வேண்டும். வசனம் 7 இல் அவர் "பிதற்ற வேண்டாம்" என்கிறார். பொருள்புரியாத சொற்களை அடுக்கிக் கொண்டே போக வேண்டாம். அதிலே செயற்கையானது எதுவுமே வேண்டாம் அல்லது மற்றவர்களிலே தாக்கத்தை ஏற்படுத்த விரும்பி இறைவேண்டுதல் செய்ய வேண்டாம்.

(iii) அதிலே *நிலைத்திருக்க* வேண்டும். லூக் 11:5-10 இல் இயேசு இந்தக் கருத்தை வலியுறுத்துகிறார். இறைவேண்டல் செய்வதை நிறுத்திவிடக்கூடாது. நாம் தொடர்ந்து கேட்டுக் கொண்டேயிருந்தால்

நாம் பெற்றுக்கொள்வோம். இறைவேண்டலில் நிலைத்திருந்தால் இறைவனில் *நம்பிக்கையும்* பற்றுறுதியும் *வளரும்*. மேலும் நமது இறைவேண்டல் பயன் அளிக்கக்கூடியதாக அமையும். இறைவேண்டலில் நிலைத்திருப்பது வாழ்விலும் நிலைத்திருக்கக் கூடிய மனநிலையை உருவாக்க வழிவகுக்கும்.

(iv) இறைவேண்டல் உனது நண்பர்களிடமோ அல்லது உனது தந்தையிடமோ அல்லது உனது தாயிடமோ பேசுவது போல *தனிப்பட்டதாக* அமைய வேண்டும். அன்பில்லாமல் இறைவேண்டல் இல்லை, அன்பு தனிப்பட்ட ஒன்றுதான், உன் அம்மாவிடம் பேசும்போது ஒரு நல்ல சூத்திரத்தை வாசித்துக் காட்டுவதாக கற்பனை செய்துகொள். அவள் எவ்வளவு பாதிக்கப்படுவாள்!

"இறைவேண்டல் என்பது ஒரு நெருக்கமான நட்பைத்தவிர வேறொன்றுமில்லை, நம்மை அறிந்து அன்பு செய்கிற இறைவனோடு அடிக்கடி இதயத்தோடு இதயம் உரையாடுவது ஆகும்" என்று தூய அவிலா தெரசா சொல்கிறாள்.

உண்மையிலே இறைவேண்டுதல் செய்வதற்கு உங்களுக்கு வார்த்தைகள் தேவையில்லை.

"இறைவேண்டுதல் என்பது நமது இதயத்திலிருந்து பொங்கி எழுவது; விண்ணகம் நோக்கித் திரும்பிய ஓர் எளிய பார்வை, ஏற்றுக்கொள்ளப்பட்ட அன்பின் ஒரு வெளிப்பாடு, சோதனையையும், மகிழ்ச்சியையும் ஒன்றுபோல அணைத்துக் கொள்வது" என்று தூய குழந்தை இயேசு தெரசா சொல்கிறாள்.

(v) இறைவேண்டலின் ஒரு முக்கியமான பகுதி *இறைவனுக்குச் செவிமடுத்துக் கேட்பதாகும்.* இவ்வாறு ஒரு பழைய சொல்வழக்கு உண்டு. நாம் நிறைய கேட்டு குறைவாகப் பேச வேண்டும் என்பதற்காக இறைவன் நமக்கு இரண்டு காதுகளும் ஒரு வாயும் கொடுத்திருக்கிறார். இருந்தாலும் இறைவேண்டலின்போது இறைவனுக்குச் செவி கொடுப்பதற்கு எவ்வளவு குறைவான முக்கியத்துவம் கொடுக்கிறோம். கவனம் சிதறடிக்கிற இறைவேண்டலாக இருந்தாலும் இறைவன் நம்மோடு பல வழிகளில்

பேசுகிறார். நாம் விழிப்பாயிருந்து கவனிக்க வேண்டும். செவிகொடுப்பதற்கு நாம் அமைதியாக இருக்க வேண்டும். கவனித்தல் (listen) எனும் ஆங்கில வாத்தையில் அமைதி (silent) எனும் ஆங்கில வார்த்தையில் உள்ள அதே ஆறு எழுத்துக்களே மாறி உள்ளன என்பதை ஒருவர் கவனித்து இருக்கிறார். எனவே அமைதியில் இறைவனுக்குச் செவிகொடுக்க அதிக நேரம் செலவிடுவோம். அது நம் வாழ்க்கையில் எத்தகைய வித்தியாசத்தை ஏற்படுத்துகிறது என்பதை நாம் காண முடியும்.

(vi) இறுதியில், *நாம் இன்றவேண்டலுக்கு நம்மைக் கையளிப்பதில்லை, நாம் இறைவனுக்கே நம்மைக் கையளிக்கிறோம்* என்பதை நினைவில் கொள்வோம். இறைவேண்டல் என்பது இறைவனோடு இணைவது என்று பொருளாகும். நாம் இறைவனோடு இணைந்து இருக்கும்போது நமது வாழ்வின் எல்லா நிலைகளிலும் அவரது கரத்தைக் காண முடியும். யோவான் 16:32இல் "நான் தனியாக இல்லை, என் தந்தை என்னுடன் இருக்கிறார்" என்று இயேசு சொல்கிறார். "ஒரு மனிதன் அவனது இதயத்தில் வார்த்தையில் அல்லது வேலையில் செயலாற்றும் போதெல்லாம் இறைவனுக்காக செய்யும் வரையில் அவன் இறைவேண்டல் செய்கிறான். தன் வாழ்வு முழுவதும் இறைவனை நோக்கியே வழிநடக்கும் ஒருவன் எப்போதும் இறைவேண்டுதல் செய்கிறான்" என்று தூய அக்குயினாஸ் சொல்கிறார். ஆகவே நமது வாழ்வின் ஒவ்வொரு நாளையும் இறைவனது பிரசன்னத்தில் வாழ்வதற்கு நமது இறைவேண்டலை ஒரு கருவியாக்கும்போது நமது வாழ்வு ஒரு முடிவு பெறாத இடைவிடாத இறைவேண்டலாகிறது.

## 2. மன்னித்தல்

I கொலோ 3 : 12 - 17

II மத். 18 : 21 - 35

அமெரிக்காவிலுள்ள ஒரு பல்கலைக்கழகத்தில் "ஒருவரை ஒருவர் மன்னித்தல்", என்ற ஒரு புதிய பாடப்பிரிவு (course) தொடங்குவதாக அறிவித்தனர். அந்தப் பாடப்பிரிவிலே "மன்னிப்பதற்கான அண்மைக்காலத்து அணுகுமுறைகள்" பற்றிய ஆய்வு இடம் பெறும் என்று சொல்லப்பட்டது. உலகில் பதிலுக்கு பதில் செய்யும் மனநிலை பொதுவாக எல்லா இடங்களில் காணப்பட்டாலும் ஒரு பெரிய பல்கலைக்கழகத்தில் மன்னித்தல் குறித்து கவனம் செலுத்துவதை அறிந்து கொள்ளுவது நன்றாக இருந்தது. இத்தகைய பாடப்பிரிவுகள் அதிக மதிப்புள்ள உள்ளுணர்வுகளைக் கொடுத்தாலும், நற்செய்தியில் இயேசு நமக்கு வழங்கும் மன்னித்தல் போன்று ஆழமான செயல்படுத்தக்கூடிய உள்ளுணர்வு அங்கே இல்லை.

இயேசுவின் மன்னித்தல் படிப்பதற்குரிய ஒன்று அல்ல, மாறாக அன்றாடம் நடைமுறைப்படுத்த வேண்டிய ஒன்று. அவர் குணப்படுத்திய நபர்களிடம் 'உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன' என்று சொல்கிறார். மேலும் உங்கள் விண்ணகத் தந்தை உங்களை மன்னிப்பதுபோல மற்றவர்களை மன்னித்து விடுங்கள் என்று நம்மிடம் கேட்கிறார். கர்த்தர் கற்பித்த செபத்தில் 'எங்களுக்கு எதிராக குற்றம் செய்தோரை நாங்கள் மன்னித்துள்ளது போல எங்கள் குற்றங்களை மன்னியும்' என்று இறைவேண்டல் செய்ய நமக்கு அவர் கற்பிக்கிறார். இறைவேண்டலின் இறுதியில் இந்த மன்றாட்டை மட்டும் வலியுறுத்தி அதைப்பற்றி கருத்தைத் தெரிவிக்கிறார்.

"மற்ற மனிதர் செய்யும் குற்றங்களை நீங்கள் மன்னிப்பீர்களானால் உங்கள் விண்ணகத் தந்தையும் உங்களை மன்னிப்பார். மற்ற மனிதரை நீங்கள் மன்னிக்காவிடில் உங்கள் தந்தையும் உங்கள் குற்றங்களை மன்னிக்கமாட்டார்".

இன்றைய நற்செய்தி பகுதியிலே பேதுரு "எத்தனை முறை நான் என் சகோதரனை மன்னிக்க வேண்டும்? ஏழுமுறையா?" என்று அவரிடம் கேட்டார். இயேசு மறுமொழியாக, "ஏழுமுறை மட்டுமல்ல, ஆனால் எழுபது முறை ஏழு முறை" என்றார். ஆகவே நாம் பிறரை மன்னிப்பதை நமது இரண்டாவது இயல்பாகக் கொள்வதை இயேசு விரும்புகிறார் என்று சொல்லலாம்.

மன்னிப்பதை அவர் ஏன் இவ்வளவு, அதுவும் இத்தனை முறை வலியுறுத்துகிறார்? ஏனென்றால் முதலாவது, மன்னிப்பது என்பது அன்பு செய்வது. ஒருவர் மற்றவரை அன்பு செய்தால் அவர் எத்தனை முறை மன்னிக்கவேண்டும் என்று ஒருபோதும் கணக்கு வைப்பதில்லை. ஏனென்றால் தூய பவுல் கூறுவது போல, "அன்பு ஒருபோதும் மற்றவர்களின் குற்றங்களைக் குறித்து, கணக்கு வைத்துக் கொள்வதில்லை" அப்படி குறித்து வைத்துக்கொள்பவர்களிடம் அன்பு இருப்பதில்லை. ஆகவே நாம் அன்பு செய்பவராக இருக்க விரும்பினால் நாம் மன்னிப்பவர்களாக இருக்க வேண்டும்.

**நான் அன்பு செய்கிற ஒருவருக்கு மன்னிப்பு எப்போதும் உண்டு**

"நான் என் நண்பனுடன் கோபமாக இருந்தேன்:
எனது பெரும் சினத்தைக் கூறியபோது
என் பெரும்சினம் முடிவுக்கு வந்தது.
நான் எனது எதிரியுடன் கோபமாக இருந்தேன்,
அதை நான் சொல்லவில்லை,
என் பெரும்சினம் வளர்ந்தது"

என்று வில்லியம் பிளேக்கி (William Blake) சொல்கிறார்.

இயேசு நற்செய்திகளில் மன்னித்தல் பற்றி பேசும்போது இரண்டு முக்கியமான கருத்துக்களை தெளிவுப்படுத்துகிறார்.

1. ஒருவரும் ஒரு பாவியைத் தாழ்வாகப் பார்க்கக்கூடாது, மேலும் தன்னை விட ஒரு பெரிய பாவி என்று அவனைக் கருதக்கூடாது. "உங்கள் கண்ணில் இருக்கும் மரக்கட்டையைப் பார்க்காமல் உங்கள்

சகோதரரின் கண்ணில் இருக்கும் துரும்பை நீங்கள் கூர்ந்து கவனிப்பதேன்?" நீங்கள் முதலில் உங்கள் கண்ணிலிருந்து மரக்கட்டையை எடுத்து விடுவதற்குள் உங்கள் சகோதரன் கண்ணிலிருந்து அவரது துரும்பை அவர் கண்டிப்பாக எடுத்திருப்பார். ஒரு துணிச்சலான மாணவன் அவனது ஆசிரியரிடம், "மன்னியுங்கள் சார், எனது தேர்வுத்தாளில் ஓரத்தில் என்ன எழுதியிருக்கிறீர்கள் என்று எனக்குப் புரிய முடியவில்லை" என்று சொன்னான். "இன்னும் தெளிவாக எழுத வேண்டும் என்று நான் உனக்கு எழுதியிருக்கிறேன்" என்று ஆசிரியர் சொன்னார். அநேக நேரங்களில் நமது தவறுகளைத் திருத்தாமல், பிறர் தவறுகளைத் திருத்த விரும்புகிறோம்.

2. மன்னித்தல் குறித்து நாம் மனத்தில் வைக்க வேண்டிய இரண்டாவது கருத்து என்னவென்றால் ***நமது பாவங்களை நாம் மன்னிக்காதிருப்பதும், ஒருவரை ஒருவர் மன்னிக்க விருப்பமில்லாது இருப்பதும்***, மனமும் உடலும் முழுக்குணமின்றி இருப்பதன் முக்கிய காரணமாகும். இயேசு மன்னிப்பதை முழுமையோடு தொடர்புபடுத்தினார். அவர் ஒரு நபரைக் குணமாக்கும் போது "உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன" என்று சொன்னார். உடலிலும், ஆவியிலும் உள்ள முழு நலமும் என்னுடைய மன்னிக்கும் மனநிலையோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கிறது. இரண்டு நபர்களுள் ஏதோ ஒரு காரணத்தால் மனத்தாங்கல் ஏற்பட்டால் சில வேளைகளில் பழைய அன்புறவிற்கு திரும்ப வருவது மிகவும் கடினமானதாக இருக்கிறது. நான் ஒன்றும் தப்பு செய்யவில்லையே அவன் தப்பு செய்திருக்கும் போது நான் ஏன் மன்னிப்பு கேட்க வேண்டும்? என்பன போன்ற நமக்கு உள்ளே நிகழும் விவாதங்கள் நம்மைக் கடினப்படுத்துகின்றன. நமது மரியாதை,பெருமை, கோபம், காயப்பட்ட உணர்வுகள், பொறாமை ஆகியவற்றில் நின்று கொண்டு அன்பிலும் இணக்கத்திலும் நாம் வாழ்கின்ற மகிழ்ச்சியை இழந்து விடுகிறோம். ஒரு கான்வென்டில்

ஒரு அருட் சகோதரியும் அவளுடைய இல்ல தலைவியும் எழுத்து மூலம் மட்டுமே ஒருவரோடு ஒருவர் தகவல் பரிமாறிக்கொள்வார்கள் என்று என்னிடம் கூறினார்கள். அவர்கள் ஒருவரை ஒருவர் மன்னிக்க இயலவில்லை. ஆகவே ஒருவரை ஒருவர் சந்திக்க அக்கறை எடுக்கவில்லை. இருந்தபோதிலும், ஒரு சமூகத்திலோ அல்லது குடும்பத்திலோ மகிழ்ச்சியுடன் வாழ்வதற்குள்ள ஒரே வழி நமது குறைபாடுகளோடு ஏற்றுக்கொண்டு நம்மை மன்னித்து அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். அது போல நாமும் மற்றவர்களது குறைபாடுகளை ஏற்றுக்கொண்டு அவர்களை மன்னிப்பது தான் என எனக்குத்தெரியும்.

ஒரு நாள் ஒரு குதிரைக்காரன் ஒரு தோட்டம் வழியாகக் கடந்து செல்ல நேர்ந்தது. அவனது குதிரைக்கு தண்ணீர் தரும்படி விவசாயிடம் கேட்டான். விவசாயி மகிழ்ச்சியோடு தண்ணீர் எடுப்பதற்காக பெர்சியன் சக்கரத்தைச் சுழல விட்டான். ஆனால் அந்த சத்தம் குதிரைக்குப் பழக்கமில்லாததால் அந்தக் கிணற்றின் அருகே சிறிதும் நெருங்கி வர வில்லை. “என் குதிரை தண்ணீர் குடிப்பதற்காக இந்த சத்தத்தை நிறுத்த முடியுமா?” என அந்தக் குதிரைக்காரன் கேட்டான்.

“அது முடியாது என நான் கருதுகிறேன். ஐயா, உமது குதிரை தண்ணீர் குடிக்க விரும்பினால் இந்த சத்தத்துடன்தான் குடித்தாக வேண்டும், ஏனென்றால் இங்கே சத்தத்துடன் மட்டுமே தண்ணீர் வருகிறது” என்று விவசாயி சொன்னார்.

நட்பு கூட குறைபாடுகளுடன்தான் வருகிறது.

ஆகவே ஒருவர் ஒருவரது குறைபாடுகளைத் தாங்கிக் கொண்டு வாழ வேண்டும், என வற்புறுத்துகிறார். “ஒருவரை ஒருவர் பொறுத்துக் கொள்ளுங்கள். ஒருவரைப்பற்றி ஒருவருக்கு ஏதாவது முறையீடு இருந்தால் மன்னியுங்கள். ஆண்டவர் உங்களை மன்னித்தது போல நீங்களும் மன்னிக்க வேண்டும்” என அவர் சொல்கிறார்.

# 3. அன்பு

I உரோ 5 : 6-11

II யோவா 15 : 11-17

ஓர் அறிவியல் ஆசிரியை அவளது மாணவர்களில் ஒருவரிடம் உப்பு பற்றி விளக்குமாறு கேட்டார். "உப்பு என்பது ... உப்பு என்பது எந்த ஒன்றை உண்ணும் உணவோடு சேர்க்காதபோது உணவு சுவையற்றதாக இருக்கிறதோ அதுவே உப்பு" என்று மாணவன் இறுதியாகச் சொன்னான். பெரும்பாலான உணவுகளை சுவைமிக்கதாக்க உப்பு தேவைப்படுகிறது கிறிஸ்தவ வாழ்விற்கும் கூட மிக அவசியமான பொருள் ஒன்று உண்டு. அதுதான் அன்பு. கொரிந்தியர்களுக்கு எழுதிய கடிதத்திலே அதன் மதிப்பை தூய பவுல் வலியுறுத்துவார். தூய ஆவியாரின் கொடைகள் பற்றிய பகுதியின் நடுவில், சேவை செய்தல், பேச்சுத்திறன், தன்னையே தியாகம் செய்தல் ஆகியவற்றிற்கான கொடைகளைப் பெற்றிருந்தாலும் அன்பு எனக்கில்லை என்றால் நான் ஒன்றுமில்லை (1கொரி13:1-3), என்று சொல்ல ஆரம்பித்துவிடுவார். ஓர் உண்மைக்கிறிஸ்தவன் அவனது அன்பால் அறியப்படுகிறான்.

அன்பையே இயேசு வாழ்க்கையின் போதனையிலும் செயல்களிலும் முக்கியமான செய்தியாகக் கொண்டிருந்தார். ஆனால் ஓர் அன்பார்ந்த மனிதனின் வாதிடும் முறை, 'அறிவார்ந்த மனிதன்' என்ற அழைக்கப்படுவோரின் வாதிடும் முறையிலிருந்து மிகவும் மாறுபட்டிருக்கிறது. உலகைச் சார்ந்த மக்களும் துறவறத்தைச் சார்ந்த மக்களும் கூட லாப நஷ்ட கண்ணோட்டத்தோடு இருந்ததனால் இயேசுவிற்கு எதிராக கடுமையாக செயல்பட்டனர். ஊதாரி மகன் உவமையிலே மனம் வருந்திய இளையமகனுக்கு அவனது தந்தை அன்பார்ந்த வரவேற்பு அளித்தபோது, மூத்தமகன் இவ்வாறுதான் எதிராக செயல்பட்டான். இயேசு சென்ற இடமெல்லாம் பிறருக்கு நன்மையே செய்து கொண்டு சென்ற போதும் சில மக்கள் இவ்வாறுதான் அவருக்கு எதிராக செயல்பட்டனர்.

மாற் 3:20-21 வரையுள்ள பகுதியில் மக்களுக்கு அவர் செய்த அன்பு பணியை எவ்வளவு கடுமையாக எதிர்த்தனர் என்று

எடுத்துக்காட்டும் ஒருநிகழ்ச்சி இடம் பெறுகிறது. தனது உணவை கூட துறந்து, தன்னால் இயன்ற அளவிற்குமேல் நன்மை செய்த ஒரு மனிதரைப் பார்த்து மதிமயங்கியிருக்கிறார் என்று அவர்கள் சொன்னார்கள். கணக்கிடாமல் கொடுக்கும் ஓர் அன்பு உள்ளம் ஒரு சுயநலவாதிக்கு அர்த்தம் உள்ளதாக இருப்பதில்லை.

"நான் உங்களை அன்பு செய்தது போல, ஒருவரை ஒருவர் அன்பு செய்யுங்கள்" என்ற கிறிஸ்துவின் அழைப்பைப் பின்பற்ற நாம் விரும்பினால் நாம் எல்லா நியாயமற்ற செயல்களையும் அவமதிப்புகளையும், மதி மயங்கியர் என அழைப்பதையும்கூட தாங்கிக் கொண்டு அன்பினது "மடமையின்" வழியான இயேசுவின் வழியிலே தொடர்ந்து நடக்கத் தயாராக இருக்க வேண்டும். இது ஏனென்றால், இயேசுவின் காலத்தில் இருந்ததுபோல இன்றுவரை, (வில்லியம் பிளாக்கி கூறுவது போல) "அன்பு, இனிமையான அன்பு ஒரு தண்டிக்கப்பட வேண்டிய குற்றமாகக் கருதப்படுகிறது". எதிர்ப்புகள் அல்லது தொடர்ந்து துன்பங்கள் வந்தாலும் அவ்வாறு இயேசுவின் அன்பின் வழியில் பின் தொடர்வதால் துன்புற நேர்ந்தாலும் விடாது அவரைப் பின் தொடர்வோம்.

"நான் அன்பு செய்தது போல நீங்களும் அன்பு செய்யுங்கள்" என்று இயேசு சொல்லும்போது, அவரைப் போல நாமும் அன்பை வார்த்தைகளில் அல்ல செயலில் காட்ட வேண்டும் என்பதற்கு முக்கியத்துவம் கொடுக்கிறார். இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றும் அன்பர்களுக்கு அன்பு என்ன செய்யும் என்பது பற்றி இரண்டு விதங்களில் பேச விரும்புகிறேன்.

அன்பு என்ன செய்யும் என்பதில் முதல் கருத்தாக டோனி டி மெல்லோ கூறுவது போல *அன்பை படைப்பாற்றல்* எனலாம். ஒரு நபர் இன்னொருவரை அன்பு செய்தால் அவரிலே ஒரு புது மனிதனை உருவாக்குகிறார் என்று சொல்லலாம். அன்பு செய்வதன் மூலம் ஒருவருக்கு உறுதியளிக்கிறோம். ஒருவரைப் பாராட்டவும் அவரைப்பற்றிய நல்லவற்றைப் பற்றி தெரியப்படுத்தும் போது அவரிலே ஏதோ ஒன்று நடக்கிறது. என் அன்பு ஒருவரிலே இந்த புதுமையானதை

உருவாக்குகிறது. "என்னை அன்பு செய்ததனால், நான் அன்புக்குரியவன் ஆனேன்" என்று தூய அகுஸ்தின் சொல்கிறார். இவ்வாறுதான் இயேசு மக்களை அன்பு செய்தார். இவ்வாறுதான் பாவிகளைப் புதிய மனிதர்களாக அவரால் உருமாற்ற முடிந்தது. சீமோனை எப்படி பேதுருவாக, பாறையாக மாற்றினார் என்பதை நினைத்துப் பாருங்கள். நத்தானியேலை மாற்றியதை நினைத்துப் பாருங்கள் (யோவான் 1 : 43-49). மரியமதலேனாள், சமாரியப் பெண் போன்றோரை எப்படி இயேசு அவரது அன்பால் புதியமனிதராக மாற்றியிருக்கிறார் என்பதை நினைத்துப் பாருங்கள். இதைப்போல நாம் மற்றவர்களை அன்பு செய்ய வேண்டியதை அவசியமான ஒன்றாகக் கருதலாமா? இவ்வாறு நாமும் அவர்களிலே புதிய மனிதர்களை உருவாக்கலாமா?

அன்பின் இரண்டாவது தன்மை என்னவென்றால் அது *ஒன்றுபடுத்துகிறது*. அதாவது, இரண்டு வேறுபட்ட நபர்களாக இருந்தாலும், காதலரும் காதலியும் அன்பிலே *ஒன்றாகின்றனர்*. காதலி எனக்கு மிகவும் முக்கியமானவளாக மதிப்புள்ளவளாவதால் நான் அவளுக்காக என் உயிரையே கையளிக்கத் தயாராக இருக்கிறேன். இயேசு இத்தகைய அன்பால்தான் நம்மை அன்பு செய்தார். "தன் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதை விட மேலான அன்பு யாரிடமும் இல்லை" என்று அவர் சொன்னார். அதற்காக ஒருவன் தன் காதலிக்காக தினமும் சாக வேண்டும் என்பதில்லை. ஆனால் அன்றாட வாழ்விலே காதலிக்காக எதையும் விட்டுகொடுப்பதன் மூலம் இத்தகைய அன்பைக் காட்ட முடியும். இயேசு சொல்வது போல ஒருவன் தன் காதலியிடம் "என்னுடையது எல்லாம் உன்னுடையதே, உன்னுடையதெல்லாம் என்னுடையதே" என்று சொல்ல முடியும். மூத்தமகன் தந்தை இளையமகன்மீது காட்டிய அன்பைத் தவறாகப் புரிந்து கொண்டு கோபப்பட்டாலும், ஊதாரி மகன் உவமையிலே வரும் தந்தை மூத்த மகனுக்காக இத்தகைய அன்பு வைத்திருந்தார். என்மகனே, "நீ எப்போதும் என்னுடன் இருக்கிறாய். மேலும் என்னுடையதெல்லாம் உன்னுடையதே" என்று அந்த அன்புத் தந்தை அவனிடம் கூறினார். இத்தகைய சுயநலமற்ற ஒன்றுபடுத்தும் தாராள அன்பால் நாம் அன்பு செய்ய முடியுமா?

இயேசு தனது அன்பால் நம்மை புது நபராக மாற்றியிருக்கிறார். தூய பவுல் சொல்லுவது போல, நாம் பாவிகளாக இருந்தபோதும் இயேசு நமக்காக இறந்து, விண்ணகத் தந்தையின் மக்களாகவும் ஒருவருக்கு ஒருவர் சகோதர சகோதரியாகும்படி நமக்கு புது வாழ்வு கொண்டு வந்துள்ளார். தூய யோவான் கூறுவது போல, அவர் நம்மை இவ்வளவு அதிகமாக அன்பு செய்திருக்கிறார் என்பதால் நாமும் ஒருவரை ஒருவர் அன்பு செய்ய வேண்டும். ஒரு MRA (Moral Re-arrangement Army) (அறநெறி புதுப்பிக்கும் படை) பாடல் இவ்வாறு சொல்லுகிறது.

"உன்னை இரக்கம் வந்தடைந்தது என்றால் - அது
உன் வழியே பிறருக்குப் பாய்ந்தோடட்டுமே!"

இயேசு மனதுருகும் அன்பை நமக்குக் காட்டியுள்ளார். அதை நமக்கென்றே வைத்துவிடாமல் உடன்வாழும் சகோதர சகோதரிகளுக்கும் பகிர்ந்தளிப்போம்: ஏனென்றால் அன்பைப் பகிரும்போதுதான் அது அன்பாக இருக்கும்.

'இசையின் ஒசை' ("சவுண்ட் ஆப் மியூசிக்") எனும் படத்திலே:

"ஒரு மணி ஒசைஎழுப்பும்வரை அது மணியல்ல,
ஒரு பாடல் இசைக்கப்படும்வரை அது பாடல் அல்ல,
அன்பு இதயத்திலே தங்கிவிடுவதற்காக வைக்கப்படவில்லை:
அன்பு கொடுத்துவிடுவதற்காகவே கொடுக்கப்பட்டுள்ளது".

என்று ஒரு பாடல் சொல்லுகிறது. ஆகவே தூய சிலுவை யோவான் கூறுவது போல, அன்பில்லாத இடங்களில் அன்பைப் பகிர்வோம், அப்போது நாமும் அன்பைக் கண்டுகொள்வோம். கடவுள் அன்பாய் இருப்பது போல நாமும் அன்பானவர்களாக மாறுவது மட்டுமல்ல, நாமே அன்பாக மாறி விடுவோம்.

## 4. கற்பு [அல்லது தூய்மையான அன்பு]

I இனிமைமிகுபாடல் 3 : 1 -4

II யோவா 20 : 11 -18

உயிர்த்த ஆண்டவர் மகதலா மரியாவுக்குத் தோன்றிய காட்சியானது முதல் வாசகத்தில் உள்ள இனிமைமிகு பாடல் பகுதியை நமக்கு நினைவூட்டுகிறது. இயேசுவை மரியா தேடுவதைப் போலவே இனிமைமிகு பாடல் 3:3 இல் அந்தப் பெண் தனது அன்புக்குரியவரைத் தேடிக்கொண்டிருக்கிறாள். “என் உயிருக்குயிரான அன்பரைத் தேடினேன்; தேடியும் அவரைக் கண்டேன் அல்லேன்! ஆனால் என்னைக் கண்டனர் சாமக் காவலர்; நகரைச் சுற்றி வந்தவர்கள் அவர்கள். ‘என் உயிர்க்குயிரான அன்பரை நீங்களேனும் கண்டீர்களோ?’ என்றேன். அவர்கள் என்னை விட்டுச் சற்று அப்பால் சென்றதுமே கண்டேன் என் உயிர்க்குயிரான அன்பர்தமை, அவரைச் சிக்கெனப் பிடித்தேன் விடவே இல்லை...” இது யோவான் 20:11-18 பகுதியை ஒத்திருப்பதை நாம் கவனிக்கலாம்.

இயேசு எத்தகைய அன்பான முறையிலே மரியாவைக் கையாளுகிறார் என்பதை நாம் பார்க்கிறோம். ஒருவர்மீது ஒருவர் கொண்ட அன்பு அவர்களை வளப்படுத்தியது. லூக் 8:2, மாற் 16:9 பகுதியில் குறிப்பிடப்பட்டதுபோல ஏழு பேய்களை ஓட்டிய பிறகு, இயேசுவின் மன்னிக்கும் அன்பை அனுபவித்த நாளிலிருந்து மகதலா மரியா இயேசுவிற்குத் தன்னை முழுமையாக, மகிழ்ச்சியோடு அர்ப்பணித்தாள். கற்புள்ள ஒரு பெண் ஓர் ஆணிடமும், கற்புள்ள ஓர் ஆண் ஒரு பெண்ணிடமும் இத்தகையதோர் உறவையே கொண்டிருக்க வேண்டும். தூய அன்பு இருந்தால் முழுவதுமாக கொடுத்துவிடத் தூண்டும், அது மகிழ்ச்சியும் சுதந்தர உணர்வும் தரும். திருத்தந்தை தனது முழுமையான அர்ப்பணம் (வைட்டா கான்செக்ரட்டா vita consecreta) எனும் சுற்று மடலிலே இவ்வாறு எழுதுகிறார், “அர்ப்பணம் செய்யப்பட்ட தூண்மையான அன்பு (கற்பு) மகிழ்ச்சியும் விடுதலையும் தரும் ஓர் அனுபவமாக வெளிப்படுகிறது” (எண் 88, வைட்டா கான்செக்ரட்டா)

எனவே ஆரம்பத்திலேயே 'தூய்மையான அன்பு என்றால் என்ன?' என்பது பற்றிய சரியான அணுகுமுறை தேவைப்படுகிறது. துரதிஷ்டவசமாக சட்ட மனப்பான்மை இடையில் நுழைந்து நமது பார்வையை மறைத்துவிட்டது. 'மறைபொருள்' பற்றி எழுவதில் ஒரு சிறந்த ஆன்மீக எழுத்தாளரான அருட்பணி வில்லியம் சேச னட்வர், "இன்று இருப்பது போல, கற்பு என்பது தொடக்ககால மரபுப்படி பாலுறவை மட்டுமே முதன்மையானதாக்கி, அதையே மையப்படுத்தியிருக்கவில்லை" என்று 'காயப்பட்ட மான்' (The Wounded Stag) எனும் நூலில், கற்பு பற்றி சொல்லும்போது குறிப்பிடுகிறார். அறியப்படாத மேகம் (Cloud of Unknowing) எனும் நூலின் ஆசிரியர், ஒருவனை, அவனுக்காக அல்லாமல், அவனது பணத்திற்காக அன்பு செய்யும் பெண்ணை கற்பிழந்தவள்" என அழைக்கிறார். தூய்மையான அன்பு முழுவதுமாக, அன்பு செய்பவரையே மையப்படுத்தி இருக்கிறது. இருந்தாலும் முரண்பாடாக, அது உண்மையான மகிழ்ச்சியைக் கொண்டு வருகிறது. மேலும் உண்மையாக தன்னையே அறியவும் அது வழி நடத்துகிறது.

கற்பு அல்லது தூய்மையான அன்பு ஒரு மறைபொருளான அனுபவம். (பார்க்க: இனிமை மிகு பாடல்) ஆனால் பாலுணர்வு பற்றிய பலவிதமான, 'செய்யத்தகுந்தவை, செய்யத்தகாதவை' (Do's and Don'ts) என்பவைகளால் அதை மறைத்து விட்டோம். அதன் காரணமாக தூய்மையான அன்பின் மறைபொருளின் பரிமாணமும் மறைக்கப்பட்டதாகி விட்டது. மேலும் பெரும்பாலான மாசற்ற மக்களுக்கு அடிக்கடி வேதனை தரும் வகையில் அது மனசாட்சியை அச்சத்திற்குள்ளாக்கி குற்ற உணர்வை ஏற்படுத்துகின்றது. சட்ட மனப்பான்மைக்கு ஐயோ! பரிசேயத்தனத்துக்கு ஐயோ!

திருமணம் செய்யவில்லை என்பதாலோ அல்லது பெண்களைப் பார்த்தபோது சோதனைக்குள்ளாகவில்லை என்பதாலோ இயேசுவைக் கற்புள்ளவர் என்று சொல்லவில்லை. அவர் அத்தகைய சோதனைகளுக்கும் பயப்படவில்லை. ஒரு பெண் அவர் பாதங்களை அபிஷேகம் செய்யவும், கண்ணீரால் கழுவவும் அனுமதித்தார்.

மார்த்தாவின் சகோதரி மரியா, அவரது பாதத்தருகில் அமர்ந்து அவர் சொல்வதைக் கேட்க அனுமதித்தார். கண்டிப்பாக அந்த உரையாடலின் போது அவர் அவளைப் பார்த்துக்கொண்டிருந்தார். மேலும், அவளும் அவரைப் பார்த்தார். இவைகளிலெல்லாம் இயேசு பெண்களைத் தவிர்க்கவில்லை; மேலும் இதற்கும் கற்பிற்கும் தொடர்பு ஒன்றுமில்லை. பெண்களைத் தவிர்ப்பது நமது இயல்பிற்கு மாறானதாக்கும். இயேசுவோ மிக இயல்பானவராய் மனிதத் தன்மையுடையவராய் மிக அன்பார்ந்தவராக இருந்தார். மேலும், ஆண்கள் பெண்களை செயற்கையான முறையில் நடத்தக் கூடாது. அப்படி நடத்துவதெல்லாம் தவறானது. ஆகவே பெண்களும் கூட ஆண்களை இவ்வாறெல்லாம் நடத்தக்கூடாது.

ஆகவே தூய்மையான அன்பு என்றால் ஓர் ஆண் ஒரு பெண்ணை தவிர்க்க வேண்டும் அல்லது ஒரு பெண் ஓர் ஆணை தவிர்க்க வேண்டும் என்பதல்ல. மாறாக, எதிர்பாலாரிடம் மகிழ்ச்சி நிறைந்த, இன்பகரமான, அன்பான முறையில் சரியான உறவுகொள்ளும் திறமை என்பது பொருள், ஆகவே அன்பு வழியாக அத்தகைய உறவு இருவரையும் வளரச் செய்கிறது.

இந்த உறவுகளில் எல்லாம் பாலுணர்வு என்னவாகும்? இந்த உறவுகளில் பாலுணர்வு பற்றிய உள்ளுணர்வு இருக்கத்தான் செய்யும். இயல்பான, தூய்மையான, உடலளவிலான உணர்ச்சித் தாக்கங்கள் கூட ஏற்படலாம். அதை இறைவன் நமக்குள் வைத்திருப்பதால் அதை உடலில் உணருவது முற்றிலும் இயல்பானது, மனிதத்தன்மையுடையது; மேலும் அது இருவரிலும் இனிமையான அனுபவத்தைக் கொடுக்கிறது. அதுவே அந்த உறவை இனிமையானதும், அன்பானதுமாக்குகின்றது. கற்பு அல்லது தூய்மையான அன்பு என்பது ஒருவருக்கொருவரது தோழமையில், ஒருவருக்கொருவர் பேசிக்கொள்வதில் இன்பம் தருகின்ற ஒரு நற்பண்பு எனச் சொல்லலாம். அநேக நேரங்களில் இருவரிலும் இருந்து மிகச் சிறந்தவை வெளிப்படுகின்றது. இத்தகைய சூழ்நிலைகளில் படைப்பாற்றல் மலருகின்றது. இதுவே எதிர்பாலரின் முன்னிலையில் பலருக்குக் கிடைத்த அனுபவமாக இருந்திருக்கின்றது.

ஆகவே இந்த நிகழ்ச்சியிலிருந்து, நமது பாலுறவு வாழ்விலுள்ள குற்ற உணர்வுகளிலிருந்து விடுதலை பெறும்போது நமக்கு வரும் மகிழ்ச்சியைக் குறித்து நற்செய்தி நமக்குக் கூறுகிறது. மகதலா மரியாவிடம் இயேசு கொண்டிருந்த மனநிலை இந்த வகை மகிழ்ச்சிக்குச் சிறந்த சான்றாகும். அதுவே நமக்கு வழிகாட்டியாக செயல்படட்டும்.

ஆகவே தூய்மையான அன்பு (கற்பு) அழமான ஒன்று. மேலும் அது ஆணையும், பெண்ணையும் வளப்படுத்திக்கொண்டிருக்கிறது. அது கடவுளால் படைக்கப்பட்டது. ஆகவே அது நல்லது,மேலும் அது மனித இயல்பில் ஒரு பகுதியாகும். ஆகவே, நான் ஒரு மனிதனாக இருந்துகொண்டு, ஒரு பெண்ணால் கவரப்படாமல் இருந்தால் என்னிலே ஏதோ தவறு இருக்கிறது என்று நான் துணிந்து சொல்லுவேன். நீ ஒரு பெண்ணாக இருந்து கொண்டு ஒரு மனிதனால் கவரப்படவில்லை என்றால் உன்னிலே ஏதோ தவறு இருக்கிறது. அதனால் இறைவன் அதை எதுவாக இருக்க உருவாக்கினாரோ அந்த உண்மையை அப்படியே எதிர்கொள்ள அஞ்ச வேண்டாம்.

தூய்மையான அன்பு என்பது உண்மையான அன்பு என்பதை மனதில் கொள்வோம். ஏனென்றால் "எல்லாவற்றிறகும் மேலாக, நீ நீயாக இருப்பதனால், நான் உன்னை அன்பு செய்கின்றேன்" என்று ஒரு காதல் பாட்டு நிறைவு பெறுகிறது. அதில் சுயநலமே இல்லை. அருட்பணி ஜாண்சன் சொல்வது போல, "தூய்மையான அன்பு முழுவதுமாக காதலியையே மையப்படுத்தியிருந்தாலும் முரண்பாடாகத் தோன்றும் விதத்தில் அது உண்மையான மகிழ்ச்சியைக் கொண்டு வருகின்றது, மேலும் அது உண்மையிலே தன்னையே கண்டுகொள்ள வழி நடத்துகிறது".

ஆகவே தூய்மையான அன்பு என்பது இறைவனின் எத்தனை வியத்தகு கொடையாக இருக்கின்றது!

## 5. அர்ப்பணமும் வார்த்தைப்பாடுகளும்

I தொடக்கநூல் 12 : 1 - 4

II மத்தேயு 13 : 44 - 46

அருட்பணி டோனி. டி. மெல்லோயின் "பறவையின் பாடல்" என்னும் நூலில் அவர் சொல்லும் கதையிது:

காதலன் அவனது காதலியின் கதவைத் தட்டுகிறான்.

"கதவைத் தட்டுவது யார்?" என்று காதலி உள்ளேயிருந்து கேட்டாள்.

"நான்தான்" என்றான் காதலன்.

"போய்விடும். இந்த வீடு உம்மையும் என்னையும் வைத்திருக்க முடியாது" என்று காதலி சொன்னாள்.

காதலன் திரும்பிச் சென்றான்,

காதலி சொன்ன வார்த்தைகளைப் பல ஆண்டுகளாய்த் தியானித்து வந்தான். பிறகு அவன் திரும்பி வந்து மீண்டும் கதவைத் தட்டினான்.

"கதவைத் தட்டுவது யார்?" என்று காதலி கேட்டாள்.

"அது நீதான்" என்று காதலன் சொன்னான்.

உடனே கதவு திறந்தது.

இங்கே இன்னுமொரு கதை இருக்கிறது. "வணிகர் ஒருவர் நல்முத்துக்களைத் தேடிச் செல்கிறார். விலை உயர்ந்த ஒரு முத்தைக் கண்டவுடன் அவர் போய்த் தமக்குள்ள யாவற்றையும் விற்று அதை வாங்கிக்கொள்கிறார். விண்ணரசு அந்நிகழ்ச்சிக்கு ஒப்பாகும்" என்று இயேசு சொல்கிறார்.

அர்ப்பணத்தை செயல்முறைப்படுத்தும் வழிமுறைகளை இந்த இரண்டு கதைகளும் நமக்குக் கூறுகின்றன. இயேசு திருத்தூதர்களை அழைத்தபோது எல்லாவற்றையும் விட்டுவிட்டு அவரைப் பின்செல்ல வேண்டும் என்று எதிர்பார்த்தார், "எல்லாவற்றையும்" எனும்போது தங்கள் சுயத்தையே இழப்பதைக் குறிக்கும்.

"தன்னையே இழக்கும் எவரும் அதைக் கண்டு கொள்கிறான்" என்றார் இயேசு.

ஓர் இளைஞன் ஒரு பெண்ணைக் காதலிக்கும் போது, செய்யக் கூடிய எந்தத் தியாகமும் மிகப்பெரியதாகத் தெரியாது. ஏனென்றால் அவனது காதலில், தன்னையே அவளுக்குக் கொடுத்து விட்டான். நாம் எல்லாரும் அர்ப்பணிக்கப்பட்டவர்களாக இருக்கிறோம். விலையேறப் பெற்ற முத்தை நாம் கண்டு கொண்டதனால் உலகிலுள்ள எதற்கும் ஈடாக அதைக் கொடுக்க விரும்ப மாட்டோம்.

ஆனால் அர்ப்பணம் மாறாதது என்ற நாம் நினைக்கக் கூடாது. துறவற வாழ்வில் சேர்ந்த உடன் அர்ப்பண நிறைவை அடைந்து விடுவதில்லை. முந்தைய காலத்தில் துறவற வாழ்வு என்பது நிறைவு பெற்றுவிட்ட ஓர் அந்தஸ்தாக விவரிக்கப்பட்டது. துறவற வாழ்விற்குள் நுழைவது என்றால் நிறைவு பெற்றுவிட்ட ஓர் அந்தஸ்த்திற்குள் நுழைவது என்று சொல்லுவது சரியல்ல. துறவற வாழ்வு என்பது ஓர் வாழ்க்கை முறை எனினும் துணிகரமான ஒன்று. இயேசுவோடு வாழ்வதற்காக அவரைப் பின் தொடர விரும்பினவர்களிடம் "வந்து பாருங்கள்" என்று சொன்னார். பல இடையூறுகளைக் கொண்டதாகவும் பல கஷ்டங்களைத் தாங்கிக்கொள்ள வேண்டியதாகவும் அது இருக்கிறது. இவற்றைத் தாங்கிக்கொள்வதிலும் மீண்டும் மீண்டும் தூய்மையான நிலையில் வெளிப்படுவதிலும் தான் வளர்ச்சி காணப்படுகிறது. தாங்கிக்கொள்ள வேண்டிய இடையூறுகளும் கஷ்டங்களும் தொடர்ந்து வந்தாலும் அங்கே சோர்ந்திருக்க நேரம் இருப்பதில்லை. அங்கே எப்போதும் சில சவால்கள் இருந்து கொண்டேயிருக்கும். படைப்பாற்றலுடன், தனித்தன்மையுடன் செயல்படவும், நம்மிடமிருந்து மிக நல்லவற்றை வெளிக்கொண்டுவரச் செய்யக் கூடியனவும் எப்போதும் அங்கு உண்டு.

அர்ப்பணம் என்பது நம்மிடமுள்ள எல்லாவற்றையும் அளித்து விட அழைக்கிறது. அரைகுறையாக அளிப்பது என்பது அர்ப்பணித்து விட்ட ஒருவரின் வழிமுறையாகாது. அது எப்போதும் ஒரு கன்னத்தில் அறைந்தால் மறுகன்னத்தைக் காட்டச் செய்கிறது. தீங்கிழைப்பவர்களுக்கும் எப்போதும் நன்மை செய்யவும் மற்றவர்கள் எதிரிகளாக இருந்தாலும் எப்போதும் அன்பு செய்யவும், எழுபது முறை ஏழுமுறை மன்னிக்கத் தயாராக இருக்கவும் செய்கிறது. இயேசுவைப்போல இறைவனுக்குப் பணி செய்ய தனது வாழ்வை அர்ப்பணித்த ஒருவரது "குறுகலான வழி" (narrow way) இது.

நான் துறவி என்பதால் ஏழ்மை, கற்பு, கீழ்ப்படிதல் எனும் வார்த்தைப்பாடுகள் வழியாக இந்த அர்ப்பணத்தை உறுதி செய்கிறேன். "என் சீடராய் இருக்க விரும்பினால் தன்னலம் துறந்து தம் சிலுவையைத் தூக்கிக் கொண்டு என்னைப்பின்பற்றட்டும்" என்று இயேசு சொன்னார். நான் ஒரு துறவியாக இருப்பதால், இந்த வார்த்தைப்பாடுகளின்படி வாழ்வதைவிட சிறந்த வழி எதுவும் எனக்குத் தெரியவில்லை. இந்த மூன்று வார்த்தைப்பாடுகளும் நற்செய்தி அறிவுரைகளுக்கு (Evangelical counsels) இணையானவை என்று நாங்கள் அடிக்கடி குறிப்பிடுகின்றோம். ஆயினும் அந்த வார்த்தைப்பாடுகள், நற்செய்தி அறிவுரைகளின் முழுமையல்ல என்பதை நினைவில் கொள்ள வேண்டும். நற்செய்தியில் குறிப்பிடப்படும் எல்லா மதிப்பீடுகளின்படியும் உள்ள வாழ்வை நற்செய்தி அறிவுரைகள் பரிந்துரைக்கின்றன.

இந்த மூன்று வார்த்தைப்பாடுகளும் விசுவாசிகளின் கூட்டத்திலிருந்து துறவிகளைப் பிரித்து வைக்கக் கூடாது. மாறாக "திருச்சபையில் இறைவனுக்குச் செய்கின்ற ஆழமான அர்ச்சிப்பின் வழியாக, துறவற அழைப்பின் மிக நெருக்கமான ஒன்றிப்பை துறவறவாழ்வு தெளிவாகக் காட்டுகிறது, உணர்த்துகிறது" என்று இரண்டாம் வத்திக்கான சங்கம் சொல்கிறது. ஆகவே இவ்வுலகில் ஒவ்வொரு கிறிஸ்தவனும் தனது வாழ்வில் எத்தகைய வாழ்விற்கு அழைக்கப்பட்டிருக்கிறான் என்பதை இந்த வார்த்தைப்பாடுகள் தெளிவாக எடுத்துரைக்கின்றன. சொத்து, பாலுறவு இன்பம், சுதந்திரம் ஆகியவை மட்டுமே அடிப்படையான மதிப்பீடுகள் இல்லை என்றாலும், இவற்றையே மதித்துவாழும் சமுதாயத்திற்குச் சான்று பகரும் வகையில், கிறிஸ்தவ வாழ்வை வாழ்வதற்கு இந்த வார்த்தைப்பாடுகள் வழியாக துறவிகள் கடும் முயற்சி செய்கின்றனர். அன்பே மதிப்பீடுகளில் எல்லாம் தலைசிறந்தது.

ஏழ்மை (தரித்திரம்) எனும் வார்த்தைப்பாடு எடுத்துரைப்பது என்ன? இவ்வுலகப்பொருட்கள் மிக அவசியமானவை என்றாலும் அவை நம்மை ஆட்டிப்படைக்கின்ற ஒன்றாக மாறக்கூடாது. விண்ணக வீட்டைச் சென்று அடையும் வரை, உலகிலுள்ள சகோதர சகோதரிகள் உயிர்வாழவும், வளரவும், பணிபுரியவே இவ்வுலகப் பொருள்கள் இருக்கின்றன. ஆகவே ஏழ்மை என்னும் வார்த்தைப்பாடு

உலகத்திலுள்ள பேராசைக்கு எதிரான சாட்சியாகும். ஆகவே துறவியர் கொடுக்கின்ற ஏழ்மை எனும் வார்த்தைப்பாடு பேராசைக்கு எதிரான சான்றாக அமைய வேண்டும்.

கற்பு என்னும் வார்த்தைப்பாடு சொல்லுவது என்ன? ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே இறைவன் வைத்திருக்கிற பாலுறவு கவர்ச்சி நம்மை ஆட்டிப்படைத்து, இழிநிலைக்குக் கொண்டு போக விட்டுவிடக் கூடாது என்பதை கற்பு எனும் வார்த்தைப்பாடு உலகிற்குப் பறைசாற்றுகிறது. ஆண், பெண்ணின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்காக மட்டுமல்ல, மனித இனத்தின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்காகவும் பாலுறவு கவர்ச்சியைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க வேண்டும். கற்பு எனும் வார்த்தைப்பாடு உலகின் பாலுறவின் இழிந்த நிலைக்கு எதிரான சான்றாக இருக்கின்றது. ஆகவே துறவியரின் கற்பு எல்லாவிதத்திலும் பாலுறவின் இழிநிலைக்கு எதிர்த்து நின்று சான்று பகர வேண்டும். ஒவ்வொரு மனிதனும் தனது மனிதத்தன்மையில் வளர்ச்சியடைய பாலுணர்வு உந்துதலை மறுப்பது மட்டும் அல்ல, மாறாக தூயஅன்பில் நிலைத்திருப்பது தேவைப்படுகிறது.

கீழ்ப்படிதல் எனும் வார்த்தைப்பாடு உணர்த்துவது என்ன?

கீழ்ப்படிதல் எனும் வார்த்தைப்பாடு வழியாக உலகிற்குப் பறைசாற்றுவது என்னவென்றால் நமது இறைவன் நமக்கு அளித்த சுதந்திரம் நாம் இறுதியாக அடையவேண்டிய மனித மதிப்பீடு அல்ல; மாறாக, இயேசு செய்தது போல, தாழ்ச்சியும் அன்பும் கொண்டு இறையாட்சியை மண்ணுலகிலே நிலைநாட்டவும், அதைக் கட்டி எழுப்பவும் பயன்படுத்தப்பட வேண்டிய ஒன்று சுய கௌரவமும் பெருமையும் தேடுகின்ற உலகிற்கு எதிராக, சுயநலமும் பெருமையும் அநீதியும் ஆளுகின்ற இவ்வுலகில், மண்ணுலக அரசாட்சிக்கு எதிராக சான்று பகர வேண்டும். ஆகவே துறவறவாழ்வில் கீழ்ப்படிதல், பெருமைக்கும் சுயநலத்திற்கும் எதிரான சான்றாகும்.

முதன்முதலாக, துறவியர் நாம் உண்மையில் எவ்வளவு தூரம் 'ஏழை' என்பதையும், பேறு பெற்றோரின் மதிப்பீடுகளுக்கு எவ்வளவு தூரம்

சான்று பகர்கின்றோம் என்பதையும் ஆத்ம சோதனை செய்து பார்க்கலாமா?

இரண்டாவதாக நாம் பறைசாற்றுகின்ற நற்செய்திக்கு நமது கற்பு (தூய அன்பு) ஒரு சாட்சியாகவும், அன்பின் வெளிப்படாகவும் இருக்கிறதா?

மூன்றாவதாக, இயேசு அவரது தந்தைக்குக் காட்டிய கீழ்ப்படிதல் சுதந்திரமானதாக, அவரது காலத்தின் அநீதியான மத்த தலைவர்களின் அதிகாரத்திற்கு வளைந்து கொடுக்காததாக இருந்தது போல, நமது கீழ்ப்படிதல் இருக்கிறதா?

நம்மைச் சுற்றியுள்ள உலகத்திலே, ஒவ்வொரு கிறிஸ்தவனும் நற்செய்தியின் மதிப்பீடுகளுக்குச் சான்று பகர வேண்டும். துறவறவாழ்வின் வழியாக, நற்செய்தியின் மதிப்பீடுகளுக்கு அர்ப்பணமுள்ள சாட்சிகளாக வாழ நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். ஆகவே நமது அர்ப்பணத்தை உறுதி செய்யும் வகையில் நாம் வார்த்தைப்பாடுகள் எடுக்கிறோம்.

நிறைவு செய்யும் படியாக, நாம் தொடங்கின இடத்திற்கே திரும்பிச் செல்வோம். “யார் தட்டுகிறார்?” என்று ஆண்டவர் கேட்கும் போது, நமது பதில் “அது நீர்தாம் ஆண்டவரே” என்றிருந்தால் அவர் மகிழ்ச்சியோடு கதவைத் திறப்பார். அவரது இல்லத்தில் என் வாழ்நாளெல்லாம் அவரோடு குடியிருக்க என்னை வரவேற்பார்.

# 6. நம் வாழ்வில் துன்பங்கள்

I பிலிப்பியர் 1:1214, 1820

II யோவான் 19:17-30

1. மனித வாழ்வில் ஒரு பகுதி துன்பங்கள், துன்பத்தை யாருமே விரும்புவதில்லை, இருந்த போதிலும் துன்பங்கள், தவிர்க்க முடியாதவை. பணக்காரரோ அல்லது ஏழையோ எல்லோருக்கும் துன்பத்தில் பங்கு உண்டு. "துன்பப்படாமல் இருக்க எல்லா ஆற்றலையும் நாம் பயன்படுத்தி முயற்சி செய்தாலும் துன்பப்படத்தான் வேண்டியிருக்கிறது. மற்றவர்களின் துன்பங்களைப் பார்க்காதபடி மறைத்துக்கொள்ள எவ்வளவு முயற்சி எடுத்தாலும், நாம் அவர்களது வேதனையைப் பார்க்கத்தான் செய்கிறோம். மற்றவர்களின் துன்பங்களை நாம் கூர்ந்து கவனிப்பதில் மட்டும் இல்லை, தனிப்பட்ட முறையில் நாம் அதில் பங்கு பெறுகிறோம். ஆனாலும் நாம் துன்பங்களிலிருந்து நல்ல போதனையும் வளர்ச்சியும் அடைகிறோம். துன்பம் ஒரு மறைபொருளானது தவிர்க்க முடியாதது, மனிதருக்கு இயல்பானது என்பதில் சந்தேகமில்லை" என்கிறார் கார்ல் ராணர் (Carl Rahner). ஆகவே பணக்காரரோ அல்லது ஏழையோ எல்லோருக்கும் துன்பங்களில் பங்கு உண்டு.

2. ஆனால் ஏழைகள் தங்களது உடமைகள் பிடுங்கிக் கொள்ளப்படுவதனால் அதிகப்படியான துன்பங்களைத் தாங்கிக் கொள்ள வேண்டியிருக்கிறது. இயேசு மனிதத்தன்மையோடு, ஒன்றிப்பதற்காக துன்பங்களை மட்டும் தெரிந்து கொள்ளவில்லை. மேலும் ஏழைகளோடும் ஒடுக்கப்பட்டவர்களோடும் கூட ஒன்றாகினார். அவர்களைப் போல எல்லாத் தேவைகளுக்காகவும் அவர் துன்பப்பட்டார். அவர் உலகில் சித்திரவதை செய்யப்பட்டதாலும் வலியினாலும் துன்பம் அடைந்தார். அவர் தாழ்வுக்குரிய சிலுவைச் சாவினால் துன்பத்துக்குள்ளானார். ஆயினும் எல்லாவிதத் துன்பங்களையும் தாங்கிக்கொண்டார். இயேசுவின் வாழ்வை

அவரது துன்பங்கள் இல்லாமல் நாம் நினைத்துப் பார்க்க முடியுமா? முள்ளில்லாமல் ஒரு ரோஜாவை நினைத்துப்பார்க்க முடியுமா?

3. இயேசு அனுபவித்த துன்பங்கள் அவர் நம்மீது கொண்ட அன்பின் வெளிப்பாடாகும். அன்பு செய்கின்ற எவரும் துன்புறுகின்றனர். ஒரு குழந்தை நோய்வாய்ப்படும்போதோ அல்லது எந்த வகையிலாவது துன்பப்பட்டலோ அதன் தாயும் துன்புறுகின்றாள். தனது நண்பன் துன்பப்படும்போது அவனது நண்பனும் துன்புறுகிறான். ஒரு நண்பனுக்காகத் தன் உயிரைக் கொடுப்பதைவிட மேலான அன்பு யாரிடமும் இல்லை என்று இயேசு சொல்கிறார். அதையே இயேசு நமக்குச் செய்தார், அவர் அதைவிட அதிகமாக செய்தார், தூய பவுல் சொல்வது போல, பாவத்தின் வழியாக நாம் அவருக்கு பகைவர்களாக இருந்த போதிலும் அவர் நமக்காக இறந்தார்.

ஆகவே, இயேசு அவரது வாழ்வு, சிலுவை, உயிர்ப்பு வழியாக துன்புறும் வழியை நமக்குக் காட்டியுள்ளார்.

4. ஆகவே இயேசு செய்ததுபோல் நமது துன்புறும் பணியும் மூன்று நிலையில் உள்ளன (i) நமது துன்பங்கள் வழியாக *நாமும்* நம்வாழ்வும் வளர்ச்சியடையச் செய்ய வேண்டும், கிறிஸ்தவ அன்பில் வளரவும் பக்குவப்பட்ட நிலை அடையவும் வேண்டும். (ii) இயேசு சிலுவை வழியாக செய்தது போல நாமும் மற்றவர்களுடைய தேவைகளிலும், வேதனையிலும் மனதுருக்கத்துடள் நம்மையே கையளிக்க முன்வருவதற்குத் துன்பங்கள் நமக்கு ஆற்றலளிக்கிறது, எந்த கைம்மாறும் இல்லாத நிலையில், பிறர் நன்றி கெட்டவர்களாய் இருந்தாலும், அவர்களைப் பேணுகிற கடிமான பணிக்காக உதவிக்கரம் நீட்டுவது நம்மேல் சுமத்தப்பட்ட கடமையாகிறது. பிறரை அன்பு செய்வது உண்மையிலே கடினமானப் பணி. இயேசு செய்ததுபோல பிறருக்காக ஒருவருடைய உயிரைக் கையளிக்கும் பணியை நாம் செய்யும் போது, அது மற்றவர்களிலே குணமளித்தலைக் கொண்டு வருகிறது. நாம் பாவிகளாக இருந்த

பொழுதே இயேசு நமக்காக உயிரைக்கொடுத்தார். (iii) மூன்றாவது கடினமானப் பணி, அது முதல் இரண்டையும் தொடருகிறது. துன்பங்கள் வழியாகவும், இறைவனுக்கு நமது வாழ்வை முழுவதுமாக அர்ப்பணிப்பதன் வழியாகவும், தூய பவுல் சொல்லுவது போல 'வாழ்வது என்பது கிறிஸ்துவே' என்று நாமும் சொல்ல முடியும்போது அது கிறிஸ்துவை மையமாக கொண்டதாகிறது. நம் துன்பங்கள் வழியாக நாம் கிறிஸ்துவைப் போலாகிறோம். தேய்ல்கார்டு தே சார்டின் (Theilhard de chardin) என்பவர் துன்பங்களின் மூன்று கடினமான பணிகளையும் பற்றி ஓர் இயங்கச் செய்யும் செயல்முறை ஒன்றைக் குறிப்பிடுகிறார். அவர் அவைகளை மையநிலை (centration), மையம் அகற்றும் நிலை (decentration), மையம் மேம்படுத்து நிலை (surcentration) என்று அழைக்கிறார். மையநிலை என்பது நம்மையே மையப்படுத்தி நமக்காகவே கிறிஸ்துவில் வாழும் புதுவாழ்வைக் குறிக்கிறது. மையம் அகற்றும் நிலை என்பது தன்னலம் துறந்தவராய் பிறரது துன்பங்களில் அவர்களுக்கு உதவிக்கரம் நீட்டுவதைக் குறிக்கிறது;மேலும் மையம் மேம்படுத்தும் நிலை என்பது சுயத்தை கடந்து சென்று, துன்பங்கள் வழியாக மற்றொரு கிறிஸ்துவாக மாறுவதைக் குறிக்கிறது. இவற்றையெல்லாம் துன்பங்கள் நமக்குச் செய்கின்றன.

ஆனால் துன்பங்கள் எவ்வளவு நமக்கு பயனளிக்கின்றன என்று எவ்வளவுதான் நல்ல காரியங்களைப் பற்றி நான் எடுத்துரைத்த போதிலும்,நம்மை வருத்தும் துன்பங்கள் நேரும்போது நாம் மனக்குழப்பத்திற்கு உள்ளாகி, மனதைரியமிழந்து விடுகிறோம். நாம் இயேசுவிடம் சென்று இறைவேண்டலில் எல்லாவற்றையும் அவர்முன் சமர்ப்பித்துவிட வேண்டும். அவர் துன்பங்களைச் சுமந்து கொண்டது போல, நம் துன்பங்களையும் தாங்கிக் கொள்ள உதவுவார். எம்மாவுஸ் சீடர்களுக்கு செய்தது போல, நமது மனவருத்தத்தை மகிழ்ச்சியாக மாற்றுவார். அவர் நம் அருகில் இருக்கும்போது நாம் ஏன் அஞ்ச வேண்டும்?.

ஆகவே நாம் செய்ய வேண்டியவை தாங்க முடியாத அளவு கடினமாகும் பொழுது 'அவர் வந்து நம்மோடு தங்க வேண்டும்' என நாம் அவரை அழைத்தால் போதும். பிறகு எந்த நோய்களும், தோல்விகளும் உற்சாகமிழக்கச் செய்பவைகளும் நம்மை வருத்தப்படுத்தவோ, கலக்கமுறவோ செய்யாது; ஏனென்றால் அவர் மீண்டும் தம் அன்பால் நம் உள்ளத்தை நிரப்புவார். மேலும் நம் உள்ளம் அளவுகடந்த அன்பால் பற்றி எரியச் செய்வார்.

ஆகவே ஒரு சிலர் குறிப்பிடுவது போல, "வாழ்வு உங்களுக்கு துன்பங்களைக் கையளிக்கும் போது, உங்கள் துன்பங்களை இறைவனின் கரங்களில் ஒப்படையுங்கள்".

நான் இறைவேண்டல் செய்கிறேன் : ஆண்டவரே! உமது துன்பங்களாலும், சிலுவையினாலும் துன்பப்படுவதன் பொருள் என்ன என்று எனக்குக் கற்றுத்தாரும். துன்பங்களை விட்டு ஓடுவதற்கு அல்ல, துன்பங்களை எடுத்துக்கொண்டு விரைந்து நடக்க எனக்குக் கற்றுத்தாரும். துன்பப்படுகிறவர்களுக்கு உதவி செய்யவும், அவர்களது துன்பத்தில் ஆதரவு அளிக்கவும், துன்பத்தில் பங்கு பெறவும் கற்றுத்தாரும். துன்பங்களைத் தாங்குவது கடினமாக இருக்கின்றது. ஆனால் நீர் விரும்பி ஏற்றுக்கொண்ட உம் துன்பங்களாலும் சிலுவையினாலும் மிக அன்போடு ஏற்றுக்கொண்ட உமது சாவினாலும், என்னை இன்னும் சிறந்தொரு நபராக்கி, என் இதயத்தில் அன்பு பெருகச் செய்யும். என்னை மென்மேலும் *மற்றவர்களுக்காக அர்ப்பணிக்கச் செய்வதில்* துன்பங்களுக்கு ஓர் இடமுண்டு என எனக்குத் தெரியும். ஆண்டவரே, துன்பம் உணர்த்தும் இந்த பாடத்தை நீர் எனக்கு கற்றுத்தந்தமைக்காக நன்றி.

## 7. குழுவாழ்வு (Community life)

I கொலோசையர் 3:12-17

II யோவான்1 : 35-39

1. ஒரு கால்பந்து ஆட்ட அணி வெற்றி பெற வேண்டும் எனில் குழுவினரிடையே ஒற்றுமை காணப்பட வேண்டும். "ஒரே அணியாக சேர்ந்து விளையாட வேண்டுமானால், ஒருவருக்கொருவர் அக்கறை காட்ட வேண்டும், ஒருவர் மற்றவரிடம் அன்பு கொண்டிருக்க வேண்டும்" என்ற ஒரு தலைசிறந்த கால்பந்தாட்ட பயிற்சியாளர் வின்செண்ட் லொம்பார்டி (Vincent Lombardi) சொன்னார். "நடுத்தரமானது அல்லது தலைசிறந்தது எனும் வேறுபாடு அதன் அணியினர் ஒருவருக்கொருவர்மீது வைத்திருக்கும் ஒற்றுமை உணர்வைப் பொறுத்திருக்கிறது" என்று அவரே தொடர்ந்து சொல்கிறார்.

தொடக்கால திருச்சபையில் மறைசாட்சி ஜஸ்டின் கிறிஸ்தவத்தின் பாதுகாப்பு பற்றி சிறந்தொரு சொற்பொழிவு ஆற்றினார். உரோமின் ஆட்சியாளருக்கு எழுதும்போது கிறிஸ்துவை நம்புவோருக்கு எத்தகைய உருமாற்றத்தைக் கொண்டு வருகின்றார் என்று இவ்வாறு நாடகப்பணியில் விளக்குகிறார். "நாங்கள் கிறிஸ்தவர்களாவதற்கு முன்னால் . . . நாங்கள் எல்லாவற்றிற்கும் மேலாக பணத்திற்கும் உடைமைகளுக்கும் மதிப்பு கொடுத்தோம். இப்பொழுது நாங்கள் எங்களிடம் இருப்பவைகளை எல்லாம் கொண்டு வந்து தேவையில் உழல்பவர்களிடம் பகிர்ந்து கொள்கிறோம். முன்னால் நாங்கள் ஒருவரை ஒருவர் வெறுத்தோம், கொன்றோம். இப்பொழுது . . . நாங்கள் எல்லாரும் அமைதியில் வாழ்கிறோம். நாங்கள் எங்கள் பகைவர்களுக்காகவும் இறைவேண்டல் செய்கிறோம்; அநியாயமாய் எங்களை வெறுப்பவர்களையும் நாங்கள் நண்பர்களாக்க முயற்சி செய்கிறோம்".

ஆகவே துறவிகள் எனும் முறையில் வெளியில் சென்று பிறருக்கு நம்மிடம் உள்ள அன்பைக் காட்டும் முன்னால் நமது குழு உறுப்பினர்களிடம் அன்பைக் கண்டிப்பாகக் காட்டியாக வேண்டும்.

இயேசு அவரது திருத்தூதர்களைக் கொண்ட ஒரு சிறு குழுவை அமைத்தார். அவர்களுக்கு அவர் எவ்வளவு தேவைப்பட்டாரோ அதே அளவுக்கு அவர்களும் அவருக்குத் தேவைப்பட்டனர். இறுதி இரா உணவின்போது அவரது பாராட்டை அவர் வெளிப்படுத்தினார். அவரது சோதனை வேளையிலே அவர்களது ஆதரவைத் தேடினார். அவரது மகிழ்ச்சிகளையும், துக்கங்களையும் அவர் அவர்களோடு பகிர்ந்து கொண்டார். அவர்கள் தங்களிடம் உள்ளவற்றை எல்லாம் அவரோடு பகிர்ந்து கொண்டனர். அவர்களிடையே வேறுபாடுகள் சண்டைகள் கருத்து வேற்றுமைகள் இருந்தாலும் அவர்கள் ஓர் அன்பு குழுவாகவே உருவாகியிருந்தனர். நமது வளர்ச்சிக்காக மற்றவர்களின் ஆதரவு நம் எல்லோருக்கும் தேவை. எனக்கு உற்சாகப்படுத்துதல் தேவை, அன்பு தேவை, பாராட்டு தேவை. எதனை அடைய வேண்டும் என்றாலும் எனக்கு மற்றவர்களின் ஒத்துழைப்பும் தேவை. இத்தேவைகள் நிறைவேற வேண்டுமானால் குழுவிலே அன்புள்ள ஓர் சூழ்நிலையை நாம் கண்டிப்பாக உருவாக்க வேண்டும்.

அத்தகைய சூழ்நிலையை நமது குழுவிலே எவ்வாறு உருவாக்குவது? இயேசு எப்பொழுதும் மனித நேயத்தை வலியுறுத்தி வந்தார். எவரையும் விட்டு விடாமல் எல்லோருடனும் எல்லாவற்றிற்காகவும், வாழ்வு, பொருள்கள், நபர்கள் ஆகிய எல்லாவற்றிலும் கூட நல்லுணர்வோடு இருக்க வேண்டும். ஒருவர் தங்களது இதயக்கதவை அடைத்து விடுவதன் வழியாக மட்டுமே ஒருவர் தன்னை தனிமைப்படுத்திக்கொள்ள முடியும். அவ்வாறு மனதைக் கடினப்படுத்தும் போதே உணர்வுநிலை அற்றுப்போகும்.

ஒருவரது *முன்புசார்பு எண்ணம்* வழியாக உருவாகும் இந்த மனக்கடினம் நல்லுணர்வுடையவராக மாறுவதற்கு முதன்மையான தடையாகும். நாம் ஒரு நபர், அல்லது பொருள், அல்லது சூழ்நிலை பற்றிய முன்தீர்மானத்துடன், அவற்றைக் கணித்து விடுகிறோம். ஒரு நபர் பேசும் முன்னதாகவே அல்லது நபரை சந்திக்கும் முன்னதாகவே தீர்ப்பிடுகிறோம். நாம் முன்புசார்பு எண்ணத்துடன் இருந்தால், அந்த நபரை அந்த எண்ணத்துடனே பார்ப்போம். ஒருவர் இருப்பது போல

அந்த நபரை பார்க்கமாட்டோம். வேறுவார்த்தைகளில் சொல்வதானால் அந்த நபரை மீண்டும் சரியாகப் பார்க்கத் தவறிவிடுவோம். இதுவரை பார்க்காத ஒரு நபரின் உணர்வுகளை நாம் எப்படி புரிந்து கொள்ள முடியும்?

ஒரு சீனக்கதை இதை நன்றாக விளக்குகிறது. " 'சாங்க்' அவனது கோடாரியைத் தொலைத்துவிட்டான். அவன் தனது அண்டைவீட்டில் உள்ளவரின் மகன் 'வூ' (Wu) திருடியிருக்கலாம் என சந்தேகப்பட்டான். அவன் கண்ணாடி வழியாக அந்த பையனைக் கவனித்துக்கொண்டு நின்றபோது அவனது நெற்றியில் ஒரு தழும்பு இருப்பதைக் கவனித்தான். "அவன் கண்டிப்பாக ஒரு திருடனைப் போலவே தெரிகிறான்" என்று சாங்க் நினைத்தான். பிறகு அவன் தனது சகோதரனுடன் பேசிக்கொண்டு இருந்ததைக் கேட்டான். "ஒரு திருடனைப்போலவே பேசுகிறான்" என்றும் நினைத்தான். அந்தப் பையன் நடக்க ஆரம்பித்தபோது சிறைக்கு வழிநடத்திச் செல்லும் ஒருவனைப் போலவே அந்தப் பையன் நடப்பதாக சாங்கிற்குத் தோன்றியது. அந்தநேரத்தில், அவன் மனைவி கையில் கோடாரியுடன் விரைந்து வந்தாள். "வைக்கோல் புதரில் அது விழுந்து கிடந்தது" என்று அவள் விளக்கினாள். கோடாரியைப் பார்த்தபொழுது சாங்கின் முகம் மகிழ்ச்சியினால் பிரகாசித்தது. சன்னல் வழியே பார்த்துக் கொண்டிருந்த அவருடன் வந்து சேர்த்து பார்த்த அவரது மனைவி "எதைப்பார்த்து கொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டாள். நம் அண்டை வீட்டுப் பையனைக் கவனித்துக் கொண்டிருக்கிறேன். அவன் பார்க்கிற விதம், பேசுகிற மற்றும் நடக்கிற விதத்தைப் பார்த்தாலே அவன் ஒரு முழுமையான பண்பாளன் என்பதை எளிதாகச் சொல்லிவிட முடியும் என்று சாங்க் சொன்னான்".

உங்களுடைய குழுவில் யாரையாவது எடுத்துக்கொள்ளுங்கள். அவர் சுயநலவாதி அல்லது கொடூரமானவர் அல்லது இதைப்போன்று எதையாவது சொல்லும் நொடியிலே நீங்கள் மனதைக் கடினப்படுத்தும் பார்வை கொண்டவராகவும் முன்சார்பு எண்ணம் உடையவரும் ஆகி விடுகிறீர்கள். அவர் இருக்கும் உண்மை நிலையிலே அவரை நீங்கள் பார்க்கமாட்டீர்கள். இவைகள் முன்சார்பு எண்ணத்துடன் எடுக்கப்பட்ட முடிவுகள் சரியான சிந்தனைகள் அல்ல என்பதை நீங்கள் உணர்ந்தால்

உங்கள் தவறான எண்ணம் மாறிவிடும். மேலும் அன்பு மீண்டும் சுடர்விடும்.

இவ்வாறு மீண்டும் அன்புடையவராகும்போது, எல்லோரையும் புதிய பார்வையில் பார்க்கத் தொடங்கலாம். முன்பு யாரோடெல்லாம் மனக்கடினத்தோடும், குறுகிய மனநிலையோடு நடந்து கொண்டோமோ அவர்களுடனும் தாராள குணம்,மன்னிக்கும் மனம், இரங்கும் இதயம் கொண்டவர்களாக மாற முடியும். நாம் அவ்வாறு செய்தால் மக்களும் அதே போல் பதில்கொடுப்பதை விரைவில் கண்டு கொள்ளலாம். ஆகவே அன்பினால், நாம் படைத்த அன்பு உலகிலே வாழ்ந்து கொண்டிருப்பதை நாமே கண்டு கொள்ள முடியும்.

ஒரு மடம் பற்றிய நிகழ்ச்சி இது. ஒரு காலத்தில் நூறு துறவிகள் கொண்ட செழித்து விளங்கிய ஒரு மடமாக அது விளங்கியது. ஆனால் படிப்படியாக எண்ணிக்கையில் குறைய ஆரம்பித்தது. சேரவேண்டியவர் யாரும் புதிதாக வந்து சேரவில்லை, வயதானவர்கள் இறந்து கொண்டிருந்தனர். துறவிகளின் மட அதிபரும் துறவிகளும் என்ன நடக்கப்போகிறது என்பது குறித்து வியந்து கொணடிருந்தனர். ஒருநாள் அருகிலுள்ள ஆசிரமத்திற்கு ஒரு விழாவிற்காக துறவற மட அதிபர் அழைக்கப்பட்டிருந்தார். அந்த விழா முடிந்தவுடன் மடஅதிபர் அங்குள்ள குருவிடம் ஒரு பிரச்சனையைக் குறித்து அவரோடு பேச விரும்புவதாகச் சொன்னார். அவரது இறந்து கொண்டிருந்த மடத்தின் பிரச்சனை குறித்து அவர் பேசினார். குரு மிகக் கவனமுடன் செவிமடுத்துவிட்டுப் பிறகு இவ்வாறு சொன்னார்: “உங்கள் குழுவிலே ஒரு மீட்பர் மாறுவேடத்தில் இருக்கிறார், ஆயினும் நீங்கள் அவரை அடையானம் கண்டு கொள்ளவில்லை என்பதுவே உங்கள் மடத்தின் பிரச்சனை”. மட அதிபர் திரும்பி வந்து துறவிகளிடம் அந்த குரு சொன்னதைச் சொன்னார். பிறகு ‘அ’ என்பர் ‘ஆ’வைப் பற்றி நினைத்துக் கொண்டிருந்தபோது, “அவர் ஒரு விமரிசகனாக இருப்பதனால், அவர் மெசியாவாக இருக்க முடியாது” என்று நினைத்துக் கொண்டிருந்தார். ஆனால் *மாறுவேடத்தில்* மெசியா இருக்கிறார் என்று குரு சொன்னார் என்பதை அவர் மீண்டும் நினைவு

கூர்ந்தார். ஆகவே அவர், அடுத்த நபரைப்பற்றிய எண்ணத்தை மாற்றி, அதிக மகிழ்நோக்குடன் சிந்திக்கத் தொடங்கினார். இதைப் போன்று ஒவ்வொருவரும் அடுத்தவரைப்பற்றி மகிழ்நோக்குடன் சிந்திக்க தொடங்கினர். அன்பு வளர ஆரம்பித்தது, மேலும் அக்களிப்பும், மகிழ்ச்சியும் அவர்களது வாழ்விலே திரும்பி வந்ததால், அதே அளவிற்கு ஏராளமான கேளிக்கைகளும், சிரிப்பொலியும் சூழ்ந்து கொண்டன.. அடுத்திருப்பவர்கள் மடத்தில் என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பதைப் பார்க்க வந்தனர். துறவிகள் எவ்வளவு மகிழ்ச்சியாய் இருக்கின்றனர் என்பதைப் பார்த்து அந்த ஊரிலுள்ள இளையோர் மடத்தில் வந்து சேரத் தொடங்கினர். படிப்படியாக மீண்டும் அந்த மடம் செழிப்படையத் தொடங்கியது.

ஒரு பயிற்சியாக உங்கள் குழுவில் உள்ள ஒவ்வொரு நபரையும் தனித்தனியாக எடுத்து இந்த முறையில் அவர்களை உற்றுப்பார்க்கும்போது அவர்கள் எப்படி உருமாற்றம் அடைகிறார்கள் என்பதை உங்கள் கண்களாலேயே காணலாம்.

ஆகவே இந்தமுறையில் நம்மைச்சுற்றிலும் அன்பு வளர ஆரம்பிக்கின்றது. மேலும் குழுவாழ்வு அன்பும் மகிழ்ச்சியும் நிரம்பிய அனுபவமாகிறது. மேலும் உங்கள் நிறுவனம் எந்தக் குறிக்கோளுக்காக நிறுவப்பட்டதோ அதை நிறைவேற்ற உங்களுக்கும் உங்கள் குழுவில் உள்ள ஒவ்வொருவருக்கும் துணை நிற்க வேண்டிய நோக்கத்தை அது மீண்டும் அடைகிறது.

அன்பால் உருவாகும் வேறுபாட்டை உலகிற்குக் காட்ட அது சிறந்த வழி, அப்படி செய்தால் தொடக்க கால கிறிஸ்தவர்களைப் பார்த்து, "பாருங்கள், அவர்கள் ஒருவரை ஒருவர் எவ்வளவு அன்பு செய்கிறார்கள்" என்று சொன்னதைப்போல உலகம் நம்மைப்பார்த்தும் சொல்லும்.

## 8. நற்செய்தி பகிர்வு

I திருத்தூதர்பணி 10: 34-33

II மாற்கு 16: 15-20

நான் தேர்ந்து கொண்ட நற்செய்தி வாசகமானது மாற்கு வடிவமைத்தபடி இயேசு விண்ணகம் ஏறிச் செல்லும்முன் இவ்வுலகைவிட்டுப் பிரிந்து செல்லவிருந்தபோது கொடுத்த பிரியாவிடை செய்தியாகும். ஆகவே இந்த தியானத்தின் முடிவில் இயேசு நமக்குத் தரும் இறுதி செய்தியாக நம்மோடு எடுத்துச் செல்வதற்கு இதுவே மிகவும் பொருத்தமானது என நினைக்கிறேன். அந்த செய்திதான் என்ன? நீங்கள் இந்த தியானத்தின்போது அனுபவித்ததையும், வாழ்ந்ததையும் "சென்று நற்செய்தியாகப் பறைசாற்றுங்கள்" என்பதுதான்.

இந்த நற்செய்தி பகுதியிலிருந்து நற்செய்தி என்பது நல்ல செய்தியைச் சொல்லிக் கொண்டிருப்பது மட்டுமல்ல, பேய்பிடியிலிருந்து விடுவித்தும், எல்லாவித நோய்பிடித்தவர்களைக் குணமாக்கியும், அது மக்களது வாழ்வில், நற்பயன் தரும் ஒன்றாகச் செய்ய வேண்டும் என்பது தெளிவாகிறது. அன்பு, மகிழ்ச்சி, அமைதி ஆகியவற்றில் நிறைவு பெறவும், மேலும் உடலிலும், உள்ளத்திலும் முற்றிலும் முழுமையடையவும், நற்செய்தியை அவர்கள் அனுபவிக்க வேண்டும். இயேசுவின் இந்த மறைபரப்புபணி இன்னும் நிறைவு பெறாமல் இருக்கிறது. எனினும் நற்செய்தி அறிவிப்பு பணிக்கு உலகம் அரைமனதுடனும், அதுமட்டுமா, எதிர்மறையாகக் கூட பதிலளித்தது.

இந்தப் பணியைத் தொடர வேண்டும் என்ற உரிமைக் கட்டளையை நம்மிடம் ஒப்படைத்ததன் மூலம் உலகம் அன்பு செய்யப்பட தகுதியுடையதாக இருக்கிறது என இயேசு நமக்குக் காட்டியுள்ளார். ஆகவே அதன் தவறான போக்கைத் திருத்துவதற்குத் தொடர்ந்து முயற்சி செய்வது தகுதியானது.

நல்ல செய்தியை நாம் மற்றவர்களிடம் எப்படி பகிர்ந்து கொள்வது? மீண்டும் அந்த வழியை இயேசுவே நமக்குக் காட்டுகிறார்.

முதலாவதாக, அவரது உயிரையே விலையாக கொடுப்பதன் மூலம், உண்மைக்காய் நிலைத்து நின்று அவர் நற்செய்தியைப் பகிர்ந்துள்ளார். "உண்மையை எடுத்துரைப்பதே என் பணி, அதற்காகவே நான் பிறந்தேன், இந்த உலகத்திற்கு வந்தேன்", என்று பிலாத்து முன்னிலையில் இருந்தபோது அவர் உறுதிசெய்துள்ளார். நற்செய்தி பரப்பும் பணியிலே உண்மைக்காய் நிலைத்து நிற்பதும் அதற்காய் சான்று பகர்ந்து வாழ்வதே முதல் தேவையாகிறது.

இரண்டாவதாக, இயேசு மக்களுக்காக குறிப்பாக ஏழைகளின் சார்பில் நின்றார். விபச்சாரத்தில் பிடிப்பட்ட பெண்ணுக்கு குற்றம் சாட்டுபவர்கள் மட்டுமே இருந்தனர். ஆதரவாகப் பேசுவோர் இல்லை. அவளுக்காகத் தனித்து நிற்கும் தைரியம் இயேசுவிற்கு இருந்தது. இயேசுவால் குணமாக்கப்பட்ட பிறவிக்குருடர் குருக்களாலும், பரிசேயர்களாலும் புறம்பார்க்கப்பட்டார். இயேசு அவரை ஏற்றுக்கொண்டார். வரிதண்டுவோர் பாவிகள், நோயாளிகள் மற்றும் துன்புறும் மக்கள் இவர்கள் எல்லார் சார்பாகவும் நின்றார். அவர்களைப் பாதுகாக்கவும், உதவவும் முன் வந்தார். ஆகவே மக்களுள்ளே ஏழைகளுக்காக, துன்புறுவோருக்காக, ஏமாற்றப்படுத்தப்பட்டோருக்காக துணிந்து நிற்பது நற்செய்தி அறிவிப்பின் இரண்டாவது நோக்கமாகும். அவர்களைப் பாதுகாப்பதற்காக இயேசு நின்றதுபோல நாமும் அடிக்கடி தனித்து நிற்க வேண்டிவரும்.

மூன்றாவதாக, இயேசு அதிக படைப்பாற்றலோடும் சவாலான வழியிலும் தம் செய்திகளைப் போதித்தார். மலைப்பொழிவிலே 'யாராவது உன்னை ஒரு கன்னத்தில் அறைந்தால் மறுகன்னத்தையும் காட்டு' என்பன போன்று மிகவும் தனிப்பட்ட முறையில் நமக்கு அவர் சவால் விடுகிறார். எவராவது உங்களை ஒரு கல்தொலை வரக் கட்டாயப்படுத்தினால் அவரோடு இருகல் தொலைவரச் செல்லுங்கள் போன்றவை அவை. மேலும் நாம் மண்ணகத்தின் உப்பாக, உலகத்தின் ஒளியாகத் திகழ விரும்புகிறார். இதைத்தவிர, சட்டங்களையும் சம்பிரதாயங்களையும் கடந்து சரியான மனநிலையோடு நமது அர்ப்பணத்தை எப்படி வாழ வேண்டும் என்பதற்காக அவர் அநேக படைப்பாற்றலுள்ள சவால்களை வைத்திருக்கிறார். ஒன்று அல்லது இரண்டு எடுத்துக்காட்டுகளை மேற்கோளாக எடுத்துக்கொள்வோம்.

நீங்கள் உங்கள் காணிக்கையைப் பலிபீடத்தில் செலுத்தவரும் பொழுது உங்கள் சகோதரர் சகோதரிகள் எவருக்கும் உங்கள் மேல் ஏதோ மனத்தாங்கல் உண்டென அங்கே நினைவுற்றால் அங்கேயே பலிபீடத்தின் முன் உங்கள் காணிக்கையை வைத்துவிட்டுப் போய் முதலில் அவரிடம் நல்லுறவு ஏற்படுத்திக்கொள்ளுங்கள். பின்புவந்து உங்கள் காணிக்கையைச் செலுத்துங்கள் என்று இயேசு சொல்கிறார். மேலும் தொடர்ந்து அவர் ஓய்வு நாளில் குணப்படுத்தினார், அதற்காக அவர் கண்டனம் செய்யப்பட்ட போதும், கடவுள் எப்போதும் நமக்கு நன்மையே செய்கிறார். ஆகவே ஓய்வுநாட்களிலும் மற்றவர்களுக்கு நன்மை செய்வதை நானும் கண்டிப்பாக நிறுத்தக்கூடாது என்று அவர் சொன்னார். வேறு வார்த்தைகளில், நன்மையான வேலை செய்பவர்களுக்கு விடுமுறை கிடையாது. ஓய்வு நாள் சட்டத்தைவிட மனிதர் முக்கியமானவர் என்று அவர்கள் உணரும்படி செய்தார். ஓய்வு நாள் மனிதருக்காக உண்டாக்கப்பட்டது. மனிதன் ஓய்வுநாளுக்காக அல்ல என்று அவர் சொன்னார். இந்த வழிகளிலும், ஏனைய வழிகளிலும் அவர் மதம் பற்றிய புதிய படைப்பாற்றலுள்ள கண்ணோட்டத்தைக் கொண்டிருக்க வேண்டும் என்று கற்பித்தார்.

நான்காவதாக, இயேசு அவருக்கு செவிசாய்ப்பவர்களின் சுதந்திரத்தை மதித்தார். அவரது படிப்பினைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று எவரையும் ஒருபோதும் அவர் கட்டாயப்படுத்தவில்லை. மக்கள்மீது கொண்ட அன்பிலிருந்து மக்களது சுதந்திரத்திற்கான மதிப்பு வழிந்தோடியது. அன்பும் சுதந்திரம் இணைந்தே செல்லும். ஆகவே நாம் நற்செய்தியை அறிவிக்கும்போது, அதை ஏற்கவோ இல்லது அதை மறுக்கவோ உரிமை உள்ள ஒரு மனிதரது சுதந்திரத்தில் தலையிடக்கூடாது. செல்வந்தரான இளைஞனது நிகழ்வை நினைவுபடுத்துங்கள். அவர் அவனுக்கு சவால் விடுத்தார், ஆனால் அவர் அவனைக் கட்டாயப்படுத்தவில்லை. இவ்வாறாக, 'நற்செய்தியை நாம் பகிரத்தூண்டுவது பிறர்மீது கொண்டுள்ள நமது அன்பினால்தான்' என்பதை அவர் அவர்களுக்கும் நமக்கும் எடுத்துக்காட்ட வேண்டும்.

இறுதியாக, அவரையும் அவரது போதனைகளையும் சுதந்திரமாக பின்பற்ற விரும்புகிறவர்களுக்கு கடந்த காலத்தை முழுவதுமாக விட்டுவிட வலியுறுத்துகிறார். மேலும் முழுமனத்தோடு

அர்ப்பணிப்பதையும் விரும்புகிறார். "கலப்பையில் கைவைத்தபின், திரும்பிப் பார்க்கக்கூடாது" என்று அவர் சொல்கிறார். நாம் வைத்திருக்கும் எல்லாவற்றையும் விற்று வாங்குவதற்குரிய விலையுயர்ந்த முத்தாக நற்செய்தி இருக்கிறது. ஆகவே நற்செய்தியின் அதிகாரத்திற்குள் வரவிரும்புகிறவர்கள் தீய ஆவியை முழுவதுமாக விட்டுவிட வேண்டும் எனவும் இயேசுவிற்காக முழுமனதோடு தங்களை அர்ப்பணிக்கவும் வேண்டும் என அவர் விரும்புகிறார்.

இயேசு நற்செய்தியை அறிவித்த வழிகளில் இவைகள் சில: இறைவன் நமக்குக் கொடுத்த திறமைகளுக்கு ஏற்ப, அவரது தனிப்பட்ட சொந்த வழியில் நற்செய்தியைப் பரப்புவதற்கான வழிகளில் இவை சில வழிகள். இயேசுவின் வாழ்விலிருந்து நாம் அறிந்து கொள்வது போல, இது சுலபமான பணி அல்ல. மாறாக, அதிக ஆபத்து நிறைந்த ஒன்று. ஆனால் நாம் சந்திக்கும் ஆபத்துக்களை விட நற்செய்தியை அறிவிப்பது அதிக மதிப்பு வாய்ந்தது அல்லவா?

அருட்பணி டோனி டிமெல்லோ தனது "ஒரு நிமிட ஞானம்" என்ற நூலில் இவ்வாறு ஒரு சிறுகதை சொல்கிறார்.

"நான் உண்மைக்கான ஆசிரியராக விரும்புகிறேன் அதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?".

"நாற்பத்தைந்து வயது வரை பரிகசிக்கப்படவும், புறக்கணிக்கப்படவும், பட்டினிகிடக்கவும் நீங்கள் தயாராக இருக்கிறீர்களா?"

"நான் தயாராக இருக்கிறேன். ஆனால் நாற்பத்தைந்து வயதான பிறகு எனக்கு என்ன நடக்கும்? என்று எனக்குக் கூறுங்கள்".

" நீங்கள் அதற்குப் பழக்கப்பட்ட நிலைக்கு வளர்ந்து விடுவீர்கள்" என்று பதில் சொன்னார்.

ஆகவே நற்செய்தி அறிவிப்பவர்களுக்கு வரும் ஆபத்துகளிலிருந்து தப்பிச் செல்ல வழியில்லை. அதைச் சந்தித்தே ஆக வேண்டும்.

நற்செய்தியை "சென்று பறைசாற்றுங்கள்" எனும் பணியை நமக்கு தந்த ஆண்டவர் என்ன வந்தாலும் நமது பணியில் தொடர்ந்து நிலைத்திருக்க வேண்டிய தைரியத்தையும் நமக்குத் தந்தருள்வாராக!.

*தமிழில் வடிவமைத்தவரின் ஏனைய நூல்கள்*

(தனியாகவும் இணை ஆசிரியராகவும் எழுதியவை)

★ விவிலியக் கதைகள்

★ விலங்கிலிருந்து விடுதலை (நாவல்)

★ வெளிச்சத்துக்கு வாங்க (நாடகத் தொகுப்பு)

★ அன்னை ஸ்கொலாஸ்டிக்கா (வரலாறு)

★ இறைஆவியில் நிறைவாழ்வு

★ விவிலிய ஒளியில் அன்னையின் அமுதமொழிகள் (52 வார தியான சிந்தனைகள்)

★ மணவாழ்வில் மனம் மகிழ (தம்பதியருக்காக)

★ மலரும் பருவம் (இளைஞர் கையேடு)

★ ஐந்துகாய தந்தை புனித பியோ (வரலாறு)

★ வாழ்வின் ஆற்றல் (மதிப்பீட்டு சிந்தனை)

★ வாழ்வு தரும் ஆற்றல் (சிற்றேடு)

★ நீங்களும் பேறுபெற்றோராகலாம் (சிற்றேடு)

★ இல்லம் சந்திக்க இறைவார்த்தைகள்

★ ஊமைக் காயங்கள் (உளவியல் சிந்தனை) உள் மனம் குணம் பெற (திருத்திய பதிப்பு)

★ ஆன்மீக நலம்

★ தூய ஆவியார் அருளும் வாழ்வைத்தேடி

★ ஆற்றுப்படுத்த வழிகாட்டி

★ தூய ஆவியார் அருளும் கொடைகள்

★ கனிதரும் வாழ்வு (தூய ஆவியாரின் கனிகள்)

★ மகிழ்ச்சிக்கு ஊற்றுக்கண் எழுச்சிமிகு எண்ணங்கள்

★ ஒப்பரவும் புதுவாழ்வும் (சிற்றேடு) (பாவமும் பாவ மன்னிப்பும் சிற்றேட்டின் மறுபதிப்பு)

★ வாழ்க்கைப் பயணத்தில் இறைவார்த்தை

★ புகழ்ச்சிப் பலி செலுத்துவோம் (சிற்றேடு)

★ Problems & Challenges of Youth

★ Mathematics for Life

## நூலைப்பற்றி

**"இயேசுவை இன்னும் நெருக்கமாய்ப் பின்பற்றிட"** இயேசுவின் பாதச்சுவட்டைப் பின்பற்றி, இறைவனை நோக்கிச் செல்லும் திருப்பயணத்திற்கு எடுத்துச் செல்லும் தியானக் கையேடு. ஒரு தியானப் போதகர் என்ற முறையில் அருட்பணி ஜேம்ஸ் ரொட்ரிகோஸ் சே.ச அவரது உயர்ந்த அனுபவங்களைப் பகிர்கின்றார். தூய லொயோலா இஞ்ஞாசியாரின் ஆன்மீகப் பயிற்சியின் இயக்கநெறியை ஆசிரியர் பின்பற்றுகிறார். உயர்ந்த கிறிஸ்தவ ஆன்மீகத் தலைவர்களில் தூய இஞ்ஞாசியாரும் ஒருவர். 'ஆன்மீகப் பயிற்சிகள்' எனும் அவரது புத்தகம் அவரது தலைசிறந்த படைப்பு. ஆசிரியர் அதிலே முன்மொழியப்பட்ட முறையைப் பின்பற்றுகிறார்.

முன்னுரையில் சொல்லியுள்ளதுபோல, கருத்துக்களை வெளிப்படுத்துவதிலும் தியான சிந்தனைகளை வரிசைப்படுத்துவதிலும், புனிதர்கள் சிந்தனையாளர்களிடமிருந்து எடுத்த மேற்கோள்களை இணைத்துக்காட்டுவதிலும் நூலாசிரியர் தனித்து எண்ணும் திறனையும் படைப்பாற்றலையும் காட்டியுள்ளார். சிந்தனைத்தியானத்தின்போது மரியாளுக்கும் நூல் ஆசிரியர் ஜேம்ஸ்க்கும் இடையே நடக்கும் உரையாடலை வாசிக்கும் எவரும் தொடப்படுகிறார்.

### ஆசிரியர் பற்றி



**அருட்பணி. ஜேம்ஸ் ரோட்ரிகோஸ்** சே.ச. அடிகளார் சேசு சபையின் மதுரை மறை மாநிலத்தைச் சேர்ந்தவர். அவர் சென்னையிலுள்ள 'தியான ஆசிரமம்' எனும் தியான இல்லத்தில் ஓர் உறுப்பினர். அவர் பயிற்சிப்பணியின் முன்னாள் மறை மாநில துணைத் தலைவராகவும் சென்னை, லொயோலா கல்லூரி அதிபர் (Rector) ஆகவும் பணியாற்றியுள்ளார். அவர் இந்தியா முழுவதிலும் உள்ள பல்வேறு தரப்பட்ட நிலையில் தியானம் செய்பவர்களுக்கு இந்த ஆன்மீகப் பொக்கிஷத்தை வழங்குவதற்காக பயணம் மேற்கொள்கிறார். அவர் 'தேர்ந்து தெளிதல்' என சிற்றேடு ஒன்றை வெளியிட்டது. ஆறு முறைகள் மறுபதிப்பாகியுள்ளது. அவர் எழுதிய இன்னுமொன்று (NLP) நரம்பியல் மொழியியல் பயிற்சி - (நியூரோ லிங்கியுஸ்டிக் புரோகிரேம்) என்பதாகும். **"இயேசுவை இன்னும் நெருக்கமாய்ப் பின்பற்றிட"** எனும் நூல் அவரது தியான உரையின் தொகுப்பாகும்.

### தமிழில் வடிவமைத்தவர் பற்றி



**திருமதி. இம்மாகுலேட் பிலிப்** அவர்கள் நாகர்கோவில், திருச்சிலுவைக் கல்லூரி கணிதத்துறையில் முப்பத்து நான்கு ஆண்டுகளாகப் பணியாற்றி வருகின்றார். தமிழில் 20 நூல்களும் 4 சிற்றேடுகளும் ஆங்கிலத்தில் இரண்டுமாக, பல நூல்களை தனியாகவும் அவரது கணவருடனும் பிற ஆசிரியருடன் இணைந்தும் எழுதியுள்ளார். இந்நூலின் மொழிபெயர்ப்பின் முக்கிய நோக்கம் குருக்களின் ஆண்டிலே, பொதுக்குருத்துவத்தைச் சேர்ந்த இறைமக்களும் ஆழ்ந்த இறையனுபவம் பெற, தூய இஞ்ஞாசியாரின் ஆன்மீக சிந்தனைகள் வழிகாட்ட வேண்டும் என்பதுவே. இந்நூலின் பக்கங்களை 'ரசித்து ருசித்து' வாசிக்கும் யாரென்றாலும் இறைவனை அனுபவிக்க முடியும் என்பது அவரது அசைக்க முடியாத நம்பிக்கை. இறைமகன் இயேசுவின்மீது அவர் கொண்டுள்ள அன்பால், இயேசு வெளிப்படுத்திய இறைவனை உலகம் அறியச் செய்யும் ஆசை நிறைவேற, இந்நூல் உதவட்டும்.